Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. GOPALAPILLAI

# அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான அரசாங்க ஆலோசனைகள்

1997 ஒக்டோபர்

**நீதி, அரசியலமைப்பு அலுவல்கள், இன அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் வெளியீடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம் பக்கம்

பாயிரம்


| | | |
|---|---|---|
| அத்தியாயம் | 1 | அரசும் இறைமையும் மக்களும் |
| அத்தியாயம் | 11 | பௌத்தமதம் |
| அத்தியாயம் | 111 | அடிப்படை உரிமைகளும், சுயந்திரங்களும் |
| அத்தியாயம் | 1V | மொழி |
| அத்தியாயம் | V | பிரசாவுரிமை |
| அத்தியாயம் | V1 | அரச கொள்கைக் கோட்பாடுகளும், அடிப்படைக் கடமைகளும். |
| அத்தியாயம் | V11 | மத்திய நிறைவேற்றுத்துறை குடியரசின் சனாதிபதி |
| அத்தியாயம் | V111 | மத்திய நிறைவேற்றுத்துறை சனாதிபதியும் அமைச்சரவையும் |
| அத்தியாயம் | 1X | மத்திய சட்டவாக்கத்துறை பாராளுமன்றம் |
| அத்தியாயம் | X | மத்தியசட்டவாக்கத்துறை பாராளுமன்றம் - நடவடிக்கைமுறையும் தத்துவங்களும் |
| அத்தியாயம் | X1 | மத்திய சட்டவாக்கத்துறை அரசியலமைப்புக்கான திருத்தம் |
| அத்தியாயம் | X11 | மக்கள் தீர்ப்பு |
| அத்தியாயம் | X111 | வாக்குரிமையும், தேர்தல்களும் |
| அத்தியாயம் | X1V | அரசியலமைப்புப் பேரவை |
| அத்தியாயம் | XV | பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குதல் |
| அத்தியாயம் | XV1 | அரசகாணி, நீர்நிலைகள் மற்றும் கனிப்பொருட்கள், |
| அத்தியாயம் | XV11 | நீதித்துறை நீதி நிருவாகத்துக்கான நிறுவனங்கள் உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல்நீதிமன்றங்கள் |
| அத்தியாயம் | XV111 | நீதித்துறை நீதித்துறைச் சுயந்திரம் |
| அத்தியாயம் | X1X | நீதித்துறை உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல்நீதிமன்றங் -களின் நியாயாதிக்கம் |
| அத்தியாயம் | XX | பகிரங்க சேவைகள் |
| அத்தியாயம் | XX 1 | நிதி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | xx11 | பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, சட்டம் அத்துடன் ஒழுங்கமைதி |
| அத்தியாயம் | xx111 | பொதுமக்கள் பாதுகாப்பு |
| அத்தியாயம் | xx1v | நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் |
| அத்தியாயம் | xxv | பொது |
| அத்தியாயம் | xxv1 | நிலைபெயர்கால ஏற்பாடுகள் |
| அத்தியாயம் | xxv11 | பொருள்கோடல் |
| அத்தியாயம் | xxv111 | ஆரம்பமும் நீக்கமும் |
| அட்டவணை 1 | | பிராந்தியங்கள் |
| அட்டவணை 2 | | நிரல்கள் |
| அட்டவணை 3 | | தேசியக்கொடி |
| அட்டவணை 4 | | தேசியகீதம் |
| அட்டவணை 5 | | சத்தியம்—உறுதியிருதல் |
| அட்டவணை 6 | | அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட பிராந்திய பகிரங்க அலுவலர்கள். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிரம்

இலங்கை மக்கள் பல வருடங்களாகப் பெருமளவு உயிரிழப்பையும், ஆதன அழிவையும், ஆதன இழப்பையும் ஏற்படுத்திய போர் நடவடிக்கைகளின் மற்றும் ஆயுதம் தாங்கிய சண்டையின் அழிபாடுகளைப் பொறுமையுடன் சகித்து வந்துள்ளனராதலாலும்:

இந்நிலையானது மக்களிடையே அவநம்பிக்கையையும் ஒற்றுமைக்கேட்டையும் தோற்றுவிக்கக் காரணமாகவிருந்து நாட்டின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தியுள்ளதாதலாலும்:

கடந்தகால வேறுபாடுகளைக் களைந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதும்; அத்துடன்

சனநாயகப் பெறுமதிகளையும், சமூக நீதியையும், அடிப்படை உரிமைகளையும் போற்றிப் பாதுகாத்து, நல்லாட்சியையும், சமாதானத்தையும், இன ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்கான சமூகக் கட்டுக்கோப்புக்கு உத்தரவாதமளிக்கின்ற அரசியலமைப்பு வடிவத்திலான மீயுயர் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நிலையான சட்ட ஒழுங்குமுறையைத் தாபிப்பதும்,

அவசியமாகவுள்ளதாதலாலும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 1

### அரசும் இறைமையும், மக்களும்.

அரசு. 1. (1) இலங்கை இறைமை கொண்ட ஒரு சுதந்திர குடியரசாகும் என்பதுடன், இலங்கைக் குடியரசு என அறியப்படுதலும் வேண்டும். இலங்கைக் குடியரசு கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாகவிருத்தல் வேண்டும்.

(2) குடியரசின் சுதந்திரத்தையும், இறைமையையும், ஒற்றுமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பது மக்களினதும் அரசினதும் கடமையாதல் வேண்டும்.

குடியரசின் ஆள்புலமும் உரிமைகளும். 2. (1) குடியரசின் ஆள்புலமானது தலைநகர ஆள்புலம் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான பிராந்தியங்கள், ஆள்புல நீர்ப்பரப்புக்கள், ஆள்புலத்தின் மேலான வான்வெளி ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் குடியரசானது, சட்டத்தினாலும், சருவதேசச் சட்டத்தினாலும், அத்தகைய ஆள்புலம் சம்பந்தமான வழக்காறினாலும், வழக்கத்தினாலும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பிராந்திய சபை அல்லது பிராந்திய நிருவாகம் எதுவும் நேரடியான அல்லது மறைமுகமான வழிவகைகள் மூலம் பின்வருவனவற்றிக்கான முயற்சியொன்றை ஊக்குவித்தல் அல்லது வேறுவகையில் ஆதரித்தல் அல்லது ஊக்குவிப்பதற்கு அல்லது வேறுவகையாக ஆதரிப்பதற்கு எத்தனித்தல் ஆகாது.

(அ) இலங்கைக் குடியரசாக அமைகின்ற பிராந்தியங்களின் ஒன்றியத்திலிருந்து ஏதேனும் பிராந்தியம் அல்லது அதன் பாகம் அல்லது பிராந்தியங்கள் தனிவேறாதல் அல்லது பிரிந்து போதல்;

(ஆ) அத்தகைய பிராந்தியத்தின் அல்லது பிராந்தியங்களின் இடப்பரப்பை மாற்றுதல்;

(இ) அத்தகைய பிராந்தியத்தின் அல்லது பிராந்தியங்களின் எல்லைகளை மாற்றுதல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) அத்தகைய பிராந்தியத்தின் அல்லது பிராந்தியங்களின் பெயரை அல்லது பெயர்களை மாற்றுதல்;

(உ) ஏதேனும் பிராந்தியத்திலிருந்து ஆள்புலத்தைத் தனி வேறாக்குதல் மூலம் அல்லது இரண்டு அல்லது அதற்கதிகமான பிராந்தியங்களை அல்லது பிராந்தியங்களின் பாகங்களை ஒன்றிணைப்பதன் மூலம் அல்லது ஏதேனும் ஆள்புலத்தை ஏதேனும் பிராந்தியத்தின் ஒரு பாகத்துடன் ஒன்றிணைப்பதன் மூலம் புதியதொரு பிராந்தியத்தை அமைத்தல்.

(3) இவ்வுறுப்புரையில் (2) ஆம் பந்தியில் உள்ளதெதுவும் அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கு முறையீடுகள் செய்வதிலிருந்து பிராந்திய சபையொன்றை அல்லது பிராந்திய நிருவாகமொன்றைத் தடைசெய்வதாக வாசித்து பொருள் கொள்ளப்படுதலாகாது.

இறைமையும் அதன் பிரயோகமும். 3. (1) இலங்கைக் குடியரசின், இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும்.

(2) இறைமை என்பது அரசாங்கத் தத்துவங்களையும், அடிப்படை உரிமைகளையும், வாக்குரிமைகளையும் உள்ளடக்குமென்பதுடன், இது பின்வரும் முறையில் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்;

(அ) மக்களது சட்டமாக்கற்றத்துவம், பாராளுமன்றத்தினாலும், பிராந்திய சபைகளினாலும், இதனகத்துப் பின்னர் குறிப்பீடு செய்யப்பட்ட அளவுக்கு மக்கள் தீர்ப்பெடுப்பு ஒன்றில் மக்களினாலும் பிரயோகிக்கப்படவேண்டும்;

(ஆ) மக்களது ஆட்சித்துறைத் தத்துவம், முதலமைச்சரினதும் அமைச்சரவையினதும் ஆலோசனையின்மீது செயலாற்றுகின்ற குடியரசின் சனாதிபதியினாலும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படக் கூடிய அளவுக்கு அந்தப் பிரதம அமைச்சர்களினதும் பிராந்திய அமைச்சர் சபைகளினதும் ஆலோசனையின் மீது செயலாற்றுகின்ற ஆளுநர்களினாலும் பிரயோகிக்கப்படவேண்டும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) மக்களது நீதித்துறைத் தத்துவமானது, பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களின் விடயத்தில் தவிர, அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட அல்லது அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட, அல்லது சட்டத்தினால் உருவாக்கப்பட்டு ஆணையிட்டமர்த்தித் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், நிறுவனங்கள், ஆகியன மூலம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களில் மக்களது நீதிமுறைத் தத்துவமானது, பாராளுமன்றத்தினால் சட்டம் ஏற்பாடு செய்யும் அளவுக்கு நேரடியாகப் பிரயோகிக்கப்படலாம்;

(ஈ) அரசியலமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற அடிப்படை உரிமைகள், மக்களால் தனித்தனியாகவும் கூட்டாகவும் பிரயோகிக்கப்பட்டுத் துய்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அரசாங்கத்தின் எல்லா உறுப்புக்களாலும் போற்றப்படவும் பேணப்படவும் ஏற்றமளிக்கப்படவும் வேண்டும் என்பதோடு, அவை இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையிற்றவிரவும் அளவுக்குத் தவிரவும் சுருக்கப்படுதலோ, மட்டுப்படுத்தப்படுதலோ, மறுக்கப்படுதலோ ஆகாது; அத்துடன்

(உ) பதினெட்டு வயதை அடைந்தவரும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட விதமாகத் தேருநராக இருப்பதற்குத் தகைமை கொண்டுள்ளமையால் தேருநர் இடாப்பில் தம்பெயர் பதிவு செய்யப்பட்டவரும் ஆன ஒவ்வொரு பிரசையினாலும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும், பிராந்திய சபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினதும், தேர்தலிலும் ஒவ்வொரு மக்கள் தீர்ப்பெடுப்பிலும் வாக்குரிமை பிரயோகிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

தேசியக்கொடி. 4. இலங்கைக் குடியரசின் தேசியக்கொடி மூன்றாம் அட்டவணையில் குறித்து வரையப்பட்டிருக்கும் சிங்கக் கொடியாக இருத்தல் வேண்டும்.

தேசியகீதம். 5. இலங்கைக் குடியரசின் தேசிய கீதம் "சிறீ லங்கா தாயே" என்பதாக இருத்தல் வேண்டும்; அதன் சொற்களும் இசையமைப்பும் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

தேசிய தினம். 6. இலங்கைக் குடியரசின் தேசிய தினம் பெப்ரவரி நான்காம் நாளாக இருத்தல் வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் -11

## பௌத்த மதம்.

பௌத்த மதம்.

7. (1) இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க அனைத்து மக்களுக்கும் மதங்களுக்கும் போதிய பாதுகாப்பை அளிக்கும் அதே வேளையில் 15 ஆம் உறுப்புரையின் (1) ஆம் (3) ஆம் பந்திகளினால் வழங்கப்படும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஒவ்வொருவருக்கும் உறுதி செய்து, பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும், பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(2) புத்த சாசனத்தினைப் பாதுகாப்பதற்கும் பேணி வளர்ப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகளில் பௌத்த சாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் ஏற்றங்கீகரிக் கப்படும் மீயுயர் பேரவையை, அவசியமானவிடத்து அரசு, கலந்தா லோசித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 111

## அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்.

உயிர்வாழ்வதற்கு உள்ளார்ந்த உரிமை.

8.(1) ஒவ்வோர் ஆளும் உயிர் வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமையைக் கொண்டிருப்பார். ஆளெவரதும்/உயிர் வாழ்வு எதேச்சையாகப் பறிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மீது மட்டுப்பாடுகள் எவையும் இடப்படுதல் ஆகாது.

சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

9. (1) ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படுதலாகாது.

(2) இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமை மீது மட்டுப்பாடு எதுவும் இடப்படுதல் ஆகாது.

எதேச்சையாக கைதுசெய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும், கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன் கொண்டவான தண்டனைச்சட்டவாக்கங்களைத் தடைசெய்தலும்.

10. (1) ஆளெவரும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கவன்றி, மறியற்றண்டனைக்குட்படுத்தப்படுதலோ வேறு வகையாக உடலியல் ரீதியாகத் தடுத்து வைக்கப்படுதலோ ஆகாது.

(2) சட்டத்தினால் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டாலேயொழிய, சட்டத்தினால் விதித்துரைக்கப்படும் நடவடிக்கைமுறைக்கு இணங்க ஆள் ஒருவரைக் கைது செய்து தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் முன்னிலையில் கொணரச் செய்யும் நீதித்துறை அலுவலரினால் வழங்கப்படும் பிடியாணையொன்றின் கீழ் தவிர, **ஆளொருவர் கைது செய்யப்படுதல் ஆகாது**

(3) (அ) கைது செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு அவர் கைது செய்யப்படும் நேரத்தில் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணமும் இவ்வுறுப்புரையின் (4)ஆம், (5)ஆம் பந்திகளின் கீழான அவரது உரிமைகளும் அவர் விளங்கிக்கொள்ளக்கூடியஒரு மொழியில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) கைது செய்யப்பட்ட எவரேனும் ஆள் அவ்வாறு வேண்டின், நியாயமான ஒரு காலத்தினுள் அவரது கைதுக்கான காரணங்கள் அவருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) கைது செய்யப்படும் எவரேனும் ஆள் அவர் விரும்பும் எவரேனும் உறவினருடன் அல்லது நண்பருடன் தொடர்புகொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன், அவர் அவ்வாறு வேண்டின், அத்தகைய உறவினருடன் அல்லது நண்பருடன் தொடர்பு கொள்வதற்கு வழிவகைகள் அத்தகைய ஆளுக்குச் செய்து கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(5) கைது செய்யப்படும் எவரேனும் ஆள் அவர் விரும்பும் ஒரு சட்டத்தரணியைக் கலந்தாலோசிப்பதற்கும், வைத்திருப்பதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும். அத்தகைய சட்டத்தரணிக்கு அரசினால் எல்லா நியாயமான வசதிகளும் செய்துகொடுக்கப்படுதல் வேண்டும்.

(6) கைதுசெய்யப்படும் எவரேனும் ஆள், விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதாகவிருக்கின்ற காலப்பகுதியிலும் பார்க்க நீண்டவொருகாலப் பகுதிக்குக் கட்டுக்காப்பில் தடுத்து வைக்கப்படுதலோ மறித்து வைக்கப்படுதலோ ஆகாது, அத்துடன் ஒவ்வொரு விடயத்திலும், கைது செய்யப்படும் இடத்திலிருந்து நீதிபதியிடம் செல்வதற்கான பிரயாணத்திற்கு அவசியமான நேரம் நீங்கலாக, கைது செய்யப்படும் நேரத்திலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் நீதிபதி முன்னிலையில் கொணரப்படுதல் வேண்டும்; சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்க அத்துடன்/ அத்தகைய நீதிபதியின் கட்டளை மீதன்றியும், அக்கட்டளையின் நியதிகளுக்கு இணங்கவன்றியும் ஆளெவரும் அத்தகைய காலப்பகுதிக்கு மேல் கட்டுக்காப்பில் தடுத்து வைக்கப்படுதல் ஆகாது.

(7) (அ) கட்டுக்காப்பில் தடுத்து வைத்திருக்கப்படுபவரும் அல்லது மறித்து வைத்திருக்கப்படுபவரும் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், பிணையினிற்று அல்லது வேறியொன்றை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி நிறைவேற்றுவதன் மீது விடுவிக்கப்பட
உரித்துடையவருமான எவரேனும் ஆள் அவ்வாறு
விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பிணைத் தொகையும், அத்தகைய ஒவ்வொரு
முறியின் தொகையும் விடயத்தின் சூழ்நிலைகளை
உரிய கவனத்திற் கொண்டு நிர்ணயிக்கப்படுதல்
வேண்டும் என்பதுடன் மிதமிஞ்சியதாக இருத்தலும்
ஆகாது.

(8) தவறொன்றைப் புரிந்தவராகச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆள், நியாயமற்ற தாமதமின்றி, குற்றஞ் சாட்டப்படுதல் வேண்டும் அல்லது குற்றம் பகரப்படுதல் வேண்டும் அல்லது விடுவிக்கப் படுதல் வேண்டும்.

(9) தவறொன்றுக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட அல்லது குற்றம் பகரப்பட்ட எவரேனும் ஆள் நேரடியாகவோ அல்லது தாம் தெரிந்தெடுக்கும் சட்டத்தரணியொருவராகவோ, அல்லது தாம் தெரிந்தெடுக்கும் சட்டத்தரணியொருவர் மூலமாகவோ விசாரிக்கப்பட உரித்துடையராதல் வேண்டும். அத்துடன் நீதிபதியினால் அவ்வாறு அறிவிக்கப்படுதலும் வேண்டும்;

(10) (அ) தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றம்
பகரப்பட்ட எவரேனும் ஆள் -

(1) முறையற்ற தாமதமின்றியும்;

(11) நியாயமான ஒரு விளக்கத்தின் போதும்;

(111) தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினாலும்;

(1V) உட்பந்தி (ஆ) என்பதற்கமைய பகிரங்க
விசாரணையொன்றின் போதும்;

விளக்கப்பட உரித்துடையவராதல் வேண்டும்;

(ஆ) நீதிபதியொருவர், தமது தற்றுணிபின்பேரில்,
அவசியமென அவர் கருதும் போதெல்லாம்,
பாலியல் விடயங்கள் தொடர்பிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளில், அல்லது இளந் தவறாளிகளின்
நலன்கள் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து,
அல்லது ஒரு சனநாயக சமுதாயத்தின் அவசியமாக
வுள்ள தேசிய பாதுகாப்பின் அல்லது பொது
ஒழுங்கமைதியின் நலன் கருதி, அல்லது அத்தகைய
நீதிமன்ற வளவினுள் ஒழுங்கமைதி மற்றும்
பாதுகாப்பு நலன்கருதி, வழக்கு நடவடிக்கை
களில் நேரடியாக அக்கறை கொண்டிராத
அத்தகைய ஆட்களை அந்த இடத்திலிருந்து விலக்கி
வைக்கலாம்.

(11) (அ) ஆளொவ்வொருவரும், அவர் குற்றவாளியென
என்பிக்கப்படும்வரை சுத்தவாளியென ஊகிக்கப்படுதல்
வேண்டும்;

(ஆ) ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குறிப்
பிட்ட நிகழ்வுகளை என்பிப்பதற்கான பொறுப்பைக்
குற்றஞ் சாட்டப்பட்ட ஆளொருவர் மீது சுமத்துகின்ற
அளவுக்கு இப்பிரிவின் (அ) என்னும் உட்பந்திக்கு
ஒவ்வாததாக இருக்கின்றது எனக் கொள்ளப்படுதல்
ஆகாது.

(12) ஆள் ஒருவர், தமக்கு எதிராகச் சாட்சி சொல்லவோ, குற்ற ஒப்புதல் அளிக்கவோ கட்டாயப்படுத்தப்படுதல் ஆகாது.

(13) (அ) பகிரங்க சருவதேசச் சட்டத்தின் நெறிகளுக்
கிணங்க எச்செயல் அல்லது செய்யாமை
புரியப்பட்ட நேரத்தின்போது குற்றவியலானதாக
இருந்திருக்குமோ, அச்செயலுக்காக அல்லது
செய்யாமைக்காக தவிர, ஆளெவரும் எந்தச்
செயல் அல்லது செய்யாமை அது புரியப்பட்ட
நேரத்தில் தவறொன்றாகவிருக்கவில்லையோ
அந்த ஏதேனும் செயல் அல்லது செய்யாமை
காரணமாக, தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஏதேனும் தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டத்தை விட மிகக் கடுமை யானதான தண்டம் எதுவும் அத்தகைய தவறுக்கு விதிக்கப்படுதலாகாது.

(14) தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் சட்டத்திற்கிணங்க ஒரு தவறுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப் பட்ட எவரேனும் ஆள், மேன்முறையீட்டு அல்லது மீளாய்வு நியாயாதிக்கத் தைப் பிரயோகிக்கும் ஒரு நீதிமன்றத்தின் கட்டளை மீதன்றி, அதே தவறுக்காக விளக்கப்படற்பாலராதல் ஆகாது.

தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு

(15) (அ) சட்டத்திற்கிணங்கத் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலமாகவன்றி, ஆள் ஒருவர், மரணதண்டனை-யினால் அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலாகாது.

(ஆ) (1) புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறும் வரையில் ஆளொருவரைக் கைது செய்து வைத்திருத்தல், கட்டுக்காப்பில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரது சொந்தச் சுதந்திரத்தை வேறு வகையில் பறித்தல் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு நியாயமாக இருப்பின், தண்டனையாக அமைதலாகாது;

(11) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதற்குப் பதிலாகச் சட்டமாக்கப்படக் கூடிய அத்தகைய வேறு சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஓர் அகற்றுதற் கட்டளை அல்லது நாடு கடத்தற் கட்டளை காரண மாக ஆளொருவரைக் கைதுசெய்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்காப்பில் வைத்திருத்தல். தடுத்து வைத்தல் என்பன இப் பந்தியின் மீறுதல் ஒன்றாக அமைதல் ஆகாது.

(16) சுதந்திரம் பறிக்கப்பட்டவர்களான எல்லா ஆட்களையும் மனிதருக்குள்ள உள்ளார்ந்த மரியாதைக்கு மதிப்பளித்து மனிதாபி-மானத்துடன் நடாத்துதல் வேண்டும்.

(17) (அ) இந்த உறுப்புரையின் (9) ஆம் பந்தியினாலும், (10)ஆம் பந்தியின் (அ) உட்பிரிவின் (11)ஆம், (111)ஆம் விடயப் பொருட்களினாலும், (13)ஆம் (15)ஆம், (16) ஆம் பந்திகளினாலும் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மீது மட்டுப்பாடு எதுவும் இடப் படுதல் ஆகாது.

(ஆ) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன்கருதி, அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் உரிய முறையில் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்-திற்காக சனநாயக சமுதாயமொன்றில் அவசிய மாக இருக்கக்கூடியவாறானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவையுமான அத்தகைய மட்டுப் பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடு எதுவும், இந்த உறுப்புரையின் (1)ஆம், (2)ஆம், (3)ஆம், (4)ஆம், (5)ஆம், (6)ஆம், (7)ஆம், (8)ஆம் பந்திகளினாலும் (10)ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பிரிவின் (1)ஆம் (1V)ஆம் விடயப்பொருளினாலும், (11)ஆம், (12)ஆம், (14)ஆம் பந்திகளினாலும் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மீது இடப் படுதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவத்திற்கான உரிமை.

11.(1) சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் என்பதுடன், சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவரும் ஆவர்.

(2) (அ) இப்பந்தியின் (ஆ) மற்றும் (இ) என்னும் உட்பந்திகருக்கமைய, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அல்லது வேறு கொள்கை, தேசிய அல்லது சமூக மூலம், பிறப்பிடம், பிரஜா உரிமை பெற்ற முறை, திருமணமானவரா, அல்லவரா என்ற நிலை, தாய்வழி, பெற்றோர் அந்தஸ்து அல்லது அத்தகைய ஏதாவது ஒன்று என்ற ஏதுக்களின்மீது பிரஜை எவருக்கும் எதிராகப் பாரபட்சம் காட்டப்படுதலாகாது.

(ஆ) அரச சேவையை அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத் தாபனத்தின் சேவையை அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சேவையைச் சேர்ந்த ஊழியத்தை அல்லது பதவியை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் தேசிய மொழி அறிவு நியாயமான அளவு அவசியமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான தகைமை ஒன்றாக அத்தகைய தேசிய மொழியில் போதுமான அளவு அறிவை நியாயமான அளவு காலத்துக்குள் பெறுமாறு ஒருவரைத் தேவைப்படுத்துவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(இ) ஏதேனும் ஊழியப் பணியை அல்லது பதவிப் பணியை ஏதேனும் மொழியின் அறிவு இல்லாமல் நிறைவேற்ற முடியாதிருக்குமிடத்து, அந்த ஏதேனும் மொழியில் போதுமான அறிவு பெற்றிருத்தல் வேண்டுமென ஆள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரைத் தேவைப்படுத்துவது சட்ட முறையான தாதல் வேண்டும்.

(3) ஆள் ஒருவர் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது வேறு கொள்கை அல்லது தேசிய அல்லது சமூகமூலம், பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்களின் ஏதேனும் ஒரு ஏது காரணமாகக் கடைகள், பொது உணவுச் சாலைகள், ஹோட்டல்கள், பொதுக் களியாட்ட இடங்கள், தமது மதத்துக்குரிய பொது வழிபாட்டு இடங்கள் என்பவற்றுக்குச் செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்துக்கு, பொறுப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தப்படுதலாகாது.

(4) இவ்வுறுப்புரையில் உள்ள எதுவும், இனம், பால், பால் வேறுபாடு, வயது அல்லது உள அல்லது உடல் தகுதியீனம் காரணமாக அனுகூலம் குறைந்த அல்லது சிறப்புரிமையற்ற தனியாட்கள் அல்லது தொகுதியினர் உட்பட அனுகூலங்குறைந்த அல்லது சிறப்புரிமையற்ற தனியாட்களை அல்லது தொகுதியினரைப் பாதுகாக்கும் அல்லது முன்னேற்றும் தனியொரு நோக்கத்திற்கு அவசியமானவிடத்து, சட்டத்தின்மூலம், துணைநிலைச் சட்டத்தின் மூலம், அல்லது நிறைவேற்று நடவடிக்கை மூலம் விசேட வழிமுறைகள் எடுக்கப்படுவதைத் தடுத்தலாகாது.

(5) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன் கருதி அல்லது பொதுச்சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காக, அல்லது மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் உரிய முறையில் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசியமாக இருக்கக்கூடிய வாறானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டனவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடு எதுவும், இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளின் பிரயோகத்தின்மீது இடப்படுதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடுவதற்கான சுதந்திரம்.

12. (1) இலங்கையின் சட்டமுறையாக வதியும் ஆள் ஒவ்வொருவரும், இலங்கையினுள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், இலங்கையினுள் அவரது வதிவிடத்தைத் தெரிந்தெடுப்பதற்கும் உரித்துடைய வராவார்.

(2) ஒவ்வோராளும் இலங்கையை விட்டுச் செல்ல உரித்துடையவராதல் வேண்டும்.

(3) தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கமைதி அல்லது தேசிய பொருளாதாரம் என்பவற்றின் நலன் கருதி அல்லது பொதுச் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் உரிய முறையில் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்துக்காக அல்லது குடியரசில் இருந்து பிறநாட்டுக் குற்றவாளிகளை ஒப்படைப்பதற்காக, சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசியமாக இருக்கக்கூடியவாறானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டனவையுமான அத்தகைய மட்டுப் பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும் இந்த உறுப்புரையில் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளின் பிரயோகத்தின் மீது இடப்படுதலாகாது.

இலங்கைக்குத் திரும்பி வருவதற்கான சுதந்திரம்.

13. ஒவ்வொரு பிரசையும் இலங்கைக்குத் திரும்பி வருவதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்கான உரிமை.

14. (1) ஒவ்வோராளும் அவரது தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையிலும் அவரது மனையிலும் அவரது கடிதத் தொடர்புகளிலும் ஏனைய மதிப்பு தொடர்பாடல்களிலும் மதிப்புப் பெற உரிமை உடையவர். அத்துடன் அவரது மதிப்பு மற்றும் கௌரவத்தின் மீதான சட்டமுறையற்ற தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படுதலாகாது.

(2) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி அல்லது தேசிய பொருளாதாரம் என்பவற்றின் நலன் கருதி அல்லது பொதுச் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக அல்லது தத்திவாய்ந்த நீதிமன்ற-மொன்றின் தீர்ப்பு அல்லது கட்டளையொன்று வலுவுறுத்தும் நோக்கத்துக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றின் தீர்ப்பு அல்லது கட்டளையொன்றை வலுவுறுத்தும் நோக்கத்துக்காக, சனநாயக சமுதாயமொன்றில் அவசியமாக இருக்கக் கூடியவாறானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டனவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் யினால் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும் இந்த உறுப்புரை/ல வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளின் பிரயோகத்தின்மீது இடப்படுதல் ஆகாது.

சிந்தனைச் சுதந்திரமும் மனச்சாட்சியைப்பின்பற்றும் சுதந்திரமும்.

15. (1) ஆள் ஒவ்வொருவரும் தாம் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராய் இருத்தற்கான அல்லது கடைப்பிடிப்பதற்கான சுதந்திரம் உட்பட சிந்தனை செய்யும் சுதந்திரம். மனச் சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவ-ராவர்.

(2) இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியால் வெளிப் படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மீது கட்டுப்பாடுகள் எவையு இடப்படுதல் ஆகாது.

(3) ஒவ்வோர் ஆளும், ஒன்றில் தாமாகவோ அல்லது ஏனையவர்களுடன் இணைந்தோ, ஒன்றில் பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ தமது மதத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கு. உரித்துடையவராவர்.

(4) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்ப-வற்றின் நலன் கருதி அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்-களையும் ஏற்றங்கீகரித்த, மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசியமானதாக இருக்கக்கூடியவாறானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த, மட்டுப்பாடுகள் எவையும் இந்த உறுப்புரையின் (3) ஆம் பந்தியினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மீது இடப்படுதலாகாது.

வெளியிடுதல் மற்றும் தகவல் சுதந்திரம் உட்பட பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தல் சுதந்திரமும்.

16. (1) ஒவ்வோர் ஆளும் வெளியிடுதல் உட்பட பேச்சுச் சுதந்திரத்துக்கும், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்துக்கும் உரித்துடையவராவார். இந்த உரிமையானது, அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதற்கும், தெரிவிப்பதற்கும் தகவல் மற்றும் சிந்தனைகளை ஒன்றில் வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ, அச்சுமூலமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை வடிவம் மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் சாதனம் மூலமாகவோ நாடுவதற்கும், பெறுவதற்கும் அல்லது தெரிவிப்பதற்குமான சுதந்திரத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன்கருதி பொது சுகாதாரத்தையும் ஒழுக்கத்தையும் பாதுகாப்பதற்காக அது இன மத ஒற்றுமை அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை ஆகியவற்றின் நலன் கருதி அல்லது நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது தவறு ஒன்றைப் புரிவதற்குத் தூண்டுதல் என்ற நோக்கத்திற்காகவும் அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசியமாக இருக்கக்கூடியவாறானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும், இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைமீது இடப்படுதல் ஆகாது.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

17. (1) ஒவ்வோர் ஆளும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவராவார்.

(2) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன்கருதி, இன, அல்லது மத ஒற்றுமையின் நலன் கருதி, பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசியமாக இருக்கக்கூடியவாறானவையும், ஏதேனும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள்தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும், இந்த உறுப்புரையினைல் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமையின் பிரயோகத்தின்மீது இடப்படுதல் ஆகாது.

ஒருங்கு சேருவதற்கான சுதந்திரம்.

18. (1) ஒவ்வோராளும் ஒருங்கு சேருவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவராவார்.

(2) ஒவ்வொரு பிரசையும் ஒரு தொழிற் சங்கத்தை அமைக்கவும் அதில் சேரவும் உள்ள சுதந்திரத்திற்கு உரித்துடையவராவார்.

(3) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன்கருதி, இன அல்லது மத ஒற்றுமையின் நலன்கருதி அல்லது தேசிய பொருளாதார நலன்கருதி, அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரித்து, மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசியமாக இருக்கக்கூடியவாறானவையும் ஏதேனும் சட்டத்தினால் விதந்துரைக்கப்பட்டவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் எவையும் தவிர்ந்த மட்டுப்பாடுகள் இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளில் பிரயோகத்தின்மீது இடப்படுதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாசாரத்தை அநுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அத்துடன் மொழியைப் பயன்படுத்துவதற்குமான உரிமை.**

19. (1) ஒவ்வொரு பிரசையும், தாமாகவோ அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்தோ தனது சொந்தக் கலாசாரத்தை அநுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராவார்.

(2) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன்கருதி, இன அல்லது மத ஒற்றுமையின் நலன்கருதி அல்லது பொது சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக சனநாயக சமுதாயத்தின் அவசியமாக இருக்கக்கூடியவானவையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடு எதுவும், இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமையின் பிரயோகம் மீது இடப்படுதல் ஆகாது.

**ஏதேனும் சட்டமுறையான வியாபாரத்தில், தான்புரி தொழிலில், உயர் தொழிலில், தொழிலில் லில் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்.**

20. (1) ஒவ்வொரு பிரசையும் தாமாகவோ அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்தோ ஏதேனும் சட்டமுறையான தான்புரி தொழிலில், உயர் தொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவராவார்.

(2) தேசிய பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி, நலன்கருதி அல்லது பொது மக்களின் சுகாதாரத்தையும் ஒழுக்கத்தையும் பாதுகாப்பதற்காக அல்லது சூழல் நலன் கருதி அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரித்து மதிப்பளிக்கும் நோக்கத்திற்காக அல்லது பின்வருவன தொடர்பாக, அதாவது—

(அ) ஏதேனும் உயர் தொழிலைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் தான்புரி தொழிலை, வியாபாரத்தை, தொழிலை அல்லது தொழில் முயற்சியை கொண்டு நடாத்துவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமான உயர் தொழில்சார், தொழில் நுட்பம் சார், கல்விசார், நிதிசார் தகைமைகளும் வேறு தகைமைகளும் என்பன தொடர்பாகவும், அத்தகைய அடிப்படை உரிமைக்கு உரித்துடைய ஆளுக்கு உரிமம் அளித்தல் அவரின் ஒழுக்காற்று கட்டுப்பாடு என்பன தொடர்பாகவும்; அத்துடன்

(ஆ) முழுக்க முழுக்க பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது பகுதியளவில் பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது வேறுவகையிலோ ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை, கைத்தொழிலை, சேவையை அல்லது தொழில் முயற்சியை அரசு, அரச முகவர் நிலையம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் கொண்டு நடாத்துதல் தொடர்பாகவும்,

சனநாயக சமுதாயத்தில் அவசியமாக இருக்கக் கூடியவாறான வையும் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டனவையுமான அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும் இந்த உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளின் பிரயோகத்தின் மீது இடப்படுதல் ஆகாது.

ஆதனத்தைச் சொந்தம் கொள்வதற்கான உரிமை.

21. (1) ஒவ்வொரு பிரசையும் தனியாகவோ அல்லது ஏனையோருடன் சேர்ந்தோ, சூழல் பேணல், பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் உரிமைகள் ஆகியவற்றிற்கு அமைய, ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு உரித்துடையவராவார்.

(2) ஆள் எவரினதும் ஆதனம், சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு தவிர, அவரிடமிருந்து பறிக்கப்படுதல் ஆகாது.

(3) ஆதனம் எதுவும், பகிரங்க நோக்கம் ஒன்றுக்காக அல்லது பொதுப் பயன்பாடு அல்லது பொது ஒழுங்கமைதிக்காகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிரவும், நியாயமான நட்ட ஈடு வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்ற சட்டத்தின் அதிகாரத்தைக்கொண்டும் தவிரக் கட்டாயமாகக் கொள்ளப்படுதலோ தேவைக்கெடுக்கப்படுதலோ ஆகாது.

சிறு பிள்ளைகளின் விசேட உரிமைகள்.

22. (1) ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் -

(அ) பிறந்ததிலிருந்து பெயர் ஒன்றைக் கொண்டிருப்பதற்கு;

(ஆ) கொடுமைப்படுத்தப்படுதல், அசட்டை செய்யப்படுதல், துஉப்பிரயோகம் செய்யப்படுதல் அல்லது இழிவுபடுத்தப் படுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப் படுவதற்கு; அத்துடன்

(இ) கணிசமான அநீதி வேறுவகையில் விளைவிக்கப் படுமானால் சிறுபிள்ளையைப் பாதிக்கின்ற குற்றவியல் நடவடிக்கையில் அப்பிள்ளைக்கு அரசினால், அரசுச் செலவில் சட்டத்தரணி ஒருவர் அமர்த்தப்படுவதற்கு

உரிமை உண்டு.

(2) ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் -

(அ) குடும்பக் கவனிப்புக்கு அல்லது பெற்றோர் கவனிப்புக்கு அல்லது குடும்பச் சூழலில் இருந்து பிரிக்கப்படும்போது பொருத்தமான மாற்றுக் கவனிப்புக்கு ; அத்துடன்

(ஆ) அடிப்படைப் போசனைக்கு, உறைவிடத் துக்கு, அடிப்படைச் சுகாதார கவனிப்புச் சேவைகளுக்கு மற்றும் சமூக சேவைகளுக்கு,

உரிமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இரண்டாம்பந்தியினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளை முற்போக்காக செயலுருப்படுத்தி அடையும் நோக்கத்துடன், அரசு அதற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள வளவாய்ப்புக்களைக்கொண்டு நியாயமான சட்டவாக்க நடவடிக்கைகளையும் வேறு நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(4) சிறுபிள்ளைகள் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும் அவை பகிரங்க சமூக நலன்புரி நிறுவனங்களினால் பொறுப்பேற்கப்படினுஞ்சரி தனியார் சமூக நலன்புரி நிறுவனங்களினால் பொறுப்பேற்கப்படினுஞ்சரி, நீதிமன்றங்களினால் நிர்வாக அதிகார சபைகளினால் அல்லது சட்டவாக்கக் குழுக்களினால் பொறுப்பேற்கப்படினுஞ்சரி, சிறு பிள்ளைகளின் பூரண நலனுக்கே உயரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) சிறு பிள்ளைகளின் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய போதையூட்டும் பொருட்களின் நுகர்வினால் வரும் பாதகமான விளைவுகளிலிருந்தும் சாத்தியமான அத்தகைய பொருட்களை ஊக்குவிக்காதும் பாதுகாக்கப்படும் ஒரு சூழலில் வளருவதற்கான உரிமை ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் இருத்தல் வேண்டும்.

(6) ஐந்து வயதிற்கும், பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளை ஒவ்வொன்றுக்கும் அரசினால் வழங்கப்படும் இலவச கல்வி வாய்ப்பு கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(7) ஆபத்து விளைவிக்கக்கூடிய செயற்பாடு எதிலும் பிள்ளை எதுவும் ஈடுபடுத்தப்படுதல் ஆகாது.

(8) இவ்வுறுப்புரையினால் ஏற்றங்கீகரிக்கப்படும் உரிமைகள், இவ்வத்தியாயத்தின் கீழ், பிரசையொருவர் என்ற முறையில் / அல்லது ஆள் ஒருவர் என்ற முறையில் / பிள்ளையொன்று உரித்துடையதாய் இருக்கின்ற வேறு ஏதேனும் உரிமைக்கு மேலதிகமானதாய் இருக்க வேண்டும்.

(9) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக "சிறுபிள்ளை" என்பது, பதினெட்டு வயதிற்குக் கீழ் உள்ள ஆள்/ஒருவர் எனப் பொருள்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுக்கட்டாயமாக வேலைக் கமர்த்தப் படாமை சுதந்திரம்.

23. (1) வலுக்கட்டாயமாக வேலை செய்யுமாறு ஆள் ஒருவர் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக வலுக்கட்டாய வேலை பின்வருவனவற்றை உள்ளடக்குதலாகாது :-

(அ) தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றின் சட்டமுறையான தண்டனை ஒன்று அல்லது கட்டளை ஒன்று காரணமாக தேவைப் படுத்தப்படும் ஏதேனும் வேலை ;

(ஆ) இராணுவம் சார்ந்த எவையேனும் சேவைகள் அல்லது ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவராகப் புரிவதற்குத் தம் மனச்சாட்சிப்படி ஆட்சேபனை தெரிவிக்கும் ஆள் ஒருவரின் விடயத்தில் அத்தகைய சேவைக்குப் பதிலாக அவ்வாள் புரியுமாறு சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் வேலை ;

(இ) சமுதாய வாழ்க்கைக்கு அல்லது சமூக நலனுக்கு அச்சுறுத்தலாக அமையும் அவசரநிலை அல்லது இடராபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் நியாயமாகத் தேவைப் படுத்தப்படக்கூடியதான ஏதேனும் சேவை ; அத்துடன்

(ஈ) வழமையான குடியியல் கடப்பாடுகளின் ஓர் அங்கமாக நியாயமாகத் தேவைப் படுத்தப்படும் ஏதேனும் வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பான நிலைமைகளில் வேலை செய்வதற்கான உரிமை.

24.(1) ஒவ்வோர் ஆளுக்கும் பாதுகாப்பான நிலைமைகளில் வேலை செய்வதற்கான உரிமை உண்டு.

(2) அரசானது, (1) ஆம் பந்தியினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை முற்போக்காக செயலுருப்படுத்தி அடையும் நோக்கத்திற்காக, அதற்குக் கிடைக்கக்கூடியனவாக இருக்கும் வள வாய்ப்புகளைக்கொண்டு நியாயமான சட்டவாக்க நடவடிக்கைகளையும் வேறு நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

சமூக உரிமைகள்.

25.(1) ஒவ்வொரு பிரசையும் -

(அ) அவசர மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை;

(ஆ) போதுமானளவு உணவையும், நீரையும்; அத்துடன்

(இ) தோதான சமூக சேவையை;

பெறுவதற்கு உரிமை உண்டு.

(2) அரசானது, (1) ஆம் பந்தியினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை முற்போக்காக செயலுருப்படுத்தி அடையும் நோக்கத்திற்காக, அதற்குக் கிடைக்கக்கூடியனவாக இருக்கும் வள வாய்ப்புகளைக் கொண்டு நியாயமான சட்டவாக்க நடவடிக்கைகளையும் வேறு நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(3) சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு தவிர ஆள் எவரும் தமது வீட்டிலிருந்து வெளியேற்றப்படுதலோ அல்லது ஆள் எவரினதும் வீடு அழிக்கப்படுதலோ ஆகாது.

குறித்த சில அடிப்படை உரிமைகளின் நடைமுறை ஆயுதந்தாங்கிய படைகளுக்கு ஏற்புடையனவாகும் போது, சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு அமைவாகவிருத்தல் வேண்டும்.

26. (27) பத்தாம், 11(1), 12,14,15(3),16,17, அத்துடன் 18 ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் நடைமுறையும், அவை ஆயுதந் தாங்கிய படைகளுக்கு, பொலிசுப் படைக்கு, பொது ஒழுங்கமைதியைப் பேணும் பொறுப்பு அளிக்கப்பட்ட வேறு படைகளுக்கு ஏற்புடையனவாகும் போது, அவர்கள் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும் அவர்களுக்கிடையில் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பேணப்படுவதற்கும் ஆன நலன் கருதி ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க அவசர கால நிலைகளின் போது மதிப்புக் குறைத்தல்.

27. XX111 2ஆம் அத்தியாயத்தின் கீழ் பிரகடனம் ஒன்று உரிய முறையில் செய்யப்பட்டுள்ளவிடத்து, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்திக்கு அமைவாக, நிலைமையின் அவசர நிலை காரண மாகவும் சனநாயக சமுதாயம் ஒன்றில் அவசிய தேவை காரண மாகவும் கண்டிப்பாகத் தேவைப்படுத்துகின்ற அளவுக்கு இவ் வத்தியாயத்தில் வெளிப்படுத்தப்பட்டு, ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் பிரயோகத்தையும், நடைமுறையையும் மதிப்புக் குறைக்கச்செய்யும் நடவடிக்கைகள் சட்டத்தினால் விதித்துரைக்கப்படலாம், ஆயின், இனம், வகுப்பு, மதம், பால், பால் வேறுபாடு, மொழி, சாதி, தேசிய அல்லது சமூக மூலம் ஆகியவற்றை மட்டுமே அடிப்படை/ யாகக் கொண்ட பாரபட்சத்தை அத்தகைய நடவடிக்கைகள் உள்ளடக்குதல் ஆகாது, அத்துடன், இவ்வுறுப்புரையின் நோக்கத்துக்காக, "சட்டம்" என்பது, பொது மக்கள் பாதுகாப்புத் தொடர்பாக அப்போதைக்கு வலுவில் இருக்கும் சட்டத்தின் கீழ் செய்யப்படும் ஒழுங்குவிதிகளை உள்ளடக்கும்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் கீழ் நடவடிக்கை களை விதித்துரைப்பதில்-

(அ) எட்டாம், 9,10(1), 10(2),10(9), 10(10)(அ) (11), 10(10)(அ)(111), 10(13), 10(15), 10(16),13 அத்துடன் 15 ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள எவையேனும் உரிமைகளின்;

(ஆ) (1) கைது, எந்நீதவானின் இடப்பரப்பில் செய்யப்பட்டதோ அந்நீதிவானுக்கு அக்கைது பற்றி விடயத்தில் எல்லாச் சூழ்நிலைகளிலும், நியாயமானவாறான அத்தகைய காலத்திற்குள் அறிவிக்கப்படல் வேண்டுமெனவும் அத்துடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) கைது செய்யப்பட்ட ஆள் எவரேனும் நீதிவான் முன்னர் விடயத்தில் எல்லாச் சூழ்நிலைகளிலும், நியாயமானவாறான அத்தகைய காலத்திற்குள் கொணரப்படல் வேண்டும் எனவும், தேவைப்படுத்துகின்ற சட்ட ஏற்பாடு அதே நேரத்தில் செய்யப்பட்டலொழிய, 10(6) என்னும் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு, ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமை, மதிப்புக் குறைந்தவையாகச் செய்யப்படுதல் ஆகாது.

**வழக்கிலுள்ள எழுத்திலானதும் எழுத்தில் இல்லாததுமான சட்டம்.**

28. (1) எழுத்திலானதும் எழுத்தில் இல்லாததுமான தற்போதைய சட்டங்கள் அனைத்தும், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்குள் ஒவ்வாமை எதுவும் இருப்பினும், செல்லுபடியாதலும் நடைமுறையிலிருப்பதாதலும் வேண்டும்.

(2) (அ) அரசியலமைப்பு தொடங்கிய மூன்று மாதங்களுக்குள் சனாதிபதியானவர், தற்போது வழக்கிலுள்ள எழுத்திலான அல்லது எழுத்தில் இல்லாத சட்டங்கள் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து அத்தகைய ஏதேனும் சட்டம் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இருக்கின்றதெனச் சனாதிபதிக்கு அறிக்கையிடுவதற்காக, சட்டத்துறையில் அல்லது மனித உரிமைகள் துறையில் சிறந்து விளங்குபவரும் சனாதிபதியின் கைப்பட நியமிக்கப்பட்டவர்களுமான ஐந்துக்கு ([illegible]) மேற்படாதவர்களுமான ஆட்களைக்கொண்ட ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அவர்களுள் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சனாதிபதி, அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினர்களைத் நியமிக்கையில் ஆணைக்குழுவில் மூன்று பிரதான சமுதாயங்களினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை முறையாகக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்;

(இ) ஆணைக்குழு தாபிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி, செயல்முறைக்குகந்த விரைவில் அத்தகைய அறிக்கையைப் பாராளுமன்றத்தின் முன்வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) எவரேனும் ஆளை, நீதிமன்றமொன்றின் கட்டளையின் மீது, வழக்கிலுள்ள எழுத்திலான சட்டம் எதனாலும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வகையான தண்டனைக்கு உட்படுத்தலானது, இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் மீறுகையாதலாகாது.

பொருள் கோடல்.

29. இந்த அத்தியாயத்தில் "சட்டம்" என்பது ஒரு பிராந்திய சபையின் நியதிச் சட்டத்தையும் உள்ளடக்கும்.

அரச நடவடிக்கை காரணமாக அடிப்படை உரிமை மீறலுக்கான பரிகாரம்.

30. (1) ஒவ்வோராளும் இப்பந்தியின் (ஆ) அத்துடன் (இ) என்னும் உட்பந்திகளுக்கமைய, ஆட்சித்துறை அல்லது நிருவாக நடவடிக்கை உட்பட அரச நடவடிக்கை காரணமாக, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆள் உரித்துடையவராக இருக்கும் அடிப்படை உரிமையொன்று அல்லது ஆரம்பக் குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றங்களின் நீதிமுறை நடவடிக்கை காரணமாக 10 ஆம் உறுப்புரையின் கீழ் அத்தகைய ஆள் உரித்துடையதாகவிருக்கும் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவிருக்கின்றமை தொடர்பில் 171 ஆம் உறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இன்னலுற்ற ஆள், உடலியல், சமூக அல்லது பொருளாதார இயலாமை காரணமாகவோ அல்லது வேறு நியாயமான ஏதுவினாலோ 171 ஆம் உறுப்புரையின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்ய முடியாதவராக அல்லது இயலாதவராக இருக்குமிடத்து, இன்னலுற்ற ஆள் தமது சார்பில் அவரது எவரேனும் உறவினர் அல்லது நண்பர் விண்ணப்பமொன்று செய்வதற்கு இன்னலுற்ற ஆள் ஆட்சேபம் தெரிவிக்காவிடில், அத்தகைய உறவினரால் அல்லது நண்பரால் அத்தகைய விண்ணப்பம் செய்யப்படலாம்,

(இ) பொது மக்கள் நலன்கருதி பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் சார்பில் வேறு எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவினால் இவ்வுறுப்புரையின் கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படலாம்.

(2) இவ்வுறுப்புரையினதும் 171 ஆம் உறுப்புரையினதும் நோக்கத்திற்கு "அரச நடவடிக்கை" என்பது, இவ்வுறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்கு நீதிமுறை நடவடிக்கையை உள்ளடக்குமாயினும், சட்டவாக்க நடவடிக்கையை உள்ளடக்கமாட்டாது.

ரந்தரமான
ர்களும் சட்ட
றையாக வதி
ள்ளவர்களுமான
ரசைகள்
ல்லாதோரின்
ரிமைகள்.

31. ஏதேனும் நாட்டின் பிரசையொருவர் அல்லாதவரும், அரசியல் அமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் குடியரசில் நிரந்தரமாகவும் சட்டமுறையாகவும் வதிவுள்ளவரும் அவ்வாறு தொடர்ந்து வதிவுள்ளவராக இருக்கின்றவருமான ஆளொருவர், இலங்கைப் பிரசையொருவர் இவ்வத்தியாயத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எந்த உரிமைகளுக்கு உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த எல்லா உரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 1V

## மொழி.

அரச கரும மொழி.

32. குடியரசின் அரச கரும மொழிகள் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும்.

தேசிய மொழிகள்.

33. குடியரசின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆங்கிலமுமாதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் மொழிகள் உபயோகம்.

34. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது பிராந்திய சபை உறுப்பினர் ஒருவர் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்திலோ அல்லது அத்தகைய பிராந்திய சபையிலோ அல்லது உள்ளூரதிகார சபையிலோ எந்தவொரு தேசிய மொழியிலும் அத்தகைய உறுப்பினரின் கடமைகளைப் புரியவும் பணிகளை நிறைவேற்றவும் உரித்துடையவராதல் வேண்டும்.

நிருவாக மொழிகள்.

35. (1) சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் குடியரசு முழுவதும் நிருவாக மொழிகளாதல் வேண்டும்.

(2) தலைநகர ஆள்புலத்திலும், முதலாம் அட்டவணையின் இ மற்றும் ஈ என்னும் பாகங்களில் குறித்துரைக்கப்பட்ட எந்தப் பிராந்தியங்களில் பிராந்திய சபைகள் தாபிக்கப்பட்டு அங்கு தமிழ் மொழி பயன்படுத்தப்படவேண்டுமோ அந்தப் பிராந்தியங்களைத் தவிர மற்றெல்லாப் பிராந்தியங்களிலும் உள்ள தேசிய மற்றும் பிராந்திய பகிரங்க நிறுவனங்களினாலும், உள்ளூரதிகார சபைகளினாலும் பகிரங்கப் பதிவேடுகளைப் பேணுவதற்கான மொழியாக சிங்கள மொழியே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) பெரும்பாகச் செயலாளர் ஒருவரின் ஒரு பிரிவை உள்ளடக்கியதான ஏதேனும் பிரதேசத்தின் விடயத்திற்கேற்ப, சிங்கள அல்லது தமிழ்மொழி சார்ந்த சிறுபான்மையினர், அப்பிரதேசத்தில் மொத்தக் குடிசனத்தின் 1/8 பங்கினை விஞ்சுகின்றதாகவுள்ளவிடத்து, அத்தகைய பிரதேசத்தில் தேசிய மற்றும் பிராந்திய பகிரங்க நிறுவனங்களினால் அல்லது உள்ளூரதிகார சபைகளால் பகிரங்க பதிவேடுகளைப் பேணுவதற்கான மொழிகளாக சிங்களமும் தமிழும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) பகிரங்கப் பதிவேடுகளைப் பெறுவதற்கான மொழியொன்றாகச் சிங்கள மொழி பயன்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்தின் ஆளொருவர் -

(அ) அவரது அலுவலக முறையான ஏதேனும் தன்மையில் எவரேனும் அலுவலரிடமிருந்து தமிழில் அல்லது ஆங்கிலத்தில் செய்தித் தொடர்பு பெறுவதற்கும், செய்தித் தொடர்பு கொள்ளுவதற்கும் அத்தகைய அலுவலரிடமிருந்து, அந்த ஆள் தொடர்பு கொண்ட மொழியில் அத்தகைய செய்தித் தொடர்புக்கு மறுமொழியொன்றைப் பெறுவதற்கும்;

(ஆ) ஏதேனும் அலுவலக முறையான இடாப்பை, பதிவேட்டை, வெளியீட்டை அல்லது வேறு ஆவணத்தைப் பார்வையிடுவதற்கான அல்லது அதன் பிரதிகளை அல்லது பொழிப்புகளைப் பெறுவதற்கான எவரேனும் ஆளின் உரிமையைச் சட்டம் அங்கீகரித்தால், விடயத்திற்கேற்ப, அத்தகைய இடாப்பின், பதிவேட்டின், வெளியீட்டின் அல்லது ஆவணத்தின் பிரதியொன்றை அல்லது பொழிப்பொன்றை அல்லது அதன் மொழி பெயர்ப்பை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பெறுவதற்கும்.

(இ) ஆவணமொன்று அந்த ஆளுக்கு வழங்கப்படும் நோக்கத்திற்கென அலுவலரொருவரால் எழுதி நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய ஆவணத்தை அல்லது அதன் மொழிபெயர்ப்பொன்றை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தகவல் பெறுவதற்கும்;

(ஈ) ஏதேனும் பிறப்பு, இறப்பு அல்லது விவாகம் தொடர்பாக அல்லது தவறொன்று புரியப்பட்டமை தொடர்பாகப் பொலிசுக்கு அல்லது சமாதான அலுவலருக்குத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தகவல் கொடுப்பதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி பேசப்படும் பிரதேசங்களில் உரிமைகள்.

36. பகிரங்கப் பதிவேடுகளைப் பேணுவதற்கான ஒரு மொழியாகத் தமிழ் மொழி பயன்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்தில் ஆளொருவர் சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ 35 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் (அ),(ஆ),(இ),(ஈ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைகளைப் பிரயோகிப்பதற்கும், சேவைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

பிராந்திய நிர்வாகங்கள், முதலியவற்றின் உரிமைகள்.

37. (1) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்திக்கு அமைவாக, அதன் பதிவேடுகளை சிங்கள மொழியில் பேணி வருகின்ற ஒரு பிராந்திய நிருவாகம் அல்லது உள்ளூரதிகார சபையானது எவரேனும் அலுவலரிடமிருந்து அவரது அலுவலக முறையான தன்மையில் சிங்களத்தில் தகவல் தொடர்புகளைப் பெறுவதற்கும் அவருடன் தகவல் தொடர்புகொள்வதற்கும், அலுவலைக் கையாளுவதற்கும் உரித்துடையதாதல் வேண்டும்; அத்துடன் அதன் பகிரங்கப் பதிவேடுகளை தமிழ் மொழியில் பேணிவருகின்ற ஒரு பிராந்திய நிருவாகம் அல்லது உள்ளூரதிகார சபை எவரேனும் அலுவலரிடமிருந்து அலுவலக முறையான அவரது தன்மையில் தமிழில் தகவல் தொடர்புகளைப் பெறுவதற்கும் அவருடன் தகவல் தொடர்பு கொள்வதற்கும் அலுவல்களைக் கையாளுவதற்கும் உரித்துடையதாதல் வேண்டும்.

(2) பகிரங்க பதிவேடுகளைப் பேணுவதற்கு தேசிய மொழிகளில் ஒன்று பயன்படுத்தப்படும் பிரதேசத்தில் செயற்படும் பிராந்திய நிர்வாகம், உள்ளூரதிகார சபை அல்லது பகிரங்க நிறுவனம் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலர், பகிரங்கப் பதிவேடுகளைப் பேணுவதற்கு வேறொரு தேசிய மொழி பயன்படுத்தப்படும் பிரதேசமொன்றில் செயற்படும் வேறு ஏதேனும் பிராந்திய நிர்வாகத்திடமிருந்து உள்ளூரதிகார சபைகளிடமிருந்து அல்லது பகிரங்க நிறுவனத்திடமிருந்து அல்லது எவரேனும் அலுவலரிடமிருந்து ஆங்கிலத்தில் தகவல் தொடர்புகளைப் பெறுவதற்கும் தகவல் தொடர்பு கொள்வதற்கும் அலுவலைக் கையாளுவதற்கும் உரித்துடையதாதல் அல்லது உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசேவைகள் முதலியவற்றுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான பரீட்சைமொழி.

38. (1) ஏதேனும் தேசிய அல்லது பிராந்திய சேவைக்கு அல்லது ஏதேனும் பகிரங்க நிறுவனத்துக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான ஏதேனும் பரீட்சையில் ஆளொருவர், ஒன்றில் சிங்களத்திலோ அல்லது தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பரீட்சிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயின், இவ்வுரித்து, அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தமிழ் அல்லது சிங்கள மொழி அறிவு நியாயமாக அவசியப்படுமிடத்து அத்தகைய சேவைக்கு அல்லது பகிரங்க நிறுவனத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் நியாயமானவொரு காலத்திற்குள், விடயத்திற்கேற்ப, அத்தகைய தமிழ் அல்லது சிங்கள மொழியில் போதிய அறிவை அவர் பெற வேண்டும் என அவர் தேவைப்படுத்தப்படலாம் என்ற நிபந்தனைக்கு அமைந்ததாயிருத்தல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் எந்தப் பதவிக்கு அல்லது தொழிலுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றாரோ அந்தப் பதவிக்குரிய அல்லது தொழிலுக்குரிய பணி எதனையும் போதியளவு சிங்கள அல்லது தமிழ் அல்லது ஆங்கில அறிவொன்று இல்லாமல் புரியமுடியாதிருக்குமிடத்து அத்தகைய மொழியில் போதியளவு அறிவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென அவ்வாள் தேவைப்படுத்தப்படலாம்.

சட்டவாக்க மொழி.

39.(1) எல்லாப் பாராளுமன்றச் சட்டவாக்கங்களும், பிராந்திய சபையின் நியதிச் சட்டவாக்கங்களும், துணைநிலைச் சட்டவாக்கங்களும், சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் சட்டமாக்கப்படுதல் அல்லது ஆக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் சட்டத்தில், நியதிச்சட்டத்தில் அல்லது துணைநிலைச் சட்டவாக்கத்தின் ஏற்பாட்டில் அத்தகைய எவையேனும் இரண்டு உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அத்தகைய உரை ஒவ்வொன்றும், அத்தகைய எழுத்திலான சட்டத்தை சட்டமாக்குகின்ற அல்லது ஆக்குகின்ற அதிகாரி வேறுவகையாக ஏற்பாடு செய்தாலன்றி, சமமான அதிகாரமுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவிலுள்ள எழுத்திலான சட்டங்களை சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடுதல்.

40. சிங்களத்திலும் தமிழிலும் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட எழுத்திலான சட்டங்களைத் தவிர அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலுள்ள எழுத்திலான எல்லாச் சட்டங்களும் சாத்தியமானளவு விரைவில் சிங்களத்திலும் தமிழிலும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நீதிமன்றங்களின் மொழி.

41. சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் நீதிமன்றங்களின் மொழிகளாகஇலங்கைக் குடியரசு எங்கணும் இருத்தல் வேண்டும்.

நீதிமன்றங்களின் பதிவேட்டினதும் நடவடிக்கைகளினதும் மொழி.

42.(1)இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்திக்கு அமைவாக, முதலாம் அட்டவணையின் பாகங்கள் இ மற்றும் ஈ என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட எந்தப் பிராந்தியங்களுக்கு, பிராந்திய சபைகள் தாபிக்கப்பட்டு அங்கு தமிழ் மொழி பயன்படுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றதோ அந்தப் பிராந்தியங்களைத் தவிர, குடியரசின் எல்லாப் பிரதேசங்களிலும் அமைந்துள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழியே பதிவேட்டு மொழியாகவும், நடவடிக்கை மொழியாகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து ஏதேனும் மேன் முறையீடு செய்யப்படும் பட்சத்தில், மேன்முறையீட்டைக் கேட்கும் நீதிமன்றத்தின் மொழியானது, எந்த நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு முன்வைக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழி அல்லாத வேறு மொழியாக இருக்குமிடத்து, பதிவேடு, மேன்முறையீட்டைக் கேட்கும் நீதிமன்றத்தின் மொழியிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(3) நீதி என்னும் விடயத்திற்குப்பொறுப்பான அமைச்சரவை அமைச்சர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் ஏதேனும் நீதிமன்றத்தின் பதிவேடு அந்நீதிமன்றத்தின் மொழி அல்லாத வேறு ஒரு தேசிய மொழியில் பேணப்படுதல் வேண்டும் எனவும், நடவடிக்கைகள் அத்தகைய மொழியில் நடத்தப்படுதல் வேண்டும் எனவும் பணிக்கலாம்.

நீதிமன்றங்களில் நடவடிக்கைகளைத் தொடக்கிவைத்தல்.

43. எவரேனும் கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர் அல்லது அத்தகைய கட்சிக்காரரை, அல்லது விண்ணப்பகாரரைப் பிரதிநிதித்துவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கு சட்டப்படி உரித்துடைய எவரேனும் ஆள் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழியில் நடவடிக்கைகளைத் தொடங்கி வைக்கலாம், வழக்குரைகளையும் வேறு ஆவணங்களையும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கலாம், அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றலாம்.

நடவடிக்கைகளில் பேச்சு மொழி பெயர்ப்புகளையும், மொழி பெயர்ப்புகளையும் ஏற்பாடு செய்தல்.

44. நீதிமன்றம் ஒன்றில் பயன்படுத்தப்படும் மொழியை அறிந்திராத எவரேனும் நீதிபதி, யூரர், கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர் அல்லது அத்தகைய கட்சிக்காரரை, விண்ணப்பகாரரைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு சட்டப்படி உரித்துடைய எவரேனும் ஆள், அத்தகைய நீதிமன்றத்தின் முன்னருள்ள நடவடிக்கைகளை விளங்கிக் கொள்வதனையும் அவற்றில் பங்கு பற்றுவதனையும் இயலச் செய்வதற்காக சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பேச்சு மொழி பெயர்ப்பும், மொழி பெயர்ப்பும் அரசினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுவதற்கு அத்தகைய நீதிபதி, யூரர், கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர் அல்லது வேறு ஆள் உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய மொழியில் சட்டத்திற்கிணங்க பெற்றுக்கொள்வதற்கு அவர் உரித்துடையவராகக் கூடியவாறான பதிவேட்டின் அத்தகைய ஏதேனும் பாகத்தை அல்லது அதன் மொழி பெயர்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தல்.

45. (1) நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரானவர்/அமைச்சர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் ஏதேனும் நீதிமன்றத்தின் எல்லா நோக்கங்களுக்குமாக, அல்லது பணிப்புகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்குமாக, பதிவேடுகளிலும் அத்துடன் நடவடிக்கைகளிலும் அல்லது அவை தொடர்பில் ஆங்கில மொழிப் பாவனையை அனுமதித்துப் பணிப்புகள் வழங்கலாம். நீதிபதி ஒவ்வொருவரும் அத்தகைய பணிப்புகளை செயற்படுத்துவதற்கு பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(2) நீதிபதி ஒருவர் எவையேனும் நடவடிக்கைகளுக்கான கட்சிக்காரர்களின் வேண்டுகோளின்பேரில் ஆங்கில மொழியின் பாவனை அத்தகைய நடவடிக்கைகளினை விரைவாக முடிவாக்குவதற்கு வசதியளிக்கும் என அபிப்பிராயப்பட்டால் பதிவேடுகள், நடவடிக்கைகள், தொடர்பில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனா மொழி.

46. ஆள் ஒருவர் சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ் மொழி மூலம் அத்துடன் வசதிகள் இருப்பின் ஆங்கில மொழி மூலம் கல்வி கல்வி கற்பிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தில் போதனா மொழி.

47. ஆள் ஒருவர், பல்கலைக்கழகமொன்றின் ஏதேனும் பயிற்சி நெறியில், கல்வித் துறையில் அல்லது பீடத்தில், அவர் தெரிவு செய்யும் ஏதேனும் தேசிய மொழியில் போதிக்கப்படுவது அத்தகைய பல்கலைக் கழகத்தில் நியாயமான வகையில் சாத்தியப்படுமாயின், அத்தகைய மொழியில் போதிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

வேறு தேசிய மொழிபோதனா மொழியாக இருக்குமிடத்து ஒரு தேசிய மொழியின் பாவனை.

48.(1) இந்த உறுப்புரையின் (2)ஆம் பந்திக்கு அமைவாக, அரசினால் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதி உதவி வழங்கப்படும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பயிற்சி நெறிக்கு, கல்வித் துறைக்கு அல்லது போதனா பீடத்திற்கு/அல்லது அத்தகைய பயிற்சி நெறியில் கல்வித் துறையில் அல்லது போதனாபீடத்தில் ஒரு தேசிய மொழி போதனா மொழியாக இருக்குமிடத்து, அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு தாங்கள் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் வேறு தேசிய மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்ட மாணவர்களுக்கு அத்தகைய பயிற்சி நெறிக்கான, கல்வித் துறைக்கான, அல்லது போதனா பீடத்திற்கான அல்லது அத்தகைய பயிற்சி நெறியில், கல்வித் துறையில் அல்லது போதனா பீடத்தில், அந்த வேறு தேசிய மொழியும் போதனா மொழியொன்றாக்கப்படுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தின் வேறு ஏதேனும் வளாகத்தில் அல்லது கிளையில் அல்லது அதுபோன்ற வேறு ஏதேனும் பல்கலைக் கழகத்தில் அதுபோன்ற ஏதேனும் பாடநெறிக்கான, கல்வித்துறைக்கான, அல்லது போதனா பீடத்திற்கான அல்லது அத்தகைய பயிற்சி நெறியில் கல்வித் துறையில் அல்லது போதனா பீடத்தில் அத்தகைய இயைபான வேறு தேசிய மொழிகள் போதனா மொழியாக இருப்பின், இப் பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் சட்டப்பாட்டுக்குரியதாக்கப்பட மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளில் பாவனைக்கான வசதிகள்.

49. அரசானது, இவ்வத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மொழிகளின் பாவனைக்குப் போதுமான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இந்த அத்தியாயம் மேலோங்கி நிற்றல்வேண்டும் என்பது.

50. ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

51. இவ்வத்தியாயத்தில்,

"நீதிமன்றம்" என்பது, நீதி நிருவாகத்திற்கென (கைத்தொழில் பிணக்குகளையும், ஏனைய பிணக்குகளையும் இணங்கித் தீர்த்து இணக்கம் ஏற்படுத்துதல் உட்பட) உருவாக்கப்பட்ட, ஆணையிட்டமர்த்தப்பட்ட, தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபை அல்லது நீதிப் பணிகளை அல்லது நீதிமருவிய பணிகளைப் பிரயோகிக்கின்ற வேறேதேனும் நியாயசபை அல்லது நிறுவனம் அல்லது பிணக்குகளை இணங்கித் தீர்ப்பதற்கென உருவாக்கப்பட்டு ஆணையிட்டமர்த்தப்பட்ட, தாபிக்கப்பட்ட ஏதேனும் நியாயசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்.

"நீதிபதி" என்பது, ஏதேனும் நீதிமன்றத்தின் தலைவர், தவிசாளர், தலைமை தாங்கும் அலுவலர், உறுப்பினர் ஆகியோரை உள்ளடக்கும்.

"அலுவலர்" என்பது, சனாதிபதி, எவரேனும் அமைச்சர், பிரதி அமைச்சர், ஆளுநர், பிரதான அமைச்சர், ஒரு பிராந்தியத்தின் அமைச்சர்கள்சபையின் அமைச்சர், அல்லது ஒரு பகிரங்க நிறுவனத்தின், உள்ளூரதிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் அல்லது பிராந்திய நிர்வாகத்தின் எவரேனும் அலுவலர் என்று பொருளாகும்;

"பகிரங்க நிறுவனம்" என்பது, ஓர் அரசாங்கத் திணைக்களம் அல்லது அரசாங்க நிறுவனம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச் சட்ட நிறுவனம் என்று பொருளாகும்;

"பதிவேடு" என்பது, வழக்குரைகளையும், தீர்ப்புக்களையும், கட்டளைகளையும் அத்துடன் ஏனைய நீதிமுறைச் செயற்பாடுகளையும், அமைச்சுச் செயற்பாடுகளையும் உள்ளடக்கும்; அத்துடன்

"பல்கலைக்கழகம்" என்பது, எந்த ஓர் உயர் கல்வி நிறுவனத்தையும் உள்ளடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VI

## பிரசாவுரிமை

இலங்கைப் பிரசாவுரிமை. 52. (1) "இலங்கைப் பிரசை அந்தஸ்து" என அறியப்படும் பிரசாவுரிமை அந்தஸ்து ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் வம்சாவழி உரிமைமூலம் பிரசாவுரிமைக்கு உரித்துடையவராக வந்திருப்பினுஞ்சரி அல்லது பிரசாவுரிமை பற்றிய சட்டத்துக்கிணங்கப் பதிவுசெய்வதன் பயனாக அல்லது ஏதேனும் சட்டத்தின் நடைமுறையின் பயனாக அல்லது இவ்வுறுப்புரையின் (6)ஆம் பந்தியின் நடைமுறையின் பயனாக பிரசாவுரிமைக்கு உரித்துடையவராக வந்திருப்பினுஞ்சரி, அவ் ஆள் எல்லா நோக்கங்களுக்காகவும் "இலங்கைப் பிரசை" என்றே விவரிக்கப்படுதல் வேண்டும்.

(3) வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்து பெறப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது பதிவுசெய்வதன் பயனாக அல்லது ஏதேனும் சட்டத்தின் நடைமுறையின் பயனாக அல்லது இவ்வுறுப்புரையின் பந்தி (6)இன் செயற்பாட்டினால் அத்தகைய அந்தஸ்து பெறப்பட்டிருப்பினுஞ்சரி, அதனை விவரித்துக் குறிப்பீடு செய்வதன்மூலம் இலங்கைப் பிரசைகளுக்கிடையே வேறுபாடு எதுவும் பாட்டப்படுதல் ஆகாது.

(4) பிரசாவுரிமைச் சட்டத்தின் 19,20,21,22,23 அத்துடன் 24 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழன்றியும் அவற்றின் பயனைக் கொண்டன்றியும், எவரதும் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்து பறிக்கப்படுதலோ, அந்த அந்தஸ்து வகிக்கப்படாதொழிதலோ ஆகாது.

(5) அரசியலமைப்புத் தொடங்கும்போது, வம்சாவழி மூலமாக வாயினுஞ்சரி அல்லது பிரசாவுரிமை பற்றிய ஏதேனும் சட்டத்துக்கிணங்கப் பதிவு செய்வதன் பயனாகவாயினுஞ்சரி அல்லது ஏதேனும் சட்டத்தின் நடைமுறையின் பயனாகவாயினுஞ்சரி அல்லது இந்த உறுப்புரையின் (6)ஆம் பந்தியின் நடைமுறையின் பயனாகவாயினுஞ்சரி இலங்கைப் பிரசையாகவிருந்த ஒவ்வோர் ஆளும், இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்துக்கும் இலங்கைப் பிரசைக்குள்ள உரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) (அ) அரசியலமைப்பு தொடங்கும்போது, 1964 அக்டோபர் 30ஆந் தேதியிலிருந்து குடியரசின் நிரந்தர வதிவுள்ளவராக இருந்து வருகின்றவரும் அத்துடன் ஏதேனும் நாட்டின் பிரசையொருவராக இல்லாதவருமான ஒவ்வோராளும்; அத்துடன்

(ஆ) 1964 அக்டோபர் 30ஆந் தேதியன்று குடியரசின் நிரந்தரமாக வதிவுள்ளவராகவும் அத்தேதியன்று ஏதேனும் நாட்டின் பிரசையொரு வராக இல்லாதவருமாகிய எவரேனும் ஆளின் பிற்பந்தியாக இருக்கின்ற குடியரசின் நிரந்தர வதிவுள்ளவரும் அரசியலமைப்புத் தொடங்கும்போது ஏதேனும் நாட்டின் பிரசையாக இல்லாதவருமாகிய ஒவ்வோராளும்,

அரசியலமைப்புத் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கைப் பிரசையின் அந்தஸ்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல்(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவுகள் 3,4,5,6 என்பவற்றின் ஏற்பாடுகளும் அத்துடன் அதற்கான அட்டவணைகள் அ மற்றும் ஆ என்பனவும், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய ஆட்களுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(7) பிரசாவுரிமை பற்றிய இப்போதுள்ள எழுத்திலான எல்லாச் சட்டங்களின் ஏற்பாடுகளும், பிரசாவுரிமை பற்றிய குறிப்பீடுகளைக் கொண்டுள்ளனவான வழக்கிலுள்ள எழுத்திலான ஏனைய எல்லாச் சட்டங்களும் இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக வாசிக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VI

## அரச கொள்கை பற்றிய நெறிமுறைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்

அரச கொள்கை பற்றிய நெறிமுறைக் கோட்பாடுகள்.

53. பின்வரும் கோட்பாடுகள், சட்டங்களை ஆக்குவதிலும் இலங்கையினை ஆள்வதிலும் அரசை வழிநடத்துதல் வேண்டும் –

(1) அரசு, இலங்கையர் சமுதாயத்தின் பன்முக பல்லின இயல்பினை ஏற்றங்கீகரித்து, இலங்கை மக்களின் எல்லாப் பிரிவினர்களிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர விசுவாசம், நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றையும் ஊக்குவிப்பதன் மூலம் தேசிய ஒற்று-மையைப் பலப்படுத்துதல் வேண்டும்.

(2) அரசு, மக்களின் கலாசாரங்களையும் மொழிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல் வேண்டும்.

(3) அரசு, அரசாங்கத்தின் சனநாயக அமைப்பையும் மக்களின் சனநாயக உரிமைகளையும் பாதுகாத்த-லும், பலப்படுத்துதலும் வேண்டும்.

(4) அரசு நியாயமான, ஒப்புரவான ஒழுக்கமிக்க, சமூகக் கட்டமைப்பொன்றைத் தாபித்தல் வேண்டும். இச்சமுதாயத்தின் குறிக்கோள்களுள் பின்வருவன அடங்குதல் வேண்டும்;

(அ) எல்லா ஆட்களும் தமது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் முழுமையாக அனுபவித்தல்;

(ஆ) தேசிய வாழ்வின் அமைவுகளெல்லாம் சமூக, பொருளாதார, அரசியல் நீதியால் வழிப்படுத்தப்படுவனவாக அமைந்த ஒரு சமூக ஒழுங்குமுறையை செவ்வையான முறையில் ஆக்கிப் பாதுகாத்தல்;

(இ) பொருளாதார, சமூக சிறப்புரிமைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் சுரண்டலையும் ஒழித்தல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) சமுதாயத்தின் பருப்பொருள் மூல வளங்களையும் சமூக உற்பத்திகளையும் ஒப்புரவான முறையில் பகிர்ந்தளித்தல்;

(உ) எல்லாப் பிரசைகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் போதிய உணவு, உடை, வீட்டுவசதி, மருத்துவப் பராமரிப்பு என்பன உட்பட போதிய அளவிலான வாழ்க்கைத் தரமொன்றை அமைத்துக் கொடுத்தல்;

(ஊ) சமூகப் பாதுகாப்பையும் சேமநலத்தையும் உறுதிப் படுத்துதல்;

(எ) மக்களின் ஒழுக்க, கலாச்சார, கல்வித்தரங்களை உயர்த்துதலும் அத்துடன் மனித ஆளுமையின் முழுமையான அபிவிருத்திக்கு வசதியளித்தலும்;

(ஏ) பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ள மக்கள் தத்தமது மதக் கோட்பாடுகளை மெய்யாக உணர்வுடன் இயலச் செய்வதற்கு அவசியமான சூழலை உருவாக்குதல்;

(5) அரசானது, தோதான பகிரங்க மற்றும் தனியார் பொருளாதார முயற்சி மூலம் நாடு முழுவதையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

(6) அரசானது, சூழலைப் பாதுகாத்தலும், பேணிக்காத்தலும், மேம்படுத்துதலும் அத்துடன் இலங்கையின் முருகைக் கற்கள், கடற்கரைகள், வளங்கள், குளங்கள், நீர் நிலைகள், வனசீவராசிகள் என்பவற்றைப் பாதுகாத்தலும் வேண்டும்.

(7) அரசானது, சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததென வெளிப்படுத்தப் பட்ட கலை அல்லது வரலாற்று நயம் படைத்த நினை-வுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னம், அல்லது இடம் அல்லது பொருள் ஒவ்வொன்றையும் பாதுகாத்தலும் பேணிக்காத்தலும் வேண்டும்.

(8) அரசானது, சருவதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும், ஒத்துழைப்பையும் நீதியானதும் ஒப்புரவானதுமான சருவதேச பொருளாதார சமூக ஒழுங்கு முறைமையைத் தாபித்தலையும் ஊக்குவித்தல் வேண்டும்; அத்துடன் நாடுகளுடனும் அவற்றிடையேயும் செயலாற்றுகையில் சர்வதேசச் சட்டங்களையும், உடன்பாட்டுக் கட்டுப்பாடுகளையும் மதித்து நடத்தலும், அவற்றிற்கான மதிப்பை ஊக்கி வளர்த்தலும் வேண்டும்.

(9) மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் தொடர்பான எந்த சர்வதேச சாதனங்களில் இலங்கை
தோ
ஒப்பமிட்ட திறத்தவராக உள்ள/அச்சர்வதேசச் சாதனங்களை, அரசானது வலுப்படுத்தலும், மதித்தலும், அவற்றிற்கான மதிப்பை ஊக்கி வளர்த்தலும் வேண்டும்.

அடிப்படைக் கடமைகள்.

54. பிரசை ஒவ்வொருவரும் —

(1) இலங்கையின் இறைமையையும், ஒற்றுமையையும், ஆள்புல / ஒருமைப்பாட்டையும் கட்டிக்காத்தலும் பாதுகாத்தலும்;

(2) அரசியலமைப்பையும் அதன் இலட்சியங்களையும் அமைப்புகளையும் கட்டிக்காத்தலும், தாங்காத்தலும்;

(3) அனைத்து இலங்கை மக்களிடையேயும் தேசிய ஒற்றுமையை ஊக்கி வளர்த்தலும் ஐக்கியத்தை ஊக்குவித்தலும்;

(4) ஏனையோரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்தலும்;

(5) எமது கூட்டுக் கலாச்சாரத்தில் மகத்தான மரபியல்புகளை மதித்துப் பேணிக்காத்தலும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) சுற்றாடலைப் பாதுகாத்தலும் மேம்படுத்துதலும் அதன் செழுமைகளைப் பேணிக்காத்தலும்;

(7) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கலை அல்லது வரலாற்றுப் பொருட்களையும் இடங்களையும் பாதுகாத்தலும் பேணுதலும்;

(8) பகிரங்கச் சொத்தைப் பாதுகாத்தலும் பேணிக் காத்தலும் அதன் வீண் விரயத்தை அல்லது துர்ப் பிரயோகத்தைத் தடுத்து நிறுத்துதலும்;

(9) இலஞ்சத்தில் அல்லது ஊழலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்குபற்றுவதைத் தவிர்த்தலும்;

(10) சட்ட ஆளுமையைக் கட்டிக்காத்தலும் வன்செயலை மறுதலித்தலும்;

(11) ஆளொருவர் தெரிந்தெடுக்கப்பட்ட தொழிலில் கடமையுணர்ச்சியுடன் பணியாற்றுதலும்,

அவரது கடமையாதல் வேண்டும்.

அரச கொள்கைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் நீதிமுறை ஆய்வுக்குட்படாமை.

55 .(1) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், சட்ட உரிமைகளையோ கடப்பாடுகளையோ அளிக்கமாட்டா அல்லது விதிக்கமாட்டா; என்பதுடன் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் அவை வலுவுக்கிடப்படுதலுமாகாது.

(2) அத்தகைய ஏற்பாடுகளுள் ஒவ்வாமை காணப்படுவது பற்றிய பிரச்சினை எதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயச் சபையில் எழுப்பப்படுதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VII

## மத்திய நிறைவேற்றுத்துறை

## குடியரசின் சனாதிபதி

குடியரசின் சனாதிபதி.

56 .(1.) இலங்கைக் குடியரசிற்குச் சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும்; அவரே அரசின் தலைவரும் ஆயுதந் தாங்கிய படைகளின் படைத் தலைவரும் ஆவார்; அவர் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிரதம மந்திரியின் மதியுரையின்மேல் செயற்படுதல்வேண்டும்.

(2) பொதுமக்கள் பாதுகாப்பு சம்பந்தமாக அப் போதைக்குள்ள சட்டம் உட்பட, அரசியலமைப்பின்கீழும் வேறு ஏதேனும் சட்டத்தின்கீழும் சனாதிபதிப் பதவிக்குரிய தத்துவங்களையும், பணிகளையும் முறையாகப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் சனாதிபதியே பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்.

57 .(1) அரசியலமைப்பின்கீழ், தேருநர் ஒருவராக இருக்கத் தகைமைபெற்ற எந்தவொரு பிரசையும், சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகவுடையவராதல் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியின்கீழ் தகைமையுள்ள பிரசையொருவர், சட்டத்தினால் அல்லது நிலையியற் கட்டளைகளினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறைக்கும் இணங்கவும், அத்தகைய சட்டமோ நிலையியற் கட்டளைகளோ இல்லாதவிடத்து சபாநாயகர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைமுறைக்கு இணங்கவும் (சமூகமளிக்காதோர் உட்பட) முழு எண்ணிக்கையினரான பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிக்குக் குறையாதோர் அவருக்குச் சாதகமாக வாக்களிப்பதன்மூலம் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

(3) சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், பிரதம நீதியரசரின் முன்னிலையில் அல்லது பிரதம நீதியரசர் இல்லாதவிடத்து அந்நீதிமன்றத்தின் வேறு எவரேனும் நீதிபதியின் முன்னிலையில் பின்வரும் சத்தியத்தைச் செய்வதன்மேல் அல்லது உறுதியுரையை எடுத்து மொழிவதன்மேல் இலங்கைக் குடியரசின் சனாதிபதியாகப் பதவியேற்றல் வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"............................ஆகிய நான், இலங்கைக் குடியரசிற்கு விசுவாசமுள்ளவராக இருப்பேன் எனவும் உண்மையான பற்றுறுதி கொண்டிருப்பேன் எனவும், இலங்கை அரசிய லமைப்பைப் போற்றிக் காப்பேன் எனவும், அரசியலமைப்பிற்கும் சட்டத்திற்கும் இணங்க இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் விசுவாசத்துடன் புரிவேன் எனவும் பயபக்தி யுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கின்றேன்/சம்மதம் செய்கின்றேன்."

(4) பதவியேற்றதன்மேல், சனாதிபதி, அரசியலமைப் பினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்பதுடன், அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது பிராந்திய சபை உறுப்பினரொருவராக இருப்பின் விடயத்திற்கேற்ப, பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபை யில் அவரது ஆசனத்தை வறிதாக்குதலும் வேண்டும். சனாதிபதி எத்தகை யதுமான இலாபந்தரும் வேறு ஏதேனும் பதவியை அல்லது இடத்தை வகித்தலாகாது.

சனாதிபதியின் தத்துவங்கள்.

58. சனாதிபதி, அரசியலமைப்பினால் அல்லது எழுத் திலான ஏதேனும் சட்டத்தினால் அவருக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் மேலதிக மாக, பின்வரும் தத்துவங்களை உடையவராதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றின் ஆரம் பத்திலும் பாராளுமன்றத்தில் அரசாங்கக் கொள்கைப் பிரகடனங்களை எடுத்துரைப்பதற்கு;

(ஆ) பாராளுமன்றத்தின் சம்பிரதாயபூர்வ அமர்வுகளில் தலைமை வகிப்பதற்கு;

(இ) பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு, அமர்வு நிறுத்துவதற்கு அத்துடன் கலைப்பதற்கு;

(ஈ) முதலமைச்சரையும், அமைச்சரவையின் மற்றைய அமைச்சர்களையும், பிரதிஅமைச்சர்களையும், பிராந்தியங்களின் ஆளுநர்களையும் நியமிப்பதற்கு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) அரச அலுவலர்களை, உயர் ஸ்தானிகர்களை, பூரண அதிகாரம் பெற்ற அரசுப் பிரதிநிதிகளை அத்துடன் வேறு இராஜ தந்திர முகவர்களை வரவேற்று ஏற்று அங்கீகரிப்பதற்கு, நியமிப் பதற்கு அத்துடன் அவர்களுக்குப் பொறுப்பளிப்பதற்கு;

(ஊ) குடியரசின் பகிரங்க இலச்சினையை வைத்திருப்பதற்கும், பகிரங்க இலச்சினையின்கீழ் முதலமைச்சரின் மற்றும் அமைச்சரவை யின் வேறு அமைச்சர்களின், பிரதி அமைச்சர்களின், பிராந்தியங் களினது ஆளுநர்களின், பிரதம நீதியரசரின் அத்துடன் மேன்முறை யீட்டு நீதிமன்றத் தலைவரின், அத்துடன் உயர் நீதிமன்ற, மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின், பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனப் பத்திரங்களைச் செய்து நிறைவேற்றுவதற்கு, அத்துடன் குடியரசுக்கு உரித்தாக்கப்பட்ட காணிகளின் மற்றும் அசைவற்ற ஆதனத்தின் அத்தகைய வழங்குகைகளையும் கையுதிர்ப்பு களையும் செய்வதற்குச் சட்டத்தினால் அவர் தேவைப்படுத்தப் பட்டவாறு அல்லது தத்துவமளிக்கப்பட்டவாறு செய்து நிறைவேற்று வதற்கு, அத்துடன் அந்த இலச்சினை இடப்படவேண்டிய எத்தகையன வுமான எல்லாச் சாதனங்களிலும் இலச்சினையிடுவதற்குப் பகிரங்க இலச்சினையைப் பயன்படுத்துவதற்கு;

(எ) போரையும், சமாதானத்தையும் பிரகடனப்படுத்துவதற்கு;

(ஏ) சட்டத்தொழிலில் பிரபல்யம் எய்தியிருப்பவர்களும் நடத்தை யிலும், உயர்தொழில் செம்மையிலும் உயர்ந்த தரத்தைப் பேணி வந்திருக்கின்றவர்களுமான சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரை ஞர்களாக நியமிப்பதற்கு;

(ஐ) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒரு பிராந்தியத் தினுள் அவசரகால நிலைமையொன்றைப் பிரகடனப்படுத்துவதற்கு, அத்துடன் ஒரு பிராந்திய சபையைக் கலைப்பதற்கு;

(ஒ) சர்வதேசச் சட்டம், வழமை அல்லது வழக்காறு ஆகியவற் றால் அரசு தலைவர் ஒருவர் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படு கின்றவாறு அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றவாறு, அரசியலமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதன வாக இராத அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களை யும் செய்வதற்கு.

மன்னிப்பு வழங்குதல். 59. (1) சனாதிபதி, இலங்கைக் குடியரசுக்குள் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டிருக்கும் எவரேனும் தவறாளியின் விடயத்தில்—

(அ) நிபந்தனையற்ற மன்னிப்பொன்று அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைந்த மன்னிப்பொன்று வழங்கலாம்;

(ஆ) அத்தகைய தவறாளிமீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பு நிறைவேற்றப்படுவதில், காலவரையறையற்ற அல்லது சனாதிபதி தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கான காலத்தளர்வு வழங்கலாம்;

(இ) அத்தகைய எவரேனும் தவறாளிமீது விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் தண்டனைக்குப் பதிலாகக் கடுமை குறைந்த தண்டனை யொன்றை விதிக்கலாம்;

(ஈ) அத்தகைய தவறு காரணமாக விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனையை அல்லது குடியரசுக்கு வேறுவகையில் வருமதியான ஏதேனும் தண்டத்தை அல்லது இழப்பீட்டை முழுமையாக அல்லது பகுதியளவில் குறைக்கலாம்.

(2) சனாதிபதி, இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழான அவரது தத்துவத்தை, பின்வருவோரைக் கொண்டமைந்த குழுவொன்றுடன் கலந் தாலோசித்துப் பிரயோகித்தல் வேண்டும். அதாவது பாராளுமன்றச் சபா நாயகர் அல்லது சபாநாயகர் பெயர்குறித்து நியமிக்கும் ஆள் ஒருவர், பிரதம நீதியரசர் அல்லது பிரதம நீதியரசர் பெயர்குறித்து நியமிக்கும் உயர் நீதிமன்ற நீதிபதியொருவர், நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் அல்லது அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர், சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதி யினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக் களத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தவறாளி எவரும் மரண தண்டனை அனுபவித்தல் வேண்டுமென நீதிமன்றம் எதனாலும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, இவ் வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிக்க முன்னர் அவ்வழக்கை விளங்கிய நீதிபதி சனாதிபதிக்கு அறிக்கையொன்றை அனுப்புமாறு செய்வித்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்களை அல்லது பிராந்திய சபை உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல் தொடர்பான, ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராக இருக்கின்ற அல்லது வந்திருக்கின்ற ஆளெவரினதும் விடயத்தில்—

(அ) நிபந்தனையின்றி அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைய மன்னிப்பு வழங்கலாம்; அல்லது

(ஆ) அத்தகைய தகைமையீனக் காலப்பகுதியைக் குறைக்கலாம்.

தொடர்ச்சியிருந்து சனாதிபதிக்கு விடுபாட்டுரிமை.

60. சனாதிபதியாக ஆளெவரும் பதவி வகிக்கும்போது, அவரது பதவி முறையில் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் அவருக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில், நியாய சபையில் அல்லது நிறுவனத்தில் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது.

சனாதிபதியின் சம்பளம், படிகள், மற்றும் ஓய்வூதியம்.

61. (1) (அ) பாராளுமன்றம், சனாதிபதி என்ற பதவியை வகிப்போர் பெறுவதற்கு உரித்துடையவராக இருக்கும் சம்பளம், படி மற்றும் ஓய்வூதிய உரித்துடைமை ஆகியவற்றைத் தீர்மானம்மூலம் தீர்மானிக்கலாம்.

(ஆ) இப்பந்தியின் உட்பந்தி (அ)வின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஓய்வூதியம் உரித்துடைமை அவருடைய முந்திய சேவையின் பயனாக அவருக்கு உரித்தாக்கக்கூடிய வேறு ஏதேனும் ஓய்வூதியத்தோடு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சனாதிபதியின் சம்பளம், படிகள், மற்றும் ஒய்வூதியம், இலங்கையின் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பாராளுமன்றம், சனாதிபதி என்ற பதவியை வகிப்போர் பெறுவதற்கு உரித்துடையவராக இருக்கும் சம்பளத்தை, படியை அல்லது ஓய்வூதிய உரித்துடைமையை தீர்மானம்மூலம் அதிகரிக்கலாம் ஆனால் குறைத்தல் ஆகாது.

சனாதிபதியின் பதவிக் காலமும் அவர் பதவியை வறிதாக்கலும்.

63 .(1) இவ்வரைப்புரையின் (2)ஆம் பந்தியின் ஏற்பாடு களுக்கமைய, சனாதிபதி நாம் பதவி ஏற்பதிலிருந்து மூன்று (ஐந்து) ஆண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும். ஆயின், இக்காலப் பகுதி முடிவுறுவது எப்படியிருப்பினும், சனாதிபதி, அடுத்த சனாதிபதி பதவி ஏற்கும்வரை பதவியில் இருத்தல் வேண்டும்.

(2) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க சனாதிபதி பதவிக்கு இருதடவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளெவரும் பாராளுமன்றத்தினால் அத்தகைய பதவிக்கு அதன்பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது.

(3) இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும்:-

(அ) சனாதிபதி இறப்பதன் மேல்; அல்லது

(ஆ) சபாநாயகருக்கு முகவரியிடப்பட்ட எழுத்தின்மூலம் சனாதிபதி தமது பதவியிலிருந்து விலகியதன்மேல்; அல்லது

(இ) சனாதிபதி உள அல்லது உடல் இயலாமை காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்ற நிரந்தரமாக இயலாதவராக இருக்கிறார் எனச் சபாநாயகர், முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றினால் எடுக்கப்பட்ட ஏகமனதான முடிபொன்றின்மேல்; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) உறுப்பினர் எவரினாலும் எழுத்திலான அறிவித்தல் மூலம் சபாநாயகருக்கு முகவரியிடப்பட்டு, அத்தகைய உறுப்பினராலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஆகக்குறைந்தது அரைவாசிப் பேர்களினாலும் ஒப்பமிடப்பட்டு சனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்ற (சமூகமளிக்காதோர் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் ஆகக் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் அந்நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தின் நிறைவேற்றப்படுவதன்மேல்,

வறிதாக்கப்படுதல் வேண்டும்.

ஆலோசனையின்மேல் சனாதிபதி செயலாற்றுதல் வேண்டும்.

(1)
63 : /சனாதிபதி, முதலமைச்சரின் நியமன விடயத்தின்மீதன்றி அல்லது அரசியலமைப்பினால் வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டால் தவிர, முதலமைச்சரின் ஆலோசனையின்மீதோ, அல்லது எவ்வமைச்சருக்கு ஏதேனும் குறிப்பிட்ட பணி ஒதுக்கப்பட்டுள்ளதோ அப்பணி சம்பந்தமாக சனாதிபதிக்கு ஆலோசனை அளிப்பதாய் முதலமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய வேறு அமைச்சரின் ஆலோசனையின்மீதே எப்போதும் செயலாற்றுதல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனம் இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப் படவில்லை என்ற ஏதுவின்மீது சனாதிபதியால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலை அல்லது செய்யாமையை விசாரணை செய்வதற்கு அதன்மீது தீர்ப்பு வழங்குவதற்கு அல்லது எம்முறையிலும் அதனைக் கேள்விக்குட் படுத்துவதற்குத் தத்துவமோ அல்லது நியாயதிக்கமோ கொண்டிருத்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதிப் பதவியைத் தற்காலிகமாக வறிதாக்கல்.

64. (1). (அ) சனாதிபதி சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரியமுடியாதிருக்கும்போது அல்லது இலங்கையில் இல்லாதிருக்கும்போது அல்லது இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவி ஏதேனும் காலப்பகுதியின்போது வேறுவகையில் வறிதாக இருக்கின்ற ஏதேனும் காலப் பகுதியின்போது, அத்தகைய பதவியில் பதிற் கடமையாற்றப் பாராளுமன்றத்தால் இன்னோர் ஆள் தேர்ந்தெடுக்கப்பட்டாலொழிய, இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவியில் பிரதமநீதியரசர் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஆள், பதவியேற்குமுன்னர், 57ஆம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்டுள்ள படிவத்திலும் முறையிலும் உறுதியுரை அல்லது சத்தியஞ்செய்தல் வேண்டும்.

(2) இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவியில் பதிற் கடமையாற்றுகின்ற ஆளெவரும், சனாதிபதி அல்லது அத்தகைய பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு முன்னுரிமைகொண்ட ஆளெவரும் அத்தகைய பதவியைத் தாம் ஏற்றுக்கொண்டுள்ளார் அல்லது ஏற்றுக்கொள்ளப் போகிறார் அல்லது மீள ஏற்றுக்கொண்டுள்ளார் அல்லது மீள ஏற்கப் போகிறார் என அறிவித்தல் கொடுத்த பின்னர் தொடர்ந்து பதிற் கடமையாற்றுதலாகாது.

(3) சனாதிபதி தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகள், பதிற் கடமையாற்றும் சனாதிபதியொருவருக்கு எந்த அளவுக்கு அவை ஏற்புடையதாகக் கூடியனவோ, அந்த அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் V111

### மத்திய நிறைவேற்றுத்துறை

### சனாதிபதியும், அமைச்சரவையும்

ுமைச்சரவை.

65 . (1) அமைச்சரவை எக்கருமங்களுக்காகப் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாகவிருக்கின்றதோ அக்கருமங்கள் எல்லாவற்றையும் நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பிக்கப்பட்ட அந்த அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும்; அக்கருமங்கள் பற்றி அது பாராளுமன்றத்துக்கு கூட்டாகப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(2) (அ) அமைச்சர்களுள், அமைச்சரவைக்குத் தலைமைதாங்கவேண்டியவர் ஒருவர், முதலமைச்சராயிருத்தல் வேண்டும்.

(ஆ) சனாதிபதியானவர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைக் கூடுதலாகப் பெறக்கூடியவரென அபிப்பிராயப்படும் பாராளுமன்ற உறுப்பினரை முதலமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(இ) முதலமைச்சர் பின்வரும் உறுதியுரையை ந்து கீழே ஒப்பமிடுவ எடுத்தமொழி/தன்மீது அல்லது பின்வரும் சத்தியத்தை செய்து கீழே ஒப்பமிடுவதன்மீது மீது முதலமைச்சராகப் பதவியேற்றலும் வேண்டும்.

"...........................ஆகிய நான், இலங்கைக் குடியரசுக்கு விசுவாசமுள்ளவராகவும், உண்மையான பற்றுறுதி கொண்டவராகவும் இருப்பேன் எனவும், இலங்கை அரசியலமைப்பைப் போற்றிக் காப்பேன் எனவும், இலங்கையுன் அரசியலமைப்புக்கும் சட்டத்திற்கும் இணங்க முதலமைச்சரின் பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் விசுவாசமாகப் புரிவேன் எனவும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன்/சத்தியஞ் செய்கிறேன்.".

ுதலமைச்சர் இறப்பதன் ◌மல் அல்லது பதவி ◌றப்பதன்மேல் முதலமைச் சர் ஒருவரை நியமித்தல்.

66 . முதலமைச்சர் இறந்ததன் மீது அல்லது அவர் பதவி துறந்ததன் மீது அல்லது முதலமைச்சர் பதவி துறந்துவிட்டவராகக் கருதப்படுமிடத்து, சனாதிபதி முதலமைச்சரொருவரை 65 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் அத்தகைய நியமனத்திற்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர்களும், அவர்களின் விடயங்களும், பணிகளும்.

67.(1) முதலமைச்சர், அமைச்சரவையின் அமைச்சர்களினதும், அமைச்சுக்களினதும் எண்ணிக்கை பற்றியும், அமைச்சர்களுக்கு விடயங்களையும் பணிகளையும் குறித்தொதுக்குவது பற்றியும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) சனாதிபதியானவர், முதலமைச்சரின் ஆலோசனையின் மேல் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாயிருப்பதற்கெனப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயிருந்த அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(3) முதலமைச்சர், குறித்தொதுக்கப்பட்ட விடயங்கள், பணிகள் என்பவற்றை எந்த நேரத்திலும் மாற்றலாம் என்பதுடன், அமைச்சரவை அமைப்பிலான மாற்றங்கள் பற்றிச் சனாதிபதிக்கு விதந்துரைக்கலாம். அத்தகைய மாற்றங்கள், பாராளுமன்றத்திபால் அதற்குள்ள பொறுப்புடைமையின் இடையறாத தொடர்ச்சி உட்பட, அமைச்சரவையின் இடையறாத் தொடர்ச்சியையும் பாதித்தலாகாது.

பிரதி அமைச்சர்கள்.

68.(1) அமைச்சர்கள் பாராளுமன்றமும், தமது திணைக்களங்களும் சம்பந்தமான தமது கடமைகளைப் புரிவதில் அமைச்சருக்கு உதவுவதற்கெனவும் இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் பிரதி அமைச்சர்களுக்குக் கையளிக்கப்படக் கூடியவாறான எழுத்திலான சட்டத்தின் கீழான அமைச்சர்களின் அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கெனவும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயிருந்து சனாதிபதி, முதலமைச்சரின் ஆலோசனையின் மேல் பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவங்கள் அல்லது கடமைகள் என்பவற்றுள் எவற்றையும் அமைச்சர் ஒருவர், கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம், தமது பிரதியமைச்சருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அந்தத் தத்துவம் அல்லது கடமை அந்த அமைச்சருக்கு அல்லது அவர்மீது எந்த எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இந்தப் பந்தியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் பிரதியமைச்சருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமைகளைத் தாமே பிரயோகிப்பதும், புரிவதும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

அமைச்சர்களி, பிரதியமைச்சர்கள் என்போரின் பதவிக்காலம்.

69. ஓர் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர்,

(அ) சனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, அல்லது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டதும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் தமது பதவியைத் துறந்தாலொழிய, அல்லது

(இ) உறுப்புரை 70 இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தவிர பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலப்பகுதி முழுவதும் அவர் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரான காலத்தில் உள்ள அமைச்சரவை.

70. பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர் முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைப்பைப் பொருட்படுத்தாது, கலைவுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின்போது தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.

அமைச்சரவையைக் கலைத்தல்.

71. (1) முதலமைச்சர் இறந்ததன் மீது அல்லது பதவி துறந்ததன் மீது, அல்லது முதலமைச்சர் பதவி துறந்தவராகக் கருதப்படும்போது, அமைச்சரவை கலைக்கப்பட்டதாகவிருக்கும் என்பதுடன், ஏனைய அமைச்சர்கள் பதவி வகிக்காதொழிதலும் வேண்டும்.

(2) உறுப்புரை 70 இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் முதலமைச்சர் இறந்தால் அல்லது பதவி துறந்தால், இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகள் செயற்படுதலாகாது என்பதுடன், அப்பட்சத்தில், அக்காலப்பகுதி முடிவடையும் வரை அமைச்சரவையானது ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றுதலும் வேண்டும். சனாதிபதி அத்தகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர்களிடையேயிருந்து ஒருவரை முதலமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(3) உறுப்புரை 70 இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் முதலமைச்சர் இறந்ததன் மீது அல்லது பதவி துறந்த தன் மீது வேறு அமைச்சர் எவரும் இல்லாவிட்டால், பொதுத்தேர்தல் முடிவுறும்வரை 70 ஆம் உறுப்புரையின் கீழ் பணியாற்றும் அமைச்சரவையின் தத்துவங்களையும் கடமைகளையும் சனாதிபதி பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

முதலமைச்சர் பதவி துறத்தல்.

72 . (1) முதலமைச்சர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்தொன்றின் மூலம் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகலாம்.

(2) முதலமைச்சர் –

(அ) பொதுத்தேர்தல் முடிவுறும்போது, அல்லது

(ஆ) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை அல்லது அரசாங்கக் கொள்கைக் கூற்றைப் பாராளுமன்றம் நிராகரித்தால், அல்லது அரசாங்கம்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைப் பாராளுமன்றம் நிறைவேற்றினால்,

பதவி துறந்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

பதில் அமைச்சர்களும், பதில் பிரதி அமைச்சர்களும்.

73 . அமைச்சர் ஒருவர் அல்லது பிரதியமைச்சர் ஒருவர், தமது பதவிக்குரிய பணிகளைப் புரிவதற்கு இயலாதவராக இருக்கும்போதெல்லாம், சனாதிபதி, அத்தகைய அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கெனப் பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் நியமிக்கலாம்.

அமைச்சரவைச் செயலாளர்.

74 . (1) அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) செயலாளரானவர், முதலமைச்சரின் பணிப்புகளுக்கமைவாக அமைச்சரவையின் அலுவலகத்திற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், முதலமைச்சரால் அல்லது அமைச்சரவையினால் அவருக்குக் குறித்தொதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சுக்களின் செயலாளர்கள்.

75. (1) ஒவ்வோர் அமைச்சுக்கும் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓர் அமைச்சின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரது அமைச்சரின் பொறுப்பில் உள்ள அரசாங்கத் திணைக்களங்கள் மீது அல்லது பிற நிறுவனங்கள் மீது கண்காணிப்பைப் பிரயோசித்தல் வேண்டும்.

(3) அமைச்சு ஒன்றிற்கான செயலாளர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்பட்டதன் மேல் அல்லது 67 ஆம் உறுப்புரையின் கீழ் முதலமைச்சரினால் செய்யப்பட்ட தீர்மானத்தின் மீது, அதன் விளைவாக, அத்தகைய அமைச்சு இல்லாதொழியுமிடத்து பதவியை வகிக்காது ஒழிதல் வேண்டும்.

(4) அமைச்சு ஒன்றிற்கான செயலாளர், இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியின் கீழ் பதவியை வகிக்காது விடுகின்றவிடத்து, அமைச்சரவையானது இவ்வுறுப்புரையின் (5)(6) அத்துடன் (7) ஆகிய பந்திகளுக்கமைய அத்தகைய செயலாளரை பகிரங்க சேவையிலுள்ள வேறேதேனும் பதவிக்கு நியமிக்கலாம்.

(5) செயலாளராக அவரது நியமனத்திற்கு நேர்முன்னர் அரச சேவையில் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனச்சேவையில் இருந்த ஆள் ஒருவர், அத்தகைய சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியின் கீழ், அவர் பதவியை வகிக்காது ஒழிந்ததன் மேல் முதுநிலை இழப்பு எதுவுமின்றி அத்தகைய சேவைக்குத்திரும்ப செல்வதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியானது -

(அ) பதவி விலக்குவதன் மூலம் அல்லது ஒழுக்காற்று காரணங்களின் மூலம் அல்லாது வேறுவகையாக, செயலாளரின் சேவைகளை சனாதிபதி முடிவுறுத்துவதன் மீது, அல்லது

(ஆ) பதவி துறக்கும் நேரத்தில் செயலாளருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் அல்லது உத்தேசிக்கப்பட்டிருந்தால் ஒழிய, பதவியிலிருந்து செயலாளர் பதவிவிலகியதன்மேல்

அமைச்சுக்கான செயலாளர் ஒருவருக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) இந்த உறுப்புரையின் (4)ஆம், (5) ஆம் அத்துடன் (6)ஆம் பந்திகளின் நோக்கங்களுக்காக, சனாதிபதிக்கான செயலாளர் முதலமைச்சருக்கான செயலாளர், அமைச்சொன்றுக்கான செயலாளர் என்ற பதவியை அல்லது சனாதிபதியின் அல்லது முதலமைச்சரின் பணியாட்டொகுதியில் வேறேதேனும் பதவியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளைத் தொடர்ச்சியாக வகித்துள்ள எவரேனும் ஆள், கடைசியாக வகித்த பதவியைத் தொடர்ச்சியாக வகித்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) இவ்வுறுப்புரையின் நோக்கத்திற்காக, பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அலுவலகம், தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம், தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம், கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம், அமைச்சரவைச் செயலாளர் அலுவலகம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்சுமான்) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம் ஆகியன அரசாங்கத் திணைக்களங்கள் அல்லவெனக் கருதப்படுதல் வேண்டும்.

பதவிச் சத்தியம்.

76. இந்த அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதவி எதற்கும் நியமிக்கப்பட்ட ஆளெவரும், ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள எழுத்து உறுதியுரையை அல்லது சத்தியத்தைச் கீழே ஒப்பமிட்டா செய்தலன்றி அப்பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.

## அத்தியாயம் 1X

## மத்திய சட்டமன்றம்.

## பாராளுமன்றம்.

பாராளுமன்றம்.

77. (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் இருநூற்றிருபத்தைந்து உறுப்பினர்களையும் 118 ஆம் உறுப்புரைக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபத்தொன்பது உறுப்பினர்களையுங் கொண்ட பாராளுமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றமானது கலைக்க வேண்டிய காலத்துக்கு முன்னதாகக் கலைக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு பாராளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்துக்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள்கொண்ட காலத்துக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டுமே யொழிய அதற்கு மேற்படவல்ல என்பதோடு, சொல்லப்பட்ட ஆறு ஆண்டு காலம் கழிந்து போதலானது பாராளுமன்றம் கலைக்கப் பட்டதாகச் செயற்படுதல் வேண்டும்.

பதவிச் சத்தியம்.

78, சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காகத் தவிர, உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தின் முன்னர் கீழ்காணும் சத்தியத்தைச் செய்து கீழொப்பம் இடும்வரை, அல்லது கீழ்க்காணும் உறுதியுரையை மொழிந்து கீழொப்பம் இடும்வரை, பாராளுமன்றத்தில் அமர்தலோ வாக்களித்தலோ ஆகாது;

"................... ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைப் போற்றிப் பாதுகாப்பேன் என்று பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கிறேன்/ சத்தியம் செய்கிறேன்".

சபாநாயகர், பிரதிச் சபா நாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர்.

79. (1) பாராளுமன்றமானது, ஒரு பொதுத் தேர்தலின் பின்னரான அதன் முதலாவது கூட்டத்தின்போது, முறையே சபாநாயகராகவும், பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும் ஆனவராகவும் (அவர் இதனகத்துப் பின்னர் "பிரதிச் சபாநாயகர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) குழுக்களின் பிரதித் தவிசாளராகவும் இருப்பதற்கென மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சபாநாயகராக அல்லது பிரதிச் சபாநாயகராக அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளராகப் பதவி வகிக்கும் ஓர் உறுப்பினர் –

(அ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன்மீது அல்லாமல், பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால், அல்லது

(ஆ) தம் கைப்பட எழுதி சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பிய கடிதத்தின் மூலம் தமது பதவியைத் துறந்தால்,

அத்தகைய பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(3) சபாநாயகரின், பிரதிச் சபாநாயகரின் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரின் பதவியானது, வறிதானதாக வரும்போதெல்லாம், பாராளுமன்றமானது அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் கூடும் அதன் முதலாவது கூட்டத்தின்போது, விடயத்துக்கேற்ப, சபாநாயகராக, பிரதிச் சபாநாயகராக அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளராக இருப்பதற்கென வேறோர் உறுப்பினரைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு உடன் முன்னர் முறையே சபாநாயகராகவும், பிரதிச் சபாநாயகராகவும், அத்துடன் குழுக்களின் பிரதித் தவிசாளராகவும் பதவி வகிக்கும் உறுப்பினர்கள், முன்னரே அவர்கள் பதவியை வறிதாக்கினாலன்றி, அத்தகைய கலைத்தல் எவ்வாறிருப்பினும், பொதுத் தேர்தல் முடியும் வரை தொடர்ந்து அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்.

(5) சபாநாயகர் அல்லது அவர் இல்லாதபோது பிரதிச் சபாநாயகர், அல்லது அவர்கள் இருவரும் இல்லாதபோது குழுக்களின் பிரதித் தவிசாளர் பாராளுமன்றத்தின் அமர்வுகளில் தலைமைதாங்குதல் வேண்டும். மேற்கூறியவர்களுள் எந்த ஒருவரும் இல்லாவிடத்து, அந்த அமர்வுக்கென்று பாராளுமன்றத்தால் தெரிந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் அந்த அமர்வில் தலைமை தாங்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிச் சபா நாயகர் சபா நாயகருக்காகப் பதிற் கடமை ஆற்றுதல்.

80. சபாநாயகர் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்ற முடியாதவிடத்து, அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டின் மூலம் சபாநாயகருக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் பிரதிச் சபாநாயகரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம்.

81. (1) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவர் நன்னடத்தையுடையவராகவுள்ள காலத்தின்போது அப்பதவியை வகித்தல் வேண்டும்.

(2) செயலாளர் நாயகத்தின் சம்பளம் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அது இலங்கையின் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அவரது பதவிக்காலத்தின்போது அது குறைக்கப்படுதலும் ஆகாது.

(3) செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் செயலாளர் நாயகத்தினால், தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகள் மீது நியமிக்கப்படல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் சம்பளங்கள் இலங்கையின் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படல் வேண்டும்.

(5) செயலாளர் நாயகத்தின் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும்; அதாவது,

(அ) அவர் இறப்பதன் மூலம்;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்திலான கடிதத்தின் மூலம் அவர் பதவி துறப்பதன்மேல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் வேறு வகையாக ஏற்பாடு செய்தாலன்றி, அறுபது வயதினை அவர் அடைவதன் மேல்;

(ஈ) உடலலமின்மை காரணமாக அல்லது உடல் பலவீனம் அல்லது மனப்பலவீனம் காரணமாக, சனாதிபதியினால் அவர் அகற்றப்படுவதன்மேல்; அல்லது

(உ) பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின்மீது சனாதிபதியினால் அவர் அகற்றப்படுவதன் மேல்.

(6) செயலாளர் நாயகம் அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ள போதிலெல்லாம், செயலாளர் நாயகத்தின் இடத்தில் பதிற் கடமை ஆற்றுவதற்கென ஆளொருவரைச் சனாதிபதி நியமிக்கலாம்.

ஆசனங்களை வறிதாக்குதல்.

82. பின்வரும் சூழ்நிலைகளில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் ஆசனம் வறிதாதல் வேண்டும் அவையாவன,

(அ) அவர் இறப்பதன்மேல்;

(ஆ) பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு முகவரியிட்டனுப்பிய எழுத்திலான கடிதத்தின் மூலம் தமது ஆசனத்தை அவர் துறத்தல்;

(இ) பாராளுமன்றத்தினால் சனாதிபதி பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் விளைவாக சனாதிபதிப் பதவியை அவர் ஏற்றுக் கொண்டதன் மேல்;

(ஈ) 107 ஆம், 108 ஆம் உறுப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அவர் இலக்காகினால்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) அவர் அரசின் ஏதேனும் சேவையின் ஓர் உறுப்பினராக வந்தால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஓர் ஊழியராக வந்தால் அல்லது அரசின் ஏதேனும் சேவையின் உறுப்பினராக அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஓர் ஊழியராக இருந்துகொண்டு, பாராளுமன்றத்தில் அவர் அமர்வதற்கு முன்னர் அத்தகைய சேவையின் உறுப்பினராக அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஊழியராக இல்லாதொழியாமல் இருந்தால்;

(ஊ) பாராளுமன்றத்தின் அனுமதியை முன்கூட்டியே பெறாமல், பாராளுமன்றத்தின் அமர்வுகளுக்குத் தொடர்ச்சியாக மூன்று மாதகாலப் பகுதிக்கு வருகை தராதிருந்தால்;

(எ) அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை, அப்போதைக்கு வலுவிலிருக்கும் சட்டத்தின் கீழ் வெற்றானதென வெளிப்படுத்தப்பட்டால்;

(ஏ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன்மேல்;

(ஐ) அவரை விலக்குவதற்கானவொரு தீர்மானம் 98ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்படுவதன்மேல்,

பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகளும் தத்துவங்களும்.

83. பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன, சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படலாம். அத்துடன் அவ்வாறு தீர்மானித்து ஒழுங்குபடுத்தும் வரைக்கும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியங்களும் படிகளும்.

84.(1) சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் உட்பட, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குச் சட்டத்தால் அல்லது தீர்மானத்தால் பாராளுமன்றம் ஏற்பாடு செய்யக்கூடிய அத்தகைய ஊதியம் அல்லது படிகள் வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஊதியத்தை அல்லது படியைப் பெறுதலானது, அதனைப் பெறுவோரைப் பாராளுமன்றத்தில் அமர முடியாதவாறோ வாக்களிக்கமுடியாதவாறோ தகைமையீனப்படுத்தாது.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும் வரை, சபாநாயகர் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் உட்பட, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குக் கொடுபடற்பாலதான ஊதியம் அல்லது படி அரசியலமைப்புத் தொடங்கும்போது சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் உட்பட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குக் கொடுபட்ட ஊதியத்தை அல்லது படியை ஒத்த அதே தொகையாதல் வேண்டும்.

வெற்றிடங்கள் இருப்பதைப் பொருட்படுத்தாது செயலாற்றுவதற்கான தத்துவம்.

85. பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எப்படியிருப்பினும், பாராளுமன்றம் செயலாற்றுவதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் என்பதோடு, ஓர் ஆள் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளின்போது அமர்ந்திருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு அல்லது வேறு விதமாகப் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராகவிராமலே அவ்வாறு செய்துள்ளார் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்படினும், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் செல்லுபடியுடையனவாதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் X

## மத்திய சட்டமன்றம்

### பாராளுமன்றம்

### நடவடிக்கை முறையும் தத்துவங்களும்.

பாராளுமன்றத்தின் அமர்வுகள்.

86 . (1) சனாதிபதி, காலத்துக்குக்காலம், பிரகடனத்தின் மூலம், பாராளுமன்றத்தைக்கூடுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம்.

(2) (அ) பாராளுமன்றத்தின் அமர்வை நிறுத்தும் பிரகடனமானது அடுத்த அமர்வுக்கான ஒரு தேதியை நிர்ணயித்தல் வேண்டும்; இத்தேதி பிரகடனத் தேதிக்குப் பின்னர் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலமாக இருத்தலாகாது.

(ஆ) பாராளுமன்றம் அமர்வு நிறுத்தப்பட்டிருக்கும் காலத்தின்போது எந்த நேரத்திலாயினும், சனாதிபதி, பிரகடனத்தின் மூலம்–

(1) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் அமர்வுக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முந்திய இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழான பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறைந்தவொரு தேதியாக இராத ஒரு தேதியில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) இவ்வுறுப்புரையின் ஏற்பாடு
களுக்கமைய பாராளுமன்றத்
தைக் கலைக்கலாம்.

(3) பாராளுமன்றத்தின் முன்னர் உரிய முறையில் கொணரப் பட்டுள்ளவையும், பாராளுமன்றத்தின் அமர்வு நிறுத்தப்பட்ட நேரத்தில் முடிவு செய்யப்படாதிருந்தவையுமான எல்லாக் கருமங்களும், அடுத்த அமர்வின்போது விட்ட நிலையிலிருந்து தொடர்ந்து கையாளப்படலாம்.

(4) (அ) பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற ஒரு பிரகடனம், பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப் பதற்கான ஒரு தேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிற்படாத ஒரு தேதியில் புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு அழைத்தலும் வேண்டும்.

(ஆ) எழுபத்தேழாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பயனாக பாராளுமன்றம் கலைக்கப் பட்டதன் மேல், சனாதிபதி உடனடியாகப் பிரகடனத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கான தேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிர கடனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாத தேதியொன்றில் புதிய பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைத்தலும் வேண்டும்.

(இ) இப்பந்தியின் உட்பந்தி (அ) என்பதன் கீழான அல்லது உட்பந்தி (ஆ) என்பதன் கீழான பிரகடனம் ஒன்றின் மூலம் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியானது பின்னரான பிரகடனமொன்றின் மூலம் வேறுபடுத் தப்படலாம்; ஆயின் பின்னரான பிரகடனத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தேதியானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய மூலப் பிரகடனத் தேதியின் பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியாக இருத்தல் வேண்டும்.

(5) பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர், எந்த நேரத்திலேனும் பாராளுமன்றம் வெள்ளெனவாகக் கூடவேண்டுமென்பதை அவசியமாக்குகின்ற அத்தகைய இயல்பினதான நெருகடி நிலை ஒன்று எழுந்துள்ளதெனச் சனாதிபதி திருப்திப்பட்டால், அவர், கலைக்கப்பட்டிருந்த பாராளுமன்றத்தைப் பிரகடனத்தின் மூலம், அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறையாத ஒரு தேதியில் கூடுமாறு அழைக்கலாம் என்பதோடு, அத்தகைய பாராளுமன்றம் அந்த நெருக்கடி நிலை முடிவுற்றவுடனும் அல்லது பொதுத் தேர்தல் முடிவுற்றதும் இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ, அது முடிவடைந்தவுடன் கலைக்கப்படுதல் வேண்டும்.

ஒத்திவைத்தல்

87. பாராளுமன்றமானது அமர்வு நிறுத்தப்படும்வரை அல்லது கலைக்கப்படும்வரை, தீர்மானத்தின் மூலம் அல்லது நிலையியற் கட்டளை மூலம் அது தீர்மானிக்கக்கூடிய முறையில் காலத்துக்குக் காலம் அதன் கூட்டங்களை ஒத்திவைக்கலாம்.

வாக்களித்தல்.

88. (1) அரசியலமைப்பில் வேறு வகையான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத் தவிர, பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படவெனப் பிரேரிக்கப்பட்ட எந்தப் பிரச்சனையும், சமூகமாகவிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தலைமை தாங்கும் ஆள், முதற்கட்டத்தில் வாக்களித்தல் ஆகாது. ஆனால் வாக்குகள் சமமாகப் பிரிந்திருக்கின்றவிடத்து, அவருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, அவர் அதனைப் பிரயோகித்தலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்ட நடப்பெண்.

89. பாராளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் எந்த நேரத்திலாயினும் இருபது உறுப்பினர்களுக்குக் குறைவானவர்களே சமூகமாக உள்ளார்கள் என்ற விடயம் தலைமை தாங்கும் ஆளின் கவனத்துக்குக் கொணரப்படுமாயின், தலைமை தாங்கும் ஆள், ஏதேனும் நிலையியற் கட்டளைக்கு அமைய, வேறெந்தக் கேள்வியுமில்லாமல் கூட்டத்தை ஒத்தி வைத்தல் வேண்டும்.

நிலையியற் கட்டளைகள்.

90. (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் அல்லது நிலையியற் கட்டளை மூலம் பின்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம்:-

(i) சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தல், அத்துடன்

(ii) பாராளுமன்றத்தின் அலுவல்களை ஒழுங்குபடுத்துதல், அதன் அமர்வுகளின்போது ஒழுங்கை நிலைநாட்டுதல், அத்துடன் ஏற்பாடு செய்யப்படவேண்டுமென அரசியலமைப்பினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறேதேனும் கருமம்.

(2) பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் அல்லது தீர்மானத்தின் மூலம் வேறு வகையாக ஏற்பாடு செய்கின்ற வரைக்கும் அரசியலமைப்புத் தொடங்கும்போது செயற்பாட்டில் இருந்த பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளாக, ஏற்றமாற்றங்களுடன், இருந்துவருதல் வேண்டும்.

சட்டமாக்கற் றத்துவம்.

91. (1) ஒதுக்கிய நிரல் எனக் குறிப்பீடு செய்யப்படும் இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரலில் கூறப்பட்ட விடயங்கள் அது தொடர்பாகவும் - முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் 2ஆம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான தலைநகர ஆள்புலம் தொடர்பில் (பிராந்திய நிரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பீடு செய்யப்படும் இரண்டாம் அட்டவணையின் 11 ஆம் நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாகவும், கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்கொண்ட சட்டங்கள் உட்பட, சட்டங்களை ஆக்குவதற்குப் பாராளுமன்றம் புற நீங்கலான தத்துவம் கொண்டதாக இருக்கும்.

(2) இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியினாலும் 99ஆம் உறுப்புரையினாலும் பாராளுமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட, சட்டங்களை ஆக்குவதற்குள்ள தத்துவம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டமூலங்கள் வாயிலாகவும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக சபாநாயகரினால் அல்லது சனாதிபதியினால் அளிக்கப்பட்டதன் சான்றுரை மூலமும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

சட்டமாக்கற் றத்துவத்தைக் கையளித்தல்.

92. (1) பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற்றத்துவத்தை கைவிடுதலோ எம்முறையிலேனும் பராதீனப்படுத்துதலோ ஆகாது; அத்துடன் ஏதேனும் அத்தகைய சட்டமாக்கற்றத்துவத்துடன் ஏதேனும் அதிகார சபையை நிறுவுதல் ஆகாது.

(2) பொது மக்கள் பாதுகாப்புத் தொடர்பான ஏதேனும் சட்டத்திற்கு இணங்க அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு சனாதிபதிக்கு தத்துவம் அளிக்கும் ஏற்பாட்டை அத்தகைய சட்டத்தில் பாராளுமன்றம் ஆக்குதல், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுவதாதல் ஆகாது.

(3) பின்வருவனவற்றுக்கான தத்துவம் உட்பட, விதித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக துணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்கு எவரேனும் ஆளுக்கு அல்லது குழுவுக்கு தத்துவமளிக்கும் ஏதேனும் ஏற்பாட்டைக் கொண்டுள்ள ஏதேனும் சட்டத்தைப் பாராளுமன்றம் ஆக்குதல், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுவதாதல் ஆகாது:

(அ) ஏதேனும் சட்டம் அல்லது அதன் ஏதேனும் பாகம் பயனுடையதாக வரவேண்டிய அல்லது பயனில்லா தொழியவேண்டிய தேதியை நியமித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) எதேனும் சட்டத்தை அல்லது அதன் எதேனும் பாகத்தை எதேனும் இடப்பிரதேசத்துக்கு அல்லது எதேனும் வகுப்பைச் சேர்ந்த ஆட்களுக்கு, கட்டளைமூலம் ஏற்புடையதாக்குதல்; அத்துடன்

(இ) ஒரு கட்டளை மூலம் அல்லது சட்டத்தின் மூலம் சட்ட ஆள் ஒருவரை உருவாக்குதல்.

அத்துடன், இப்பந்தியின், (அ) மற்றும் (ஆ) ஆகிய உபபந்திகளின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது தற்போதுள்ள சட்டத்தையும் உள்ளடக்கும்.

(4) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக, மேற்சொல்லப்பட்டவாறான எதேனும் அத்தகைய ஏற்பாட்டைக் கொண்டுள்ள எதேனும் இருந்து வரும் சட்டம் செல்லுபடியுடையதாதலும் தொழிற்பாடுடையதாதலும் வேண்டும்.

வெளியிடப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உள்ள கடமைகள்.

93. (1) நூறாம் உறுப்புரையின் (1) ஆம் (2) ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளின் மீறுகை எதுவும் உண்டா எனவும் அரசியலமைப்பினால் விதித்துரைக்கப்பட்ட விசேட பெரும்பான்மை மூலமல்லாது செல்லுபடியுள்ள விதமாக நிறைவேற்றப்படமுடியாத ஏற்பாடு எதும் உண்டா எனவும் ஒவ்வொரு சட்டமூலத்தையும் ஆராய்வது சட்டத்துறைத் தலைமை அதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்துடன் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கு அல்லது இந்த உறுப்புரையின் கீழ் கடமைகளைப் புரிவதில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உதவி வழங்கும் எவரேனும் அலுவலருக்கு அத்தகைய கடமைகளைப் புரிவதற்கு அவசியமான எல்லா வசதிகளும் அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமை அதிபதி, 100 ஆம் உறுப்புரையின் (1)ஆம் (2)ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளுள் எதனையும் சட்டமூலமொன்று மீறுகின்றதென அல்லது சட்ட மூலத்திலுள்ள ஏற்பாடுகள் எதுவும் அரசியலமைப்பினால் விதித்துரைக்கப்பட்ட விசேட பெரும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மை மூலமல்லாத செல்லுபடியுள்ள விதமாக நிறைவேற்றப்பட முடியாதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய அபிப்பிராயத்தை சனாதிபதிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) பாராளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றுக்குத் திருத்தமொன்று பிரேரிக்கப்படுமிடத்து, ஏற்றுக்கொள்ளப்படுவதற்கெனப் பாராளுமன்றத்தில் சட்டமூலமானது கொண்டுவரப்படுவதற்குத் தயாராகும்போது, இக்கட்டத்தில் இந்த உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விடயத்தின் மீதான சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தை சபாநாயகருக்கு சட்டத்துறைத் தலைமையதிபதி தெரியப்படுத்துதல் வேண்டும்.

சட்டமூலங்களை வெளியிடுதலும் நிறைவேற்றுதலும். 94 (1) உறுப்புரை 166 என்பதற்கு அமைவாக, சட்டமூலம் ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னரேனும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தினால் சட்டமூலமொன்று அல்லது தீர்மானமொன்று நிறைவேற்றப்படுதலானது, அரசியலமைப்புக்கும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைக்கும் இணங்கியிருத்தல் வேண்டும்.

(3) நிலையியற் கட்டளைக்குள் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை நிலையியல் கட்டளைகளினால் விதிக்கப்பட்ட நடைமுறைகளிலும் முறைகளிலும் பாராளுமன்றத்தினால் இடைநிறுத்தி வைக்கப்படலாம்.

சபாநாயகரது சான்றுரை. 95 (1) இந்த உறுப்புரையின் (2)ஆம் (3)ஆம் பந்திகளுக்கு அமைவாக, சபாநாயகர், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் ஒவ்வொன்றிலும், பின்வரும் முறையிலமைந்த சான்றுரை ஒன்றை புறக்குறிப்பிடுசெய்தல் வேண்டும்:-

"இந்தச் சட்ட மூலம் (இங்கே சட்டமூலத்தின் சுருக்கப் பெயரைக் கூறுக) பாராளுமன்றத்தினால் முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது.".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய சட்டமூலம் எவ்வளவு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டது என்பதையும் அத்தகைய சான்றுரை எடுத்துக் கூறலாம்.

(2) அரசியலமைப்பின் 100 ஆம் உறுப்புரையின் அல்லது 101ஆம் உறுப்புரையின் அல்லது 102 ஆம் உறுப்புரையின் அல்லது 167(2) என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சட்டமூலமொன்றை நிறைவேற்றுவதற்கு விசேட பெரும்பான்மையொன்று தேவைப்படுகின்ற விடத்து, அத்தகைய சட்டமூலம் அத்தகைய விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே, அத்தகைய சட்டமூலத்திற்குச் சபாநாயகர் சான்றுரை அளித்தல் வேண்டும்.

(3) தாத்றோராம் உறுப்புரையின் பயனைக்கொண்டு அந்தச் சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு மக்களின் அங்கீகாரத்தை மக்கள் தீர்ப்பு பெருப்பின்மூலம் பெறவேண்டுமென்ற அவசியமிருக்கின்றவிடத்து, சபாநாயகரின் சான்றுரை, அத்தகைய சட்டமூலமோ அதன் ஏற்பாடோ மக்கள் தீர்ப்பெருப்/ மக்களால் அங்கீகரிக்கப்படும்வரை சட்டமாதலாகாது என மேலும் கூறுதல் வேண்டும்.

(4) இந்த உறுப்புரையின் கீழான சபாநாயகரின் சான்றுரை இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுவதுமாகாது.

சட்டமூலம் எப்பொழுது சட்டமாகும் என்பது.

96 (1) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் ஒன்று, சபாநாயகரின் சான்றுரை அதன்மீது மேற்குறிப்பிடப்பட்டவுடனேயே சட்டமாதல் வேண்டும்.

(2) ஏதேனும் சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடு எதுவும் மக்கள் தீர்ப்பு பெருப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்படுவதற்கெனச் சமர்ப்பிக்கப் படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை சான்றுரை அளித்துள்ளவிடத்து, அல்லது சட்டமூலம் ஒன்றுக்கு அல்லது அதன் ஏற்பாடெதற்கேனும் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருப்பில்
தீர்ப்பில்/ மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளவிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு, 103 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்திக்கிணங்க மக்கள்
பெருப்பில்
தீர்ப்பில்/ மக்களால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல் அச்சட்ட மூலம் அல்லது அதன் ஏற்பாடு அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனச் சனாதிபதி சான்றுரை அளித்தபின்னர் மட்டுமே சட்டமாக வருதல் வேண்டும்.

(3) சனாதிபதி அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட சட்ட மூலம் ஒவ்வொன்றிலும் பின்வரும் முறையில் அமைந்த சான்றுரை ஒன்றை புறக்குறிப்பிடுதல் வேண்டும்:-

பெருப்பில்
"இச்சட்டமூலம்/ இந்த ஏற்பாடு மக்கள் தீர்ப்பில்/ மக்களால் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது".

அத்தகைய சான்றுரை ஒவ்வொன்றும் இறுதியானதும் முடிவானதும் ஆதல் வேண்டும் என்பதுடன், எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

...டங்களின் வலுபடியாந் தன்மை கேள்விக் குட்படுத்தப்படு தலாகாது.

97. நூற்றெண்பத்தெட்டாம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, விடயத்துக்கேற்ற சனாதிபதியின் அல்லது சபாநாயகரின் சான்றுரை அதன்மீது புறக்குறிப்பிடப்பட்டதன்மேல் சட்டமூலமொன்று சட்டமாக வருமிடத்து, நீதிமன்றம் அல்லது நியாய சபை எதுவும் எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின் மீதும் அத்தகைய சட்டத்தின் அல்லது அதன்கண் அடங்கியுள்ள ஏதேனும் ஏற்பாட்டின் வலுபடியதந்தன்மையை விசாரித்தலோ அதன்மீது தீர்ப்புக் கூறுதலோ அல்லது எம்முறையிலும் அதனைக் கேள்விப் படுத்துதலோ ஆகாது.

...டியியற்றுகுதி ...த்தைத ...ித்தல்.

98. (1) விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்டதும், உயர் நீதிமன்ற நீதிபதியாக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக, பிராந்திய மேல்நீதிமன்ற நீதிபதியாக, அல்லது மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் ஓர் உறுப்பினரை அல்லது உறுப்பினர்களைக் கொண்டதுமான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு, எவரேனும் ஆள் அரசியலமைப்பில் , தொடங்கு வதற்கு முன்னர் அல்லது அதன் பின்னர் ஏதேனும் செயலைச் செய்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது செய்துவிட்டார் என்ற காரணத்துக்காக அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிக்க வேண்டும் என்று விதந்துரைக்குமிடத்து, பாராளுமன்றமானது அதன் முழு உறுப்பினர்களினதும் எண்ணிக்கையில் (சமூகமளித்தோர் உட்பட) மூன்றிலிரண்டுக்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மூலம்,—

(அ) ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய ஆளின்மீது, குடியியற்றகுதியீனத்தைக் விதிக்கலாம் அத்துடன் :

(ஆ) அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருப்பின் அவரைப் பாராளுமன்றத்திலிருந்து விலக்கலாம்.

(2) விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவானது ஓர் உறுப்பினருக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக்கொண்டுள்ளவிடத்து, ஏதேனும் கருத்து வேறுபாடு இருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய உறுப்பினர்களின் பெரும்பான்மையோரினால் செய்யப்படும் விதப்புரையே அத்தகைய விசாரணை ஆணைக்குழுவின் விதப்புரையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் அவ்வாறெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழான தீர்மானம் ஒன்று, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முதலமைச்சரினால் கொணரப்பட்டாலொழிய, சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுதலோ ஆகாது.

(4) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்திலும் பின்வரும் முறையில் அமைந்த சான்றுரையை சபாநாயகர் புறக்குறிப்பிடல் வேண்டும் :-

"இத்தீர்மானம், அரசியலமைப்பின் 98ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்தினால் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய சான்றுரை ஒவ்வொன்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதும் முடிவானதுமானதாதல் வேண்டுமென்பதுடன், அது எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது. அத்துடன், நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் அத்தகைய தீர்மானத்தின் செல்லுபடியுறு தன்மைபற்றி எத்தகைய ஏதாவின் மீதும் விசாரணை நடாத்தலோ தீர்ப்பளித்தலோ அதனை எவ்விதத்திலும் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது.

(5) இந்த உறுப்புரையில் -

"மேன்முறையீட்டு நீதிமன்றம்" என்பது அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் என்று பொருளாவதோடு, 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தையும் உள்ளடக்கும்.

" மாவட்ட நீதிமன்றம்" என்பது, இப்போதுள்ள சட்டத்தினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாவதோடு மாவட்ட நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களுக்கும், நிறைவேற்றப்படும் பணிகளுக்கும் நேரொத்த அல்லது பெருமளவு ஒத்த தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கெனவும் நிறைவேற்றுவதற்கெனவும் பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படக்கூடிய நீதிமன்றமொன்றையும் உள்ளடக்கும்.

" பிராந்திய/மேல் நீதிமன்றம்" என்பது அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட பிராந்திய மேல் நீதிமன்றம் ஒன்று என்று பொருளாவதோடு 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்குரிய மேல் நீதிமன்றத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயர் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றம் என்று பொருளாவதோடு 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தையும் உள்ளடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் X1

## மத்திய சட்ட மன்றம்

### அரசியலமைப்பைத் திருத்துதல்

சியலமைப்பைத் த்துதல் அல்லது கஞ்செய்தல்.

99.(1) இந்த அரசியலமைப்பில்/உள்ளது ஏது எவ்வாறிருப்பினும் ஆனால் இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்திக்கு இமைய, அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்கஞ்செய்து அல்லது அதற்குத் திருத்தஞ் செய்து அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் ஏற்பாட்டைச் சேர்த்து சட்டமியற்றும் பிரத்தியேகத் தத்துவத்தைப் பாராளுமன்றம் கொண்டி-ருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் –

(அ) அரசியலமைப்பை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை இடைநிறுத்தம் செய்யும் ஏதேனும் சட்டத்தை; அல்லது

(ஆ) ஏதேனும் சட்டம் அரசியலமைப்பை மாற்றீடு செய்வதற்கு புதிய அரசியலமைப்பொன்றை இயற்றினாலன்றி, மொத்தமான அரசியலமைப்பை நீக்கஞ் செய்யும் அத்தகைய சட்டத்தை.

இயற்றுதலாகாது.

சியலமைப்பைத் த்துதல் அல்லது குதல் வெளிப்படை அதாக இருத்தல் ண்டும்.

100.(1) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கான சட்டமூலம் எதுவும், அவ்வாறு நீக்கப்படுவதற்கான, மாற்றப்படுவதற்கான அல்லது சேர்க்கப்படுவதற்கான ஏற்பாடும், விளைவாந் தன்மையினவான திருத்தங்கள் எவையேனும் இருப்பின், அத்தகைய திருத்தங்களும் அச்சட்ட மூலத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டி-ருப்பதோடு அந்தச் சட்டமூலமானது அரசியலமைப்பைத் திருத்துவதற்கான ஒரு சட்டம் என அதன் விரிவுப் பெயரில் விபரிக்கப்பட்டும் இருந்தாலொழிய, பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெறுதலாகாது.

(2) அரசியலமைப்பை நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும், அரசியலமைப்பை மாற்றீடு செய்வதற்கான ஏற்பாடுகள் அந்தச் சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலத்தில் அடங்கியிருந்தாலொழியவும், அந்தச் சட்ட மூலம் அரசிய -லமைப்பினை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டம் என அதன் விரிவுப் பெயரில் விபரிக்கப்பட்டிருந்தாலொழியவும், பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறுதல் ஆகாது.

(3) சபாநாயகரின் அபிப்பிராயப்படி, ஒரு சட்ட மூலம், இந்த உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் அல்லது (2)ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாவிடில், சபாநாயகர் அந்தச் சட்டமூலம் அந்தத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வண்ணம் திருத்தப்பட்டாலொழிய, அச்சட்ட மூலம் தொடர்பில் மேலும் நடவடிக்கை எடுக்காதிருக்கும்படி பணித்தல் வேண்டும்.

(4) இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் அல்லது (2)ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஒரு சட்ட மூலம் பாராளுமன்றத்தினால் திருத்தப்படுதல் சட்டமுறையான தாதல் வேண்டும்; ஆயினும் அவ்வாறு திருத்தப்பட்டவாறான சட்ட மூலம் அத்தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற் கான அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்கு மான ஒரு சட்டமூலம், அதற்குச் சாதகமாக அளிக்கப்படும் வாக்கு களின் எண்ணிக்கை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமூகம -ளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டுக்குக் குறையாததாக இருப்பின் அத்துடன் 95ஆம் அல்லது 96 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க விடயத்துக்கேற்ப சனாதிபதியினால் அத்துடன்/அல்லது சபா நாயகரினால் அதன்மீது சான்றுரையொன்று புறக்குறிப்பிடப்பட்டதன் மேலும் சட்டமாதல் வேண்டும்.

(6) இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளின் தேவை -ப்பாடுகளுக்கு இணங்க இயற்றப்பட்டாலொழிய, ஏதேனும் சட்டத்தி லுள்ள ஏற்பாடு எதுவும் அரசியலமைப்பை அல்லது அதன் ஏதேனும் ஏற்பாட்டினைத் திருத்துதலோ, நீக்குதலோ, மாற்றீடு செய்தலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது திருத்துவதாக, நீக்குவதாக, மாற்றீடு செய்வதாகக் கருதப்படலோ, அல்லது அவ்வாறு செய்வதாகப் பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

(7) இந்த அத்தியாயத்தில் "திருத்தம்" என்பது, நீக்கம், மாற்றம், அத்துடன் சேர்ப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

த்த சில சட்ட ங்கள் தொடர் ன விசேட டமுறை.

101. (1) நூறாம் உறுப்புரையின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்விதமிருப்பினும் -

(அ) உறுப்புரைகள் 1,2,3,4,5,6,7,8,9, 15 அத்துடன் 127 என்பவற்றின் அல்லது இவ்வுறுப்புரையின் எவையேனும் ஏற்பாடுகளின் திருத்தத்திற்கான அல்லது நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலம் அல்லது எந்தச் சட்டமூலம் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாயிருக்கின்றதோ அந்தச் சட்டமூலம்; அத்துடன்

(ஆ) பாராளுமன்றத்தின் காலத்தை ஆறு ஆண்டுகளுக்குமேல் நீடிக்கும் 77ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியைத் திருத்துவதற்கும் அல்லது நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலம் அல்லது எந்தச் சட்டமூலம் அவ்வேற்பாடுகளுக்கு ஒவ்வாததாக இருக்கின்றதோ அந்தச் சட்டமூலம்.

சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டிற்குக் குறையாததாக இருப்பதுடன் மக்கள் தீர்ப்பெடுப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டு 96 ஆம் உறுப்புரைக்கிணங்கச் சனாதிபதியால் அதன்மீது சான்றுரையொன்று பிறக்குறிப்பிடப்படின் சட்டமாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இந்த அத்தியாயத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, திருத்தும் அல்லது நீக்கும் அல்லது மாற்றீடு செய்யும் ஏதேனும் சட்டம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு, அத்தியாயம் XV இன் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகவிருப்பின், அத்தகைய சட்டம் அல்லது ஏற்பாடு, அப்பிராந்தியத்திற்காக தாபிக்கப்பட்ட பிராந்திய சபையின் தீர்மானமொன்றினால் அங்கீகரிக்கப்படுகின்றவரையில், அங்கீகரிக்கப்பட்டாலேயொழிய, அப்பிராந்தியம் தொடர்பில் நடைமுறைக்கு வருதல் ஆகாது.

(3) இந்த உறுப்புரையில் (2)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானமொன்று பிராந்திய சபை ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றவிடத்து அத்தகைய பிராந்தியத்தின் சபாநாயகர், அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பொன்றை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய அங்கீகாரம் தொடர்புபடுத்தும் சட்டம் அல்லது ஏற்பாடு அத்தகைய அறிவிப்புத்தேதியிலிருந்து அப்பிராந்தியம் தொடர்பில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்புடன் ஒவ்வாதனவாயிருக்கும் சட்டமூலங்கள்.

102. (1) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலமாக இல்லாமல் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாததாகவிருக்கின்ற ஒரு சட்டமூலம் 100ஆம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் அல்லது (2)ஆம் பந்திய தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகாமலே பாராளுமன்றத்தின் ஒழுங்கு பத்திரத்தில் இடப்படலாம்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் குறிப் பீடுசெய்யப்படும் சட்டமூலமொன்று இவ்வுறுப்புரையினால் தேவைப் படுத்தப்படும் விசேட பெரும்பான்மைமூலம் நிறைவேற்றப்படக் கருத பட்டுள்ளதென அமைச்சரவை சான்றுரைஅளி த்தியுள்ளவிடத்து, அல்லது அத்தகைய விசேட பெரும்பான்மையினால் அல்லது அத்தகைய விசேட பெரும்பான்மையுடனும் அத்துடன் மக்கள் தீர்ப்பின் ஒன்றில் மக்க, அங்கீகாரத்துடனும் சட்டமூலம் ஒன்று நிறைவேற்றப்படவேண்டியுள்ள தென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளவிடத்து, அத்தகைய சட்டமூலம் அதற்குச் சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை, உறுப் பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டுக்குக் குறையாததாக இருப்பதுடன் 101ஆம் அல்லது 102ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க விடயத்துக்கேற்ப சனாதிபதியினால் அத்துடன் சபாநாயகரினால் அதன்மீது சான்றுரை யொன்று பொறிக்கப்பட்டாலின் சட்டமாதல் வேண்டும்.

(3) அத்தகைய சட்டமூலம் சட்டமாக இயற்றப் பட்டதும், அரசியலமைப்பை அல்லது அதன் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துதலோ, நீக்குதலோ, அல்லது மாற்றீடு செய்தலோ ஆகாது என்பதுடன் திருத்துவதாகவோ நீக்குவதாகவோ அல்லது மாற்றீடு செய்வதாகவோ கருதப்படுதலும் ஆகாது. அத்துடன் அவ்வாறு பொருள்கொள்ளப்படுதலோ பொருளமைத்துக்கொள்ளப்படுதலோ ஆகாது. அத்துடன் அதன்பின்னர் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பி -னர்களின் பெரும்பான்மை வாக்கினால் அது நீக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XII

### மக்கள் தீர்ப்பெடுப்பு

சட்டமூலங்களை மக்கள் தீர்ப்பெடுப்புக்கென மக்களுக்குச் சமர்ப்பித்தல்.

103. (1) மக்கள் தீர்ப்பெடுப்புக்கென மக்களுக்குச் சமர்ப்பிக்கப்படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை சான்றுரையளித்துள்ள அல்லது மக்கள் தீர்ப்பெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரம் தேவைப்படுத்தப்பட்டுள்ளதென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள 101 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சட்டமூலத்தையும் அல்லது ஏதேனும் சட்டமூலத்திலுள்ள ஏதேனும் ஏற்பாட்டை அத்தகைய சட்டமூலத்துக்குச் சாதகமாக அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாததாகவிருப்பின், சனாதிபதி மக்கள்தீர்ப்பெடுப்புக்கென மக்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (3)ஆம் பந்திக்கு அமைய மக்கள்தீர்ப்பெடுப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு, அது அத்தகைய மக்கள் தீர்ப்பெடுப்பின்போது அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் முழுப் பெரும்பான்மையான வாக்குகளினால் அங்கீகரிக்கப்படின், மக்களால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின்கீழ் நடத்தப்பட்ட மக்கள் தீர்ப்பெடுப்பொன்றில் அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கை தேருநர் இடாப்பில் பதியப்பட்ட தேருநர்களின் முழுத்தொகையின் மூன்றிலிரண்டை விஞ்சாதிருக்கின்றவிடத்து, அத்தகைய சட்டமூலம் அத்தகைய தேருநர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பகுதியினருக்குக்குறையாதோரால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே மக்களால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருமங்களை மக்கள் தீர்ப்பெடுப்புக்கென மக்களிடம் சமர்ப்பித்தல்.

104. சனாதிபதி, 103 ஆம் உறுப்புரையின் (3)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, தேசிய முக்கியத்துவம்வாய்ந்த ஏதேனும் கருமத்தை மக்கள்தீர்ப்பெடுப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவடிக்கைமுறை ற்றிப் பாரா மன்றம் ற்பாடுசெய்தல் வண்டும்.

105. (1) மக்கள் தீர்ப்பெடுப்பு ஒவ்வொன்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், தேர்தல் ஆணையாளர் அதன் முடிவுபற்றிச் சனாதிபதிக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

(2) சட்டமூலங்களையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருமங்களையும் மக்களின் தீர்ப்பெடுப்புகளுக்கென மக்களிடம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைமுறை, மக்கள்தீர்ப்பெடுப்பின்போது பயன்படுத்தப்படவேண்டிய தேருநர் இடாப்பு, அது தொடர்பிலான தவறுகள் யாவையென எடுத்தியம்பல், அத்தவறுகளுக்கான தண்டனை ஆகியன பற்றிய எல்லாக் கருமங்களுக்கும் அத்துடன் அவற்றுக்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறெல்லாக் கருமங்களுக்கும் பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் ஏற்பாடுசெய்தல் வேண்டும் என்பதுடன் பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும் வரை, 1981 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XIII

### வாக்குரிமையும் தேர்தல்களும்

தெருநர் ஒருவராக இருப்பதற்கான உரிமை.

106. ஆள் ஒவ்வொருவரும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதமாகத் தகைமையற்றவரானாலொழிய, பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலும், பிராந்திய சபை உறுப்பினர் களுக்கான தேர்தலிலும் தெருநர் ஒருவராக இருப்பதற்கும் அத்துடன் ஏதேனும் மக்கள் தீர்ப்பெடுப்பில் வாக்களிப்பதற்கும் தகைமையுடைய வராதல் வேண்டும், ஆயின் அத்தகைய ஆள் எவரும், அவரது பெயர் தோதான தெருநர் இடாப்பில் பதியப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய தேர்தலில் அல்லது மக்கள் தீர்ப்பெடுப்பில் வாக்களிப்பதற்கு உரித்துடைய வராதல் ஆகாது.

தெருநரொருவராக இருப்பதிலிருந்து இலாமற்செய்யும் தகைமையீனங்கள்.

107. (1) ஆளொருவர், அவர் பின்வரும் தகைமையீனங்களுள் ஏதற்கேனும் உட்பட்டவராயிருந்தால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அல்லது பிராந்திய சபை உறுப்பினர்களுக்கான தேர்தலில் தெருநராக இருப்பதற்கு அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பெடுப்பில் வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராதல் ஆகாது:-

(அ) அவர் இலங்கைப் பிரசையல்லாமல் இருந்தால்;

(ஆ) 120 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப் படும் தகைமைபெறும் தேதியன்று அவர் பதினெட்டு வயதினை அடையாதவராக இருந்தால்;

(இ) அவர் இலங்கையில் வலுவுடையதாகவிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்ற வராகக் காணப்பட்டிருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருந்தால்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) பந்தி (2)இற்கமைவாக இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்-குக் குறையாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனையை ( அது எப்பெயரினால் அழைக்கப்படினுஞ்சரி) இப்போது அனுபவித்து வருபவராயிருந்தால், அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டுக் காலப்பகுதியின்போது அத்தகைய தண்டனையை அனுபவித்து முடித்தவராயிருந்தால், அல்லது மரண தண்டனைக்குட்பட்டவராயிருந்தால் அல்லது அத்தகைய தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட ஆறுமாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையை அனுபவிப்பவராயிருந்தால், அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டுக்காலப்பகுதியின்போது அத்தகைய தண்டனையை அனுபவித்து முடித்தவராயிருந்தால்;

(உ) (1) 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 66ஆம் அல்லது 76ஆம் பிரிவின் கீழான ஏதேனும் தவ-றுக்கு, அல்லது சொல்லப்பட்ட இரண்டு பிரிவுகளில் ஏதேனுமொன்றின் கீழான தவறுக்கு நேர் ஒத்ததாகவிருக்கக்கூடியதும், அத்துடன் மக்கள் தீர்ப்பெடுப்புத் தொடர்பான அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் அல்லது மாகாண சபைகளினது அல்லது பிராந்திய சபைகளினது உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான அப்போதைக்கான சட்டத்தின் கீழானதும் ஆன தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேதிகள், எவையேனுமிருப்பின், அவற்றில் கடைசியான தேதியிலிருந்து ஏழாண்டுக் காலம் கழியாதிருந்தால்;

(ii) 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் ஓர் ஊழற் பழக்கத்திற்கு/ அல்லது சொல்லப்பட்ட ஊழற்பழக்கத்தோடு நேரொத்ததாக இருக்கக்கூடியதும் அத்துடன் மக்கள் தீர்ப்பெடுப்புத் தொடர்பில் அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் அல்லது மாகாண சபைகளினது அல்லது பிராந்திய சபைகளினது உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பில் அப்போதைக்கான சட்டத்தின் கீழானதும் ஆன அத்தகைய தவறுக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகள், எவையேனுமிருப்பின், அவற்றில் கடைசியான தேதியிலிருந்து ஏழாண்டுக் காலம் கழியாதிருந்தால்;

(iii) 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அல்லது மக்கள் தீர்ப்பெடுப்புத் தொடர்பில் அல்லது சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் அல்லது மாகாண சபைகளினது அல்லது பிராந்திய சபைகளினது உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பில் அப்போதைக்கான ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏதேனும் ஊழற் பழக்கத்திற்கு அவரைக் குற்றவாளியாகக் காணும் நீதிபதியொருவரினால் செய்யப்பட்ட அறிக்கைத் தேதிகள், எவையேனுமிருப்பின், அரசியலமைப்புத் தொடங்கும் தேதிக்குப் பின்னராகவிருக்கின்ற அத்தேதிகளில் கடைசியான தேதியிலிருந்து, ஏழாண்டுக் காலம் கழியாதிருந்தால்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) இலஞ்சச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அல்லது இலஞ்சச் சட்டத்திற்கு நேரொத்ததாக இருக்கக்கூடிய ஏதேனும் எதிர்காலச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவர் மீது குற்றத்தீர்ப்பளிக்கப் பட்ட அல்லது அவர் குற்றவாளியாகக் காணப்பட்ட தேதிகள், எவையேனுமிருப்பின், அவற்றில் கடைசி யான தேதியிலிருந்து ஏழாண்டுக் காலம் கழியாதி -ருந்தால்;

(ஊ)(1) உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 77ஆம் பிரிவு முதல் 82ஆம் பிரிவு வரை (இரண்டுமுள்ளடங்கலாக) உள்ள பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் தவறுக்கு, அல்லது சொல்லப்பட்ட பிரிவுகளின் கீழான ஏதேனும் தவறுக்கு நேர் ஒத்ததாக இருக்கக்கூடியதான ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழான அத்த -கைய தவறுக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்ட தேதிகள், எவையேனுமிருப்பின், அவற்றில் கடைசியான தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலம் கழியாதிருந்தால்; அல்லது

(11) பகிரங்கக் ஒழுக்கள் (ஊழற்றடுப்பு) கட்டளைச் சட்டத்தின் 2ஆம், 3ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் தவறுக்கு, அல்லது சொல்லப்பட்ட தவறுக்கு.

நேரொத்ததாக இருக்கக்கூடிய, ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழான அத்தகைய தவறுக் -கு அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகள், எவையேனுமிருப்பின், அவற்றில் கடைசியான தேதியி லிருந்து ஐந்தாண்டுக்காலம் கழியாதிருந்தால்;

(எ)(1) 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் சட்டவிரோத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கு அல்லது சொல்லப்பட்ட சட்டவிரோதமான பழக்கத்திற்கு
மான பழக்கமொன்/நேரொத்ததாக இருக்கக்
கூடிய மக்கள் தீர்ப்பெருப்புத் தொடர்பான
அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் அல்லது
மாகாண சபைகளது அல்லது பிராந்திய சபைகளது
உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான அப்போ
-தைக்கான சட்டத்தின் கீழான அத்தகைய தவறு
களுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதிகள், எவை
யேனுமிருப்பின், அவற்றில் கடைசியான தேதியிலி
ருந்து மூன்றாண்டுக் காலம் கழியாதிருந்தால்;

(ii) 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளு
மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அல்லது மக்கள்
தீர்ப்பெருப்புத் தொடர்பான அல்லது பாராளுமன்ற
உறுப்பினர்களின் அல்லது மாகாணசபைகளது அல்லது
பிராந்திய சபைகளது உறுப்பினர்களின் தேர்தல்
தொடர்பான அப்போதைக்கான ஏதேனும் சட்டத்
தின்கீழ் ஏதேனும் சட்டவிரோதமான பழக்கத்துக்கு
அவரைக் குற்றவாளியாகக் காணும் நீதிபதி ஒருவரி
னால் செய்யப்பட்ட அறிக்கைத் தேதிகள், எவையே
னுமிருப்பின், அரசியலமைப்புத் தொடக்கும் தேதிக்கு
பின்னரான இருக்கின்ற அத்தேதிகளில் கடைசியான
தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலம் கழியாதிருந்தால்;

(ஏ) அவர்மீது குடியியற்றகுதியீனம் விதிப்பதற்கான தீர்மா
-னமொன்று 98 ஆம் உறுப்புரையின் நியதிகளின் கீழ்
நிறைவேற்றப்பட்டிருந்து அத்துடன், அத்தகைய தீர்
மானத்தில் குறித்துரைக்கப்பட்ட குடியியற்றகுதியீனக்
காலம் முடிவுறாமலிருந்தால்;

(ஐ) (1) தண்டனைச் சட்டக்கோவையின் 188 முதல்
201 வரையிலான (இரண்டுமுள்ளடங்கலான) பிரிவு
களின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும்தவறுக்கு, அல்லது
சொல்லப்பட்ட பிரிவுகளின் கீழான ஏதேனும் தவ
-றுக்கு நேரொத்ததாக இருக்கக்கூடிய ஏதேனும்
எதிர்காலச் சட்டத்தின் கீழான அத்தகைய வேறு
தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து
ஏழாண்டுக்காலம் கழியாதிருந்தால்; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) 98 ஆம் உறுப்புரையிற் குறித்துரைக் கப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர் அல்லது உறுப்பி னர்கள் அடங்கிய ஏதேனும் விசேட சனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிரான அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறுக் குப் பின்வரும் காரணத்துக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட தேதியிலிருந்து ஏழாண்டுக்காலம் கழியாதிருந் தால், அதாவது -

(1) அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அத்தகைய ஆணைக்குழு வழங்குவதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் அழைப்புக்கட்டளையிற் கூறப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு அத்தகைய ஆள் தவ றுதல்; அல்லது

(2) அத்தகைய ஆள் சத்தியம் செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுத் தல், அல்லது அத்தகைய ஆணைக்குழு வின் கருத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அத்தகைய ஆணைக்குழுவி னால் விசாரணை செய்யப்படும்படி பணிக்கப்பட்ட கருமங்களையிட்டு அத்தகைய ஆளிடம் கேட்கப்படும் ஏதேனும் வினாவுக்கு மறுமொழியிறுக்க அத்தகைய ஆள் மறுத்தல் அல்லது தவறுதல்; அல்லது

(3) அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அத்தகைய ஆளின் உடமையில் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துவத்தில் உள்ளதும், அத்தகைய ஆணைக்குழுவின் கருத்தில் அத்தகைய அத்தகைய ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படவேண்டிய கருமங்களின் உண்மையைக் கண்டறிவதற்கு அவசியமாக உள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை அத்தகைய ஆணைக்குழுவிடம் கொணர்ந்து காண்பிக்க அத்தகைய ஆள் மறுத்தல் அல்லது தவறுதல்;

(ஒ) 160 ஆம் உறுப்புரையின்கீழ் விதிக்கப்பட்ட அவரது தகைமையீனத்துக்கான காலம் கழியாதிருந்தால்.

(2) இவ்வுறுப்புரையின் (1) (ஈ)என்னும் பந்தியின் கீழ் தேருநர் ஒருவராகவிருப்பதற்குத் தகைமையற்றவரான எவரேனும் ஆளுக்கு, 59(1) (அ) எனும் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினால் நிபந்தனையற்ற மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தகைமையீனமானது மன்னிப்பு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்ட/தாதல் வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமை.

108. (1) தேருநராக இருப்பதற்குத் தகைமையுடையவரான ஆள் ஒவ்வொருவரும், (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் அவர் தகைமையற்றவராயிருந்தாலொழிய, பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(2) ஆள் எவரும் -

(அ) 107ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமையீனங்களுள் எதற்கேனும் உட்பட்டவராக இருந்தால் அல்லது உட்பட்டவராக வந்தால்;

(ஆ)

(1) பொதுத் தேர்தலொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல்கள் மாவட்டங்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால்;

(11) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால்;

(111) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருப்பதோடு, அத்தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தல் முடிவுற்றற்கு முன்னர் வேறேதேனும் தேர்தல்மாவட்டத்திற்கான தேர்தலில் வேட்பாளரொருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால்;

(1V) 86 ஆம் உறுப்புரையில் அல்லது 221(1)(அ)ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களிற்றவிர, பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும்போது, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலில் வேட்பாளர் ஒருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருந்தால்;

(இ) குடியரசின் சனாதிபதியாக இருந்தால்;

(ஈ) பிராந்தியமொன்றின் ஆளுநராக இருந்தால்;

(உ) (1) நீதித்துறை அலுவலராக இருந்தால்;

(11) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளராக (ஒப்புட்சுமான்) இருந்தால்;

(111) பாராளுமன்றச் செயலாளர் நாயகமாக இருந்தால் அல்லது அவரின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராக இருந்தால்,

(1V) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின், அல்லது நிதி ஆணைக்குழுவின் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பொலிசு ஆணைக்குழுவின், அல்லது பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழுவொன்றின், அல்லது பிராந்திய பகிரங்கச் சேவை ஆணைக்குழுவின், அல்லது பிராந்திய பொலிசு ஆணைக்குழுவொன்றின் ஓர் உறுப்பினராக இருந்தால்,

( V ) தேர்தல்கள் ஆணையாளராக அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக இருந்தால்,

(V1 ) கணக்காய்வாளர் தலைமையதிபதியாக இருந்தால்,

(V11) 1970 நவம்பர் 18 ஆம் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும், 1970 நவம்பர் 18 ஆம் தேதியன்று 6,720 ரூபாவுக்குக் குறையாத ஆண்டுச் சம்பளத்தை அதன் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளமாகக் கொண்டிருந்ததும் அல்லது ஏதேனும் அடுத்துறும் சம்பள அளவுத்திட்டங்களின் மீளாய்வின்கீழ் ஆண்டொன்றுக்கு அத்தகைய தொடக்கச் சம்பளத்திற்கு நேரொத்ததாகவிருக்கும் அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலரொருவராக இருந்தால்.

(V111) 1970 நவம்பர் 18 ஆம் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அதன் ஆரம்ப சம்பள அளவுத்திட்டம் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (V11) ஆம் இனத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவியொன்றுக்கு அத்தேதியன்று ஏற்புடையதான சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திலும் குறையாததைக் கொண்டிருந்ததும் அல்லது ஏதேனும் அடுத்துறும் சம்பள அளவுத் திட்டங்களின் மீளாய்வின்கீழ் ஆண்டொன்றுக்கு முதலில் குறிப்பிடப்பட்ட தொடக்கச் சம்பளத்திற்கு நேரொத்ததாகவிருக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அத்தகைய வேறு தொகையைக் கொண்டது மான ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலரொருவராக இருந்தால்,

(1X) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் 1970 நவம்பர் 18 ஆம் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும், 1970 நவம்பர் 18 ஆம் தேதியன்று ஆண்டொன்றுக்கு 7200 ரூபாவுக்குக் குறையாத ஆண்டுச் சம்பளத்தை அதன் சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச்சம்பளமாகக் கொண்டிருந்ததும் அல்லது ஏதேனும் அடுத்துறும் சம்பள அளவுத் திட்டங்களின் மீளாய்வின்கீழ் ஆண்டொன்றுக்கு அத்தகைய தொடக்கச் சம்பளத்திற்கு நேரொத்ததான அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான பதவியை வகிக்கும் அலுவலரொருவராக இருந்தால்,

(X) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது ஏதேனும் பிராந்தியப் பகிரங்கச் சேவையொன்றில் 1970 நவம்பர் 18 ஆம் திகதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அதன் ஆரம்ப சம்பள அளவுத் திட்டம் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (1) ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவியொன்றுக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தான சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச்சம்பளத்திற்குக் குறையாததானதாகவும் அல்லது ஏதேனும் அடுத்துறும் சம்பள அளவுத்திட்டங்களின் மீளாய்வின் கீழ் ஆண்டொன்றுக்கு முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட தொடக்கச் சம்பளத்திற்கு நேரொத்ததானதுமான அத்தகைய வேறு தொகையைக் கொண்டதுமான ஏதேனும் பதவியை வகிக்கின்ற அலுவலரொருவராக இருந்தால்,

(X1) நிலையான தரைப்படை, நிலையான கடற்படை அல்லது நிலையான வான்படை உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(X11) பொலிசு அலுவலரொருவராக அல்லது பொலிசு பணிகளைப் பிரயோகிக்கும் பகிரங்க அலுவலரொருவராக இருந்தால்,

(ஊ) பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் விதித்துரைக்கப்படவேண்டியதும், அரசினால் அல்லது அதன் சார்பில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால்அல்லது அதன் சார்பில் செய்துகொள்ளப்பட்டதுமான அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தில் அத்தகைய ஏதேனும் அக்கறையைக்கொண்டவராக அவர் இருந்தால்;

(எ) வங்குரோத்தானவர் என அல்லது கடனிறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டவராயிருந்து அந் நிலையிலிருந்து விடுவிக்கப்படாத ஒரு வங்குரோத்தானவராக அல்லது கடனிறுக்க வகையற்றவராக இருந்தால்,

(ஏ) பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அல்லது அரசியலமைப்புத் தொடங்குவதற்குமுன்னர் இருந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவரின் நிதானிப்பைத் திசை திருப்பும் நோக்கத்துடன் வழங்கப்பட்ட இலஞ்சத்தை அல்லது அவாநிறைவை ஏற்றுள்ளாரெனத் தகுதி வாய்ந்த நீதி மன்றத்தினால் அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினால் நேரே முற்போந்த ஏழாண்டுக்காலத்துள் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருந்தால்,

அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்பதற்கும் வாக்களிப்பதற்கும் தகைமையுடையவராதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தியின் நோக்கங்களுக்காக ஏதேனும் தொழிற்சங்கத்தினால் அல்லது வேறு ஒழுங்கமைப்பினால் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவருக்கு அவரது பராமரிப்பு நோக்கங்களுக்கென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் கொடுக்கப்படும் ஏதேனும் படியை அல்லது வேறு கொடுப்பனவை அவர் ஏற்பது இலஞ்சத்தை அல்லது அவாறிறைவை ஏற்பதாகக் கருதப் படுதல் ஆகாது.

தேர்தல்கள் சுதந்திர மானவையாகவும், நீதியானதாகவும் அத்துடன் இரகசிய மானதாகவும் இருத்தல்.

109. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலும் அத்து டன் பிராந்திய சபையின் உறுப்பினர்களுக்கான தேர்தலிலும் அத்துடன் ஏதேனும் மக்கள் தீர்ப்பெடுப்பிலும் வாக்களிப்பது, சுதந்திரமாகவும், நீதியானதாகவும் அத்துடன் இரகசிய வாக்கெடுப்பு மூலமானதாகவும் இருத்தல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளர்.

110. (1) சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டிய தேர்தல் -கள் ஆணையாளரொருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் நன் நடத்தையுடையவராயிருக்கும் காலத்தின் போது பதவி வகித்தலும் வேண் டும்.

(2) தேர்தல்கள் ஆணையாளரின் சம்பளம் பாராளு மன்றத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(3) தேர்தல்கள் ஆணையாளரின் பதவியானது -

(அ) அவர் இறக்குமிடத்து;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டு எழுத்தில் அனுப் -பப்படும் கடிதத்தின் மூலம் அவர் பதவியி லிருந்து விலகுமிடத்து;

(இ) இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்திக்கு அமை வாக அவர் அறுபது வயதினை அடையுமிடத்து;

(ஈ) சுகவீனம் அல்லது உடற்பலவீனம் அல்லது மனப் பலவீனம் காரணமாகச் சனாதிபதியி னால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மேல்; அல்லது

(உ) பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின் மீது அவர் சனாதிபதியினால் அகற்றப்படுமிடத்து,

வறிதானதாக வருதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) தேர்தல்கள் ஆணையாளர் அவரது பதவிக்கு -ரிய பணிகளை நிறைவேற்ற இயலாதவராக இருக்கும் போதிலெல்லாம், சனாதிபதியானவர், தேர்தல்கள் ஆணையாளரின் இடத்தில் செயலாற்று வதற்கென ஆள் ஒருவரை நியமிக்கலாம்.

(5) சனாதிபதியானவர், விதிவிலக்கான சந்தர்ப் பங்களில் அறுபது வயதடைந்துள்ளவரான தேர்தல்கள் ஆணையாளர் ஒருவ -ரைப் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்குப் பதவியில் தொடர்ந்திருப்பதற்கு அனுமதிக்கலாம்.

தேர்தல்கள் ஆணைக்குழு.

111. (1) தேர்தல்கள் ஆணையாளரையும் அத்துடன் பாராளு மன்றத்தினால் சட்டத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையுள்ள பிரதி ஆணையாளர்களையும் உதவி ஆணையாளர்களையும் கொண்ட தேர்தல் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சனாதிபதி யினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) தேர்தல்கள் ஆணையாளரானவர், தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளராய் இருத்தல் வேண்டும்.

(4) சனாதிபதியானவர், தவிசாளரினால் செய்யப்பட்ட விதப்புரையின்மேல், அதன் தவிசாளர் அல்லாத தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை அகற்றலாம்.

(5) தவிசாளர் அல்லாத ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அதற்கெனச் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் ஆணைக்குழுவிலிருந்து பதவி விலகலாம்.

தேர்தல் ஆணைக் குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்.

112. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பிராந்தியச் சபை யின் உறுப்பினர்களுக்குமான தேர்தல், அத்துடன் மக்கள் தீர்ப்பெடுப்பு என்பன தொடர்பில், அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்படக்கூடியவாறான அல்லது அதன்மீது சுமத்தப் படக்கூடியவாறான அல்லது அதற்கு குறித்தொதுக்கப்படக்கூடியவாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தேர்தல் ஆணைக்குழுவானது பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

வரையறை ஆணைக் குழுவைத் தாபித்தல்.

113. (1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்கெனச் சனாதிபதியானவர் வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்; அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதி-பதி திருப்தியுடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதியானவர் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவரும் இறந்தால் அல்லது பதவி துறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவ-ராகிவிட்டாரெனச் சனாதிபதியானவர் திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதியானவர் அத்தகைய உறுப்பினரின் இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

தேர்தல் மாவட்டங்கள்.

114. (1) வரையறை ஆணைக்குழுவானது இலங்கையை இருபதுக்குக் குறையாததும் அத்துடன் இருபத்தைந்துக்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்தல் வேண்டுமென்பதுடன், அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதலும் வேண்டும்.

(2) இலங்கையின் பிராந்தியம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம் அல்லது இரண்டு அல்லது இரண்-டுக்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

(3) பிராந்தியமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது, ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும், ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தேர்தல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்துமாறு, இப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள தேர்தல் மாவட் -டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும்; (இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் பெயர்களைக் கொண்டிருக் கும் தேருநர்களின் எண்ணிக்கையை தொடர்புபடுத்திப் பார்க்கும்போது எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டங்கள் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) அத்துடன் வரையறை ஆணைக்குழுவானது அத்தகைய உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்கிடுதலும் வேண்டும்.

(5) (அ) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடை -யே கருத்து வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களின் பெரும்பான்மையினரின் கருத்தே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே வரையறை ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான கருத்தை உடையவராயிருக்குமிடத்து, தவிசாளரின் கருத்தே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) வேறுபடும் கருத்தைக்கொண்ட உறுப்பினர் எவரும் அத்தகைய வேறுபாட்டிற்கான காரணங்களைக் கூறலாம்.

(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளரானவர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் கருத்தைக் கொண்ட உறுப்பின ரால் கூறப்பட்ட காரணங்கள், எவையேனுமிருப்பின், அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் மாவட்டங்களின் பெயர்கள் முதலியவற்றைப் பிரகடனஞ் செய்தல்.

115. சனாதிபதியானவர், வரையறை ஆணைக்குழுவின் முடிவுகளுக்கிணங்கத் தேர்தல் மாவட்டங்களின் பெயர்களையும் எல்லைகளையும், 114 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பயனினால் அத்தகைய தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றும் எத்தனை உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையது என்பதையும் பிரகடனத்தின் மூலம் வெளியிடுதல் வேண்டும், பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அடுத்து வரும் பொதுத் தேர்தலில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அதன்பின்னர் அரசியலமைப்பின் நோக்கங்களுக்காகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான ஏதேனும் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் இலங்கையின் தேர்தல் மாவட்டங்களாக இருத்தலும் வேண்டும்.

பல்வேறு தேர்தல் மாவட்டங்களாலும் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அவ்வுறுப்பினர்களை அத்தகைய தேர்தல் மாவட்டங்களிடையே பங்கிடுதலும்.

116 (1) பல்வேறு தேர்தல் மாவட்டங்களும் ஒன்றாகச் சேர்ந்து நூற்றுத் தொண்ணூற்றாறு உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் எத்தனை உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப உரித்துடையதாதல் வேண்டுமென்பது, முப்பத்தாறு உறுப்பினர்களின் விடயத்தில், 114 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் எத்தனை உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப உரித்துடையதாதல் வேண்டுமென்பது மிச்சத்தொகையான நூற்றறுபது உறுப்பினர்களின் விடயத்தில் இவ்வுறுப்புரையின் அடுத்து வரும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) எல்லாத் தேர்தல் மாவட்டங்களினதும் தேருநர் இடாப்புகளில் தமது பெயர்களைக் கொண்டுள்ள தேருநர்களின் மொத்த எண்ணிக்கையானது நூற்றறுபதால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரிப்பின் விளைவாக வரும் முழு எண் (பின்னம் எதுவும் கணக்கிலெடுக்கப்படுதலாகாது) இதனகத்துப் பின்னர் "தகைமை பெறுதொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(5) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தில் உள்ள தேருநர் இடாப்புகளில் தமது பெயர்களைக் கொண்டுள்ள அத்தகைய தேருநர்களின் மொத்த எண்ணிக்கையானது அந்தத் தேர்தல் மாவட்டத்திலுள்ள அத்தகைய தேருநர்களின் மொத்த எண்ணிக்கையைத் தகைமைபெறு தொகையால் பிரிக்க வருகின்ற முழு எண்ணுக்குச் சமமான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் உரித்துக்கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு பிரித்ததன் பின்னர் எச்சமாக இருக்கும் அத்தகைய தேருநர் தொகை, அப்படி எவரேனும் மிச்சமாக இருப்பின், அவசியமாயின், இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்திக்கிணங்கக் கையாளப்படுதல் வேண்டும்.

(6) தகைமைபெறு உறுப்பினர் தொகையோடு தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்திக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவர்களான எல்லாத் தேர்தல் மாவட்டங்களினாலும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் மொத்தத்தொகை நூற்றறுபது உறுப்பினர்களுக்குக் குறைவானதாக இருக்கின்றவிடத்து, எஞ்சிய உறுப்பினர் தொகையை பெறுவதற்கான உரித்தைத் தேர்தல் மாவட்டங்களிடையே எப்படிப் பங்கிடுவது என்பது, அத்தகைய எஞ்சிய தேருநர் தொகையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும், (5) ஆம் பந்தியின் கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானிப்புக்கிணங்க ஓர் உறுப்பினரைத்தானும் தெரிந்தனுப்ப உரித்தப்பெறாத ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் விடயத்தில், அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் தமது பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் மொத்தத் தொகையின் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்; ஆகக்கூடிய எஞ்சிய தேருநர் தொகையை அல்லது ஆகக்கூடிய மொத்தத் தேருநர் தொகையைக் கொண்டுள்ள தேர்தல் மாவட்டம் மேலும் ஓர் உறுப்பினரைப் பெறுதல் வேண்டும்; இவ்வாறே, ஈற்றுப்பது உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படும்வரை, இம்முறை தொடர்தல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின் கீழான ஒரு பங்குபோடலைச் செய்யும்போது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட எஞ்சிய தேருநர் தொகைகள் சமமாகவிருந்து அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கை சமமாகவிருந்து, அத்துடன் அத்தகைய ஒரு தேருநரைக் கூட்டுவதை, ஒரு மேலதிக உறுப்பினரைத் தெரிந்தனுப்ப ஒரு தேர்தல் மாவட்டத்திற்கே உரித்தளிக்குமாயின், அத்தகைய தேருநரை எந்தத் தேர்தல் மாவட்டத்திற்குக் கூட்டுவதற்குக் கருதப்படுதல் வேண்டும் என்பது திருவுளச்சீட்டுமூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(8) தேர்தல்கள் ஆணையாளர், எல்லாத் தேர்தல் மாவட்டங்களுக்குமான தேருநர் இடாப்புக்களை அத்தாட்சிப்படுத்திய பின்னர் இயன்றளவு விரைவாக, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் 115 ஆம் உறுப்புரையின் கீழ், இவ்வுறுப்புரையின் கீழும் செய்யப்பட்ட பிரகடனத்தினதும் இவ்வுறுப்புரையினதும் பயனைக்கொண்டு, தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றும் எத்தனை உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துக்கொண்டுள்ளது என்பதை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(9) இந்த உறுப்புரையின் நோக்கங்களுக்கான, "தேருநர் இடாப்பு" என்பது அப்போதைக்கு நடைமுறையிலிருப்பதும் தேர்தலொன்று நடாத்தப்படுவதற்கு அடிப்படையான இடாப்பாக இருப்பதும் ஆன தேருநர் இடாப்பு என்று பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதாசாரப் பிரதிநிதித்துவம்.

117. (1) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏதேனும் தேர்தலில் ஒரு தேர்தல் மாவட்டம் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகவிருக்கும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது 116 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்ட கட்டளையில் தேர்தல் ஆணையாளரால் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையாக இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலான தேருநர் ஒவ்வொருவரும், அவரது வாக்குக்கு மேலதிகமாக, அதே அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேட்சைக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்றுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்கான தனது விருப்புரிமைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது (இதனகத்துப் பின்னர் "சுயேட்சைக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற ஏதேனும் ஆட்கள்குழு, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஏதேனும் தேர்தலின் நோக்கத்துக்காக, அத்தேர்தல் மாவட்டத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையோடு மூன்றைக் கூட்டிவரும் எண்ணிக்கையினரான வேட்பாளர்களின் பெயர்களைத் தருகின்ற ஒரு நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம்.

(4) தேருநர் இடாப்பில் தமது பெயர் காணப்படுகின்ற ஒவ்வொரு தேருநரும், அவரது பெயர் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களின் தேர்தல் இடாப்புகளில் காணப்படுவது எப்படியிருப்பினும், ஒருவாக்குக்கு மட்டுமே உரித்துடையவராய் இருத்தல் வேண்டும்.

(5) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் ஆகக்கூடிய எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழுவானது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகக்கூடிய விருப்புரிமை எண்ணிக்கைகளைப் பெற்றுள்ளவரும் அதனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வருமான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தவிப்ப / தற்கான உரித்தைக் கொண்டிருத்தல் வேண்டும்".

(6) (அ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திலான தேர்தல் எதிலும் பெறப்பட்ட மொத்த வாக்குகளில் இருபதிலொன்றுக்குக் குறைவான வாக்குகளைப்பெறுகின்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் / அத்துடன் சுயேச்சைக்குழுவும், அத்தேர்தல் மாவட்டத்துக்கு அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் எவரேனும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து தகைமையிழந்ததாதல் வேண்டும்.

(ஆ) தகைமையிழந்த கட்சிகளினாலும் சுயேச்சைக்குழுக்களினாலும் பெறப்பட்ட வாக்குகள் எவையேனுமிருப்பின் அவை அத்தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் பெறப்பட்ட மொத்த வாக்குகளிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கழிக்கவரும் வாக்குகள் இதனகத்துப் பின்னர் "இயைபானவாக்குத் தொகை" எனக் குறிப்பீடும் செய்யப்படும்.

(7) இயைபான வாக்குத்தொகை / யானது, அத்தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒன்றினால் குறைத்த / தன் பின்னர் வரும் எண்ணிக்கையினால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரித்தலின் விளைவான என் / ணானது பூரணியாகவிருப்பின், அப்பூரணி / யானது அல்லது அவ்வெண் பூரணியாகவும் பின்னமாகவும் இருப்பின், அப்பூரணியிலும், பின்னத்திலும் பார்க்க உடனடி / யாகக் கூடியதாகவுள்ள பூரணி / யானது, இதனகத்துப்பின்னர் "விளைதொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(8) ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து தொடங்கும் (இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின் கீழ் தகைமையிழந்தனவான கட்சிகள் அல்லது குழுக்கள் நீங்கலாக) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினாலும் / அத்துடன் சுயேச்சைக்குழு ஒவ்வொன்றினாலும் பெறப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளின் விளைதொகையினால் பின்னர் பிரிக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரானவர், அத்தகைய ஒவ்வொரு கட்சியிலிருந்தும் அல்லது குழுவிலிருந்தும், அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் ஒவ்வொருவரா லும் பெறப்பட்ட விருப்புரிமைகளுக்கிணங்க, (ஆகக்கூடிய எண்ணிக்கையின வான விருப்புரிமைகளைப் பெறுகின்ற வேட்பாளர் முதற்படியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டாரென வெளிப்படுத்தப்படும், அடுத்து ஆகக்கூடிய எண்ணிக் -கையினவான விருப்புரிமைகளைப் பெறுகின்ற வேட்பாளர் அடுத்தபடியாக தேர்ந்தெடுக்கப்பட்டாரென வெளிப்படுத்தப்படும் இவ்வாறே தொடரும்) அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் பெறப்பட்ட வாக்குகளை விளைதொகையினால் பிரிப்பதன் மூலம் விளையும் முழுத்தொகைக்குச் சமமானதாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினதான வேட்பாளர்களை (இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட வேட்பாளர் நீங்கலாக) தேர்ந்தெடுக்கப்பட்டவர் களென வெளிப்படுத்தலும் வேண்டும். அத்தகைய பிரித்தலின் பின்னர் எவையேனும் வாக்குகள் எஞ்சியிருப்பின், அவை அவசியமாயின், இவ்வுறுப் -புரையின் (9)ஆம் பந்தியின் கீழ் கையாளப்படுதல் வேண்டும்.

(9) இவ்வுறுப்புரையின் 8 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப் பட்டவாறாக, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தமைபற்றி வெளிப்படுத்திய பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்துவதற்கு இன்னும் ஓர் உறுப்பினர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள், அப்பந்தியின் கீழ் ஏலவே வெளிப்படுத்துதல் செய்யப்பட்ட பின்னர் அத்தகைய ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் கணக்கிலுமுள்ள (8) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட எஞ்சிய வாக்குகளையும், (8) பந்தியின் கீழ் அதன் வேட்பாளர் களுள் எவரையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்தியிராத ஏதேனும் கட்சியினால் அல்லது குழுவினால் பெறப்பட்ட வாக்குகளையும் தொடர்புபடுத்திப் பார்ப்பதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய வாக்குகளில் ஆகக்கூடிய தொகையைக் கொண்டுள்ள கட்சியினால் அல்லது குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும், ஆகக்கூடிய அல்லது அடுத்தபடியாக ஆகக்கூடிய எண்ணிக்கையிலான விருப்புரிமைகளைப் பெற்றுள்ளவரான வேட்பாளர் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எல்லா உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படும்வரை இவ்வாறே தொடரும்.

(10) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, இவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விளைதொகைக்குக் குறைவானதாக இருக்கின்றவிடத்து, ஆகக்கூடுதலான வாக்குகளைப்பெற்ற கட்சி அல்லது குழு, அக்கட்சியினால் அல்லது குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் (இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட வேட்பாளர் நீங்கலாக) ஆகக்கூடிய எண்ணிக்கையிலான விருப்புரிமைகளைப் பெற்றவருமான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதோடு, இன்னமும் உறுப்பினர் ஒருவரையோ ஒருவருக்கு மேற்பட்டவர்களையோ தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்த வேண்டியிருப்பின், அடுத்தபடியாக ஆகக்கூடிய வாக்குகளைப்பெற்ற கட்சி அல்லது குழு, அக்கட்சியினால் அல்லது குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் ஆகக்கூடிய எண்ணிக்கையினவான விருப்புரிமைகளைப் பெற்றவருமான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துவதற்கான உரித்தைக்கொண்டிருத்தலும் வேண்டும். அந்தத் தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எல்லா உறுப்பினர்களும் இப்பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படும் வரை இவ்வாறே தொடரும்.

(ஆ) பந்தி (அ) இன்கீழான தீர்மானத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இன்னமும் ஓர் உறுப்பினரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட உறுப்பினர்களை அந்தத்தேர்தல் மாவட்டம் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவரென அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்த வேண்டியிருப்பின், அப்பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பில், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(11) இவ்வுறுப்புரையின் (5) ஆம், (9) ஆம் அல்லது (10) ஆம் பந்தியின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அரசியற்கட்சிகளினால் அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களினால் அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கையினால் பெறப்பட்ட வாக்குகள் சமமாகவிருப்பதாகக் காணப்படுமிடத்தும் அத்துடன் ஒரு வாக்கைச் சேர்த்த வேட்பாளரைத் அத்தகைய ஒரு கட்சியின் அல்லது குழுவினாலான தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துவதற்கு உரித்தளிக்குமிடத்தும், அத்தகைய மேலதிக வாக்கு எக்கட்சிக்கு அல்லது எக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பது திருவுளச்சீட்டு மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(12) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையானது, நிராகரிக்கப்பட்ட வாக்குகள் நீங்கலாக எண்ணப்பட்டவாக்குகளின் தொகையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(13) (அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அத்தகைய பாராளுமன்ற உறுப்பினராக வந்த நேரத்தில் அவரது பெயர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் (இது இதனகத்துப் பின்னர் "இயைபான நியமனப்பத்திரம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காணப்பட்டதோ அந்தக் கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து விலகுவதன் மூலம் அல்லது விலக்கப்படுவதன் மூலம் அல்லது வேறுவகையில் அக்கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினராக இல்லாதொழியுமிடத்து, அவர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் உறுப்பினராகஇல்லாதொழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி முடிவுற்றதன்மேல் அவரது ஆசனம் வறிதாதல் வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டதொரு அரசியல் கட்சியிலிருந்து அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்து இப் பந்தியின் (அ) என்னும் உட்பிரிவின் கீழ் அல்லது வேறுவகையாக விலக்கப்படுவதன் காரணத்தினால் உறுப்பினர் ஒருவர் உறுப்பினரொருவராக இல்லாதொழிகின்றவிடத்து, அவர் அவ்வுட்பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு மாதகாலப் பகுதி முடிவுறுவதற்கு முன்னர் எழுத்திலான மனுவின் மூலம் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய / மனுவின் மேல், உயர்நீதிமன்றமானது –

(1) அத்தகைய விலக்கலானது செல்லுபடியற்றதென தீர்மானிக்கின்றவிடத்தும், அவ்வுறுப்பினரின் ஆசனம் வறிதானதாக வருதல் ஆகாது.

(11) விலக்கலானது செல்லுபடியானதென தீர்மானிக்கின்றவிடத்து, அவ்வுறுப்பினரால் வகிக்கப்பட்ட ஆசனம் அத்தகைய தீர்மானிப்புத் தேதியிலிருந்து வறிதான–தாதல் வேண்டும்.

(இ) இப் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழான மனு ஒன்று மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகளினால் விசாரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அவர்கள் தமது தீர்மானத்தைச் செய்தல் வேண்டும்.

(ஈ) இப் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் "நியமனப்பத்திரம்" என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று தொடர்பில் அல்லது சுயேச்சைக்குழு தொடர்பில் பயன்படுத்தப்படும் போது 118ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியின்கீழ் அந்த அங்கீ–கரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் அல்லது சுயேட்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் ஒரு நிரலை உள்ளடக்கும்.

(14) எண்பத்தியிரண்டாம் உறுப்புரையின் (அவ்வுறுப்புரையின் (எ) என்னும் பந்தி தவிர) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இவ்வுறுப்புரையின் (13) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பயனாக, (118ஆம் உறுப்புரையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அல்லாத) பாராளுமன்ற உறுப்பினரொருவரின் ஆசனம் வறிதாகுமிடத்து, அடுத்தபடியாக ஆகக்கூடிய எண்ணிக்கையினவான விருப்புரிமைகளைப்பெற்ற இயைபான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்தான அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்தான வேட்பாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

பொதுத் தேர்தல் ஒன்றில் பெறப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

118. (1) உறுப்புரை116இற் குறிப்பீடு செய்யப்பட்ட நூற்றித்தொன்னூற்றியாறு உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்பட்டபின்னர் தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய பொதுத் தேர்தலில் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அத்தகைய பொதுத் தேர்தலில் பெறப்பட்ட என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில், அத்தகையபொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்குமிடையே எஞ்சியுள்ள இருபத்தொன்பது ஆசனங்களை உடனடியாகப் பங்கிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பங்கிடுதல் நோக்கங்களுக்காக, 116ஆம் உறுப்புரையின் (4), (5), (6), (7) ஆகிய பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஒரு பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும், அத்தகைய தேர்தலுக்கெனக் குறித்துரைக்கப்பட்ட நியமன காலப்பகுதியினுள், பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களின் நிரலொன்றை ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்தகைய பங்கிடுதலின் மேல் அத்தகைய கட்சி அல்லது குழு எந்த ஆசனங்களுக்கு உரித்துடையதாக வருமோ அந்த ஆசனங்கள், எவையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுமிருப்பின் அவற்றை நிரப்புவதற்கு அந்நிரலிலிருந்து அத ஆட்களைப் பெயர்குறித்து நியமிக்கலாம். தேர்தல்கள் ஆணையாளர் இவ்வுறுப்புரையின்கீழ் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு நிரலையும் பெயர் நியமன காலப்பகுதி முடிவுறுவதன்மேல் உடனடியாகக் கசெற்றிலும் சிங்கள, தமிழ், அத்துடன் ஆங்கிலப் புதினத்தாள் ஒன்றிலும் வெளியிடுதல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பங்கிடுதலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு ஒன்று ஆதனமொன்றுக்கு உரித்துடையதாகவுள்ளவிடத்து, தேர்தல்கள் ஆணையாளர், ஓர் அறிவித்தல் மூலம், அத்தகைய ஆசனங்களை நிரப்புவதற்கென (இவ்வுறுப்புரையின்கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலில் அல்லது அத்தேர்தலில் அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நியமனப்பத்திரத்தில் அவர்களின் பெயர் உள்ளடக்கப்பட்ட ஆட்களாகவுள்ள) பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களை, அத்தகைய அறிவித்தலிலிருந்து ஒரு வாரத்தினுள் பெயர்குறித்து நியமிக்கும்படி அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேச்சைக்குழுவின் குழுத் தலைவரைத் தேவைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்துதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(4) தேர்தல்கள் ஆணையாளர், மேற்கூறப்பட்ட அறிவித்தலை வழங்குவதற்கு/முன்னதாக, 117ஆம் உறுப்புரையின்கீழ் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், இனரீதியான அல்லது வேறு வகையான ஏதேனும் சமூகத்தைச் சேர்ந்தவர்களுமான உறுப்பினர்களின் எண்ணிக்கை தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இயை/பாக வுள்ளதாவெனத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஆட்களைப் பெயர்குறித்து நியமிப்பதில், செயல்முறைக்குகந்தவரை, எல்லாச் சமூகத்தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தலானது, அதன் தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இயை/பாக வுள்ளதென்பதனை உறுதிப்படுத்துமாறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் 82ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அல்லது 117ஆம் உறுப்புரையின் (13)ஆம் பந்தியின் (அ)என்னும் உட்பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வறிதாகுமிடத்து, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு, இவ்வுறுப்புரையில் (3) ஆம், (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காகப் பொதுத் தேர்தலொன்றில் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை/யானது, உண்மையாக எண்ணப்பட்ட எண்ணிக்கையிலான வாக்குகள் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன்,/அது வறிதானவையென நிராகரிக்கப்பட்ட எவையேனும் வாக்குகளை உள்ளடக்குதலுமாகாது.

தகைமையீனத்துக்குட்பட்டிருக்கும்போது பாராளுமன்றத்தில் அல்லது

119. ஆளெவரும்–

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது பிராந்திய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவாறு தகைமையாற்

பிராந்திய சபையில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்கும் ஆனதண்டம்.

றவராகிவிட்டார் என்பதனை அல்லது தமது ஆசனம் வறிதாகிவிட்டது என்பதனை அறிந்தும் அல்லது அவ்வாறு அறிந்திருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தும், ஆனால் அத்தகைய தேர்தலின்போது அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமையைக் கொண்டிராமலே பாராளுமன்ற உறுப்பினராக அல்லது பிராந்திய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அமர்ந்தால் அல்லது வாக்களித்தால்; அல்லது

(ஆ) அவர், பாராளுமன்ற உறுப்பினராக அல்லது பிராந்திய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவாறு தகைமையற்றவராகிவிட்டார் என்பதனை அல்லது தமது ஆசனம் வறிதாகிவிட்டது என்பதனை அறிந்தும் அல்லது அவ்வாறு அறிந்திருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தும், பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அவர் வகித்த ஆசனம் வெற்றான பின்னர் அல்லது பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அமர்வதற்கோ, வாக்களிப்பதற்கோ அவர் தகைமையற்றவராகிவிட்டபின்னர் பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அமர்ந்தால் அல்லது வாக்களித்தால்,

அவர் அவ்வாறு அமர்ந்து வாக்களிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாத் தண்டம் செலுத்த ஆளாதல் வேண்டும்; இத்தொகையானது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்கின்மூலம் குடியரசுக்கு வரும்தியான கடனென்றாற்போன்று அறவிடப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்கள் தொடர்பிலான ஏற்பாடுகளைப் பாராளுமன்றம் செய்யலாம்.

120. (1) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்திக்கமைய பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம்:-

(அ) தேருநர்களைப் பதிவுசெய்தல்;

(ஆ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர் இடாப்பில் பதியப்படுவதற்காக ஆள் ஒருவர் அத் தேர்தல் மாவட்டத்தில் எந்தத் தேதியன்று வசித்திருக்கவேண்டுமோ அந்தத் தகைமைபெறு தேதியை விதித்துரைத்தல்;

(இ) தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படும் நோக்கங்களுக்காக எந்தத் தேதியன்று ஆள் ஒருவர் பதினெட்டு வயதினை அடைந்தவராக இருக்கவேண்டுமோ, அந்தத் தகைமைபெறும் தேதியை விதித்துரைத்தல்;

(ஈ) தேருநர் இடாப்புகளைத் தயாரித்தலும் திருத்தியமைத்தலும்;

(உ) பாராளுமன்ற உறுப்பினர்களின் மற்றும் பிராந்திய சபைகளின் உறுப்பினர்களின் தேர்தலுக்கான நடவடிக்கைமுறை;

(ஊ) அத்தகைய தேர்தல்கள் தொடர்பான தவறுகள் யாவை எனக் கூறுதலும், அவற்றுக்கான தண்டனையும்;

(எ) அத்தகைய தேர்தலை தவிர்ப்பதற்கான ஏதுக்களும், தேர்தலொன்று, வெற்றானதெனத் தீர்க்கப்படுமிடத்து, புதிய தேர்தல்களை நடாத்தும் முறையும்;

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் தமது பெயர்களைக் கொண்டுள்ள வேட்பாளர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டதன்மூலம் அல்லது வேறுவகையாகத் தீர்ந்து போகாதவிடத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கான மாதிரியும் முறையும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய சபையில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்கும் ஆனதண்டம்.

றவராகிவிட்டார் என்பதனை அல்லது தமது ஆசனம் வறிதாகிவிட்டது என்பதனை அறிந்தும் அல்லது அவ்வாறு அறிந்திருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தும், ஆனால் அத்தகைய தேர்தலின்போது அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமையைக் கொண்டிராமலே பாராளுமன்ற உறுப்பினராக அல்லது பிராந்திய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அமர்ந்தால் அல்லது வாக்களித்தால்; அல்லது

(ஆ) அவர், பாராளுமன்ற உறுப்பினராக அல்லது பிராந்திய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவாறு தகைமையற்றவராகிவிட்டார் என்பதனை அல்லது தமது ஆசனம் வறிதாகிவிட்டது என்பதனை அறிந்தும் அல்லது அவ்வாறு அறிந்திருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தும், பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அவர் வகித்த ஆசனம் வெற்றான பின்னர் அல்லது பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அமர்வதற்கோ, வாக்களிப்பதற்கோ அவர் தகைமையற்றவராகிவிட்டபின்னர் பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் அமர்ந்தால் அல்லது வாக்களித்தால்,

அவர் அவ்வாறு அமர்ந்து வாக்களிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாத் தண்டம் செலுத்த ஆளாதல் வேண்டும்; இத்தொகையானது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்கின்மூலம் குடியரசுக்கு வருமதியான கடனென்றாற்போன்று அறவிடப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்கள் தொடர்பிலான ஏற்பாடுகளைப் பாராளுமன்றம் செய்யலாம்.

120. (1) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்திக்கமைய பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம்:-

(அ) தேருநர்களைப் பதிவுசெய்தல்;

(ஆ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர் இடாப்பில் பதியப்படுவதற்காக ஆள் ஒருவர் அத் தேர்தல் மாவட்டத்தில் எந்தத் தேதியன்று வசித்திருக்கவேண்டுமோ அந்தத் தகைமைபெறு தேதியை விதித்துரைத்தல்;

(இ) தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படும் நோக்கங்களுக்காக எந்தத் தேதியன்று ஆள் ஒருவர் பதினெட்டு வயதினை அடைந்தவராக இருக்கவேண்டுமோ, அந்தத் தகைமைபெறும் தேதியை விதித்துரைத்தல்;

(ஈ) தேருநர் இடாப்புகளைத் தயாரித்தலும் திருத்தியமைத்தலும்;

(உ) பாராளுமன்ற உறுப்பினர்களின் மற்றும் பிராந்திய சபைகளின் உறுப்பினர்களின் தேர்தலுக்கான நடவடிக்கைமுறை;

(ஊ) அத்தகைய தேர்தல்கள் தொடர்பான தவறுகள் யாவை எனக் கூறுதலும், அவற்றுக்கான தண்டனையும்;

(எ) அத்தகைய தேர்தலை தவிர்ப்பதற்கான ஏதுக்களும், தேர்தலொன்று, வெற்றானதெனத் தீர்க்கப்படுமிடத்து, புதிய தேர்தல்களை நடாத்தும் முறையும்;

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் தமது பெயர்களைக் கொண்டுள்ள வேட்பாளர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டதன்மூலம் அல்லது வேறுவகையாகத் தீர்ந்து போகாதவிடத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கான மாதிரியும் முறையும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) ஆட்சேபிக்கப்பட்ட தேர்தல்களைத் தீர்மானிக்கும் முறையும் அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பிராந்திய சபைகளின்உறுப்பினர்களினதும் தேர்தலுக்கு அவசியமான அல்லது அதன் இடைநேர் விளைவான அத்தகைய வேறு கருமங்களும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சட்டம் எதுவும் 107ஆம், 108ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமையீனங்களைவிட மேலதிகமாக எத்தகைமையீனங்களையும் சேர்த்தல் ஆகாது.

(3) பாராளுமன்றம் அத்தகைய கருமங்களுக்காகச் சட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யும்வரை, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டமும், 1988ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டமும், ஏற்றமாற்றங்களுடன் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பிராந்திய சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பகிரங்க அலுவலர் அல்லது பகிரங்கக் கூட்டுத் தாபனமொன்றின் அலுவலர் தேர்தல் காலத்தின் போது பணி புரிதல் ஆகாது.

121. பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தொன்றின் அலுவலர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அல்லது பிராந்திய சபை உறுப்பினர்களுக்கான ஏதேனும் தேர்தலில் வேட்பாளர் ஒருவராகவிருப்பின், அவ்வலுவலர் எத்தேதியன்று வேட்பாளர் ஒருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டாரோ அத்தேதியிலிருந்து தேர்தல் முடியும்வரை லீவில் இருப்பதாகக் கருதப்படுதல்வேண்டும் என்பதுடன் அத்தகைய பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவர் அத்தகைய காலப்பகுதியின்போது தமது பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள், அல்லது பணிகள் எவற்றையும் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XIV

## அரசியலமைப்புப் பேரவை

அரசியலமைப்புப் பேரவை.

122. (1) பின்வருவோரைக் கொண்டிருக்கவேண்டிய அரசியலமைப்புப் பேரவையொன்றிருத்தல் வேண்டும் :—

(அ) சபாநாயகர் ;

(ஆ) முதலமைச்சர் ;

(இ) எதிர்க்கட்சித் தலைவர் ;

(ஈ) பிரதான அமைச்சர்கள் கட்ட[illegible]வையின் தவிசாளர் ;

(உ) செயல்முறைக்குகந்த வரை வெவ்வேறு இன, மற்றும் அக்கறைத் தொகுதிகளைப் பிரதிபலிக்கும் பாராளுமன்றத்தின் தெரிவுக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள்;

(ஊ) சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட, இந்த அரசியலமைப்பினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதான உயர் நீதிமன்றத்தின், ஓய்வுபெற்ற இரு நீதிபதிகள் ; இவர்கள் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குச் சேவையாற்றுதல் வேண்டும்.

(2) சபாநாயகரே அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடு செய்யப்பட்ட உறுப்பினரொருவர். தெரிவுக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் பதவியிலிருந்து அவர் முன்னரே விலகினாலொழிய அல்லது அத்தகைய குழுவினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதொழிந்தாலொழிய. ஆறாண்டுக் காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சில ஆணைக் குழுக்களினதும் பகிரங்கக் குழுக்களினதும் உறுப்பினர்களின் நியமனம், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீதாதல் வேண்டும்.

123அ(1) இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீதன்றி ஒருவரும், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் அத்துடன் பகிரங்கக் குழுக்களுள் எவற்றினதும் உறுப்பினரொருவராக, அல்லது பாராளுமன்றம் வேறு சட்டத்தின் மூலம் தீர்மானிக்கக் கூடியவரான அத்தகைய அல்லது பகிரங்கக் குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் பந்தி (1), இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் அல்லது அத்தகைய சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுவொன்றின் அல்லது பகிரங்கக் குழுவொன்றின் உறுப்பினரொருவராக செயலாற்றுவதற்கென மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆளொருவரின் நியமனத்திற்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் அல்லது அத்தகைய சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களின் அல்லது பகிரங்கக் குழுக்களின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கான ஆட்களை, அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்றபோதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல், அரசியலமைப்புப்பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதப்புரைகள் செயல்முறைக்குகந்தவரை வெவ்வேறு இன மற்றும் அக்கறைத் தொகுதிகளைப் பிரதிபலித்தலும் வேண்டும்.

அட்டவணை

(அ) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு.

(ஆ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான நிரந்தர ஆணைக்குழு,

(இ) அரச கரும மொழிகள் ஆணைக்குழு.

(ஈ) பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு.

(உ) தேர்தல்கள் ஆணைக்குழு.

(ஊ) நிதி ஆணைக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சில பதவிகளுக்கு நியமிக்கப்படுதல் அரசி-யலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தோடு செய்யப்படுதல் வேண்டும்.

124.(1) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தோடன்றி ஆளொருவர் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான பதவிகளெதற்கும் அல்லது பாராளுமன்றம் சட்டத்தால் தீர்மானிக்க கூடியவாறான அத்தகைய வேறு ஏதேனும் பதவிக்கு அல்லது வேறேதேனும் பகிரங்கக் குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் பந்தி (1) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் அல்லது அத்தகைய சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதவியில் செயலாற்றுவதற்கென மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆளொருவரின் நியமனத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் அல்லது அத்தகைய சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுள் எவற்றுக்கும் நியமிக்கப்படுவதற்கான ஆட்களின் பெயர்களை, அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற போதெல்லாம், அரசியலமைப்புப் பேரவைக்கு அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தல் சனாதிபதியின் அல்லது நியமனம் செய்யும் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

## அட்டவணை

(அ) சட்டத்துறைத் தலைமை அதிபதி,

(ஆ) தரைப்படை, கடற்படை, வான்படை, தேசிய பொலிசு சேவை என்பவற்றின் தளபதிகள்,

(இ) தே ர்தல்கள் ஆணையாளர்,

(ஈ) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்)

(உ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்புப் பேரவைச் செயலாளரும் பேரவையின் கூட்டங்களிலான நடவடிக்கை முறையும்.

125. (1) அரசியலமைப்புப் பேரவையினால் அப் பேரவைக்குச் செயலாளரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அரசியலமைப்புப் பேரவை மீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியாக அத்தகைய பேரவை கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள் அரசியலமைப்புப் பேரவைச் செயலாளரினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்புப் பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், அரசியலமைப்புப் பேரவையின் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராத போது, அத்தகைய கூட்டத்தில் முதலமைச்சர் தலைமைதாங்குதலும் வேண்டும். அரசியலமைப்புப் பேரவையின் ஏதேனுங் கூட்டத்திற்குத் தவிசாளர், முதலமைச்சர் ஆகிய இருவரும் வருகை தராதபோது, அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும்.

(4) அரசியலமைப்புப் பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஏழாதல் வேண்டும்.

(5) அரசியலமைப்புப் பேரவையானது, செய்வதற்கு அது வேண்டப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும் அல்லது அங்கீகாரத்தையும் ஏகமனதான முடிவின் மூலம் செய்வதற்கு முயலுதல் வேண்டும். ஏகமனதான முடிவு காணப்படாதவிடத்து பெரும்பான்மையோரின் முடிவே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(6) அரசியலமைப்புப் பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுக்காகவுள்ள ஏதேனும் பிரச்சினை மீது வாக்குகள் சமமாகவுள்ள பட்சத்தில், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக் கமைய, அரசியலமைப்புப் பேரவையானது, அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

அரசியலமைப்புப் பேரவையின் ஏனைய கடமைகளும் பணிகளும்.

126. இவ்வரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு கடமைகளையும் பணிகளையும் அரசியலமைப்புப் பேரவை புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் XV

## பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கல்

பிராந்திய சபைகளைத் தாபித்தல்.

127. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சனாதிபதி நியமிக்கும் அத்தகைய தேதியிலிருந்து பயனுறுவதாக முதலாம் அட்டவணையில் ஆ என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய சபையொன்று தாபிக்கப் படுதல் வேண்டும்.

(2) (அ) திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த தேருநர்கள் அத்தகைய மாவட்டங்களும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு நிருவாக மாவட்டங்களும் வடகிழக்குப் பிராந்தியம் எனக் குறிப்பிடப் படும் ஒரு பிராந்தியமாக அமைதல் வேண்டுமா அல்லவா என்னும் பிரச்சனை பற்றி தீர்மானிப்பதற்கென, சனாதிபதி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் திருகோணமலை, மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களில் மக்கள் தீர்ப்பெடுப்/பொன்று நடாத்தப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தி அதற்கான தேதியையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய மக்கள் தீர்ப்பெடுப்பின்போது, அப்பிரச்சனைக்கு –

(i) அளிக்கப்பட்ட செல்லுபடியான பெரும் பான்மை வாக்குகளின் மூலம் சாதகமாக பதிலிறுக்கப்படுமிடத்து கசெற்றில் வெளியிடப் படும் கட்டளை மூலம் சனாதிபதி நியமிக்கும் அத்தகைய தேதியிலிருந்து பயனுறுவதாக முதலாம் அட்டவணையில் பகுதி இ யில் குறித் துரைக்கப்பட்ட வடகிழக்குப் பிராந்தியத்துக்கு பிராந்திய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(ii) சாதகமாக பதிலிறுக்கப்படாதவிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கும் அத்தகைய தேதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து பயனுறுவதாக முதலாம் அட்டவணையில் பகுதி ஈ யில் குறித்துரைக்கப்பட்டவாறான வடக்குப் பிராந்தியத்துக்கும், கிழக்குப் பிராந்தியத்துக்கும் இரு தனிவேறான பிராந்திய சபைகள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின் உட்பந்தி (ஆ) (1) இன் நியதிகளின்படி வடகிழக்குப் பிராந்தியத்துக்கு பிராந்திய சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கும் அத்தகைய தேதியிலிருந்து இரண்டாம் அட்டவணையில் (இ) பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தென்கிழக்குப் பிராந்தியத்துக்குப் பிராந்திய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(4) (அ) இரண்டாம் பந்தியின் உட்பிரிவு (ஆ)(1) இன் நியதிகளின்படி வடகிழக்குப் பிராந்தியத்துக்கு பிராந்திய சபையொன்று தாபிக்கப்படவுள்ளவிடத்து, அம்பாறை வாக்கெடுப்புப் பிரிவைச் சேர்ந்த தேருநர்கள், அத்தகைய பிரிவு அம்பாறைப் பிராந்தியம் எனப் பெயர் குறிப்பிடப்படும் தனி வேறு பிராந்தியமாக அமைதல் வேண்டுமா அல்லவா என்னும் பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கென, சனாதிபதி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அம்பாறை வாக்கெடுப்புப் பிரிவுக்கு மக்கள்தீர்ப்பெடுப்பொன்று நடாத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தி அதற்கான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய மக்கள் தீர்ப்பெடுப்பின்போது அப்பிரச்சினைக்கு –

(1) அளிக்கப்பட்ட செல்லுபடியான பெரும்பான்மை வாக்குகளின் மூலம் சாதகமாக பதிலிறுக்கப்படுமிடத்து, அத்தகைய வாக்கெடுப்புப் பிரிவு முதலாம் அட்டவணை பகுதி உ வில் குறித்துரைக்கப்பட்டவாறான, அம்பாறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்தியமாக அமைதல் வேண்டும் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கும் அத்தகைய தேதியில் இருந்து அப்பிராந்தியத்துக்கு பிராந்தியசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(11) சாதகமாக பதிலிறுக்கப்படாதவிடத்து, அம்பாறை வாக்கெடுப்புப் பிரிவு முதலாம் அட்டவணையில் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்ட ஊவாப் பிராந்தியத்தின் பகுதியாக அமைதல் வேண்டும் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கும் அத்தகைய தேதியிலிருந்து அப் பிராந்தியத்துக்கு பிராந்திய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஆக்கப்படுகின்ற வரையில் அம்பாறை வாக்கெடுப்புப் பிரிவு மத்திய அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் தலைநகர ஆள்புலம் சம்பந்தமான அரசியலமைப்பின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) மத்திய அரசாங்கத்தின் சட்டவாக்க, நிறைவேற்றுத் தத்துவம், முதலாம் அட்டவணையின் பகுதி அ வில் குறித்துரைக்கப்பட்ட தலைநகர ஆள்புலம் தொடர்பில் இரண்டாம் அட்டவணையின் நிரல் 11 இல் தரப்பட்டுள்ள விடயங்களுக்கும் பணிகளுக்கும் விசாரித்தல் வேண்டும். இத்தலைநகர ஆள்புலம் இந்த உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட பிராந்தியசபை எந்தப் பிராந்தியத்திற்குக் தாபிக்கப்பட்டதோ அப்பிராந்தியத்தின் பகுதியாக அமைதலாகாது.

(6) இரண்டாம் உறுப்புரையினதும் இந்த உறுப்புரையினதும் நோக்கங்களுக்காக, இந்த உறுப்புரையிலும், முதலாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட நிருவாக மாவட்டங்கள் வாக்கெடுப்புப் பிரிவுகள், மாநகர சபைகள் ஆகியவற்றின் எல்லைகளும், பிரதேசங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப் பட்டு அரசியலமைப்புத் தொடங்கும்போது வலுவிலுள்ளவாக இருத்தல் வேண்டும்.

(7) (அ) இந்த உறுப்புரையில் ஏற்பாடு செய்யப் பட்டவாறான மக்கள் தீர்ப்பெடுப்பினை நடாத்துதல் XI ஆம் அத்தியாயத்தில் ஒவ்வாமை எதுவும் இருப்பினுங் கூட செல்லுபடியானதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றமானது அத்தகைய மக்கள் தீர்ப்பெடுப்புக்கு சம்பந்தமான எல்லா விடயங்களுக்கும் சட்டம் மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்கின்ற வரையில் 1981ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையன வாதல் வேண்டும்.

உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.

128. நூற்று இருபத்தேழாம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப் படும் பிராந்திய சபை ஒவ்வொன்றும், அத்தகைய சபையின் உறுப்பினர்கள் பிராந்திய சபைத் தேர்தல்கள் தொடர்பிலான சட்டத்துக்கிணங்கத் தெரிவு செய்யப்பட்டதன்மேல், அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்.

ஆளுநர்.

129. (1) நூற்று இருபத்தேழாம் உறுப்புரைக்கு இணங்க எப்பிராந்தியத்துக்குப் பிராந்திய சபை ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதோ, அப்பிராந்தியம் ஒவ்வொன்றுக்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

(2) ஆளுநர், பிராந்தியத்தின் முதலமைச்சரின் ஆலோசனையின் மேல் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆளுநர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடித மூலம் ஆளுநர் பதவியிலிருந்து விலகலாம்.

(4) (அ) பிராந்திய சபையொன்று, இப்பந்தியின்

(ஆ) உப்பந்திக்கு அமைய, ஆளுநர்—

(i) அரசியலமைப்பின் ஏற்பாடுகளை வேண்டுமென்று மீறியுள்ளார்;

(ii) ஆளுநர் பதவியின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதை உள்ளடக்குகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்நடத்தைக்கு அல்லது ஊழலுக்குக் குற்றவாளியாக இருக்கின்றார்; அல்லது

(iii) இலஞ்சத்துக்கு அல்லது நல்லொழுக்கப் பிறழ்வை உள்ளடக்குகின்ற தவறொன்றுக்கு குற்றவாளியாக இருக்கின்றார்,

என்ற ஏதுவின் மீது, அத்தகைய குறிப்புரையைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானமொன்று, சபையின் முழு உறுப்பினர்களின் (சமுகமாக இல்லாதவர்கள் உட்பட) பூரணப் பெரும்பான்மை வாக்குகளால் அதற்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்டால் ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான ஆலோசனைபற்றிய குறிப்புரையொன்றைச் சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கலாம்.

(4) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதுக்களின் மீது ஆளுநரைப் பதவி நீக்கம் செய்வதற்கு ஆலோசனை வழங்குகின்றதான சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும் குறிப்புரையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் ஒன்று, அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் முழு அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களால் ஒப்பமிடப்பட்டிருந்தாலொழிய, பிராந்திய சபையில் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்படுதலோ அல்லது சபையில் கலந்துரையாடப்படுதலோ ஆகாது.

(5) ஆளுநர் பதவியின் கடமைகளைப் புரிவதிலிருந்து சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக ஆளுநருக்கு இயலாமல் இருக்கும்போது அல்லது அவர் இலங்கையில் இல்லாதிருக்கும் போது, அப்பிராந்தியத்தின் மேல் நீதிமன்றத்தின் பிரதான நீதிபதி ஆளுநர் பதவியில் பதில் கடமையாற்றுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளுநர் பதவியில் அமர்கின்ற தேதியில் இருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்றுக்கு ஆளுநர் பதவி வகித்தல் வேண்டும்.

(7) ஆளுநராக நியமிக்கப்படும் ஆள் ஒவ்வொருவரும், சனாதிபதியின் முன் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள உறுப்புரையைச் செய்து கீழொப்பமிட்டதன் மேல் அல்லது சத்தியத்தைச் செய்து கீழொப்பமிட்டதன் மேல் பதவியில் அமர்தல் வேண்டும்.

(8) பதவியில் அமர்ந்ததன்மேல், ஆளுநர் ஒருவர் அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் அத்துடன் ஆளுநர் பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது பிராந்திய சபை உறுப்பினரொருவராக இருந்தால் அவர் பாராளுமன்றத்தில் அல்லது பிராந்திய சபையில் தனது ஆசனத்தை வறிதாக்குதல் வேண்டுமென்பதுடன் இலாபம் தரும். வேறு ஏதேனும் பதவியையோ அல்லது இடத்தையோ வகித்தலும் ஆகாது.

(9) (அ) ஆளுநர் பிராந்திய சபையொன்றின் ஏதேனும் கூட்டத் தொடரின் முதலாவது அமர்வுக்கு, பொருத்தமானதென ஆளுநர் எண்ணுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூட்டத்தைக் கூட்டுமாறு காலத்துக்குக் காலம் அழைக்கலாம். ஒரு கூட்டத் தொடரின் கடைசி அமர்வுக்கும் அடுத்த கூட்டத்தின் முதலாவது அமர்வுக்கு நியமிக்கப்பட்ட தேதிக்குமிடையில் இரண்டு மாதங்கள் குறுக்கிடுதலாகாது.

(ஆ) ஆளுநர், பிராந்திய சபையை காலத்துக்குக் காலம் ஒத்திப் போடலாம்.

(இ) ஆளுநர் பிராந்திய சபையைக் கலைக்கலாம்.

(ஈ) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளுநர், பிராந்திய சபையின் பெரும்பான்

-மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு அமைச்சர்கள் சபைக்கு இருக்கும் வரை பிரதான அமைச்சரின் ஆலோசனைக்கு இணங்க இப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் கீழான தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(10)(அ) பிராந்தியமொன்றின் ஆளுநர், எவ்விடயமொன்று தொடர்பில் நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு பிராந்திய சபைக்குத் தத்துவம் இருக்கின்றதோ அவ்விடயத்தின்மீது அப்பிராந்தியத்தின் பிராந்திய சபையினாலாக்கப்பட்ட நியதிச்சட்டமொன்றுக்கு எதிராக அல்லது பாராளுமன்றத்தினாலாக்கப்பட்ட சட்டமொன்றுக்கெதிராகப் புரியப்பட்ட தவறொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான அல்லது அத்தகைய எவரேனும் ஆளின்மீது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைக்கு இடை ஓய்வொன்று அல்லது தணிப்பொன்று வழங்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆளுநர், பிராந்திய சபையின் சபாநாயகர், பிராந்திய மேல் நீதிமன்றத்தின் பிரதான நீதிபதி அல்லது அத்தகைய பிரதான நீதிபதியினால் நியமிக்கப்பட்ட பிராந்திய மேல் நீதிமன்றத்தின் வேறு எவரேனும் நீதிபதி மற்றும் பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றுடனான ஆலோசனையின் பேரில் இப்பந்தியின் கீழான தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(இ) ஆளுநர் அதே ஆள் தொடர்பிலும் அதே தவறு தொடர்பிலும் 59ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினால் தத்துவம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, இப்பந்தியின் கீழான தத்துவத்தினைப் பிரயோகித்தலாகாது.

(11) ஆளுநர் பிராந்திய சபையில் உரை நிகழ்த்தலாம் அத்துடன் அந் நோக்கத்துக்காக உறுப்பினர்களின் வருகையைத் தேவைப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12) பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் அல்லது தீர்மானத்தின் மூலம் ஆளுநர் பதவிவகிக்கின்றவர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான சம்பளத்துக்கும் படிகளுக்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பிராந்தியத்தின் நிறைவேற்று அதிகாரங்கள்

130. (1) பிராந்தியத்தின் நிறைவேற்று அதிகாரமானது, எவ்விடயங்கள் தொடர்பில் நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு பிராந்திய சபையொன்றுக்குத் தத்துவம் இருக்கின்றதோ அவ்விடயங்கள் தொடர்பினதாக இருத்தல் வேண்டும், அத்துடன் அது பிரதான அமைச்சரினதும் அமைச்சர்கள்சபையினதும் ஆலோசனையின் பேரில் செயலாற்றுகின்ற ஆளுநருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அது அமைச்சர்களூடாகவும் அந்த அந்த நிறைவேற்றுக் குழுக்களூடாகவும் நேரடியாகவோ அல்லது கீழ்நிலையலுவலர்களூடாகவோ இவ்வத்தியாயத்துக்கு இணங்கக் குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) பிராந்தியமொன்றின் நிறைவேற்று அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுகையில் செய்யப்படும் எல்லா ஒப்பந்தங்களும், பிராந்தியத்தின் ஆளுநரின் பெயரில் வெளிப்படையாகச் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வதிகாரத்தைப் பிரயோகிக்கையில் அத்தகைய எல்லா ஒப்பந்தங்களும், அத்தகைய ஆட்களினால் ஆளுநர் சார்பில் ஆளுநர் பணிக்கக் கூடியவாறான அல்லது அதிகாரமளிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளுநர், இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக செய்யப்படும் ஏதேனும் ஒப்பந்தம் அல்லது காப்புறுதி தொடர்பில் தனிப்பட்ட முறையில் பொறுப்பாதலோ அல்லது ஆளுநரின் சார்பில் அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை அல்லது காப்புறுதியைச் செய்கின்ற ஆளெவரும் அது தொடர்பில் தனிப்பட்ட முறையில் பொறுப்பாதலோ ஆகாது.

பிராந்திய நிரலில் விடரம் கூறப்பட்டுள்ள விடயங்கள் மீதான எழுத்திலான சட்டம் மீதான பொருள் கோடல்.

131. (1) (இதனகத்துப்பின்னர் "பிராந்திய நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரண்டாம் அட்டவணையின் 11 ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தின் மீது, அரசியலமைப்பு ஆரம்பிக்கு முன்னர் ஆக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம், விடயத்துக்கேற்றவாறு, அமைச்சர் அவையின் அமைச்சர் ஒருவருக்கு, அல்லது தேசிய பகிரங்க அலுவலர் ஒருவருக்கு கட்டளை, பிரகடனம், அறிவிப்பு, ஒழுங்குவிதி அல்லது விதி எதனையும் ஆக்குவதற்கான தத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட, அதிகாரம் அல்லது பணி எதுவும் சுமத்தப் பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது-

(அ) அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது, அத்தகைய எவரேனும் அமைச்சரின் மீது சுமத்தப்பட்டால் அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டால், பிராந்தியமொன்று தொடர்பில் அத்தகைய எவரேனும் அமைச்சரினாலும் அத்துடன் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, விடயம் அப்பிராந்தியத்தின் அமைச்சரவையின் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரினாலும் பிரயோகிக்கப்படலாம், அதற்கிணங்க அத்தகைய ஒவ்வொரு எழுத்திலான சட்டத்திலும் அமைச்சரவையின் அமைச்சர் ஒருவருக்கான குறிப்பீடுகள், அத்தகைய பிராந்தியத்தின் அமைச்சர்கள் சபையின் எந்த அமைச்சருக்கு பணியானது குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருக்கான குறிப்பீடுகளை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன்

(ஆ) அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது தேசிய பகிரங்க அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்பட்டால் அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டால் அவரினாலும் அத்துடன் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய அத்தகைய தேசிய பகிரங்க அலுவலரினால் வகிக்கப்படும் பதவிக்கு நேரொத்த பதவியொன்றை வகிக்கின்ற பிராந்திய பகிரங்க சேவையின் அலுவலரினாலும் பிரயோகிக்கப் படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்; அதற்கிணங்க அத்தகைய எழுத்திலான ஒவ்வொரு சட்டத்திலும் தேசிய பகிரங்க அலுவலர் ஒருவருக்கான குறிப்பீடுகள், அத்தகைய தேசிய பகிரங்க அலுவலரினால் வகிக்கப்படும் பதவிக்கு நேரொத்த பதவியொன்றை வகிக்கின்ற பிராந்திய பகிரங்க சேவையின் அலுவலருக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள அத்தகைய எழுத்திலான ஏதேனும் சட்டம்-

(1) அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, பிரகடனம், அறிவிப்பு, ஒழுங்கு விதி அல்லது விதி பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படுவதற்கு; அல்லது

(11) அத்தகைய ஏதேனும் கட்டளை, பிரகடனம், அறிவிப்பு, ஒழுங்குவிதி அல்லது விதி பாராளுமன்றத் தினால் நீக்கப்படுவதற்கு அல்லது அங்கீகரிக்கப் மறுப்பதற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு செய்கின்ற விடத்து, அத்தகைய ஏற்பாடு, அதிலுள்ள பாராளுமன்றத்துக்கான குறிப்பீடுகள், அப் பிராந்தியத்துக்கெனத் தாபிக்கப்பட்ட பிராந்திய சபைக்கான குறிப்பீடு ஒன்றாகப்பயனுறுதல் வேண்டும்:

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்டனவும் அரசியலமைப்பு ஆரம்பிக்கையில் வலுவில் இருந்தனவுமான நேரொத்த மாகாண சபைகளின் நியதிச் சட்டங்களுக்கு, ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையன வாதல் வேண்டும்.

பிராந்தியசபை ஒன்றின் உறுப்பாண்மை.

132. பிராந்திய சபையொன்று சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களில் ஒரு அரை வாசிப் பேர்கள் ஆள்புல அடிப்படையிலும் மற்றை அரைவாசிப்பேர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

பதவிக்காலம்.

133. பிராந்திய சபையொன்று முன்னரே கலைக்கப்பட்டாலொழிய அதன் முதல் கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்றுக்கு தொடர்ந்திருத்தல் வேண்டும்; அத்துடன் சொல்லப்பட்ட ஐந்தாண்டு காலப்பகுதி காலாவதியாதல் சபை கலைக்கப்பட்டதாதல் வேண்டும்.

அமைச்சர்களின் சபை.

134. (1) ஆளுநரின் பணிகளை நிறைவேற்றுகையில் பிராந்தியத்தின் ஆளுநருக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் முதலாம் அட்டவணையின் 111 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஒவ்வொரு பிராந்தியம் தொடர்பிலும் சபையின் தலைவராக பிரதான அமைச்சரைக் கொண்ட அமைச்சர்கள் சபையொன்றும் இருத்தல் வேண்டும், அத்துடன் ஆளுநர், அத்தகைய பணிகளை நிறைவேற்றுகையில், ஆளுநரின் தற்றுணிபின் பேரில் அத்தகைய பணிகளை அல்லது அவற்றில் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்பினால் அல்லது அதன் கீழ் ஆளுநர் தேவைப்படுத்தப்பட்டுள்ள அளவுதவிர அப்பணிகளை நிறைவேற்றுகையில் அத்தகைய ஆலோசனைகளுக்கு இணங்க செயற்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) (அ) ஆளுநர், அத்துடன் அரசியலமைப்பு ஆரம்பித்த பின்னர் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிராந்திய சபையின் விடயத்தில், சனாதிபதி, இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்திக்கமைய, அச்சபையின் உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவை மிகவெகுவாகப் பெறக்கூடியவரும் அப்பிராந்தியத்துக்கென தாபிக்கப்பட்ட பிராந்திய சபையின் உறுப்பினருமான ஒருவரை பிரதான அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(ஆ) பிராந்திய சபையொன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஓர் அரசியல் கட்சியின் அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கின்றவிடத்து, விடயத்துக்கேற்றவாறு ஆளுநர் அல்லது சனாதிபதி, சபையில் உள்ள அக்கட்சியின் அல்லது குழுவின் தலைவரை பிரதான அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(3) பிராந்திய சபையொன்றின் உறுப்பினர்களின் தேர்தல் ஒன்று முடிவுற்ற பின்னர், தேர்தல்கள் ஆணையாளர், தேர்தலில் போட்டியிட்டனவும் அமைச்சர்கள் சபையில் பங்குபற்றுவதற்குத் தாம் விரும்புவதாகவும் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளனவுமான ஏற்றங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றிலிருந்து விகிதாசார அடிப்படையில் நடாத்தப்பட்ட தேர்தலில் அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவுக்கும் கிடைத்த வலிதுடைய வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரம் அத்தகைய தேர்தலில் அத்தகைய எல்லாக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் கிடைத்த வலிதுடைய வாக்குகளின் மொத்த எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையை உடனடியாகப் பகிர்ந்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய பங்கீட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களுக்காக (4), (5) அத்துடன் (6) ஆம் பந்திகளிலும் 116 ஆம் உறுப்புரையிலும் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) (அ) தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய பகிட்டை செய்த பின்னர் இயைபான கட்சியின் செயலாளருக்கும், அல்லது குழுக்களின் தலைவர்களுக்கும், அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்குப் பங்கிடப்பட்டுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கைபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும், அத்துடன் விடயத்துக் கேற்றவாறு செயலாளர் அல்லது தலைவர் அத்தகைய தகவலைப் பெற்ற 48 மணித்தியா லங்களுக்குள் அமைச்சர்களாக நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயரை அல்லது பெயர்களைத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) தேர்தல்கள் ஆணையாளர் அத்தகைய பெயர்கள்பற்றி ஆளுநருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

கா
(இ) அமைச்சரொருவர் பதவிவகிக்/ தொழிகின்றதன் விளைவாக எழுகின்ற வெற்றிடம் எதுவும், இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

(5) எந்தவொரு அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு இவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியின் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் அமைச்சரொருவராக மேலே கூறப்பட்டுள்ள வாறு உறுப்பினரொருவரை நியமிப்பதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது அத்தகைய கட்சி அல்லது குழு எவ்வமைச்சர்கள் சபையில் உள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு உரித்துடையதா யிருக்கின்றதோ அவ் வெற்றிடத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட் காலப்பகுதி யொன்றுக்குள் நிரப்பாவிட்டால், அமைச்சர்கள் சபையில் பங்குபற்றுவதற்கு அத்தகைய கட்சி அல்லது சுயேச்சைக் குழு பங்குபற்ற விரும்பவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் ஆணையாளர் அமைச்சர்களின் எண்ணிக்கையை மீள் பங்கீடு செய்தல் வேண்டும் என்பதுடன் இவ்வுறுப்புரையின் (3) அத்துடன் (4) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(6) (அ) பிரதான அமைச்சர், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுடனான ஆலோசனையுடன் அத்தகைய உறுப்பினர்களுக்கான விடயங்களையும், பணிகளையும் குறித் தொதுக்குதல் வேண்டும். அதன் மேல் இவர்கள் ஆளுநரினால் அமைச்சர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளுநரினால் நியமிக்கப்படும் அமைச்சர்கள் பிரதான அமைச்சரோடு சேர்ந்து அமைச்சர்கள் சபையை அமைத்தல் வேண்டும். இவர்கள் பிராந்திய சபைக்கு பொறுப்பானவர்களாகவும் விடை பகர வேண்டியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(7) பிரதான அமைச்சர் பதவிக்கு அல்லது அமைச்சர்கள் சபையின் உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், அத்தகைய ஆள் மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள உறுதியுரையைச் செய்து கைழொப்பம் இடும்வரை அல்லது சத்தியத்தைச் செய்து கைழொப்பமிடும்வரை பிரதான அமைச்சரின் அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சரின் பதவிக்கான கடமைகளைப் புரியத் தொடங்குதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) (அ) பிரதான அமைச்சர் இறந்ததன்மேல் அல்லது பதவியிலிருந்து விலகியதன் மேல் அல்லது பிரதான அமைச்சர் பதவியிலிருந்து விலகி விட்டாரெனக் கருதப்படுகின்றவிடத்து, அமைச்சர்கள் சபை கலைக்கப்பட்டதாதல் வேண்டும்; அத்துடன் ஆளுநர், இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்திக்கு அமைய, இந்த உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க பிரதான அமைச்சர் ஒருவரையும் அமைச்சர்கள் சபை ஒன்றையும் நியமித்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுறுப்புரையின் (3)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, நியமனமொன்றைச் செய்வதற்கு இயலாதிருக்கின்றவிடத்து சபையை ஆளுநர் கலைத்தல் வேண்டும்.

(இ) பிராந்திய சபையானது பிராந்திய நிர்வாகத்தின் கொள்கை பற்றிய கூற்றை அல்லது வரைவு ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தை நிராகரித்தால் அல்லது பிராந்திய நிர்வாகத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்றினால், பிரதான அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுக் குழுக்கள்.

135. (1) ஒவ்வொரு அமைச்சுக்கும் நிறைவேற்றுக் குழுவொன்று இருத்தல் வேண்டும். அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் அதற்கு தலைமைவகிப்பவராக இருத்தல் வேண்டும்.

(2) நிறைவேற்றுக் குழுவானது அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்ட விடயங்களதும் பணிகளதும் நிருவாகத்துக்கு பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும். அமைச்சர் நிறைவேற்றுக் குழுவின் பெயரில் அத்தகைய விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் தத்துவத்தைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) நிறைவேற்றுக் குழு அமைச்சருக்கூடாக அமைச்சர்கள் சபைக்கான கொள்கை தொடர்பான முன்மொழிவுகளைச் செய்யலாம். அத்துடன் அமைச்சர்கள் சபை அத்தகைய முன்மொழிவுகளைக் கருத்திற்கெடுத்தல் வேண்டும்.

(4) (அ) பிராந்திய சபை ஒவ்வொன்றும் சபாநாயகர் ஒருவரைத் தெரிந்தெடுத்ததன் பின்னரும் வேறேதேனும் அலுவலைக் கையாள்வதற்குத் தொடங்க முன்னரும் இயலக்கூடியளவு விரைவாக மேற்சொல்லப்பட்ட குழுக்களைத் தெரிந்தெடுக்க முற்படுதல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு குழுவும் இயலக்கூடியளவு கிட்டத்தட்ட சம எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சபாநாயகர் தவிர்ந்த சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்தகைய குழு ஒன்றிற்கு தெரிவு செய்யப்படுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) சபையின் எவரேனும் உறுப்பினர் ஒன்றிற்கு மேற்பட்ட குழுவுக்குத் தெரிவு செய்யப்படுதல் ஆகாது.

(ஈ) சபாநாயகர் பதவியிலுள்ள ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு குழுவொன்றின் உறுப்பினர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டவிடத்து, அவ்வுறுப்பினர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதன் மேல், அத்தகைய குழுவின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(5) இந்த உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பொதுத் தேர்தல் ஒன்றைத் தொடர்ந்து அதன் முதலாவது கூட்டத்தின் பின்னர் நிறைவேற்றுக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறையும் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரை நிறைவேற்றுக் குழுவிற்கு நறித்தொதுக்குதற்கான நடைமுறையும் ஒரு குழுவிலிருந்து வேறொரு குழுவுக்கு உறுப்பினர்களை இடமாற்றுவதற்கான நடைமுறையும் சபையின் நிலையியல் கட்டளையினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய நிலையியற்கட்டளைகள் இல்லாத விடத்து, நடைமுறையானது சபாநாயகரால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(6) அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவர் அமைச்சரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற முடியாத போதிலெல்லாம், அத்தகைய அமைச்சர் உறுப்பினராக இருக்கின்ற விடயத்திற்கேற்றற்போல அங்கீகாரமளிக்கப்பட்ட அரசியற் கட்சிச்செயலாளருடன் அல்லது சுயேட்சைக் குழுத் தலைவருடன் கலந்தாலோசித்த பின்னர் முன்வைக்கப்படும் பிரதான அமைச்சரின் ஆலோசனையின் மீது செயலாற்றுகின்ற ஆளுநர் சொல்லப்பட்ட அமைச்சரின் இடத்தில் செயலாற்றுவெனர் நிறைவேற்றுக் குழுவுக்கு சொல்லப்பட்ட அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிசாளராக இருந்தாரோ அந்த நிறைவேற்றுக் குழுவின் எவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

பிராந்திய சட்டத்துறை தலைமையதிபதி.

136. (1) ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஆளுநர் உயர் தொழில் முதன்மை எய்தியுள்ளவரும் நடத்தையில் உயர் தராதரத்தினைப் பேணியுள்ளவரும் உயர் தொழில் சார் நலன் கொண்டவருமான, பிராந்தியத்திலுள்ள சட்டத்தரணி ஒருவரை பிராந்திய சட்டத்துறை தலைமையதிபதியாக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

(2) ஆளுநருக்கும், பிரதான அமைச்சருக்கும், அமைச்சர்கள் சபைக்கும் ஆளுநரால் பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் காலத்திற்குக்காலம் ஆற்றுப்படுத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய சட்டவிடயங்கள் மீது ஆலோசனை அளித்தலும் அவை தொடர்பாக அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் இவ்வத்தியாயத்தினால் அல்லது வேறுசட்டத்தினால் அல்லது இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது வேறு சட்டத்தின் கீழ் பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அளிக்கப்படும் பணிகளை புரிவதும் பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(3) பிராந்திய சட்டத்துறைத்தலைமையதிபதி ஆளுநர் விரும்பும் காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் ஆளுநர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தைப் பெறுதலும் வேண்டும்.

சட்டவாக்கத்தத்துவமும் கையளிப்பும் நடைமுறையும்.

137. (1) இந்த உறுப்புரையின் (2) ஆம் பந்திக்கு அமைவாக, பிராந்தியம் ஒன்றின் பிராந்திய சபை பிராந்திய நிரலில் குறிப்பிடப்பட்ட இரண்டாம் அட்டவணையில் நிரல் 11 இல் வரிசைப்படுத்திக் கூறப்பட்டுள்ள கருமங்களுள் எது தொடர்பாகவும் அத்தகைய பிராந்தியத்துக்கென அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கென நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு புறநீங்கலான தத்துவம் கொண்டதாகவிருக்கும்.

(2) பிராந்திய சபை ஒன்றின் நியதிச்சட்டம் ஒன்று அரசியலமைப்புடன் அத்துடன் வேறேதேனும் நியதிச்சட்டத்துடன் முரணானதாக அல்லது ஒத்திசைவற்றதாக இருத்தல் ஆகாது; அது அரசியலமைப்புடன் முரணானதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஒத்திசைவற்றதாக இருக்கும்வரை, அத்தகைய முரணின் அல்லது ஒத்திசையின்மையின் அளவுக்கு செல்லுபடியற்றதாகவிருத்தல் வேண்டும்.

(3) (அ) பிராந்திய சபை ஒன்று அதன் சட்டவாக்கற் தத்துவத்தைக் கைவிடுதலோ அல்லது எம்முறையிலேனும் பராதீனப்படுத்து -தலோ ஆகாது.

(ஆ) உறுப்புரை 92 என்பதன் (2),(3) அத்துடன் (4) ஆகிய பந்திகளின் ஏற்பாடு கள், ஏற்ற மாற்றங்களுடன், பிராந்திய சபைகளினால் சட்டமாக்கற் தத்துவம் பிரயோகிக்கப்படுவது தொடர்பில் ஏற்புடைய -வையாதல் வேண்டும்.

(4) பிராந்திய சபை ஒன்றின் அமர்வுகளும் பிராந்திய சபை ஒன்றினால் அலுவலைக் கொண்டு நடாத்துவதற் கான நடைமுறையும் அத்தகைய சபையினால் ஆக்கப்படும் நிலை யியற் கட்டளை மூலம் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

வரைவு நியதிச் சட்டங்கள் தொடர்பில் பிராந்திய சட்டத் துறை தலைமையதி -பதிக்குள்ள கடமைகள்.

138. (1) பிராந்திய சபையால் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்படவுள்ள ஒவ்வொரு வரைவு நியதிச்சட்டமும் அரசியலமைப்புடன் முரண்படுகிறதா அல்லது ஒத்திசைவற்றதாக இருக்கிறதா என பரிசீலிப்பது பிராந்திய சட்டத்துறைத் தலைமை யதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்துடன் பிராந்திய சட்டத் துறைத் தலைமையதிபதி அல்லது இந்த உறுப்புரையின் கீழ் கடமை -களைப் புரிவதில் பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உதவியளிக்கின்ற எவரேனும் அலுவலர் அத்தகைய கடமைகளைப் புரிவதற்கு அவசியமான எல்லா வசதிகளும் அளிக்கப்படல் வேண்டும்.

(2) பிராந்திய சட்டத்துறை தலைமையதிபதி வரைவு நியதிச் சட்டம் ஒன்று அரசியலமைப்பை மீறுவதாக அல்லது அதற்கு ஒத்திசைவற்றதாக இருக்கின்றதென அபிப்பி -ராயப்பட்டால், பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, அந்த அபிப்பிராயத்தை அருநருக்கும் பிரதான அமைச்சருக்கும் அமைச்சர்கள் சபைக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

(3) பிராந்திய சபையில் வரைவு நியதிச் சட்டம் ஒன்றுக்கு திருத்தம் ஒன்று உத்தேசிக்கப்படுகின்றவிடத்து, பிராந்திய சட்டத்துறை தலைமையதிபதி, பிராந்திய சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக அதன் முன்வைக்கப்படுவதற்கு வரைவு நியதிச்சட்டம் தயாராக இருக்கும் கட்டத்தில், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் மீதான அபிப்பிராயத்தை சபாநாயகருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

(4) வரைவு நியதிச் சட்டம் ஒன்று அரசியலமைப்பை மீறுகிறது அல்லது அதனுடன் ஒத்திசைவற்றதாக இருக்கிறது என்ற பிராந்திய சட்டத்துறைத்தலைமையதிபதியின் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாது நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய நியதிச் சட்டத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் அரசியலமைப்புடன் ஒத்திருக்கும் தன்மையைத் தீர்மானிப்பதற்காக உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை வேண்டி நிற்பது பிராந்தியசட்டத்துறைத் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

மாகாண சபைகளின் சட்டங்களுடனும் நியதிச் சட்டங்களுடனும் இசைவற்றதாக இருக்கும் நியதிச் சட்டங்கள்:

139. (1) பிராந்திய சபை ஒன்று அப்பிராந்தியம் ஒன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட தேதியன்று அப் பிராந்தியத்தில் வலுவிலுள்ள பிராந்திய நிரலிலுள்ள ஏதேனும் விடயம் தொடர்பான சட்டம் ஒன்று இருக்கின்ற விடத்து, அதே விடயத்தின் மீது அப்பிராந்தியத்திற்கெனத் தாபிக்கப்பட்ட பிராந்திய சபை பின்னர் நியதிச்சட்டம் ஒன்றை ஆக்கி அதன் விதிவும் பெயரில் அச்சட்டத்துடன் ஒத்திசைவற்றதாக இருக்கின்றதென விபரிக்கப்பட்டவிடத்து, அப்போது, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் சபாநாயகரால் அப்பிராந்திய சபை நியதிச்சட்டம் சான்றுரைக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய இசைவின்மையின் அளவுக்கு இடைநிறுத்தப்பட்டதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் வேண்டும் என்பதுடன் அப்பிராந்தியத்திற்குள்ளாக செயற்பாடற்றதாகவும் இருக்கும்.

(2) ஏதேனும் பிராந்தியத்திற்கென பிராந்திய சபை ஒன்று தாபிக்கப்பட்ட தேதியன்று அப்பிராந்தியத்தினுடைய ஏதேனும் இடப்பரப்பில் 1978ஆம் அரசியலமைப்பின் மூலம் தயாரிக்கப்பட்ட மாகாணசபை நியதிச்சட்டம் ஒன்று வலுவுடையதாகவிருக்கின்றவிடத்து,அத்தகைய நியதிச்சட்டமானது அப்பிராந்திய சபை வேறு வகையாக ஏற்பாடு செய்தாலொழிய, அது எந்த இடப்பரப்பிற்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த இடப்பரப்பு தொடர்பில் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

வரைவு நியதிச்சட்டம் ஒன்று எப்போது சட்டமாகலாம் என்பது.

140. (1) பிராந்திய சபை ஒன்றினால் நிறைவேற்றப்படும் வரைவு நியதிச்சட்டமும் அச்சபையின் சபாநாயகரின் சான்றுரை அதன் மீது புறக் குறிப்பிடப்பட்டதன் மீது வலுவுக்கு வருதல் வேண்டும்.

(2) சபாநாயகர் பிராந்திய சபையினால் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொருவரைவு நியதிச்சட்டத்தின் மீதும் பின்வரும் படிவத்திலான சான்றுரையொன்றைப் புறக்குறிப்பிடுதல் வேண்டும்:-

"இந்த வரைவு நியதிச்சட்டம் (வரைவு நியதிச்சட்டத்தின் சுருக்கப் பெயரைக் கூறுக) பிராந்திய சபையினால் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது"

பிரதான அமைச்சர்கள் கட்டவை.

141. (1) (அ) எல்லாப்பிராந்தியங்களின் பிரதான அமைச்சர்களையும் கொண்டிருக்க வேண்டிய பிரதான அமைச்சர்கள் கட்டவை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் பிராந்தியத்தில் பிரதான அமைச்சர் எவரும் பதவியில் இல்லாத விடத்து, அப்பிராந்தியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநர் அல்லது ஆளுநரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் கூட்டவையில் அத்தகைய பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவம் செய்யலாம்.

(2) (அ) பிரதான அமைச்சர் கூட்டவையின் தவிசாளர் பிரதான அமைச்சர்களால் சுற்றுமுறைப்படி தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும் ஒவ்வொரு பிரதான அமைச்சரும் மூன்று மாதங்கள் வரையான ஒரு காலப்பகுதிக்கு தவிசாளராகப் பதவி வகித்தல் வேண்டும்.

(ஆ) பிரதான அமைச்சர்கள் கூட்டவையின் தவிசாளர் அரசியலமைப்
புப்
/பேரவையில் கூட்டவையை பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்.

(3) கூட்டவையானது பின்வருவனவற்றிக்குக் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்பின் தாற்பரியத்திற்கும் உளக்கருத்துக்கும் இணங்க
ஞும் பிராந்திய நிருவாகங்களும்
பிராந்திய சபைக/ தொடர்பாக இந்த அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் பூரணமாக இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்
நான
கூடியவா/ அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் வழிவகைகளையும் எடுத்தல்

(ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களுக்கு இடையேயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

ஒரு பிராந்திய ~~[illegible]~~ மத்திய அரசாங்கத்திற்கும் இடையேயும் எழக்கூடிய ஏதேனும் பிணக்கை விசாரித்த மத்தியஸ்தம் மூலம் இல்லது இணக்கம் மூலம் தீர்த்து வைத்தல்.

(2) எல்லாப் பிராந்தியங்களும் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பிராந்தியங்கள் பொது அக்கறை கொண்டுள்ள விடயங்கள் பற்றி விசாரித்தும் கலந்துரையாடியும் அத்தகைய விடயம் தொடர்பாக கொள்கைரீதியாகச் செயற்பட்டு நீதியாகச் சிறந்த ஒருங்கிணைப்புக்களை விதப்புரைகளைச் செய்தலும், அத்துடன்

(3) ~~பிராந்தியங்களின்~~ நிதி, நிதி
வின் நிருவாகமும் மற்றும் பிராந்திய நிருவாகங்க
விகை சொல்
/ வேண்டிய பொறுப்பு தொடர்பான கருமங்கள் / பற்றி கலந்துரையாடுதலும் நிதி ஆணைக்குழுவுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் அதன் மீதான முறையீடுகளைச் செய்தலும்.

(4) இந்த உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் (ஆ) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மத்தியஸ்தத்துக்கும் இணக்கத்துக்குமான முயற்சிகள் பயனளிக்காத விடத்து, அத்தகைய பிணக்கானது இந்த உறுப்புரைக்கிணங்கத் தாபிக்கப்பட்ட நியாய சபை ஒன்றிற்கு நீதித்தீர்ப்பளிக்கப்படுவதற்கென ஆற்றுப்படுத்தப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) (அ) நியாயச்சபையானது -

(i) இரண்டு பிராந்திய நிருவாகங்களுக்கிடையேயான அல்லது பல பிராந்திய நிருவாகங்களுக்கிடையேயான பிணக்கொ-ன்றின் விடயத்தில் பிணக்குக்கான திறத்தவராகவுள்ள அத்தகைய பிராந்திய சபை ஒவ்வொன்றினாலும் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரைக் கொண்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) பிராந்திய நிருவாகத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையேயான பிணக்கொன்றன் விடயத்தில், பிணக்குக்கான திறத்தவராகவுள்ள பிராந்திய நிருவாகத்தினாலும் மத்திய அரசாங்கத்தினாலும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்;

அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தவிசாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தவிசாளர் ஒருவரைப் பெயர்குறித்து நியமிப்பதில் உடன்படிக்கை ஏதும் இல்லாதவிடத்து, தவிசாளர் அரசியலமைப்பு பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(இ) நியாய சபையின் செயல் நடவடிக்கைகளும் நடவடிக்கை முறைகளும் சட்டசபையினால் வகுக்கப்படும் விதிகள் மூலம் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

(ஈ) அத்தகைய சபையினால் ஆக்கப்படும் ஏதேனும் அளிப்பு அல்லது தீர்மானம் பிணக்கிற்கான திறத்தவரை கட்டுப்படுத்துதல் வேண்டும்.

(6) கூட்டவையானது அதன் சொந்த நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும் என்பதுடன் கூட்டவையினால் வேறு வகையாகத் தீர்மானிக்கப்பட்டால் ஒழிய ஒவ்வொரு மாதமும் கூடுதலும் வேண்டும்.

(7) முதலமைச்சர் காலத்திற்குக் காலம் கூட்டவைக் கூட்டங்களில் பங்கு பற்றுதல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய இரு கூட்டங்களுக்கிடையே மூன்று மாத காலப் பகுதி, கழிதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XVI

### அரச காணி, நீர் நிலைகள் மற்றும் கனிப்பொருட்கள்

காணிகள், சமுத்திரத்திற் கடியில் இருக்கும் கனிப்பொருட்கள் முதலியன.

142. (1) எல்லாக் காணிகளும், ஆள்புல நீர்பரப்புக்குள்ளாக சமுத்திரத்திற்கடியில் இருக்கும் எல்லாக் கனிப் பொருட்களும் வேறு பெறுமதி வாய்ந்த பொருட்களும் கண்ட மேடு சம்மந்தமான உரிமைகளும் குடியரசின் புற நீங்கலான பொருளாதார வலயம் சம்பந்தமான உரிமைகளும் தொடர்ந்து மத்திய அரசாங்கத்திற்கு உரித்தானவையாதல் வேண்டும் என்பதுடன் குடியரசின் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஆள்புல நீர்பரப்புகள், கண்டமேடு, புற நீங்கலான பொருளாதார வலயம் மற்றும் இலங்கையின் ஏனைய கடற்கரை வலயங்கள் என்பவற்றின் எல்லைகள் காலத்திற்குக் காலம் சட்டத்தின் மூலம் நறித்துரைக்கப்பட்டவாறான அத்தகையனவாதல் வேண்டும்.

சுரங்கங்களும் கனிப்பொருட்களும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாதல்.

143. கனிப்பொருள் மூலவளங்கள், எண்ணெய் வயல்கள், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை ஒழுங்கு படுத்தி அபிவிருத்தி செய்தல், அகழ்தல் என்பன உட்பட சுரங்கங்களும் கனிப்பொருட்களும் அவற்றின் மீதான அரசுரிமைப்பணங்களின் சேகரிப்பும் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

அரசகாணி.

144. (1) ஒரு பிராந்தியத்திற்குள்ளாக இருக்கும் அரசகாணி அப்பிராந்தியத்திற்கு உரித்தானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இந்த உறுப்புரைக்கு அமைவாக, பிராந்திய நிரலில் எடுத்துக்காட்டப்பட்ட நோக்கங்களுக்காக பிராந்திய சபையினால் பயன்படுத்தப்படுவதற்கு உரியதாதலும் வேண்டும்.

(2) (அ) இப்பந்தியின் (ஆ) எனும் உட்பந்திக்கமைவாக, பிராந்திய நிர்வாகம் ஒன்று, ஏற்புடைத்தான எழுத்திலான சட்டத்திற்கிணங்க காணிக்குத்தகை, காணி கைமாற்றல் அல்லது பராதீனம், காணிப்பயன்பாடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்குடியேற்றம், காணிச்சீர்திருத்தம் என்பன உட்பட அத்தகையு காணியில் அல்லது காணி மீது உரிமைகளைப்பிர யோகிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்புத் தொடங்கியதன் பின்னர் காணிக்குடியேற்றத்திட்டங்களிலான முதன்மை யிடம் முதலில் மாவட்டத்தில் உள்ள ஆட்களுக்கும், அதன்பின் பிராந்தியத்தில் உள்ள ஆட்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) மத்திய அரசாங்கமானது பிராந்தியத்திலுள்ள அரச காணி இரண்டாம் அட்டவணையின் (1) ஆம் நிரலிலுள்ள விடயம் ஒன்றன் நோக்கத்திற்காக தேவைப்படுகின்றதெனத்திருப்திப்பட்டால், மத்திய அரசாங்கம், இயைபான பிராந்திய நிருவாகத்துடனான ஆலோ சனையின் பின்னர் அத்தகைய நோக்கத்திற்காக நியாயமாக தேவைப்படக் கூடியவாறான அத்தகைய காணியை மத்திய அரசாங்கத்திற்கு அல்லது மத்திய அரசாங்கம் விதந்துரைக்கக் கூடியவாறான அத்தகைய பகிரங்க அதிகார சபைக்கு கிடைக்கச் செய்யுமாறு பிராந்திய நிருவாகத்தைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன் பிராந்திய நிருவாகம் அத்தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

பிராந்தியங் களுக்கிடை யிலான நீர்ப் பாசனம்.

145. (1) ஆட்சி இடப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களுக்குள் அடங்குகின்றவிடத்து, பிராந்தியங்களுக் கிடையிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

(2) அவற்றின் அமுலாக்கத்தின் விளைவாக இடம் பெயர்ந்த ஆட்களை மீளக் குடியமர்த்தல் உட்பட, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் மத்திய அரசாங் கத்தின் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மீளக் குடியமர்த்தல் ஆவது அத்தகைய கருத்திட்டங்கள் மூலம் நன்மையடையும் பிராந்தியங்களின் பிரதான அமைச்சர்களுடனான ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட்டனவாதலாலும் 144 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XVII

## நீதித்துறை

### நீதி நிருவாகத்துக்கான நிறுவனங்கள்

நீதிமன்றங்கள் முதலியன தாபிக்கப் படுதல்.

146. (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றை நிலைநாட்டி வலுவுக்கிடும் நீதி நிருவாகத்துக்கான நிறுவனங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்றம், இது, குடியரசிலுள்ள அதி உயர்ந்த இறுதி மேனிலை பதிவேட்டு நீதி மன்றமாதல் வேண்டும்;

(ஆ) இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம்;

(இ) ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் தலைநகர ஆள்புலத்துக்குமெனத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்கள்; அத்துடன்

(ஈ) பாராளுமன்றம் காலத்துக்குக்காலம் சட்டம்மூலம் ஆணையிட்டமர்த்தி த்தாபிக்கக்கூடிய அத்தகைய முதனிலை நீதிமன்றங்கள், நியாயசபைகள் அல்லது அத்தகைய நிறுவனங்கள்.

(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, நீதியை நிருவகிப்பதற்காகவும், கைத்தொழிற் பிணக்குகளையும் வேறு பிணக்குகளையும் விளங்கித் தீர்த்து இணக்கம் ஏற்படுத்துவதற்காகவும் இப்போதுள்ள எழுத்திலான சட்டத்தின்மூலம் உருவாக்கித் தாபிக்கப்பட்ட எல்லா நீதிமன்றங்களும் நியாயசபைகளும் நிறுவனங்களும், பாராளுமன்றத்தினால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களாகவும், நியாயசபைகளாகவும், நிறுவனங்களாகவும் கருதப் படுதல் வேண்டும்.

(3) பாராளுமன்றமானது, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நீதிமன்றங்களினதும், நியாயசபைகளினதும், நிறுவனங்களினதும் தத்துவங்களையும், கடமைகளையும், நியாயாதிக்கத்தினையும் நடவடிக்கைமுறையையும் மாற்றீடு செய்யலாம் அல்லது நீக்கலாம் அல்லது திருத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல் நீதிமன்றங்கள் அத்துடன் இவ்வத்தியாயத்தில் குறிப்பீடுசெய்யப்படும் நீதிமன்றங்கள், நியாயசபைகள், நிறுவனங்கள் என்பன அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, இப்போதுள்ள சட்டத்தினால் அத்தகைய நீதிமன்றங்களுக்கும் நியாயசபைகளுக்கும் அத்துடன் நிறுவனத்திற்கும் அளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும், அதேபோல, பாராளுமன்றம், சட்டத்தின்மூலம் உரித்தாக்கக்கூடியதும் ஆணையிட்டமர்த்தக்கூடியதுமான அத்தகைய தத்துவங்களையும் அத்துடன் மேன்முறையீட்டு அல்லது தொடக்கநிலை நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தலும் பிரயோகித்தலும் வேண்டும்.

(5) (அ) உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், ஆகியன ஒவ்வொன்றும் மேனிலைப் பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நீதிமன்றத்துக்குரிய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்; மேற்படி தத்துவம், தம்மை அவமதித்தமைக்காக (அத்தகைய அவமதிப்பு நிதிமன்றத்திலேயே புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது வேறெங்கு புரியப்பட்டிருப்பினுஞ் சரி) நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு மறியற்றண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்.

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்துவம், இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (இ) அத்துடன் (ஈ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் நீதிமன்றத்தை, நியாயசபையை அல்லது நிறுவனத்தை அவமதித்தமைக்காக (அத்தகைய அவமதிப்பு அத்தகைய நீதிமன்றத்தின், முன்னிலையில் புரியப்பட்டிருப்பினுஞ்சரி, வேறெங்கு புரியப்பட்டிருப்பினுஞ்சரி) தண்டிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்;

(இ) பிராந்திய மேல் நீதிமன்றமானது, அதனை அவமதித்தற்காக (அத்தகைய அவமதிப்பு நீதிமன்றத்திலேயே புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது வேறெங்கும் புரியப்பட்டிருப்பினுஞ்சரி) அல்லது பிராந்தியத்திற்குள் அமைந்துள்ளதும் இந்த உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ) உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நீதிமன்றத்தை, நியாயசபையை அல்லது நிறுவனத்தை அவமதித்தற்காக தண்டிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) இப்பந்தியின் (அ), (ஆ), (இ) என்னும் உட்பந்திகளின் ஏற்பாடுகள், ஏதேனும் நீதிமன்றத்தை, நியாயசபையை அல்லது நிறுவனத்தை அவமதித்தமைக்காகத் தண்டிப்பதற்கு என அத்தகைய வேறு நீதிமன்றத்துக்கு, நியாயசபைக்கு அல்லது நிறுவனத்துக்கு ஏதேனும் சட்டத்தால் இப்போது உரித்தாக்கப்பட்ட அல்லது இதன்பின்னர் உரித்தாக்கப்படும் உரிமையைப் பங்கப்படுத்தவோ பாதிக்கவோ மாட்டாது.

(6) பிக்குகளின் ஒழுக்காறு பற்றிய கருமங்களை அல்லது பிக்குகளுக்கிடையிலான ஏதேனும் பிணக்கை, அல்லது விகாரைகளில் அல்லது விகாரைகள் தொடர்பில் சேவைகள் புரிதல் பற்றிய வேறு ஏதேனும் பிணக்கை விளங்கித்தீர்த்து, இணக்கம் ஏற்படுத்துவதற்கென நீதிமன்றங்களை, நியாயசபைகளை அல்லது நிறுவனங்களையும் உருவாக்கித் தாபிப்பதற்குச் சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் ஏற்பாடுசெய்யலாம். அத்துடன் அத்தகைய சட்டம், இவ்வரசியலமைப்பில் முரணாக எது எப்படியிருப்பினும் –

(அ) அத்தகைய நீதிமன்றங்களின், நியாயசபைகளின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் சனாதிபதியினால், அல்லது அத்தகைய சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறாக அத்தகைய வேறு ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் நியமிக்கப்படவும், இடமாற்றப்படவும், பதவி விலக்கப்படவும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகிக்கப்படவும் ஏற்பாடு செய்யலாம்;

(ஆ) அத்தகைய கருமங்களும் பிணக்குகளும் பற்றி இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தின் நியாயாதிக்கத்தினைத் தவிர்ப்பதற்கெனவும்

ஏற்பாடுசெய்யலாம்.

(7) ஆறாம் பந்தியிலுள்ள "பிக்கு", "விகாரை" என்னும் சொல்லமைப்புக்கள் அரசியலமைப்பு தொடங்கும்போது பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும், பிராந்திய மேல் நீதிமன்றங்களும்

உயர் நீதி மன்றத்தின் அமைப்பு.

147. (1) உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசரையும் ஆறுபேருக்குக் குறையாத ஆனால் பத்துப்பேருக்கு அதிகமாகாத ஏனைய நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்கள் 151ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றமானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பினும் செயற்படுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருப்பதன்காரணமாக அல்லது நீதிபதியொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், உயர் நீதிமன்றத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

(3) உயர் நீதிமன்றத்தின் பல்வேறு நியாயாதிக்கங்கள் பிரதம நீதியரசர் வேறுவிதமாகப் பணித்தாலொழிய, சாதாரணமாகக் கொழும்பிலேயே பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்திக்குஅமைவாக உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமும் பல்வேறு நீதிபதிகளும் வெவ்வேறாக அமர்வதன்மூலம் ஒரே நேரத்தில் வெவ்வேறு கருமங்களில் பிரயோகிக்கப்படலாம்.

(5) உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளுக்குக் குறையாதோர் உயர் நீதிமன்றமாக ஒருங்கமர்தல் மூலம் எல்லாநேரங்களிலும் சாதாரணமாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(6) சம்பந்தப்பட்ட பிரச்சினை பிரதம நீதியரசரின் அபிப்பிராயத்தில், பொது முக்கியத்துவமும் பொதுசன முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருக்குமெனின், பிரதம நீதியரசர்—

(அ) அவரது சொந்தப் பிரேரணையில்; அல்லது

(ஆ) ஏதேனும் மேன்முறையீட்டை, வழக்கு நடவடிக்கையை கருமத்தை விசாரணை செய்கின்ற இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நீதிபதிகளின் வேண்டுதலின் பேரில்; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஏதேனும் மேன்முறையீட்டுக்கு, வழக்கு நடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்குக் கட்சிக்காரராகவுள்ள ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில்,

அத்தகைய மேன்முறையீடு, வழக்கு நடவடிக்கை, அல்லது கருமம், உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளை அல்லது ஐந்துக்கு மேற்பட்ட நீதிபதிகளைக்கொண்ட தவிசினால் விசாரணை செய்யப்படல் வேண்டும் எனப் பணிக்கலாம்.

(7) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏகமனதான முடிவாக இல்லாத போது, பெரும்பான்மையினரின் முடிபே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பாதல் வேண்டும்.

(8) உயர் நீதிமன்றம், அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், உயர் நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் வழக்கு நடவடிக்கைக்கு எவரேனும் கட்சிக்காரராக உள்ளவர், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் நேரில், தாமாகவோ அல்லது சட்டத்தரணியொருவர் மூலமோ விசாரிக்கப்படும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(9) உயர் நீதிமன்றம் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அவசியமென நீதிமன்றத்துக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய உரைப்பதற்கான உரிமையை வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது அவரது சட்டப் பிரதிநிதிக்கு உயர் நீதிமன்றம் அதன் தற்றுணிபில் வழங்கலாம்.

(10) உயர் நீதிமன்றத்தின் பதிவகமானது, உயர் நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயர் குறிப்பிடப்படும் அலுவலரொருவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டுமென்பதோடு அவர், பிரதம நீதியரசரின் கண்காணிப்பு, பணிப்பு, கட்டுப்பாடு என்பவற்றுக்கமைந்தவராதலும் வேண்டும்.

(11) பாராளுமன்றமானது, சட்டத்தின்மூலம் உயர் நீதிமன்றத்திற்கு ஏதேனும் மேலதிக நியாயாதிக்கத்தையும் தத்துவங்களையும் அளிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் நீதிமன்ற விதிகள்.

148.(1) அரசியலமைப்பினதும் ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பிரதம நீதியரசரும் அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளும், பின்வருவன உட்பட, நீதிமன்றங்களின் வழக்காறையும் நடவடிக்கை முறையையும் பொதுவாக ஒழுங்குபடுத்தும் விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்கலாம்:-

(அ) எந்நியதிகளின்கீழ் உயர் நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் பிராந்திய மேல் நீதிமன்றங்களுக்குமான மேன்முறையீடுகள் ஏற்றுக்கவனிக்கப்படுதல் வேண்டுமோ அந்நியதிகளும், அத்தகைய விதிகளுக்கு இணங்கியொழுகாமைக்காக, அத்தகைய மேன்முறையீடுகளைத் தள்ளுபடி செய்வதற்கான ஏற்பாடும் உட்பட, மேன்முறையீடுகளை விசாரித்தற்கான நடவடிக்கைமுறை பற்றியவையும், மேன்முறையீடுகள் தொடர்பிலான வேறு விடயங்கள் பற்றியவையுமான விதிகள்;

(ஆ) உயர் நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் பிராந்திய மேல் நீதிமன்றங்களுக்கும் அரசியலமைப்பினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அளிக்கப்பட்ட பல்வேறு நியாயாதிக்கங்களைப் பிரயோகித்தலில் அந்நீதிமன்றங்களிலான நடவடிக்கைமுறை பற்றிய விதிகள், இதில் அத்தகைய விடயங்கள் எக்காலத்திற்குள் தொடுக்கப்படலாம் அல்லது கொணரப்படலாம் என்பதுவும், அத்தகைய விதிகளுக்கு இணங்கியொழுகாமைக்காக அத்தகைய விடயங்களைத் தள்ளுபடி செய்தலும் உட்படும்;

(இ) நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் பற்றிய விதிகள்;

(ஈ) அத்தகைய நீதிமன்றத்தின்முன்னர் மனு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ கொணரப்பட்டதும், விழலானதாகவும், அலைக்கழிக்குந் தன்மையதாகவும், அல்லது தாமதப்படுத்தும் நோக்கத்துக்காகக் கொணரப்பட்டதாகவும் நீதிமன்றத்துக்குத் தோன்றுவதுமான ஏதேனும் மேன்முறையீட்டை அல்லது வேறேதேனும் விடயத்தைச் சுருக்கமுறையாகத் தீர்மானிப்பதற்கு ஏற்பாடுசெய்யும் விதிகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) உயர் நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், பிராந்திய மேல் நீதிமன்றங்களிலும் மேன்முறையீட்டு நடவடிக்கைகளின் அல்லது வேறு நடவடிக்கைகளின் நோக்கத்துக்காகப் பதிவேட்டுப் பிரதிகளைத் தயாரித்தல்.

(ஊ) சட்டத்தரணிமாரை அனுமதித்தல், சேர்த்துக்கொள்ளுதல், இடைநிறுத்திவைத்தல், அகற்றுதல் அத்துடன் அத்தகைய சட்டத்தரணிமாரின் நடத்தை, ஒழுங்காசாரம் பற்றிய விதிகள்;

(எ) இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் சமுகமளிக்கும் நீதிபதிகளினதும், சட்டத்தரணிமாரினதும் நீதிமன்ற அலுவலர்களினதும், ஆட்களினதும் உடை;

(ஏ) யூரர்மார் குழாங்களைத் தயாரிக்கும் மாதிரியும் யூரர்மாரைக் கட்டளைவிட்டழைக்கும் முறையும் குழாத்திற் சேர்க்கும் முறையும் அவர்களை ஆட்சேபிக்கும் முறையும்;

(ஐ) அத்தகைய நீதிமன்றங்களின் பிசுக்கால்மாரினதும் வேறு நிருவாக முறை அலுவலர்களினதும் நடவடிக்கைகளும், அத்தகைய நீதிமன்றங்களின் மன்றாணைகளும், அவற்றை நிறைவேற்றும் முறையும்;

(ஒ) உயர் நீதிமன்ற முடிவுகளின் பிணிக்கும் பயன்;

(ஓ) ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் சிறப்பாக ஏற்பாடுசெய்யப்படாதவையும், உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல் நீதிமன்றங்கள், முதனிலை நீதிமன்றங்கள் என்பனவற்றில் அளிக்கப்படக்கூடிய செலவு தொகைகளின் தன்மையும் அளவும், அத்தகைய செலவு தொகைகள் அறவிடப்படக்கூடிய முறையும் ஆவணங்களில் முத்திரையிடுதலும் உட்பட அவற்றின் வழக்காறும் நடவடிக்கைமுறையும் தொடர்பிலான எல்லா விடயங்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை அவ்வாறு வெளி யிடப்படும் தேதியன்று அல்லது அத்தகைய விதியில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) இந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும், அவை கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவில் அங்கீ காரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் விதி, அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பிரதம நீதியரசரும், அவராற் பெயர்குறித்து நியமிக்கப் படும் உயர் நீதிமன்றத்தின் வேறு எவரேனும் மூன்று நீதிபதிகளும், அத்தகைய நீதிமன்ற விதிகள் எவற்றையும் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அழிக்கலாம் என்பதுடன், அத்தகைய திருத்தம், மாற்றம் அல்லது அழிப்பு, நீதிமன்ற விதிகளை ஆக்குதல் தொடர்பில் இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியில் காட் டப்பட்ட அதேமாதிரியாகச் செய்யப்படும்.

(5) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்டவையும் /அரசியலமைப்புத் தொடங்கும்போது வலுவிலிருந்தவையுமான எல்லா விதிகளும், ஏற்றமாற்றங்களுடன். இவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) பிராந்திய மேல் நீதிமன்றங்கள் தத்தமது மேன்முறையீட்டு, மீளாய்வு அத்துடன் எழுத்தாணை நியாயாதிக்கங்களைப் பிரயோகிப்பதற்கும் அத்தகைய பிராந்திய மேல் நீதிமன்றங்களிலிருந்து மேன்முறையீட்டு நீதி மன்றத்துக்கும் உயர் நீதிமன்றத்துக்கும் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கும், ஏற்பாடுசெய்யும் விதிகள் இல்லாதவிடத்து மேன்முறை யீட்டு நீதிமன்றம் தொடர்பிலான நேரொத்த விதிகள், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு இந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றுக்கும் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாட்டிற்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அமைப்பு.

149.(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதிமன்றத் தலைவரையும் 151ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நியமிக்கப்படவேண்டிய ஆறு பேருக்குக் குறையாத ஆனால் பதினொரு பேர்களுக்கு அதிகமாகாத நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றம் சாதாரணமாக அதன் நியாயாதிக்கத்தினைக் கொழும்பிலேயே பிரயோகித்தல் வேண்டும்:

ஆனால், பிரதம நீதியரசர் அவ்வாறு செய்தல் உசிதமானதெனக் கருதுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பில் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதைப் பங்கப்படுத்தாது, பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் இடத்தில் அதன் அமர்வுகளை நடாத்துதல் வேண்டும் எனவும் அதன் நியாயாதிக்கத்தினைப் பிரயோகித்தல் வேண்டும் எனவும் பணிக்கலாம்.

(3) இவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்திக்கு அமைவாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது, நீதிமன்றத்தின் பல்வேறு நீதிபதிகள் தனித்தனியே அமர்வதன்மூலம் ஒரே நேரத்தில் வெவ்வேறு கருமங்களில் பிரயோகிக்கப்படலாம்:

(4) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது—

(அ) ஜூரரில்லா நீதிமன்ற விளக்கமொன்றில் விளம்பப்பட்ட ஒரு பிராந்திய மேல்நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் கட்டளைகளும் தொடர்பில் நீதிமன்றத்தின் ஆகக்குறைந்தது மூன்று நீதிபதிகளினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒரு பிராந்திய மேல் நீதிமன்றத்தின் வேறு தீர்ப்புகளும் கட்டளைகளும் தொடர்பில் நீதிமன்றத்தின் ஆகக்குறைந்தது இரண்டு நீதிபதிகளினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பாராளுமன்றத்தின் அல்லது ஒரு பிராந்திய சபையின் உறுப்பாண்மைக்கான தேர்தல் தொடர்பில் தேர்தல் மனுவை விளங்குதலானது மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவரால் அல்லது தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அந்நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதியால் அல்லது தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நீதிபதிகளால் (அத்தகைய தலைவர் இவர்களுள் ஒருவராயிருக்கலாம்) பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) வேறு விடயங்கள் தொடர்பில், பொதுவான அல்லது சிறப்புக் கட்டளையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் வேறுவகையில் பணித்தாலன்றி நீதிமன்றத்தின் ஒரேயொரு நீதிபதியால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(5) தவிசாக அமையும் இரு நீதிபதிகளிடையே அபிப்பிராய பேதம் எதுவும் ஏற்படின், அவ்விடயம் மூன்று நீதிபதிகளைக் கொண்ட தவிசொன்றினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு, நீதிபதிகளின் ஏகமனதான முடிபொன்றாக இல்லாதிருப்பின், அது, பெரும்பான்மையோரின் முடிவானதாகவிருத்தல் வேண்டும்.

(7) மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகம், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயர் குறிப்பிடப்படும் அலுவலரொருவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்; அவர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் கண்காணிப்புக்கும், பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) பாராளுமன்றமானது, சட்டத்தின்மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஏதேனும் மேலதிக நியாயாதிக்கத்தையும் தத்துவத்தையும் அளிக்கலாம்.

பிராந்திய மேல் நீதி மன்றங்கள்.

150.(1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒவ்வொரு பிராந்தியத்திற்கும், தலைநகர ஆள்புலத்திற்கும் மேல் நீதிமன்றமொன்று இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றமும், விடயத்திற் கேற்ப, இயைபான பிராந்தியத்தின் மேல் நீதிமன்றம் என அல்லது தலை நகர ஆள்புலத்தின் மேல் நீதிமன்றம் என பெயர்குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், பிராந்திய மேல் நீதிமன்றம் பற்றிய அரசியலமைப்பில் உள்ள ஒவ்வொரு குறிப்பீடும், வேறு வகையில் ஏற்பாடுசெய்யப்பட்டாலே யொழிய, தலைநகர ஆள்புலத்தில் மேல் நீதிமன்றம் பற்றிய குறிப்பீ டொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் அதிசிரேட்ட நீதிபதி அந்த மேல் நீதிமன்றத்தில் பிரதம நீதிபதியாக பிரதம நீதியரச ரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XVIII

## நீதித்துறை

### நீதித்துறைச் சுதந்திரம்

**உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் மேன்முறையீட்டு நீதி மன்ற நீதிபதிகளையும் நியமித்தலும் அகற்றுதலும் அவர்கள் பதவிவிலகலும்.**

151. (1) பிரதம நீதியரசர், குடியரசின் சனாதிபதியால் அவரது கைப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் ஏனைய ஒவ்வொரு நீதிபதியும் குடியரசின் சனாதிபதியினால் பிரதம நீதியரசரின் கருத்துக்களை ஆராய்ந்தறிந்த பின் அவரது கைப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பிரதம நீதியரசரும் இந்த உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் நீதிபதி ஒவ்வொருவரும், நன்னடத்தையுடையவராயிருக்கும்வரை பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை அவர் பால் உள்ளது என்ற ஏதுவின் மீது பாராளுமன்றப்பிரேரணையொன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மையினால் (சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட) ஆதரவளிக்கப்பட்டு சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சனாதிபதியினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலமாகவன்றி அகற்றப்படுதலும் ஆகாது.

(4) அத்தகைய பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் ஒன்று –

(அ) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையிற் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரால் ஒப்பமிடப்பட்டிருப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பதோடு சார்ந்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மைபற்றிய முழு விபரங்களையும் கொண்டிருந்தாலொழியவும்; அத்துடன்

(ஆ) (1) பிரதம நீதியரசின் விடயத்தில், ஏதேனும் பொதுநலவாய நாட்டின் அதிஉயர் நீதிமன்றத்தில் நீதிபதியொருவராக அவர்கள் ஒவ்வொருவரும் பதவிவகிக்கின்றவர்களாக அல்லது பதவிவகித்தவர்களாக இருக்கும் மூன்றுபேர்களைக் கொண்டிருப்பதும்;

(11) இந்த உறுப்புரையின் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் வேறெவரேனும் நீதிபதியின் விடயத்தில், இந்த அரசியலமைப்பினால், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவராக பதவிவகிக்கின்றவர்களாக அல்லது பதவிவகித்தவர்களாக இருக்கும் மூன்றுபேர்களைக் கொண்டிருப்பதும்;

விடயத்துக்கேற்றால்போல பிரதம நீதியரசருக்கு அல்லது அத்தகைய நீதிபதிக்கு எதிராகச் சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை பற்றிய கருத்துரைகளையிட்டு விசாரணைசெய்வதற்கென சபாநாயகரினால் நியமிக்கப்பட்டதுமான குழுவொன்றினால் விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு அத்தகைய நீதிபதிக்கெதிராக துர்நடத்தை அல்லது தகவின்மை பற்றிய முகத்தோற்றளவிலான வழக்கொன்று தாபிக்கப்பட்டுள்ளதென தீர்மானித்தாலொழியவும்,

சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது அல்லது பாராளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடம்பெறுதல் ஆகாது.

(5) அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைமுறை, சார்த்தப்பட்ட துர்நடத்தை மற்றும் தகவின்மை பற்றிப் புலனாய்வுசெய்வதற்கும் எண்பித்தலுக்குமென பாராளுமன்றத்தின் குழுவொன்றினால் விசாரணை நடாத்தப்படுதல், பிரதம நீதியரசர் அல்லது அத்தகைய நீதிபதி தாமாகவோ, அல்லது பிரதிநிதி மூலமாகவோ குழுமுன்னர் தோற்றுவதற்கும் தம்பக்க வழக்கையுரைப்பதற்கும் ஆன உரிமை என்பன உட்பட, அத்தகைய பிரேரணையொன்றை சமர்ப்பித்தல் தொடர்பான எல்லாவிடயங்களுக்கும், சட்டத்தின்மூலம் அல்லது நிலையியற் கட்டளைகள் மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(6) பிரதம நீதியரசராக, மேன்முறையீட்டு நீதி மன்றத் தலைவராக அல்லது உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவராக இருப்ப தற்கென அல்லது அத்தகையவராகச் செயற்படுவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும் அவர் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தினை சனாதிபதி முன்னிலையில் செய்யும்வரை அல்லது உறுதியுரையினை மொழியும்வரை பிரதம நீதியரசராக, மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவராக, அல்லது நீதிபதியாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரியத் தொடங்குதல் ஆகாது

(7) இந்த உறுப்புரையின் (8) ஆம் பந்திக்கு அமைவாக உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி யொருவர் அவர் அறுபத்தைந்து வயதை அடையும் வரை பதவி வகிக்க உரித்துடையவராதல் வேண்டும்.

(8) அத்தகைய நீதிபதி எவரும் ஓய்வூதிய குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியம் ஒன்றின் அளிப்புக்கு அவரைத் தகைமையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையவராக்கும் சேவைக்காலப்பகுதியை பூர்த்தி செய்வதன் மீது விருப்பத்தின் பேரில் ஓய்வுபெறலாம் அல்லது அறுபத்தைந்து வயதை அடையுமுன்னர் சனாதிபதிக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளின் சம்பளங்கள்.

152. (1) உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளினது சம்பளங்கள், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்ற நீதிபதியொருவருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவருக்கும் செலுத்தப்படற்பாலதான சம்பளமும் ஓய்வூதியம் பெறுவதற்கு அவருக்குள்ள உரித்தும், அவர் நியமிக்கப்பட்ட பின்னர் குறைக்கப்படுதல் ஆகாது.

பதில் நியமனங்கள்

153. (1) பிரதம நீதியரசர் அல்லது மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்திற்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் ஏதேனும் காலப்பகுதிக்குப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும், தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப்பகுதியின் போது பிரதம நீதியரசரின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் பதவியிற் செயலாற்றுவதற்கென, விடயத்திற்கேற்ப, உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியைக் குடியரசின் சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் ஏதேனும் காலப்பகுதிக்குப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப்பகுதியின் போது, விடயத்திற்கேற்ப, உயர் நீதிமன்ற நீதிபதியாக அல்லது மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகச் செயலாற்றுவதற்கெனவேறோர் ஆளைக் குடியரசின் சனாதிபதி நியமிக்கலாம்.

நீதிபதிகள் வேறு கடமைகளை நிறைவேற்றுதலும் வேறு பணிகளைப் புரிதலும்

154. (1) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவர், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் கீழ் வேறெவையேனும் தோதான கடமை அல்லது பணிகளை நிறைவேற்றும்படி அல்லது புரியும்படி குடியரசின் சனாதிபதியினால் தேவைப்படுத்தப்படலாம்.

(2) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் அரசியலமைப்பினால் அல்லது எழுத்திலான சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறு தவிர அல்லது குடியரசின் சனாதிபதியின் எழுத்திலான சம்மதத்துடன் தவிர (சம்பளம் பெறும் அல்லது சம்பளம் பெறாத) வேறெப்பதவியையும் புரிதல் ஆகாது. அல்லது இலாபம் தரும் அல்லது ஊதியம் தரும் வேறெத்தொழிலையும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(3) இந்த அரசியலமைப்பினால், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் நிரந்தர நீதிபதியொருவராகப் பதவி வகித்துள்ள ஆள் எவரும், குடியரசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதியின் எழுத்திலான சம்மதத்துடனல்லாது தமது ஒய்வு பெறுதலின் அல்லது பதவி விலகலின் பின்பு எவ்வேளையிலும் ஏதேனும் நீதிமன்றத்தில், நியாய சபையில் அல்லது நிறுவனத்தில் சட்டத்தரணியொருவராகத் தோற்றுதல், வழக்குரைத்தல் செயற்படுதல் அல்லது தொழில் புரிதல், அல்லது அரச சேவையில் இலாபம் தரும் ஏதேனும் தொழிலை ஏற்றுக் கொள்ளுதல் ஆகாது.

பிராந்திய மேல் நீதி மன்ற நீதிபதிகள்.

155. (1) பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் நீதிபதி ஒவ்வொருவரும் பிரதம நீதியரசரின் கருத்துக்களை ஆராய்ந்தறிந்த பின்னர். குடியரசின் சனாதிபதியால் அவரது கைப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் தேசிய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது சனாதிபதியால் அகற்றப்படற்பாலராதலும் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதலும் வேண்டும்.

(2) பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவராக நியமிக்கப்பட்ட ஒவ்வொராளும், அவர் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தினை பிரதம நீதியரசர் முன்னிலையில் செய்யும்வரை அல்லது உறுதியுரையினை மொழியும்வரை தமது பதவிக்குரிய கடமைகளைப் புரியத் தொடங்குதல் ஆகாது.

(3) இந்த உறுப்புரையின் (4) ஆம் பந்திக்கமைவாக பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் நீதிபதி, அவர் அறுபத்தைந்து வயதை அடையும் வரை பதவி வகிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதி எவரும் ஓய்வூதியக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியமொன்றின் அளிப்புக்கு அவரைத் தகைமையுடையவராக்கும் சேவைக் காலப் பகுதியைப் பூர்த்தி செய்வதன் மீது விருப்பத்தின் பேரில் ஓய்வுபெறலாம், அல்லது அறுபத்தைந்து வயதை அடையுமுன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதிக்கு அவரது கைப்பட எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(5) பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் பிரதம நீதியரசரின் விதப்புரையின் மீது சனாதிபதியால் ஒரு பிராந்திய மேல் நீதிமன்றத்திலிருந்து வேறொன்றுக்கு இடமாற்றம் செய்யப்படலாம்.

தேசிய நீதித்துறைச் சேவை ஆணைக்குழு.

156. (1) குடியரசின் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தேசிய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.. (அது இவ்வத்தியாயத்தில் "தேசிய ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தேசிய ஆணைக்குழு, தவிசாளராக இருக்க வேண்டிய பிரதம நீதியரசரையும், குடியரசின் சனாதிபதியினால் நியமிக்கப்படும் இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர் முதனிலை நீதிமன்றத்தின் நீதித்துறை அலுவலரொருவராக பணியாற்றியிருத்தல் வேண்டும்.

(2) தேசிய ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) தேசிய ஆணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பினும், செயலாற்றத் தத்துவம் உடையதாதல் வேண்டும். அத்துடன், அத்தகைய ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அத்தகைய ஏதேனும் வெற்றிடம் காரணமாக, அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டுமே செல்லுபடியற்ற தாதலோ, செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

(4) தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளவரான நீதிபதியொருவர், அவர் தமது பதவியை முன்னரே துறந்தால் ஒழிய, அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அப்பதவியிலிருந்து அகற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாலொழிய, அல்லது உயர் நீதிமன்ற நீதிபதியொரு வராக இல்லாதொழிந்தால் தவிர, தாம் பதவியில் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும். ஆனால் அவர் மீள நியமிக்கப்படு வதற்குத் தகுதியுடைவர் ஆதல் வேண்டும்.

(5) சனாதிபதி, அவரால் நியமிக்கப்பட்டவரான தேசிய ஆணைக்குழுவின் ஏவரேனும் உறுப்பினரை, குறித்துரைக் கப்படும் காரணத்திற்காக பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) தேசிய ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் கடமைக்கு வராதிருப்பதற்கான லீவை சனாதிபதி வழங்கலாம் என்பதுடன், உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை அவ்வாறு லீவில் இருக்கும் காலப்பகுதியின் போது தற்காலிக உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கென நியமிக்கலாம்.

(7) தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு பாரா ளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளம் அல்லது படி செலுத்தப்படலாம். ஓர் உறுப்பின ருக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சம்பளம் அல்லது படி, திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரது பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலும் ஆகாது.

(8) இந்த உறுப்புரையின் (7) ஆம் பந்தியின் கீழ் தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு கொடுபடற் பாலதான சம்பளமானது, அவரது நிலையான நியமனத் துக்குரியதும் அதிலிருந்து அவரால் பெறப்படுவதுமான சம்பளம் அல்லது வேதனாதிகளுடன் சேர்த்து மேலதிக மானதாகவிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9) தேசிய ஆணைக்குழுவானது

(அ) பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக், குழுவொன்று அத்தகைய பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால், அதற்கு இவ்வரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் தொடர்பிலான ஏதேனும் விடயத்தின் மீது ஆணைக் குழுவின் மதியுரையை நாடும் பொழுதெல்லாம் அத்தகைய பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக் குழுவுக்கு மதியுரை வழங்கலாம்;

(ஆ) அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களைச் சேர்ப்பதற்கான செயற்திட்டங்கள் தொடர்பிலும் அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை முறை தொடர்பிலும் ஆன விதிகளை ஆக்கலாம்;

(இ) நீதித்துறை அலுவலர்கள் மற்றும் பிராந்திய அட்டவணையிடப்பட்ட அலுவலர்கள் தொடர்பில் பதவி உயர்வுகளையும் இடமாற்றங்களையும் செய்வதில் கடைப்பிடிக்கப்படவேண்டிய கோட்பாடுகளையும், ஆட்சேர்ப்புச் செயற் திட்டங்களையும் வகுத்து தொகுத்தல் உட்பட அரசியலமைப்பினால் அத்தகைய ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட அத்தகைய நீதித்துறை அலுவலர்களினதும் பிராந்திய அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களினதும் நியமனம், இடமாற்றம், பதவி விலக்குதல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றிற்கான தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகளையும் நடவடிக்கை முறையையும் தீர்மானிக்கலாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) எந்த நீதிமன்றங்களுக்கு நீதித்துறை அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்களோ அந்த நீதிமன்றங்களில் தகுந்த, திறமையான நிருவாகம் தொடர்பில் அத்தகைய நீதித்துறை அலுவலர்களுக்குப் பணிப்புகள் வழங்குகையில் பிராந்திய பகிரங்கச் சேவை ஆணைக்குழுக்களினால் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகளைத் தீர்மானிக்கலாம்;

(உ) அத்தகைய ஆணைக்குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான அத்தகைய கருமங்களுக்கான ஏற்பாட்டையும் செய்யலாம்;

தேசிய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுச் செயலாளர்.

157. (1) இந்த உறுப்புரையின் (2)ஆம் பந்திக்கு அமைவாக தேசிய ஆணைக்குழுவுக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் தேசிய ஆணைக்குழுவால் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதனிலை நீதிமன்றங்களின் சிரேட்ட நீதித்துறை அலுவலர்களிடையேயிருந்து செயலாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

நீதித்துறை அலுவலர்களின் இடமாற்றமும் அட்டவணைப்படுத்தப்பட்ட தேசிய பகிரங்க அலுவலர்களின் நியமனம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன.

158. (1) இயைபான பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுக்களுடனான கலந்தாலோசனையுடன் ஒருபிராந்தியத்திலிருந்து வேறொரு பிராந்தியத்துக்கு நீதித்துறை அலுவலர்களின் இடமாற்றம் அத்துடன் (XX ஆம் அத்தியாயத்தில் முரணாக எது எப்படியிருப்பினும்) அட்டவணைப்படுத்தப்பட்ட தேசிய பகிரங்க அலுவலர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி விலகல் என்பன தேசிய ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தேசிய ஆணைக்குழுவானது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சம்பள உயர்வுடன் கூடிய இடமாற்றங்கள் தவிர்ந்த, அட்டவணைப்படுத்தப்பட்ட தேசிய பகிரங்க அலுவலர்களின் எல்லா இடமாற்றங்களையும் செய்வதற்கான தத்துவத்தை அல்லது அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விடயங்களிலும் அத்தகைய வரையறைகளுக்கு அமையவும் பதில் நியமனங்களைச் செய்வதற்கான தத்துவத்தை ஆணைக்குழுச் செயலாளருக்குக் கையளிக்கலாம்.

(3) தேசிய ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எவரும் முதனிலை நீதிமன்றம் எதையும், அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் பேணப்பட்டுவரும் பதிவேடுகளை, இடாப்புகளை அல்லது வேறு ஆவணங்களைச் சோதனையிடவும், அவசியமாகக் கூடிய அத்தகைய விசாரணைகளை நடாத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இந்த அத்தியாயத்தில்

" அட்டவணைப்படுத்தப்பட்ட தேசிய பகிரங்க அலுவலர் " என்பது, உயர் நீதிமன்றத்தின் பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவாளர், பிசுக்கால் அல்லது ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுதியின் அல்லது நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரால் ஆக்கப்பட்டுப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் குறித்துரைக்கப்பப்படக் கூடியவாறான அத்தகைய வேறு வகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற உயர் நீதி மன்றப் பதிவகத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பகிரங்க அலுவலர் எனப் பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவில் அல்லது பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவில் தலையிடுதல் ஒரு தவறாகும் என்பது

159. (1) ஒரு ஆளின் கடமையின் பொழுது தவிர, எத்தகையதுமான எம்முறையிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ, தாமாக அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாக, தேசிய ஆணைக்குழுவின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் ஏதேனும் முடிவைச் செல்வாக்குக்குட்படுத்த / எத்தனிக்கும் ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், பிராந்திய மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டாண்டுகட்கு மேற்படாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், அத்தகைய மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமே ஆளாதலும் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் உள்ளது எதுவும், ஏதேனும் நீதித்துறைப் பதவிக்கு விண்ணப்பித்துள்ள எவரேனும் விண்ணப்பகாரருக்கு அல்லது வேட்பாளருக்கு சான்றிதழொன்றை அல்லது நற்சான்றிதழொன்றைக் கொடுப்பதிலிருந்து எவரேனுமாளைத் தடை செய்தலாகாது.

நீதித்துறையில் தலையிடுதல் தவறொன்றாகும்.

160. (1) சட்டத்தின் மூலம் நீதித்துறைத் தத்துவங்கள் அல்லது பணிகள் அல்லது இந்த அத்தியாயத்தின் கீழான பணிகள், அல்லது பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழான அதே போன்ற பணிகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நீதிபதி, தலைமை தாங்கும் அலுவலர், அரச சேவையிலுள்ள பகிரங்க அலுவலர், அல்லது வேறு ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதில் அல்லது நிறைவேற்றுவதில் அத்தகைய நீதிபதியை, தலைமைதாங்கும் அலுவலரை, பகிரங்க அலுவலரை அல்லது அத்தகைய வேறு ஆளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்குச் சட்டத்தின் கீழ் உரித்துடையதாக இருக்கின்ற மேனிலை நீதிமன்றம், நியாயசபை, நிறுவனம் அல்லது வேறு ஆளி தவிர்ந்த, வேறு எந்த ஆளிடமிருந்தும் வரும் ஏதேனும் பணிப்புக்கு அல்லது பிறதலையீட்டுக்கு உட்படாமல் அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் நீதிபதியின், தலைமை தாங்கும் அலுவலரின், அரச சேவையிலுள்ள பகிரங்க அலுவலரின் அல்லது அத்தகைய வேறு ஆளின் நீதித்துறைத் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அல்லது பணிகளை நிறைவேற்றுவதில் சட்டமுறையான அதிகாரமில்லாமல் தலையிடும் அல்லது தலையிட எத்தனிக்கும் ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் பிராந்திய மேல்நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்பளிக்கப்பட்டதன் மேல் குற்றப்பணத்துக்கு அல்லது ஐந்து ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் மேலதிகமாக அவ்வாறு குற்றத்தீர்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு தேருனர் ஒருவராக இருப்பதினின்றும், ஒரு மக்கள் தீர்ப்பில் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அல்லது பிராந்தியப் பேரவையொன்றின் உறுப்பினர்களுக்கான அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபை தேர்தல் எதிலும் வாக்களிப்பதினின்றும் தகைமையை இழத்தல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் பகிரங்கப் பதவியை வகிப்பதினின்றும் அரச சேவையில் அலுவலர் ஒருவராக வேலைக்கமர்த்தப்படுவதினின்றும் தகைமை இழந்தவராகுதலும்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் பாதிக்கப்படாமை.**

161. அரசியலமைப்பின் கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் தேசிய அல்லது பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரால் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அத்தகைய எவரேனும் உய்ப்பினருக்கு எதிராக, தொடர்ச்சி எதுவும் அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

**பிசுக்கால்.**

162. பிசுக்கால் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் தீவு முழுவதற்குமான பிசுக்காலாக இருத்தல் வேண்டுமென் பதுடன் சகல நீதிமன்றங்களிலுமுள்ள பிரதிப் பிசுக்கால்கள் மீது மேற்பார்வையையும் கட்டுப்பாட்டையும் பிரயோகித்தலும் வேண்டும்.

**பிராந்திய நீதிச் சேவை ஆணைக் குழுக்கள்.**

163. (1) (அ) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒவ்வொருபிராந்தியத்துக்கும் பிராந்திய நீதித்துறைச் சேவையாணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்.

(ஆ) தலைநகர ஆள்புலம் இந்த உய்ப்புரையின் நோக்கத்துக்காக பிராந்தியமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) பிரதம நீதியரசர், ஏதேனும் பிராந்தியத்திலுள்ள அல்லது எவையேனும் பிராந்தியத்திலுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையைக் கருத்துட்கொண்டு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்துக்கிட்டவுள்ள பிராந்தியங்களுக்கென பொதுவான பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவொன்றைத் தாபிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிரதம நீதியரசர், எந்நேரத்திலும் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை வேறுபடுத்தலாம்.

(3) (அ) பிராந்திய நீதித்துறைச்சேவை ஆணைக்குழு, பிரதம நீதியரசரினால் நியமிக்கப்பட வேண்டியவர்களான பிராந்திய மேல் நீதிமன்றத்தின் மூன்று அதி சிரேட்ட நீதிபதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பிராந்திய மேல் நீதிமன்றத்தின் பிரதான நீதிபதி அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.

(4) (அ) பொது நீதித்துறைச் சேவைஆணைக்குழு வொன்று—

(1) அடுத்தடுத்துக்கிட்டிய இரு பிராந்தியங்களுக்கெனத்தாபிக்கப்பட்டவிடத்து, பிராந்திய நீதித்துறை சேவை ஆணைக்குழுவானது பிரதம நீதியரசரால் நியமிக்கப்படும் அத்தகைய பிராந்தியங்களில் மேல் நீதிமன்றங்களின் இரு பிரதான நீதிபதிகளையும் அப்பிராந்தியங்களின் அடுத்த அதிசிரேட்ட நீதிபதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(11) இரண்டுக்குமேற்பட்ட அடுத்தடுத்துக்கிட்டிய பிராந்தியங்களுக்கெனத் தாபிக்கப்பட்டவிடத்து, பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவானது பிரதம நீதியரசாரால் நியமிக்கப்படும், அத்தகைய பிராந்தியங்களின் மேல் நீதிமன்றங்களிற் பிரதான நீதிபதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அத்தகைய பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழு ஒவ்வொன்றிலும் அதிசிரேட்ட பிரதான நீதிபதி தவிசாளராக பிரதம நீதியரசரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒரு பிராந்தியத்தின் நீதித்துறை அலுவலர்களினதும் அட்டவணைப் படுத்தப்பட்ட பிராந்திய பகிரங்க அலுவலர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவிவிலகல் என்பன அப்பிராந்தியத்துக்கெனத் தாபிக்கப்பட்ட பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டதாக இருக்கும்.

(6) பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது தவிசாளரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதி பிராந்தியத்திலுள்ள முதனிலை நீதிமன்றம் எதனையும் அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் பேணப்பட்டுவரும் பதிவேடுகள், இடாப்புகள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றைப்பரிசோதனை செய்வதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய் விசாரணையை நடாத்துவதற்கும் பூரண தத்துவமும் அதிகாரமும் கொண்டவராதல் வேண்டும்.

(7) பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு தீர்மானமூலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படி கொடுக்கப் படலாம் என்பதுடன் உறுப்பினர் ஒருவருக்குக்கொடுபடற்பாலதான அத்தகைய படி இலங்கையின் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) ஐந்தாம், (6) ஆம் அத்துடன் (7) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்திக்கிணங்கத் தாபிக்கப்பட்ட பொதுவான நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(9) இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்திக்கிணங்க அடுத்தடுத்துக்கிட்டவாகவுள்ள இரு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களுக்கென பொதுவான பிராந்திய நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டவிடத்து, அத்தகைய ஆணைக்குழு எப்பிராந்தியங்களுக்கெனத் தாபிக்கப்பட்டதோ அப்பிராந்தியங்கள் இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ஒரு பிராந்தியமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(10) இந்த அத்தியாயத்தில்—

" அட்டவணைப்படுத்தப்பட்ட பிராந்திய பகிரங்க அலுவலர் " என்பது பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்திற் பதிவாளர் அல்லது பிரதிப் — பிசுக்கால் அல்லது ஆறாம் அட்டவணையில் / வகுதிகளில் அல்லது நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் ஆக்கப்பட்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளை மூலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு வகுதிகளில் உள்ளடக்கப்பட்ட அத்தகைய நீதி மன்றத்தின் பதிவகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பிராந்திய பகிரங்க அலுவலர் என்று பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 'XIX'

## உயர் நீதி மன்றத்தினதும், மேன் முறையீட்டு நீதிமன்றத்தினதும், பிராந்திய மேல் நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கம்.

### உயர் நீதிமன்றம்.

சட்டமூலங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்.

164. (1) இவ்வுறுப்புரையின் (2),(3),(4) மற்றும் (5)ஆம் பந்திகளுக்கு அமைய, ஏதேனும் சட்டமூலம் அல்லது அதன்கண் உள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புக்கு ஒவ்வாததாக உள்ளதா எனும் கேள்வி எதனையும் தீர்மானிப்பதற்குத் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு இருத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கானதென அல்லது அரசியலமைப்பை நீக்கி மாற்றீடு செய்வதற்கானதென அதன் விரிவுப் பெயரில் விவரிக்கப்பட்ட ஒரு சட்ட மூலத்தின் விடயத்தில், 101 ஆம் உறுப்புரையினது ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு அத்தகைய சட்டமூலத்திற்கு மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பு மூலமான மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா என்ற கேள்வியை மாத்திரமே உயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

(3) அரசியலமைப்பின் எவையேனும் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கானதென, அல்லது அரசியலமைப்பை நீக்கி மாற்றீடு செய்வதற்கானதென அதன் விரிவுப் பெயரில் விவரிக்கப்பட்ட ஒரு சட்டமூலம் 100 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கப்படக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்துமிடத்து, உயர் நீதிமன்றம், அத்தகைய சட்டமூலம் தொடர்பில் எவ்வித நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தலோ அல்லது பிரயோகித்தலோ ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கானதென அல்லது அரசியலமைப்பை நீக்கி மாற்றீடு செய்வதற்கானதென அதன் விரிவுப் பெயரில் விவரிக்கப்படாத ஒரு சட்ட மூலம், 102 ஆம் உறுப்புரிமையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம், நிறைவேற்றப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப் படுத்துமிடத்து, 101 ஆம் உறுப்புரையினது ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு அத்தகைய சட்ட மூலத்துக்கு, மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பு மூலமான மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதோ என்ற, அல்லது அச்சட்டமூலம் 100 ஆம் உறுப்புரையின் (1)ஆம், (2)ஆம் பந்திகளுக்கிணங்கவிருக்கவேண்டும் என்று தேவைப்படுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வியை மாத்திரமே உயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

(5) அரசியலமைப்பின் ஏற்பாடெதனையும் திருத்துவதற்கானதென அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்கும் ஆனதென அதன் விரிவுப் பெயரில் விவரிக்கப்படாத சட்டமூலத்தின் ஏற்பாடெதுவும் 102 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்டவாறான விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்துமிடத்து, அத்தகைய சட்டமூலத்தின் வேறு ஏற்பாடுகள் எவையும் 102 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மைமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமா என்பதை அல்லது 101ஆம் உறுப்புரையின் பயனைக்கொண்டு அத்தகைய சட்ட மூலத்தின் ஏதேனும் ஏற்பாடு மக்கள் தீர்ப்பின் போதான மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதோ என்பதை அல்லது அத்தகைய சட்டமூலம் 100 ஆம் உறுப்புரையின் (1) ஆம் (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக வேண்டும் என்ற அவசியம் உண்டா என்பதைப் பற்றிய கேள்வியை மாத்திரமே உயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

சட்டமூலங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் நியாயாதிக்கத்தைச் சாதாரணமாகப் பிரயோகித்தல்.

165. (1) நூற்று அறுபத்து நாலாம் உறுப்புரையின் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் கேள்வியைச் சாதாரணமாகத் தீர்மானிப்பதற்கு, உயர் நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்குமாறு சனாதிபதி அல்லது பிரதம நீதியரசருக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்படும் எவரேனும் ஒரு பிரசை எழுத்திலான ஆற்றுப் படுத்தலொன்றின் மூலம் உயர் நீதி மன்றத்தை வேண்டி நிற்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பாராளுமன்றத்தின் நிகழ்ச்சிப்பத்திரத்தில் சட்டமூலம் இடம்பெற்ற இருவாரங்களுக்குள் (1) ஆம் பந்தியின் கீழ் ஆற்றுப் படுத்துகையொன்று செய்யப்படுதல் வேண்டும் அல்லது மனு ஒன்று கோப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் பிரதியொன்று அதே நேரத்தில் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் "பிரசை" என்பது, அத்தகைய குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நாலில் மூன்று பங்குக்குக் குறையாதோர் பிரசைகளாக இருந்தால் அத்தகைய குழு கட்டிணைக்கப்பட்டதாகயிருந்தாலென்ன கட்டிணைக்கப்படாதாயிருந்தாலென்ன, ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும்.

(4) இவ்வுறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அவ்வாறு வேண்டிநிற்கப்பட்டுள்ளவிடத்து, உயர் நீதிமன்றத்தினால் அச் சட்டமூலம் தீர்மானிக்கப்படும்வரையில், அல்லது அத்தகைய ஆற்றுப் படுத்துகையின் தேதியிலிருந்து அல்லது மனுவின் தேதியிலிருந்து மூன்று வாரகாலம் முடிவடையும் வரையில் இவற்றுள் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை, அத்தகைய சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது.

(5) விடயத்திற்கு ஏற்றாற்போல ஆற்றுப்படுத்துகை செய்யப் பட்டு அல்லது மனு சமர்ப்பிக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள்ளாக உயர் நீதிமன்றம் அது பற்றித் தீர்மானித்து, அதன் தீர்மானத்தைச் சனாதி பதிக்கும், சபாநாயகருக்கும் அறிவித்தல் வேண்டும்.

சட்டமூலங்கள் தொடர்பில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கத்தினைச் சிறப்பாகப் பிரயோகித்தல்.

166.(1) அமைச்சரவையின் கருத்தின்படி தேசிய நலனுக்கு அவசியமானதும், அமைச்சரவைச் செயலாளரின் கைப்பட அவ்வாறு அவசரமானது என்று கூறும் ஒரு புறக் குறிப்பைக்கொண்டதுமான ஒரு சட்ட மூலத்தின் விடயத்தில்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) 94 ஆம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியினதும் 165ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள் இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்புடையனவாகாது;

(ஆ) சனாதிபதி, பிரதம நீதியரசருக்கு முகவரியிட்டனுப்பப் படும் எழுத்திலான ஆற்றுப்படுத்துகை மூலம், அந்தச் சட்டமூலம் அல்லது அதன் கண் உள்ள ஏற்பாடு எதுவும் அரசியலமைப்புக்கு ஒவ்வாததாகவுள்ளதா என்பது பற்றி சிறப்பாகத் தீர்மானிக்கும்படி உயர் நீதிமன்றத்தைத் தேவைப்படுத்துதல் வேண்டு(மென்பதுடன்) அதே நேரத்தில் அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் ஒரு பிரதி சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்;

(இ) உயர் நீதிமன்றம் கூடியதிலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் (அல்லது சனாதிபதி குறித்துரைக்கக் கூடியவாறான, மூன்று நாட்களுக்கு மேற்படாததுமான அத்தகையகூடுதலான காலத்துக்குள்), உயர் நீதிமன்றம் அதன் தீர்மானத்தைச் செய்தல் வேண்டும் என்பதுடன், அதன் தீர்மானத்தைச் சனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் மாத்திரமே அறிவித்தலும் வேண்டும்.

(2) நூற்றறுபத்தைந்தாம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய சட்ட மூலத்துக்கு ஏற்புடை-யனவாதல் வேண்டும்.

சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம்.

167. (1) நூற்றறுபத்தைந்தாம், 166ஆம் உறுப்புரைகளின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம், அதற்கான காரணங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், சட்ட மூலம் அல்லது அதன் ஏற்பாடு எதுவும் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாகவுள்ளதா என்பது பற்றியும், ஒவ்வாதிருப்பின் அரசியலமைப்பின் எந்த ஏற்பாடு அல்லது ஏற்பாடுகள் அவ்வாறு ஒவ்வாததாக அல்லது ஒவ்வாதனவாக உள்ளது என்பன பற்றியும் அத்தீர்மானம் கூறுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடு ஏதும் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாகவுள்ளதென உயர் நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து-

(அ) நாநாம் உறப்புரையின் (1)ஆம், (2)ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு அத்தகைய சட்டமூலம் இணங்கியிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்டமூலம், அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு 102 ஆம் உறப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் தேவைப்படுத்தப் பட்ட விசேட பெரும்பான்மை மூலம் மாத்திரமே நிறைவேற்றப்படலாம் என்பதையும்; அல்லது

(இ) அத்தகைய சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு 102 ஆம் உறப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு, 101ஆம் உறப்புரையின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பொன்றில் மக்களினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமா என்பதையும்;

அது கூறுதல் வேண்டும் அத்துடன் அத்தகைய சட்ட மூலத்தை அல்லது அத்தகைய ஏற்பாட்டை அவ்வாறு ஒவ்வாததாக இராமல் செய்யக்கூடிய திருத்தங்களின் இயல்பையும் குறிப்பிடலாம்.

(3) நாற்றுபத்தாறாம் உறப்புரையில் ஏற்பாடு செய்யப் பட்டவாறு புறக்குறிப்பிட்ட ஒரு சட்டமூலத்தின் விடயத்தில், சட்டமூலம் அல்லது அதன் கண் உள்ள ஏற்பாடு எதுவும் அரசியலமைப்பிற்கு ஒவ்வாத தாகவுள்ளது என உயர் நீதிமன்றம் சந்தேகம் கொள்ளுமாயின், அச் சட்டமூலம் அல்லது அச்சட்ட மூலத்தின் அத்தகைய ஏற்பாடு அரசியலமைப்பிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாததாகவுள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், உயர் நீதிமன்றம் இவ்வுறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்ட மூலத்தின் ஏற்பாடு அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாகவுள்ளதெனத் தீர்மானிக்கின்ற கப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு, இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்திக்கு அமைய உயர் நீதிமன்றத்தின் தீர்மானிப்பி றப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது;

(5) இவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள சட்டமூலம் எதுவும், அத்தகைய சட்டமூலத்தை அரசியலமைப்பிற்கு ஒத்ததாக இருக்கச் செய்யும் அத்தகைய திருத்தத்தைச் செய்தபின்னர் அத்தகைய சட்டமூலத்தை நிறைவேற்றுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

அரசியலமைப்பு தொடங்கிய பின்னர் நிறைவேற்றப்படும் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கான தத்துவம்.

168. (1) உயர்நீதிமன்றமானது, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் அதன் நியாயாதிக்கம் வேண்டி... ...கப்படுமிடத்தும், அத்துடன் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமையவும் இந்த அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் நிறைவேற்றப்படும் ஏதேனும் பாராளுமன்றச் சட்டம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு இந்த அரசியலமைப்பின் 111ஆம் அத்தியாயத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாததாக இருக்கின்றதா எனத் தீர்மானிப்பதற்கு, அத்துடன் அது அவ்வாறு தீர்மானிக்குமிடத்து, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அச்சட்டம் அல்லது ஏற்பாடு அதன் ஒவ்வாமையின் அளவுக்கு வறிதாகும் என வெளிப்படுத்துவதற்கும் தனித்துவமானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மேலே கூறப்பட்ட ஏதேனும் அத்தகைய கேள்வியைத் தீர்மானிப்பதற்கான உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது, பாராளுமன்றத்தினால் சட்டவாக்கம் செய்யப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் எழுத்தில் உயர் நீதிமன்றத்திற்கு முகவரியிடப்பட்டு அனுக்கப்படும் மனு ஒன்றின் மூலம் எவரேனும் பிரசையால் வேண்டி... ...க்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியில் "பிரசை" என்பது, குழுவொன்றில் நாலில் மூன்றுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசைகளாக இருப்பின், கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி அத்தகைய குழுவொன்றை உள்ளடக்கும்

(4) உறுப்புரைகள் 164,165,166 என்பவற்றிலும் அத்துடன் இந்த உறுப்புரையிலும் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, வேறுவகையில், நீதி நிர்வாகத்திற்கென உருவாக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் அல்லது வேறு நிறுவனம் எதுவும் அல்லது ஆளெவரும் அல்லது [illegible] ஆட்களின் குழுவெதுவும் ஏதேனும் சட்டமூலம் அல்லது சட்டம் தொடர்பில் அத்தகைய சட்டமூ அரசிலமைப்புச் சார்புடைமையைப்பற்றி அல்லது அது சட்டவாக்க நடைமுறையுடன் முறையாக இணங்கியொழுகப்படுவதைப் பற்றி விசாரணை செய்வதற்கு அல்லது தீர்ப்பு விளம்புவதற்கு எத்தன்மைய ஏதுவின் மீதும் தத்துவமோ அல்லது நியாயாதிக்கமோ கொண்டிருத்தல் ஆகாது.

பிராந்திய சபைகளின் நியதிச் சட்டங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கம்.

169.(1) பிராந்திய சபையினால் நிறைவேற்றப்படும் ஏதேனும் நியதிச் சட்டம் அல்லது அதன்கண்ணுள்ள ஏதேனும் ஏற்பாடு, அரசியலமைப்புடன் ஒவ்வாததாக இருக்கிறதா என்பது பற்றிய ஏதேனும் விடயத்தைத் தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றம் தனியான பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்டவாறாக ஏதேனும் அத்தகைய கேள்வியைச் சாதாரணமாகத் தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றத்து நியாயாதிக்கம்,

(அ) வரைவு நியதிச் சட்டம் அல்லது அதன் கண்ணுள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாக, இருக்கின்றதென, அந்நியதிச் சட்டம் நிறைவேற்றப் படுவதற்கு முன்னர் பிராந்திய சட்டத்துறைத் தனை அதிபதி தமது அபிப்பிராயத்தை ஆளுநருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான அமைச்சருக்கும் பிராந்தியத்தின் அமைச்சர்கள் சபைக்கும் தெரிவித்திருப்பதோடு அத்தகைய அபிப்பி ராயத்தைப் புறக்கணித்து அந்நியதிச் சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திலும், அத்தகைய பிராந்தியச் சட்டத்துறைத் தலைமை அதிபதியினால் உயர் நீதிமன்றத்துக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனுவொன்றின் மூலம் அத்தகைய பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வேண்டி நிற்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) உயர் நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் கேட்டுப் பெற்ற பின்னர், அத்தகைய நீதிமன்றத்துக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனுவொன்றின் மூலம் எவரேனும் பிரசையினால் கோரப்படல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் "பிரசை" என்பது, அத்தகைய குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நாலில் மூன்று பங்குக்குக் குறையாதோர் பிரசைகளாக இருந்தால், அத்தகைய குழு கட்டிணைக்கப் பட்டதாக இருந்தாலுஞ்சரி, கட்டிணைக்கப்படாததாக இருப்பினுஞ்சரி, ஆட்களின் குழுவொன்றை உள்ளடக்கும்.

(4) பிராந்திய சட்டத்துறைத் தலைமையதிபதி ஒருவரினால் நியதிச்சட்டமொன்று தொடர்பில் இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்படுமிடத்து, அத்தகைய நியதிச் சட்டமானது, அரசியல் அமைப்புடன் அதன் ஒவ்வாமை பற்றிய தீர்மானமொன்றை உயர் நீதிமன்றம் செய்யும்வரை நடைமுறையில் இல்லாதிருத்தல் வேண்டும்.

(5) உயர் நீதிமன்றம் அதன் தீர்மானத்தைச் செய்து சனாதிபதிக்கும் அத்தகைய நியதிச் சட்டத்தை ஆக்கிய பிராந்திய சபையின் ஆளுநருக்கும் சபாநாயகருக்கும் தெரிவித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) ஒரு பிராந்திய சபையினால் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டமொன்று அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு அரசிய-லமைப்புக்கு **ஒவ்வாததாக** உள்ளதா என்பது பற்றிய ஏதேனும் விடயம், ஏதேனும் நீதிமன்றத்திலான அல்லது நியாய சபையிலான அல்லது நீதியை நிருவகிப்பதற்கு அல்லது நீதித்துறை அல்லது நீதிமருவிய பணிகளைப் புரிவதற்குச் சட்டப்படி தத்துவமளிக்கப்பட்ட வேறு நிறுவனத்திலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளின் போது எழுகின்ற போதிலெல்லாம், அவ்விடயமானது தீர்மானிக்கப்படுவதற்கென உடனடியாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய ஆற்றுப்படுத்துகையின்மேல் தீர்மானிக்கப்படும்வரை மேலதிக நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு **உயர் நீதிமன்றம் பணிக்கலாம்.**

(7) உயர் நீதிமன்றமானது, நியதிச் சட்டமொன்று அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுடன் **ஒவ்வாத**தாகவுள்ளதெனத் தீர்மானிக்கின்றவிடத்து, அத்தகைய **ஒவ்வா**மையின் அளவுக்கு அத்தகைய நியதிச்சட்டம் அல்லது அதன் ஏற்பாடு வறிதாகுமென வெளிப்படுத்தலாம்.

அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பில் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம்.

170. (1) உயர் நீதிமன்றமானது, அரசியலமைப்பைப் பொருள் கோடல் தொடர்பிலான ஏதேனும் பிரச்சனையை விசாரணை செய்வதற்கும் அது பற்றித் தீர்மானிப்பதற்கும் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில், அல்லது நீதிநிருவகிப்பதற்கு அல்லது நீதிமுறையான அல்லது நீதிமருவிய பணிகளைப் பிரயோகிப்பதற்கு சட்டத்தால் தத்துவமளிக்கப்பட்ட நிறுவகத்தில் நிகழும் ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது அத்தகைய ஏதேனும் பிரச்சினை எழும்போதெல்லாம், அத்தகைய பிரச்சினையின் தீர்மானிப்புக்கென உயர்நீதிமன்றத்திற்கு உடனடியாக ஆற்றுப்படுத்தப் படுதலும் வேண்டும். அத்தகைய ஆற்றுப்படுத்துகையின்மேல், உயர் நீதிமன்றம், அத்தகைய பிரச்சினை தீர்மானிக்கப்படும்வரையில் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படி பணிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) உயர் நீதிமன்றம் அத்தகைய பிரச்சினை பற்றித் தீர்மானிக்கும்போது, வழக்கின் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய விளைவாந்தன்மையினதான ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

அடிப்படை உரிமை மற்றும் மொழி உரிமை பற்றிய நியாயாதிக்கம்.

171.(1) அத்தியாயம் 111 ஆல் அல்லது அத்தியாயம் 1V ஆல் வெளிப்படுத்தப்பட்டு ஏற்ற அங்கீகரிக்கப்பட்டதான ஏதேனும் அடிப்படை உரிமையானது அல்லது மொழி உரிமையானது நிருவாக நடவடிக்கை அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை உட்பட்ட அரசநடவடிக்கையால் அல்லது 10 உறுப்புரையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்டதான ஓர் அடிப்படை உரிமையானது தொடக்க நிலைக் குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றங்களினாலான நீதித்துறை நடவடிக்கையால், மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர் நீதிமன்றம் தனியானதும் பிரத்தியோகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள், அத்தகைய ஆள் தொடர்பிலான அத்தகைய ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை ஆட்சித்துறை நடவடிக்கை அல்லது நிர்வாக நடவடிக்கை உட்பட அரச நடவடிக்கையால் அல்லது நீதித்துறை நடவடிக்கையால் மீறப்பட்டுள்ளதென அல்லது மீறப்படவுள்ளதெனச் சார்த்துமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய மீறல் தொடர்பில் நிவாரணம் அல்லது பரிகாரம் வழங்குமாறு கோரி, அந்த நிகழ்ச்சித் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வலுவிலிருக்கக்கூடியவாறான அத்தகைய நீதிமன்ற விதிகளுக்கிணங்க, உயர் நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்திலான மனுவொன்றின் மூலம், அவர் 30ஆம் உறுப்புரையின், நியதிகளின்படி தாமதமாகவோ அல்லது [illegible] அவரது சார்பில் குழு ஒன்றின் மூலமாகவோ அத்தகைய நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(3) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழான விண்ணப்பமொன்று, உயர் நீதிமன்றத்திடமிருந்து முதலில் கேட்டுப் பெறப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியுடன் மட்டுமே தொடர்ந்து மேற்கொள்ளப்படலாம். இந்த அனுமதியானது, அத்தகைய நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளுக்குக் குறையாதோரால், விடயத்துக்கு ஏற்றவாறு வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்.

(4) ஆட்கொணர் எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, அல்லது யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளுக்கான விண்ணப்பமொன்றை மேல்முறையீட்டு நீதிமன்றமொன்று அல்லது பிராந்திய மேல் நீதிமன்றம் ஒன்று விசாரணை செய்கின்றபோது, அத்தகைய விண்ணப்பத்திற்கான கட்சிக்காரர் ஒருவரால் 111ஆம் அல்லது 1V ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன அல்லது உடனடியாக மீறப்படவுள்ளன என்பதற்கு முதற்றோற்றளவிலான சான்று உள்ளது என்று அத்தகைய நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்ற விடத்து, அத்தகைய நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்கென அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் (6)ஆம் பந்திக்கு அமைய உயர் நீதிமன்றம், இவ்வுறுப்புரையின் (2)ஆம் அல்லது 4 ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மனு அல்லது ஆற்றுப்படுத்துகை தொடர்பில், அச்சந்தருப்பத்தில் நீதியானதும் ஒப்புரவானதும் என அது கருதக்கூடியவாறான அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புகளை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அல்லது அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படவில்லை என அது அபிப்பிராயப்பட்டால், அந்த விடயத்தை நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(6) நீதித்துறை நடவடிக்கையால் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டிருக்கின்ற விடயமொன்றில், நல்லெண்ணத்துடன் செயற்பட்டுள்ள நீதித்துறை அலுவலரொருவருக்கெதிராக நட்ட ஈட்டிற்கான அல்லது செலவுத் தொகைகளுக்கான கட்டளை எதுவும் ஆக்கப்படுதலாகாது, என்பதுடன், உயர் நீதிமன்றமானது ஏதேனும் நட்டஈட்டை அல்லது செலவுத் தொகைகளைச் செலுத்துமாறு அரசுக்குக் கட்டளையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) இவ்வுறுப்புரையின் பந்தி (2) இல் அல்லது (4) இல் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் மனுவொன்றின் அல்லது ஆற்றுப்படுத்துகையொன்றின் விசாரணையின்போது, நிகழ்வு பற்றிய பிணக்கிலுள்ள கேள்விகள் எவையும் இருக்குமிடத்து, உயர் நீதிமன்றமானது, அத்தகைய கேள்விகளை விசாரணைக்கும் அறிக்கைக்குமென மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அல்லது வேறு தோதான குழுவுக்கு அல்லது ஆளுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(8) உயர் நீதிமன்றமானது இவ்வுறுப்புரையின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மனுவை அல்லது ஆற்றுப்படுத்துகையை விடயத்திற்கேற்ப மனு அணைக்கப்பட்ட அல்லது ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் விசாரணை செய்தலும் இறுதியாகக் கேட்டுக் கையுதிர்த்தலும் வேண்டும். அத்துடன் மூன்று மாத காலப் பகுதியைக் கணிப்பிடுகையில், (7) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டது தொடர்பிலான எவையேனும் கேள்விகள் விசாரணைக்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அல்லது வேறு ஏதேனும் குழுவினால் அல்லது ஆளினால் விசாரணைக்கும் அறிக்கை செய்வதற்கும் எடுக்கப்படும் காலப்பகுதி எதுவும் புறநீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

க்கள் தீர்ப்பின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பிலான நியாயாதிக்கம்.

172. உயர் நீதிமன்றம் மக்கள் தீர்ப்பொன்றின் செல்லுபடியாந்தன்மை தொடர்பிலான ஏதேனும் சட்ட நடவடிக்கை மீது விசாரணை செய்து தீர்மானிப்பதற்கும் அத்துடன் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய கட்டளைகளை ஆக்குவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

ாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பிலான நியாயாதிக்கம்.

173. பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்பட்டமை பற்றி . . . . கவனத்திற்குட்படுத்தவும், அவற்றை மீறியமைக்காக எவரேனும் ஆளைத் தண்டிக்கவும், உயர் நீதிமன்றம் சட்டத்துக்கிணங்கியதான தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.

174. (1) உயர் நீதிமன்றமானது, அரசியலமைப்புக்கு அமைய, ஏதேனும் விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்லது அதன் மேன்முறையீட்டு அல்லது மீளாய்வு நியாயாதிக்கத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிக்கையில் பிராந்திய மேல் நீதிமன்றத்தினால் அல்லது எந்த முதனிலை நீதிமன்றத்திலிருந்து, நியாயசபையிலிருந்து அல்லது வேறு நிறுவனத்தில் இருந்து நேரடியாக உயர் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்வதற்கான உரிமை சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளதோ/ அந்த ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால், நியாயசபையினால் அல்லது வேறு நிறுவனத்தினால் புரியப்படக்கூடிய எல்லா நிகழ்வுப் பிழைகளை/ அல்லது சட்டப்பிழைகளைத் திருத்துவதற்காகக் குடியரசுக்காகவும், குடியரசுக்குள்ளும்/மற்றும் குடியியல் குற்றவியல் நியாயாதிக்கம் கொண்ட இறுதி நீதிமன்றமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், எல்லாச் சந்தர்ப்பங்களிலும், உயர் நீதிமன்றத்தினது தீர்ப்புகளும் கட்டளைகளும் அத்தகைய எல்லா விடயங்களிலும் இறுதியானவையும் முடிவானவையுமாதல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றமானது –

(அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால்;

(ஆ) மேன்முறையீட்டு அல்லது மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், பிராந்திய நீதிமன்றமொன்றினால்; அல்லது

(இ) உயர் நீதிமன்றத்துக்கு நேரடியாக மேன்முறையீடு செய்யும் உரிமை வழங்கப்பட்டிருக்கின்ற ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால், நியாய சபையினால் அல்லது வேறு நிறுவனத்தினால்,

ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையிலிருந்து, தீர்ப்பிலிருந்து, தீர்வையிலிருந்து அல்லது தண்டனைத் தீர்ப்பிலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடெதுவும் சட்டப்படி செய்யக்கூடியதாய் இருக்கின்றவிடத்து, அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், மேன் முறையீடென்ற வகையில் தனியானதும், பிரத்தியேகமானதுமான தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் அத்தகைய ஏதேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத் தீர்ப்பை உறுதிப் படுத்தலாம், நேர்மாறாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம் அத்துடன் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்திற்கு, நியாயசபைக்கு அல்லது நிறுவனத்துக்கு அத்தகைய பணிப்புக்களை விடுக்கலாம் அல்லது வழக்கின் நியாயத் தன்மை தேவைப்படுத்தக்கூடியவாறாக, எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் புதிய விளக்கமொன்றை அல்லது மேலும் விசாரணை நடத்துமாறு கட்டளை இடலாம், அத்துடன், நீதியின் நலன்கள் அவ்வாறு தேவைப் படுத்துமெனில் புதிய அல்லது மேலதிகச் சான்றுகள் சமர்ப்பிக்குமாறு கோரலாம், அத்துடன், இத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய சான்றானது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாலோ, பிராந்திய மேல் நீதிமன்றமொன்றினாலோ, அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினாலோ, நியாயசபையினாலோ அல்லது வேறு நிறுவனத்தினாலோ பதியப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

மேன்முறையீட்டு உரிமை.

175(1) விடயத்துக்கு ஏற்றவாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது பிராந்திய மேல் நீதிமன்றம் தன்னிச்சையாக அல்லது எவரேனும் இடருற்ற கட்சிக்காரராக உள்ளவரின் வேண்டுதலின் பேரில் உயர் நீதி மன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமெனின், கணிசமானதொரு சட்டப் பிரச்சனையை உள்ளடக்கும் அத்தகைய ஏதேனும் கருமத்தில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் அது, குடியியல்/லாயிலஞ்சரி, அல்லது குற்றவியலாயிலஞ்சரி –

(அ) மேன் முறையீட்டு நீதிமன்றத்தின்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டு அல்லது மீள்நோக்கு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின்,

ஏதேனும் இறுதிக்கட்டளையொன்றிலிருந்து, தீர்ப்பிலிருந்து, தீர்வையிலிருந்து அல்லது தண்டனைத் தீர்ப்பிலிருந்து உயர் நீதி மன்றத்திற்கு மேன்முறையீடு செய்யக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது பிராந்திய மேல் நீதிமன்றம் மறுத்துள்ளவிடத்து, அல்லது உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி, அவ் வழக்கு அல்லது அக்கருமம் உயர் நீதிமன்றத்தால் மீளாய்வு செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதற்குப் பொருத்தமானதொன்றாக இருக்குமிடத்து, ஏதேனும் கருமத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில், அது குடியியலாயினுஞ்சரி, குற்றவியலாயினுஞ்சரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால், அதன் மேன்முறையீட்டு அல்லது மீள்நோக்கு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், ஆக்கப்பட்ட ஏதேனும் இறுதியான அல்லது இடைக்காலக் கட்டளைக்கெதிராக அல்லது தீர்ப்புக்கெதிராக, தீர்வைக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான சிறப்பான அனுமதியை, உயர் நீதிமன்றமானது அதன் தற்றுணிபில் வழங்கலாம் அத்துடன் உயர் நீதிமன்றம், முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சனையானது பொதுசன முக்கியத்துவம் வாய்ந்ததென அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்ததென அது திருப்தியடைகின்ற அத்தகைய ஒவ்வொரு கருமத்திலும் அல்லது வழக்கு நடவடிக்கையிலும் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியை வழங்குதல் வேண்டும்.

(3) ஏதேனும் கருமம் மீதான மேன்முறையீடொன்று உயர் நீதிமன்றத்திற்கு நேரடியாகவும் அத்துடன் அதற்கெனக் குறிப்பாகப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தினால் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்திலும் செய்யப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளையும் கட்டளைகளையும் மீளாய்வுசெய்தல்.

176. பிரதம நீதியரசர் இடருற்ற கட்சிக்காரர் ஒருவரால் நியாயமானவொரு காலத்திற்குள் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, சம்பந்தப்பட்ட தீர்ப்பு அல்லது கட்டளை அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பானதாக இருக்குமிடத்தும் அத்துடன் இப்பிரச்சனை அத்தகைய தீர்ப்பில் அல்லது கட்டளையில் கருத்திற் கொள்ளப்படாதிருக்குமிடத்தும் உயர்நீதிமன்றத்தால் விளம்பப்பட்ட ஏதேனும் தீர்ப்பு அல்லது ஆக்கப்பட்ட கட்டளை முழுமையான நீதிபதிகளைக்கொண்ட குழாத்தை மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனப் பணிக்கலாம்.

உயர் நீதிமன்றத்தின் வேறு நியாயாதிக்கங்கள்.

177. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, உயர் நீதிமன்றம், இவ்வரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் அத்தகைய தத்துவங்களும் நியாயாதிக்கமும் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கும் அளவுக்கு, 1978 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டின் அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்துக்கு, அரசியலமைப்பின் ஆரம்பத்தில் உரித்தாக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய எல்லாம் தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைப் பிரயோகித்தலும் வேண்டும்.

சட்டத்துறைத் தலைமையதிபதி உரைப்பதற்கான உரிமை.

178. அரசியலமைப்பின் 164ஆம், 165ஆம், 166ஆம், 168ஆம், 169ஆம், 170ஆம், 171ஆம் 172ஆம் மற்றும் 173 மற்றும் 174ஆம் உறுப்புரைகளின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், உயர் நீதிமன்றத்தின் எல்லா வழக்கு நடவடிக்கைகள் பற்றியும் சட்டத்துறைத் தலைமை அதிபதிக் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றில் அவர் தம்பக்க உரையை எடுத்துரைப்பதற்கான உரிமை அவருக்கு இருத்தலும் வேண்டும்.

உயர் நீதிமன்றம் குறித்தசில விடயங்களின் விசாரணைக்கு முந்துரிமை வழங்குதல்.

179. எந்தக் கருமம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் 165,166,167 மற்றும் 170 ஆம் உறுப்புரைகளின் கீழ் வேண்டி நிற்கப்படுகின்றதோ, அந்த ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர் நீதிமன்றம் முந்துரிமை அளித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விடயத்தை இயலுமானவரை விரைவாகக் கையுதிர்த்தலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்.

180. (1) மேன்முறையீட்டு நீதிமன்றம், அரசியலமைப்பின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதன் மூல நியாயாதிக்கத்தை அல்லது எழுத்தாணைவழங்குவதற்கான நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் பிராந்திய மேல் நீதிமன்றம் ஒன்றினால் அத்துடன் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால், நியாயசபையினால் அல்லது வேறு நிறுவனத்தினால் புரியப்பட்ட எல்லா நிகழ்வுப் பிழைகளை அல்லது சட்டப் பிழைகளைத் திருத்துவதற்காக விளக்கத்திற்குப் பாரம்படுத்தப் படும் இவை தொடர்பில் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும், பிரயோகித்தலும் வேண்டும். அத்துடன் எல்லா வழக்குகளிலும், துடரிச்சிகளிலும், வழக்கு நடவடிக்கைகளிலும், குற்ற வழக்குத் தொகுப்புகளிலும், அத்துடன் அத்தகைய நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறு நிறுவனம் கவனத்துக்குக்கெடுத்துக் கொண்டிருக்கக்கூடியனவாக கருமங்களிலும் விடயங்களிலும், மேன்முறையீடு, மீளாய்வு அல்லது தள்ளிவை மீட்பு என்றவகையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் தனியானதும் பிரத்தியேகமானதுமான தத்துவத்தைக்கொண்டிருத்தலும் பிரயோகித்தலும் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, பாராளுமன்றச் சட்டத்தின்மூலம் உரித்தாக்கக்கூடியவாறான அல்லது ஆணையிட்டளிக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா மேன்முறையீட்டு மற்றும் மூல தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன் பிரயோகித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டில் உள்ள தத்துவங்கள்.

181. (1) இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்திக்கு அமைய, மேன்முறையீட்டு நீதிமன்றம், 180ஆம் உறுப்புரையின்கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், சட்டத்திற்கிணங்க ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத்தீர்ப்பை உறுதிப்படுத்தலாம், நேர்மாறாக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது அத்தகைய நீதிமன்றத்துக்கு, நியாயசபைக்கு அல்லது வேறு நிறுவனத்துக்குப் பணிப்புகள் வழங்கலாம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மேல், புதிய விளக்கமொன்றுக்கு அல்லது மேலும் விசாரணைக்கு கட்டளையிடலாம்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் தீர்ப்பு, தீர்வை, கட்டளை அல்லது தண்டனைத்தீர்ப்பு எதுவும், திறத்தவர்களின் பொருளளவிலான உரிமைகளுக்குப் பங்கம் விளைவித்திருக்காத ஏதேனும் பிழை, குறைபாடு அல்லது ஒழுங்கின்மை காரணமாக, அல்லது நீதி வழுவொன்றை ஏற்படுத்தாத ஏதேனும் பிழை, குறைபாடு அல்லது ஒழுங்கின்மை காரணமாக நேர்மாறாக்கப்படுதலோ அல்லது வேறுபடுத்தப்படுதலோ ஆகாது.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கின் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறாக, ஏதேனும் மூல வழக்கில், தொடர்ச்சியில், வழக்குத் தொடுப்பில் அல்லது வழக்கு நடவடிக்கையில் பிரச்சினையில் உள்ள விடயங்கள் தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்தில், நியாயசபையில் அல்லது நிறுவனத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட சான்றுக்கு மேலதிகமாக அல்லது குறைநிரப்பியாகப் புதிய சான்றை மேலும் பெற்றுக் கொள்ளலாம் அல்லது அனுமதிக்கலாம்.

ஆட்கொணர் எழுத்தாணைகள் தவிர்ந்த எழுத்தாணைகள் வழங்குவதற்கான தத்துவங்கள்.

182. (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் பதிவேடுகளைப் பார்வையிடுவதற்கும் பரிசோதனை செய்வதற்கும், அத்துடன், ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் நீதிபதிக்கு அல்லது எவரேனும் வேறு ஆளுக்கு எதிராக உறுதிகேள் எழுத்தாணைகள், தடையீட்டெழுத்தாணைகள் அத்துடன் யாதுரிமை எழுத்தாணைகள் வழங்குவதற்கும் விடுப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முழுத் தத்துவமும், அதிகாரமும் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பாராளுமன்றம், சட்டத்தின்மூலம் அத்தகைய சட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வகுதியைச் சேர்ந்த விடயங்களில், இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்மீது சுமத்தப்பட்டுள்ள நியாயாதிக்கமானது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்லாமல், உயர் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென ஏற்பாடு செய்யலாம்.

ஆட்கொணர் எழுத்தாணைகள் வழங்குவதற்கான தத்துவங்கள்.

183.(1) இரண்டாம் மற்றும் (3)ஆம் பந்திகளுக்கமைய, மேன்முறையீட்டு நீதிமன்றம்—

(அ) சட்டத்துக்கிணங்கக் கையாளப்படுவதற்காக ஆளெவரையும்; அல்லது

(ஆ) பகிரங்கக் கட்டுக்காவலில் அல்லது தனிப்பட்ட கட்டுக்காவலில் சட்டவிரோதமாக அல்லது சரியில்லாத முறையில் தடுத்துவைத்திருக்கப்படும் ஆள் எவரையும்,

அத்தகைய நீதிமன்றத்துக்குமுன் கொண்டுவருவதற்கும், அத்துடன், அவ்வாறு கொண்டுவரப்படும் ஆள் எவரையும் விடுதலை செய்வதற்கு அல்லது விளக்கமறியலில் வைப்பதற்கு அல்லது சட்டத்துக்கிணங்க அத்தகைய ஆளுக்கெதிராக நடவடிக்கைஎடுப்பதற்கு, ஆட்கொணர் எழுத்தாணைகள் என்ற தன்மையில் கட்டளைகள் வழங்கலாம், அத்துடன் விடுக்கலாம்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் கட்டளை ஒன்றுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், அத்தகைய ஆளை மிக வசதியான முதனிலை நீதிமன்றத்துக்குமுன் கொண்டுவருமாறு தேவைப்படுத்துவதும், சார்த்தப்பட்ட சிறைப்படுத்தல் அல்லது தடுத்துவைப்புப்பற்றிய செயல்கள்மீது கொணரப்பட்ட ஆளை இடைக்காலக் கட்டுக்காவலில் வைத்திருப்பதற்காக, அத்தகைய நீதிமன்றம் சரியானதென எண்ணுகின்றவாறான அத்தகைய ஏற்பாட்டைச் செய்யுமாறும், அத்தகைய நீதிமன்றத்தின் நீதிபதியைப் பணிப்பது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும், அத்துடன் மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன்மேல், சிறைப்படுத்தப்பட்டவர் அல்லது தடுத்துவைத்திருக்கப்பட்டவர் எனச் சார்த்தப்படும் ஆளை விடுதலை செய்யுமாறு அல்லது விளக்கமறியலில் வைத்திருக்குமாறு கட்டளை ஆக்குதல் வேண்டும், அல்லது சட்டத்துக்கிணங்க அத்தகைய ஆளை வேறுவகையில் கையாளுதல் வேண்டும், அத்துடன் முதனிலை நீதிமன்றமானது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அவ்வாறு விளம்பப்படும் அல்லது ஆக்கப்படும் கட்டளைக்கு இணங்க ஒழுகுதல் வேண்டும் அல்லது அக்கட்டளைக்கு உடனடிப்பயன் கொடுத்தல் வேண்டும்.

(3) பராயமடையாத சிறுவர்களின் கட்டுக்காவல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பிலான நியாயாதிக்கம் ஏதேனும் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுவதற்காகச் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்படுகின்றவிடத்து, மேன் முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய பராயமடையாத சிறுபிள்ளை எதனதும் கட்டுக்காவல் தொடர்பிலான பிணக்கு எதுவும் அத்தகைய நீதிமன்றத்தினால் மிகச் சரியான முறையில் கையாளப்படலாமெனத் திருப்திப்பட்டால் இவ்வுறுப்புரையின்கீழான கட்டளை ஒன்றுக்கான விண்ணப்பம் ஒன்றுக்கான திறத்தவர்களை, அத்தகைய பராயமடையாத சிறுபிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பில் அந்நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யுமாறு பணிக்கலாம்.

மறியற்காரர்களைக்கொண்டு வருவதற்கும் அகற்றுவதற்குமான தத்துவம்.

184. மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருமாறு பணிக்கலாம்: அதாவது—

(1) எதேனும் மறியற்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற்காரர் ஒருவரை, இராணுவ நீதிமன்றம் ஒன்றின் முன்னர் அல்லது குடியரசின் சனாதிபதியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஆணையின் அதிகாரத்தின்கீழ்ச் செயற்படும் எவரேனும் ஆணையாளர்களின் முன்னிலையில், முறையே அத்தகைய ஏதேனும் இராணுவ நீதிமன்றத்தில் அல்லது ஆணையாளர்களுக்கு முன்பாக முடிவுறாதிருக்கும் எவையேனும் விடயங்கள் தொடர்பில் விளங்கப்படுவதற்காக அல்லது விசாரணை செய்யப்படுவதற்காக, அவரைக்கொண்டு வருமாறு பணிக்கலாம்; அல்லது

(11) மறியற்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற்காரர் ஒருவரை, விளங்கும் நோக்கத்துக்காக, ஒரு கட்டுக்காவலிலிருந்து வேறு ஒன்றுக்கு அகற்றும்படி பணிக்கலாம்.

இடைக்காலக் கட்டளைகள் வழங்குவதற்கான தத்துவங்கள்.

185. (1) இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்திக்கு அமைய, அத்தகைய தடைக்கட்டளைக்காக விண்ணப்பமொன்றைச் செய்கின்ற திறத்தவர் ஒருவர், ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை ஒன்றைக் கொண்டு வருவதன்மூலம் பொல்லாங்கெதனையும் தடைசெய்வதற்கு முன்னர் நிகழக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் பரிகாரம் காணமுடியாத பொல்லாங்கைத் தடைசெய்வதற்கு, தடைக்கட்டளை வழங்குவதற்கும், ஊக்குவதற்குமான தத்துவத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை எதற்குமான திறத்தவர் ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதிலிருந்து அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைத் தொடுப்பதிலிருந்து தடை செய்வதற்கு அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நடவடிக்கையிலுள்ள எவரேனும் திறத்தவரை வழக்கு நடவடிக்கைக்கான, எதிர்வாதத்திற்கான அல்லது மேன்முறையீட்டுக்கான ஏதேனும் ஏதுவை வற்புறுத்துவதிலிருந்து தடைசெய்வதற்கு அல்லது ஒரே வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கைக்காகவும், அது தொடர்பிலும் இருவேறு நீதிமன்றங்களில் இரு தனிவேறான வழக்கு நடவடிக்கைகளை அத்தகைய ஆள் தொடுத்திருக்கின்ற சந்தர்ப்பத்தைத் தவிர, ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதிலிருந்து அல்லது தொடுப்பதிலிருந்து ஆள் எவரையும் தடைசெய்வதற்குத் தடைக்கட்டளை வழங்குவது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சட்டமுறையாதல் ஆகாது. இந்த விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் பொருத்தமானதென எண்ணுகின்றவாறான அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் ஒன்றையோ அல்லது மற்றதையோ தொடுப்பதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைப்படுத்துவதன்மூலம் குறைக்கிடுவதற்கான தத்துவத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் கொண்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்தல் ஆட்சேபணை மனுக்கள்.**

186. பாராளுமன்ற உறுப்பாண்மைக்கான அல்லது பிராந்திய சபை உறுப்பாண்மைக்கான தேர்தல் சம்பந்தமான தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விளங்குவதற்கு, அது தொடர்பில் அப்போ-தைக்கு ஏற்புடையதாகவிருக்கும் ஏதேனும் சட்டத்திற்கிணங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதனைப் பிரயோகித்தலும் வேண்டும்.

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறு நியாயாதிக்கங்கள்.**

187. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, மேன்முறையீட்டு நீதிமன்றம், இவ்வரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் அத்தகைய தத்துவங்களும், நியாயாதிக்கமும் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கும் அளவுக்கு, 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உரித்தாக்-கப்பட்டவும் இவ்வரசியலமைப்பு ஆரம்பிக்கும்போது இருக்கின்ற
வேறு
வாறான அத்தகைய/எல்லாத் தத்துவங்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றை அது பிரயோ-கித்தலும் வேண்டும்.

**பதிவேடுகளைப் பரிசோதனை செய்தல்.**

188. மேன்முறையீட்டு நீதிமன்றம் தானாகவே செயற்பட்டு, அல்லது ஏதேனும் விண்ணப்பஞ்செய்யப்பட்டதன்மேல், பிராந்திய மேல் நீதிமன்றமொன்றினால் தொடக்கநிலை நியாயாதிக்கத்தின் அல்லது எழுத்தாணை நியாயாதிக்கத்தின் பிரயோகம் தொடர்பிலான ஏதே-னும் பதிவேட்டையும் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் ஏதேனும் பதிவேட்டையும் சமர்ப்பிக்குமாறு கேட்கலாம், சோதனையிடலாம் அத்துடன் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் நீதி நிருவாக நலன்கள் தேவைப்படுத்தக்கூடிய வகையில் அதுபற்றி ஏதே-னும் கட்டளையினை ஆக்கலாம்.

பிராந்திய மேல் நீதிமன்றங்கள்

**பிராந்திய மேல்நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்.**

189.(1) பிராந்திய மேல் நீதிமன்றம் ஒவ்வொன்றும், சட்டத்திற்கிணங்க -

(அ) விடயத்துக்கேற்றவாறு, பிராந்தியத்துக்குள் அல்லது தலைநகர ஆள்புலத்துக்குள் புரியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட தவறுகள் தொடர்பில், அரசியலமைப் பின் ஆரம்பத்தின் போது இலங்கை மேல் நீதி மன்றத்துக்கு இருந்த மூல குற்றவியல் நியாயா திக்கத்தை;

(ஆ) விடயத்துக்கு ஏற்றவாறு, பிராந்தியத்துக்குள் அல்லது தலைநகர ஆள்புலத்துக்குள் நீதிவான் நீதிமன்றங்களினாலும் ஆரம்ப நீதிமன்றங்களினா -லும் விதிக்கப்பட்ட குற்றத் தீர்ப்பளிப்புகள், தண்டனைத் தீர்ப்புகள் மற்றும் கட்டளைகள் தொடர்பில், மேன்முறையீட்டு மற்றும் மீளாய் -வு செய்யும் நியாயாதிக்கத்தை;

(இ) விடயத்துக்கேற்றவாறு, இணைபான பிராந்தி யம் அல்லது தலைநகர ஆள்புலம் தொடர்பில், 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 154கு (3)(இ) என்னும் உறுப்புரையின் கீழ் மாகாண மேல் நீதிமன்றங்களுக்குச் சட்டத்தி னால் அளிக்கப்பட்டவும் இவ்வரசியலமைப்பு ஆரம்பிக்கும்போது பிரயோகப்படுத்தற்பாலன வாக இருந்தவுமான பல்வேறு நியாயாதிக் கங்களையும், தத்துவங்களையும்; அத்துடன்

(ஈ) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் அல்லது நியதிச் சட்டமூலம் பிராந்திய சபை வழங்கக்கூடியதான அத்தகைய வேறு நியாயாதிக்கத்தையும் தத்து வங்களையும்,

பிரயோகித்தல் வேண்டும்.

(2) தலைநகர ஆள்புல மேல் நீதிமன்றம் தவிர்ந்த, அத்தகைய மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் சட்டத்திற்கிணங்க-

(அ) பிராந்தியத்துக்குள் சட்டவிரோதமாகத் தடுத்துவைத்திருக்கப்படும் ஆட்கள்தொடர்பில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொணர் எழுத்தாணை என்ற தன்மையின

தான கட்டளைகளை விடுப்பதற்கு; அத்துடன்

(ஆ) (1) ஏதேனும் சட்டத்தின் கீழான; அல்லது

(11) அப்பிராந்தியத்துக்கென தாபிக்கப்பட்ட பிராந்தியச் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்தின் கீழான

ஏதேனும் தத்துவத்தை; பிராந்திய நிரலில் கூறப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில், பிராந்தியத்துக்குள் ளாக பிரயோகிக்கின்ற எவரேனும் முதனிலை நீதிமன்ற நீதிபதிக்கு/ஏதேனும் நியாயசபைக்கு, வேறு நிறுவனத்துக்கு அல்லது ஆளுக்கு எதிராக உறுதி கேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, ஆணையீட் டெழுத்தாணை, மற்றும் யாதுரிமை எழுத்தாணை என்ற தன்மையினவான

(இவ்வரசியலமைப்பில் "எழுத்தாணை நியாயாதிக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளைகளை விடுப்பதற்கு, நியாயாதிக்கம் கொண் டதாதல் வேண்டும்.

(3) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் வேறு வகையில் ஏற்பாடு செய்தாலொழிய, அரசியலமைப்பு ஆரம்பிக்கும் போது இலங்கை மேல் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்பட்ட பல்வேறு நியாயாதிக்கங்களும், தத்துவங்களும், தலைநகர ஆள்புல மேல் நீதி மன்றத்தினால், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பிரயோகிக் கப்படுதல் வேண்டும்.

(4) அரசியலமைப்பில் எது எப்படியிருப்பினும், தலை நகராள்புலம் மேல் நீதிமன்றம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பிரதம நீதியரசரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மேற்குப் பிராந்தியத்தின் அத்தகைய நீதித்துறைப் பிரிவுகள் தொடர்பில், இவ் வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நியாயா திக்கம் உட்பட, மேற்குப் பிராந்தியத்தின் மேல் நீதிமன்றத்தினது நியாயாதிக்கத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

(5) அரசியலமைப்பின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பிராந்திய மேல் நீதிமன்றம் எதுவும், அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூல நியாயாதிக்கத்தை அல்லது மீளாய்வு செய்யும் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அதனால் வழங்கப்பட்ட இறுதிக்கட்டளை யொன்றினால், தீர்ப்பினால் அல்லது தண்டனைத்தீர்ப்பினால் இன்னலுற்ற ஆளெவரும், அதற்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்யலாம்.

(6) அரசியலமைப்பின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பிராந்திய நீதிமன்றம் எதுவும், அதன் மூல நியாயாதிக்கத்தை அல்லது எழுத்தாணை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அதனால் வழங்கப்பட்ட இறுதிக் கட்டளையொன்றினால், தீர்ப்பினால் அல்லது தண்டனைத் தீர்ப்பினால் இன்னலுற்ற ஆளெவரும், அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்யலாம்.

(7) (அ) சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, பிராந்திய மேல் நீதிமன்றமொன்றின் நியாயாதிக்கம், நீதிமன்றத்தின் ஒரேயொரு நீதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பிரதம நீதியரசர், கிடைக்கக்கூடியனவாக இருக்கும் வசதிகளைக் கருத்திற்கொண்டு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், குறிப்பிட்ட ஓர் இடத்தில் இயங்கும் எப்பிராந்திய மேல் நீதிமன்றமொன்றுக்குப் பிரத்தியேக மூல குற்றவியல் நியாயாதிக்கம் இருத்தல் வேண்டும் என்பது பற்றித் தீர்மானிக்கலாம்.

(இ) பிரதம நீதியரசர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், எவ்விடத்தில் பிராந்திய மேல்நீதிமன்றமொன்றின் நீதிபதி, அந்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன் முறையீட்டு, மீளாய்வு செய்யும் மற்றும் எழுத்தாணை நியாயாதிக்கங்களில் ஒன்றை
-யோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதற்கு மேற்பட்டவையோ பிரயோ-கித்தல் வேண்டும் என்பது பற்றிக் குறித்துரைக்கலாம்.

(8) பிராந்திய மேல் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி, அப்பிராந்திய மேல் நீதிமன்றத்தின் ஒவ்வொரு நீதிபதியினதும் அமர்-விடத்தைக் காலத்துக்குக்காலம் தீர்மானித்தல் வேண்டும்.

(9) பிரதம நீதியரசர், இவ்வுறுப்புரையின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதனையும் எந்நேரத்திலும் வேறுபடுத்தலாம்.

(10) இவ்வுறுப்புரையில் -

"இலங்கை மேல் நீதிமன்றம்" என்பது, 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட இலங்கை மேல் நீதிமன்றம் எனப்பொருள் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XX

### பகிரங்க சேவை

சனாதிபதியால் செய்யப்படும் நியமனம்.

190.(1) இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்திக்கமைய/சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டுமென அரசியலமைப்பினால் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாத் தேசிய பகிரங்க அலுவலர்களையும், சட்டத்துறைத் தலைமையதிபதியையும், தரைப்படை, கடற்படை, வான்படை, பொலிசுப்படை ஆகியவற்றின் தலைவர்களையும் சனாதிபதி நியமிக்க வேண்டும்.

(2) எவரேனும் தேசிய பகிரங்க அலுவலர், அரசியலமைப்புப் பேரவை அல்லது உயர்பதவிகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் விதப்புரையின் பேரில் நியமிக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய பகிரங்க அலுவலர் அத்தகைய விதப்புரையுடன் இணைந்தொழுகவே சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு.

191. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய எல்லாப் பகிரங்க அலுவலர்களினதும் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவை தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

தேசிய பகிரங்க அலுவலர்களின் பதவிக்காலம்.

192. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய எல்லாத் தேசிய பகிரங்க அலுவலர்களும் விரும்பியாங்கு பதவி வகித்தல் வேண்டும்.

அமைச்சரவையால் கொள்கை திட்டமிடப்படல்.

193. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவை தேசியப் பகிரங்க அலுவலர்கள் தொடர்பில்/கொள்கை தொடர்பிலான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அமைப்பு.

194.(1) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்பட்ட பத்து ஆட்களுக்கு மேற்படாத ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். சனாதிபதி, ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரைத் தவிசாளராகப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆள் எவரும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அல்லது ஒரு பிராந்திய சபை உறுப்பினராக இருந்தால், தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு உறுப்பினராக நியமிக்கப்படவோ அல்லது தொடர்ந்திருக்கவோ ஆகாது.

(3) (அ) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னராக அரச சேவையில் பகிரங்க அலுவலர் ஒருவராக இருந்த அல்லது ஒரு நீதித்துறை அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய நியமனம் பயனுறத் தொடங்கியதும், அத்தகைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்பதுடன், ஒரு தேசிய அல்லது பிராந்திய பகிரங்க அலுவலராகவோ அல்லது நீதித்துறை அலுவலராகவோ மேலும் நியமிக்கப்படுவதற்குத் தகவற்றவராதலும் வேண்டும்;

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொவ்வொருவரும் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அவர் இல்லாதொழிகின்ற வரைக்கும், அல்லது அத்தகைய ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருக்கையில், விடயத்திற்கேற்ப, அவர் ஒரு பகிரங்க அலுவலராக அல்லது ஒரு நீதித்துறை அலுவலராக இருந்திருப்பின், எந்த வயதில் ஓய்வு பெறும்படி அவர் தேவைப்படுத்தப்படுவாரோ அந்த வயதை எய்தினால் அத்தகைய சேவை தொடர்பில் ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், அல்லது வேறு படிகள் வழங்குதல் தொடர்பான ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கங்களுக்காக விடயத்திற்கேற்ப அரச சேவையிலுள்ள ஒரு பகிரங்க அலுவலராகவும் அல்லது ஒரு நீதித்துறை அலுவலராகவும் அரச சேவையில் ஓய்வூதியம் கொண்ட பதவியை வகிக்கின்றவராகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் தம் கைப்பட எழுதி சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் முன்கூட்டியே தமது பதவியைத் துறந்தாலொழிய, அல்லது காட்டப்படவேண்டிய காரணத்துக்காகப் பதவியிலிருந்து சனாதிபதியினால் அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதியிலிருந்து நான்கு ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். ஆனால், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(5) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் எவருக்கும் அவர் கடமைக்கு வராதிருப்பதற்கான லீவை சனாதிபதி வழங்கலாம் என்பதோடு, அத்தகைய லீவுக்காலப்பகுதியில் தற்காலிக உறுப்பினராக இருக்கவெனத் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு உறுப்பினராக இருக்கத் தகைமை கொண்டவோர் ஆளையும் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(6) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு உறுப்பினரொருவருக்குப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய எவரேனும் உறுப்பினருக்குக் கொடுக்கப்படற்பாலதான சம்பளம் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அவரது பதவிக் காலத்தின்போது குறைக்கப்படுதலும் ஆகாது.

(7) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் ஆணைக்குழுவினால் நியமிக்-கப் படுதல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(9) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவானது, அதன் உறுப்-பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பினும், செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்; அத்தகைய ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருப்ப-தன் காரணமாக மட்டும், அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், செல்லுபடியற்ற-தாகவிருத்தலோ, செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

(10) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, தேசிய பகிரங்க ஆணைக்குழுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினரொருவர் பகிரங்க சேவையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(11) இவ்வுறுப்புரையினதும் உறுப்புரைகள் 191, 192 193 என்பவற்றினதும் நோக்கத்திற்காக, "தேசிய பகிரங்க அலுவலர்" என்பது தரைப்படையின், கடற்படையின், அல்லது வான்படையின் உறுப்பினரொருவரை உள்ளடக்க மாட்டாது.

தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் குறித்த சில தத்துவங்கள் குழு ஒன்றுக்குக் கையளிக்கப்படுதல்.

195. (1) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு, ஆணைக்குழுவினால் பெயர் குறிக்கப்படவேண்டிய மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ள தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஒரு குழுவிற்கு, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் வகுதியினரான தேசிய பகிரங்க அலுவலர்கள் தொடர்பிலான நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான தத்துவங்களைக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழுவின் தவிசாளர் அவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவின் ஓர் உறுப்பினராகவுள்ளவிடத்து, ஆணைக்குழுவின் தவிசாளரே அக்குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் ஓர் உறுப்பினராக இல்லாதவிடத்து, அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளரால் எழுத்துமூலமாகப் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடியவாறான அக்குழுவின் ஓர் உறுப்பினர், அக்குழுவின் தவிசாளராதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) அத்தகைய ஏதேனும் குழு, அதன் உறுப்பாண்மையில் வெற்றிடம் எதுவும் இருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருந்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாகாது அல்லது செல்லுபடி -யற்றதாகக் கருதப்படுதலாகாது.

**தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது குழுவினால் ஒரு தேசிய பகிரங்க அலுவலருக்குத் தத்துவங்கள் கையளிக் -கப்படுதல்.**

196.(1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் ஏதேனும் குழு தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக ஏதேனும் வகுதியினரான தேசிய பகிரங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம் அல்லது ஒழுக் -காற்றுக் கட்டுப்பாடு என்பனவற்றிற்கான அதன் தத்துவங்களை தேசிய பகிரங்க அலுவலர் ஒருவருக்குக் கையளிக்கலாம்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் கீழ் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் ஏதேனும் குழு அதன் தத்து -வங்களை எந்தத் தேசிய பகிரங்க அலுவலருக்குக் கையளித்துள்ளதோ அந்தத் தேசிய பகிரங்க அலுவலரினால் ஆக்கப்பட்ட இடமாற்றக் கட்டளையினால் அல்லது பதவி நீக்கற் கட்டளையினால் அல்லது ஓர் ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பான வேறேதேனும் கட்டளையினால் இன்னலுறும் தேசிய பகிரங்க அலுவலரெவரும், விடயத்திற்கேற்றவாறு, தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு அல்லது அத்தகைய குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடையவராதல் வேண்டும்.

தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவானது,

(3)/தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு இந்த உறுப்பு -ரையின் கீழ் அதன் தத்துவங் களை எந்தக் குழுவிற்குக் கையளித்துள்ளதோ அந்தக் குழுவினால், அல்லது இவ்வுறுப்புரையின் கீழ் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு அதன் தத்துவங்களை எந்தத் தேசிய பகிரங்க அலுவலருக்குக் கையளித் -துள்ளதோ அந்தத் தேசிய பகிரங்க அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் நியமனத்தை, ஆக்கப்பட்ட இடமாற்றக் கட்டளையை அல்லது பதவி நீக்கற் கட்டளையை அல்லது ஓர் ஒழுக்காற்றுக் கருமம்தொடர் பான வேறேதேனும் கட்டளையை மேன்முறையீட்டின் மீதோ அல்லது வேறு வகையாகவோ மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது [illegible] இல்லாதொழிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் ஒழுக்குச் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது, ஒரு, இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் அதன் தத்துவங்களை எந்தத் தேசிய பகிரங்க அலுவலரொருவருக்குக் கையளித்துள்ளதோ அந்தத் தேசிய பகிரங்க அலுவலரால் செய்யப்பட்ட ஏதேனும் நியமனத்தை, இடமாற்றல் அல்லது பதவிநீக்கக் கட்டளையை அல்லது ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பிலான வேறு ஏதேனும் கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான தத்துவமுடையதாதல் வேண்டும்.

நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் பகிரங்க சேவை தொடர்பான ஏதேனும் கட்டளை அல்லது முடிவுபற்றித் தீர்ப்புக் கூறுதலோ அல்லது அவற்றைக் கேள்விக்குட் படுத்தலோ ஆகாது.

197. உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன தவிர்ந்த நீதிமன்றம் அல்லது நியாய சபை எதுவும், தேசிய பகிரங்க அலுவலரொருவரின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பில், தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின், தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவினது ஒரு குழுவின், அல்லது ஒரு தேசிய பகிரங்க அலுவலரின் ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்ய, அதன்மீது தீர்ப்புக் கூற அல்லது அதனை எம்முறையிலும் கேள்விக்குட் படுத்த தத்துவமோ அல்லது நியாயாதிக்கமோ கொண்டிருத்தலாகாது

தேசிய பகிரங்க சேவை தொடர்பாக உளதான விதிகளும் ஒழுங்கு விதிகளும் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

198. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாகவும் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு வேறுவகையாக ஏற்பாடு செய்யும் வரையும், அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவிலிருந்த தேசிய பகிரங்க சேவை தொடர்பான விதிகள், ஒழுங்கு விதிகள், நடவடிக்கைமுறைகள் என்பன, ஏற்றமாற்றங்களுடன் இவ்வரசியலமைப்பின்கீழ் ஆக்கப்பட்டவை அல்லது ஏற்பாடு செய்யப்பட்டவை என்றாற்போன்று பகிரங்க சேவை தொடர்பான விதிகள், ஒழுங்குவிதிகள், நடவடிக்கைமுறைகள் என்பனவாகத் தொடர்ந்து வலுவிலுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுடன் தலையிடுதல் தவறொன்றாகும் என்பது.

199.(1)தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின், அல்லது அதன் ஏதேனும் குழுவின், அல்லது அத்தகைய ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரின், அல்லது அத்தகைய ஆணைக்குழுவினால் அல்லது குழுவினால் கையளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கும் எவரேனும் தேசிய பகிரங்க அலுவலரின் ஏதேனும் முடிபின்மீது நேரடியாக அல்லது மறைமுகமாக, தாமாகவோ அல்லது வேறெவரேனும் ஆள் மூலமாகவோ எத்தகையதுமான எம் முறையிலேனும், அவரது கடமைகளைப் புரியும்போதன்றி, வேறுவகையாகச் செல்வாக்கைப் பிரயோகிக்கும் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனிக்கும் ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், விளக்கத்தின் பின்னர் பிராந்திய மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்துக்கு, அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையிலுள்ளதெதுவும், ஏதேனும் பகிரங்கப் பதவிக்கான எவரேனும் விண்ணப்பகாரருக்கு அல்லது வேட்பாளருக்கு சான்றிதழொன்றை அல்லது நடத்தைச் சான்றிதழொன்றை எவரேனுமாள் கொடுப்பதனைத் தடைசெய்தலாகாது.

பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு.

200.(1)(அ) அத்தியாயம் XV என்பதன் கீழ் தாபிக்கப்பட்ட பிராந்தியம் ஒவ்வொன்றுக்கும் பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும். இவ்வாணைக்குழு, அப்பிராந்தியத்தின் அமைச்சர் சபையுடனான கலந்தாலோசனையுடன் செயற்படும் அரசியலமைப்புப் பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்படுவதன்மீது அப்பிராந்தியத்தின் ஆளுநரால் நியமிக்கப்படும் மூன்றுக்குக் குறையாதவர்களும் ஏழுக்கு மேற்படாதவர்களுமான ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆளுநர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரைத் தவிசாளராக இருப்பதற்கென பெயர்குறித்து நியமித்தலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் பெயர்குறித்த நியமனங்களைச் செய்கையில் அரசியலமைப்புப் பேரவையானது, அப்பிராந்தியத்தின் இன அமைப்பை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(2) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினரொருவ-ராக, பிராந்திய சபையொன்றின் உறுப்பினரொருவராக, உள்ளூ ரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராக, அரச சேவையின் உள்ள பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொ-ருவராக இருந்தால் அவர் பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது தொடர்ந் திருத்தலோ ஆகாது.

(3) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர் ஒவ்வொருவரும் பிராந்தியத்தின் ஆளுநருக்கு முகவரியிட்டனுப் பப்படும் கடிதத்தின் மூலம் முன்கூட்டியே தமது பதவியைத் துறந்தாலொழிய அல்லது காட்டப்படவேண்டிய காரணத்துக்காக அப்பிராந் தியத்துக்கான அமைச்சர் சபையின் வேண்டுகோள் ஒன்றின் மீது செயற்படும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது அவர் ஆளுநரால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்றின் உறுப்பினரொருவருக்கு அப்பிராந்தியத்துக்கான பிராந்திய சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளம் கொடுக்கப்படு-தல்வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப்பினருக்குச் செலுத்தப்படற் பாலதான அத்தகைய சம்பளம் அப்பிராந்தியத்தின் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் உறுப்பினரின் பதவிக் காலத்தின்போது குறைக்கப்படுதலும் ஆகாது.

(5) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்று உறுப்பாண்மையின் ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றுவதற்குந் தத்துவமுடையதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆணைக்குழுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அத்தகைய ஏதேனும் வெற்றி-டம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

பிராந்திய அமைச்சுக்களின் பிரதம செய-லாளரும் செயலாளர்களும்.

201. பிராந்தியமொன்றின் பிரதம செயலாளரும் பிராந்தியமொன்றின் அமைச்சர்கள் சபையின் ஒவ்வொரு அமைச்சர்களினதும் அமைச்சுச் செயலாளரும் பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது பிராந்-தியத்தின் ஆளுநரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

பிராந்திய பகிரங்க அலுவலர்களின் பதவிக் காலம்.

202. அரசியலமைப்பினால் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாற்தவிர, எல்லாப் பிராந்தியப் பகிர-ங்க அலுவலர்களும் விரும்பியாங்கு பதவி வகித்தல் வேண்டும்.

பிராந்திய பகிரங்க சேவை.

203.(1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பிராந்தியத்தினதும் பிராந்தியப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன அப்பிராந்தியத்தின் பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பிராந்திய-த்தின் அமைச்சர் சபை, அப்பிராந்தியத்தின் பிராந்தியப் பகிரங்க அலுவலர்கள் தொடர்பிலான கொள்கை பற்றிய எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(3) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு பிராந்தியத்தின் பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி விலக்குதல், அத்துடன் அவர்கள்மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதுடன் அத்தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கையளிப்பதற்குமான நடவடிக்கை முறையையும் தீர்மானிக்கலாம்.

(4)(அ) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் ஏதேனும் கட்டளைமீது அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவின்மீது எதனையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாமாகவோ அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ எத்தன்மைய -யதுமான ஏதேனும் முறையில் அவரது கடமைகளைப் புரியும்போதன்றி வேறுவகையாக செல்வாக்கைப் பிரயோகிக்கும் அல்லது செல்வாக்கை பிரயோகிக்க எத்தனிக்கும் ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் பிராந்திய மேல் நீதிமன்றமொ -ன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற் படாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியிலுள்ள தெதுவும் பிராந்திய பகிரங்க சேவையில் ஏதேனும் பதவிக்கான எவரேனும் விண்ணப்பகாரருக்கு சான்றிதழொன்றை அல்லது நடத்தைச் சான்றிதழொன்றை எவரேனும் ஆள் கொடுப்பதனைத் தடைசெய்தல் ஆகாது.

(5) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது ஆயையபான பிராந்திய மேல் நீதிமன்றம் தவிர்ந்த நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் பிராந்திய பகிரங்க சேவையின் அலுவல ரொருவரின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம் அல்லது ஒழுக் -காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பில் ஒரு பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரின் ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்ய அலலது அதன்மீது தீர்ப்புக்கூற அல்லது அதனை எம்முறையிலே னும் கேள்விக்குட்படுத்த தத்துவமோ நியாயாதிக்கமோ கொண்டிருத்த லாகாது.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளர்களது அவை.

204.(1) பகிரங்க சேவை ஆணைக்குழுக்களின் தவிசாளர்களது அவை ஒன்றிருத்தல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் "அவை" எனக் குறிப்பிடப் செய்யப்படும்). இது தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரையும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிசாளரையும் பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு ஒவ்வொன்றி
-னதும் தவிசாளரையும் பிராந்திய பொலிசு ஆணைக்குழு ஒவ்வொன்றி
னதும் தவிசாளரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசா
-ளர் அவையினர் செயலாளராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(3) (அ) அவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட
நடப்பெண் மன்றத்தின் உறுப்பினர்களின்
எண்ணிக்கையின் அரைவாசியாதல் வேண்டும்.

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்
ஏற்பாடுகளுக்கமைய, அவையானது, தவி
-சாளர் பதவிநிலை மன்றத்தின் எல்லா
உறுப்பினர்களிடையேயும் முறை மாறி
வருவதனை இயலச்செய்யக்கூடியவாறான
அத்தகைய முறையில் தவிசாளர் ஒருவரின்
தெரிவு உட்பட. அதன் கூட்டங்கள் அத்த
-டன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை
நிறைவேற்றுதல் என்பன தொடர்பிலான
நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) அவையின் பணிகள் -

(அ) செயல்முறை சாத்தியமுள்ள விடத்திலெல்
லாம் ஒரே சீரான செயல்முறையையும்
ஆகக்குறைந்த தராதரங்கள் கடைப்பிடிக்
-கப்படுவதனையும் உறுதிப்படுத்தும் நோக்
கத்துடன் தேசிய பகிரங்க அலுவலர்களின
தும் தேசிய பொலிசு சேவை அலுவலர்க
ளினதும் பிராந்திய பகிரங்க மற்றும்
பொலிசு சேவை அலுவலர்களினதும் நியம
-னம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்
காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான
கொள்கைகளை இயைபுபடுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஆட்சேர்ப்புக்கும் பதவியுயர்வுக்கும் பொதுப் பரீட்சைகள் நடத்துதல் உட்பட தேசிய பகிரங்க சேவையினதும், தேசிய பொலிசு சேவையினதும், பிராந்திய பகிரங்க மற்றும் பொலிசு சேவைகளினதும் தரத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள் பற்றி தோதான அதிகாரிகளுக்கு விதப்புரைகள் செய்தல்,

என்பனவாதல் வேண்டும்.

(5) (அ) இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்திக்கு அமைய, தேசிய பகிரங்க சேவையின் பகிரங்க அலுவலர் ஒருவர், சம்பளம், படிகள், ஓய்வூதிய உரித்துகள் தொடர்பிலான நியதிநிபந்தனைகள் உட்பட சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது ஒரு பிராந்திய பகிரங்க சேவையில் பதவியொன்றுக்கு நியமிக்கப்படலாம் என்பதுடன் ஒரு பிராந்திய பகிரங்க சேவையின் அலுவலர் ஒருவர் தேசிய பகிரங்க சேவையில் அல்லது வேறோர் பிராந்திய பகிரங்க சேவையில் பதவியொன்றுக்கு நியமிக்கப்படலாம்.

(ஆ) இயைபான பகிரங்க சேவை ஆணைக்குழு பகிரங்க அலுவலரை விடுவிக்க உடன்பட்டாலன்றி இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழான நியமனமொன்று இடம் பெறுதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை.**

205. இவ்வத்தியாயத்திற் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடும்வரை அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடும் வரை அவரது பதவிக் -குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXI

### நிதி

சட்டத்தின் அல்லது நியதிச்சட்டத்தின் அதிகாரத்தின்மூலமல்லாது வரிகள் விதிக்கப்படுதலாகாது என்பது.

206. சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் அல்லது நியதிச் சட்டத்தின்மூலம் அல்லது நியதிச்சட்டத்தின்கீழ் தவிர, வரி ஒன்று விதிக்கப்படுதலோ சேகரிக்கப்படுதலோ ஆகாது.

மத்திய மற்றும் பிராந்திய நிதிகள்.

207.(1) (அ) குறித்தசில வரிகளினதும் தீர்வைகளினதும் தேறிய வரும்படிகள் முழுவதையும் அல்லது அவ்வரும்படிகளின் பாகத்தைப் பிராந்தியத்துக்கு ஒதுக்கிக் கொடுக்குதல் தொடர்பிலான இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, குறித்துரைத்த நோக்கங்களுக்காக ஒதுக்கப்படாத மத்திய அரசாங்கத்தின் நிதிகள் யாவும் இலங்கையின் திரட்டு நிதி என அழைக்கப்படவேண்டிய திரட்டு நிதியம் ஒன்றை ஆக்குதல் வேண்டும்; இத்திரட்டு நிதியத்துக்குள் மத்திய அரசாங்கத்தின் சகல வரிகளும், விதிப்பனவுகளும், வீதவரிகளும், தீர்வைகளும், மற்றெல்லா வருவாய்களும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பிராந்திய நிருவாகத்தினால் பெறப்பட்ட சகல வருவாய்களும் அத்தகைய நிருவாகத்தினால் திரட்டப்பட்ட சகல கடன்களும், கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் அத்தகைய நிருவாகத்தினால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பிராந்தியத்தின் திரட்டு நிதியம் என அழைக்கப்படவேண்டிய திரட்டு நிதியமொன்றை ஆக்குதல் வேண்டும்.

(இ) மத்திய அரசாங்கத்தினால் அல்லது பிராந்திய நிருவாகமொன்றினால் அல்லது மத்திய அரசாங்கத்தின் அல்லது பிராந்திய நிருவாகத்தின் சார்பில் பெறப்படும் மற்றெல்லாப் பகிரங்கப் பணங்களும் விடயத்துக்கேற்றாற்போல இலங்கைத் திரட்டு நிதியத்தில் அல்லது பிராந்திய திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) அரசியலமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகவும் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையிலும், சட்டத்துக்கு அல்லது நியதிச்சட்டத்துக்கு இணங்கவும் தவிர, இயல்பான திரட்டு நிதியத்திலிருந்து அல்லது பிராந்தியத் திரட்டு நிதியத்திலிருந்து பணம் ஒதுக்கீடு செய்யப்படுதலாகாது.

(2) (அ) இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுள் எது எப்படியிருப்பினும், பாராளுமன்றமானது அவசரமான, எதிர்பாராச் செலவினத்துக்கு ஏற்பாடுசெய்யும் நோக்கத்துக்காக எதிர்பாராச் செலவு நிதியமொன்றைச் சட்டத்தின்மூலம் உருவாக்கலாம்.

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரவை அமைச்சர்–

(1) ஏதேனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரவை அமைச்சர்–

(11) அத்தகைய செலவினத்துக்கு ஏதேனும் ஏற்பாடு இருக்கவில்லையென,

திருப்திப்பட்டால், பாராளுமன்றத்தின் விதப்புரையின்மீது, எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்தான முற்பணக் கொடுப்பனவொன்றன்மூலம் ஏற்பாடுசெய்யப்படவேண்டுமென அதிகாரமளிக்கலாம்.

(இ) அத்தகைய முற்பணக் கொடுப்பனவு ஒவ்வொன்றன் பின்னரும், மூன்று மாதங்களுக்குள்ளாக, அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட பணத்தொகைகளை மாற்றீடுசெய்யும் நோக்கத்துக்காக, குறைநிரப்பு மதிப்பீடொன்று பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) பிராந்திய சபையானது, நியதிச்சட்டத்தின்மூலம் எதிர்பாராச் செலவு நிதியம் எனப் பெயரிடப்படவேண்டியதான சட்டுநிதியத் தன்மையிலான எதிர்பாராச் செலவு நிதியமொன்றைத் தாபிக்கலாம். இந்நிதியத்துக்குள் அத்தகைய நியதிச்சட்டத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் காலத்துக்குக் காலம் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் எதிர்பாராச் செலவினத்தைச் சமாளிக்கும் நோக்கத்துக்காக, அப்பிராந்தியத்துக்கான பிரதான அமைச்சரின் சம்மதத்துடன் அத்தகைய நிதியத்திலிருந்து பிராந்தியத்தின் அமைச்சர்கள் சபையின் நிதி என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் முற்பணக் கொடுப்பனவுகளைச் செய்ய அத்தகைய அமைச்சரை இயலச்செய்யும் விதமாக, அத்தகைய அமைச்சரின் கைவசம் அத்தகைய நிதியம் விட்டு விடப்படுதல் வேண்டும்; அத்தகைய முற்பணக்கொடுப்பனவு ஒவ்வொன்றின் பின்னரும், மூன்றுமாத காலப்பகுதிக்குள்ளாக அவ்வாறு முன்பணமாகக் கொடுக்கப்பட்ட பணத் தொகைகளை மாற்றீடுசெய்யும் நோக்கத்துக்காக, குறைநிரப்பு மதிப்பீடொன்று பிராந்திய சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) நிதி ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது பாராளுமன்றத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மதுவரித் தீர்வைகள் மத்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டு, -

(i) அத்தகைய தீர்வைகள் தலைநகர ஆள்புலத்துக்குள்ளாக அறவிடப்படற்பாலனவான விடயத்தில், மத்திய அரசாங்கத்தினாலும்; அத்துடன்

(ii) ஏனைய விடயங்களில், முறையே எப்பிராந்தியங்களுக்குள் அத்தகைய தீர்வைகள் அறவிடப்படற்பாலனவானவையோ அப்பிராந்தியங்களின் பிராந்திய நிருவாகங்களினாலும்

சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் பிராந்தியத்துக்குள்ளாக அறவிடப்படற்பாலனவான ஏதேனும் நிதியாண்டிலான ஏதேனும் அத்தகைய தீர்வையின் வரும்படிகள் இலங்கை திரட்டுநிதியத்தின் பாகமாதலாகாதென்பதுடன் அப்பிராந்தியத்துக்குக் குறித்தொதுக்கப்படுதலும் வேண்டும்.

(4) (அ) (உற்பத்தியாளர்களினால் செய்யப்படும் விற்பனைகள் தவிர்ந்த) மொத்த விற்பனைகள் மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான வரிகள் மத்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுச் சேகரிக்கப்படுதல் வேண்டும்; ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பிராந்தியங்களுக்குப் பகிரப் படுதல் வேண்டும்.

(ஆ) தலைநகர ஆள்புலத்தச்சுச் சேர்ந்த வரும்படிகள் எனச் சார்த்திக் கூறத்தக்க வரும்படிகளை அவ்வரும்படிகள் குறிக்குறிக்குமளவுக்குத் தவிர, ஏதேனும் நிதி யாண்டில் ஏதேனும் அத்தகைய வரியின் தேறிய வரும் படிகள் இலங்கை திரட்டு நிதியத்தின் பாகமாதலா காது; ஆனால் நிதி ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது பாராளுமன்றத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பங்கீட்டு நெறிகளுக்கிணங்க, அவ்வாண்டில் எப்பிராந்தியத்துக்குள் அத்தகைய வரி அறவிடப்படற் பாலதோ அப்பிராந்தியத்துக்கு ஒதுக்கீடு செய்யப் படுதல் வேண்டும்.

(இ) நிதி ஆணைக்குழு, இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் நோக்கத்துக்காக, பிராந்தியங்களுக்கிடையிலான வியாபாரத்தின்போது அல்லது வர்த்தகத்தின்போது பண்டங்களின் விற்பனை, அல்லது கொள்வனை அல்லது ஏற்றுபொருள் முறை இடம்பெறுகின்றவிடத்து, தீர்மானிப் பதற்கான நெறிகளை வகுத்தல் வேண்டும்.

(5) (அ) வேறு வகையாக ஏற்பாடுசெய்யப்படாத விற்பனைகள் மீதான அத்தகைய வரிகள் அல்லது வருமானம் மத்திய அரசாங்கத்தினால் அறவிடப்பட்டுச் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தி யில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் பகிர்ந்தளிக்கப் படுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) மேலதிக உள்புலத்துக்குச் சார்ந்தக் கூறப்படுமாயாத
ஏதேனும் அத்தகைய வரியின் ஏதேனும் நிதி ஆண்டிலான
தேறிய வரும்படிகளில் பாராளுமன்றத்தினால் விதித்
துரைக்கப்படக்கூடியவாறான பாராளுமன்றத்தினால்
விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நூற்றுவீதம்
அவ்வாண்டில் அத்தகைய வரி எந்த பிராந்தியத்
தின்துள்ளாக அறவிடப்படற்பாலதோ அந்தப் பிராந்
தியத்துக்குச் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்
என்பதுடன் நிதி ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படக்
கூடியவாறான அத்தகைய காலத்திற்றும் அத்தகைய
முறையிலும் அப்பிராந்தியங்களுக்கிடையே பகிர்ந்தளிக்
கப்படுதலும் வேண்டும்.

(6) சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் ஏற்பாடுசெய்யப்படக்கூடிய
அத்தகைய பணத்தொகைகள், உதவி தேவைப்படுகின்றதென பாராளுமன்றம்
தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிராந்தியங்களுக்கு உதவி என்ற
வகையில் மானியங்களாக ஒவ்வோராண்டிலும் இலங்கை திரட்டு நிதியத்
துக்குப் பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் வெவ்வேறு பிராந்
தியங்களுக்கு வெவ்வேறு பணத்தொகைகள் நிர்ணயிக்கப்படலாம்.

இலங்கை திரட்டு நிதியத்திலிருந்து பணத்தொகைகளை மீளப் பெறுதல்.

208.(1) இவ்வுறுப்புரையின் (3)ஆம், (4)ஆம் பந்திகளில்
வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கின்றவாறு தவிர,
நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரவை அமைச்சரின்
கைப்பட ஆக்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றன் அதிகாரத்தின் கீழல்லாது
பணத்தொகை எதுவும் இலங்கை திரட்டு நிதியத்திலிருந்து மீளப்பெறப்
படுதலாகாது.

(2) எந்த நிதியாண்டின்போது அந்தப் பணம் மீளப்
பெறப்படவுள்ளதோ அல்லது வேறுவிதமாக இலங்கைத் திரட்டு நிதியத்தில்
சட்டப்படி பொறுப்பிக்கப்படவுள்ளதோ அந்த நிதியாண்டுக்கானக்
குறித்துரைக்கப்பட்ட பகிரங்க சேவைகளுக்காகப் பாராளுமன்றத்தின்
தீர்மானத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அப்பணத்தொகை
அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய ஆணைப்பத்திரம் எதுவும்
வழங்கப்படுதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அந்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது, சட்டமாக நிறைவேற்றப்படுமுன்னர் சனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைக்கின்றவிடத்து, பாராளுமன்றம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய, புதிய பாராளுமன்றம் கூடுவதற்கென நிருணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கொண்ட ஒருகாலப்பகுதி முடிவடையும்வரை, பகிரங்க சேவைகளுக்கு அவசியமானவை எனச் சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத்தொகைகளை இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

(4) சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலுக்கான தேதியை அல்லது தேதிகளை நிர்ணயிக்கின்றவிடத்து, அதற்கெனப் பாராளுமன்றம் ஏற்கனவே ஏற்பாடுசெய்திருந்தாலொழிய, தேர்தல்கள் ஆணையாளருடனான ஆலோசனையின்பின்னர், அத்தகைய தேர்தலுக்கு அவசியமானவையெனச் சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத் தொகைகளைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

(5) பிராந்தியத்தின் பிரதான அமைச்சரின் கைப்பட்ட ஆணைப்பத்திரத்தின்கீழ் தவிர, பிராந்திய திரட்டு நிதியத்திலிருந்து பணத்தை மீளப்பெறமுடியாது.

(6) எந்த நிதியாண்டின்போது மீளப்பெறப்பட வேண்டுமோ அந்த நிதியாண்டுக்கான சேவைகளுக்காக, அப்பிராந்தியத்துக்கெனத் தாபிக்கப்பட்ட பிராந்திய சபையின் நியதிச்சட்டத்தின்மூலம் பணம் வழங்கப்பட்டாலொழிய அல்லது பிராந்தியத்தின் திரட்டுநிதியத்தின்மீது வேறுவகையாக சட்டபூர்வமாகப் பொறுப்பிக்கப்பட்டாலொழிய, இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின்கீழ் ஆணைப்பத்திரம் ஒன்று வழங்கப்படுதலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொது அரசிறையைப் பாதிக்கும் சட்டமூலங்கள் பற்றிய சிறப் பேற்பாடுகள்.

209. இலங்கைத் திரட்டு நிதியத்தை அல்லது மத்திய அரசின் வேறு நிதியங்களைக் கையாளுவதற்கு அல்லது அந்த நிதியங்களின்மீது பொறுப்புக்களைச் சுமத்துவதற்கு, அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு, அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் வரியை நீக்குவதற்கு, கூட்டுவதற்கு, அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் சட்டமூலம் அல்லது பிரேரணை எதுவும் அமைச்சரவை அமைச்சரொருவரால் தவிரவும், அத்தகைய சட்ட மூலம் அல்லது பிரேரணை ஒன்றில் அமைச்சரவையினாலோ அல்லது அமைச்சரவை அதிகாரமளிக்கக்கூடிய அத்தகைய முறையிலோ அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழியவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதலாகாது.

பிராந்திய கடனெடுத்தலும் பிராந்தியத்தில் முதலீடு செய்தலும்.

210. (1) (அ) பிராந்தியத்தின் நிறைவேற்றுத் தத்துவம், பிராந்திய திரட்டு நிதியப் பிணைப்பொறுப்பின்மீது உள்நூர் மற்றும் சர்வதேச கடனெடுத்தலுக்கு விஸ்தரிக்கும்.

(ஆ) பிராந்திய நிருவாகத்தினால் சர்வதேசரீதியான கடன் பெறுகைகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரவை அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கற்களுக்கும் வரையறைகளுக்கும் அமைந்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த அமைச்சரின் ஒருப்பாட்டைத் தேவைப் படுத்துதலும் வேண்டும்.

(2) (அ) ஒவ்வொரு நிதியாண்டுக்கும் ஒவ்வொரு பிராந்திய நிருவாகத்தினாலும் செய்யப்படக்கூடிய உள்நூர் கடன்பெறுகைகள் தொடர்பிலான எல்லைகளும் சர்வதேச ரீதியிலான கடன்பெறுகை தொடர் பிலான வரையறைகளும் கட்டளைச்சற்களும், இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடு களுக்கமைவாக, முற்போந்த நிதி ஆண்டின் செப்ரெம்பர் முப்பதாம் நாளுக்குமுன்னர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சரினால் விதிக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இந்த வரையறைகளையும் கட்டளைக்கூற்றுகளையும் விதிப்பதில், பணக்கொள்கைத் தேவைப்பாடுகளையும் பண ஸ்திரப்பாட்டின் தேவைகளையும் ஒவ்வொரு பிராந்திய நிருவாகத்தினதும் பணத்தை மீளச் செலுத்தும் திறனையும் அமைச்சர் கருத்திற்கெடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

(3) சர்வதேச மானியங்கள் தொடர்பாகவும் வெளிநாட்டு அபிவிருத்தி உதவி தொடர்பாகவும் பிராந்திய நிருவாகங்களினால் இணங்கப்பட்டு செய்துகொள்ளப்படும் எவையேனும் உடன்படிக்கைகள், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அமைச்சரவையினால் காலத்துக்குக்காலம் இடப்படும் சர்வதேச உதவிமீதான தேசிய கொள்கை கருத்திற்கு இணங்க, இருத்தல் வேண்டும்.

நிதி ஆணைக் குழு.

211.(1)(அ) நிதி, சட்டம், நிருவாகம், வியாபாரம் அல்லது கல்விகற்றல் ஆகிய துறைகளில் பிரபல்யம்வாய்ந்த அல்லது உயர் பதவி வகித்த, ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட நிதி ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். இவர்கள் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் விதப்புரையொன்றைச் செய்வதில், அரசியலமைப்புப் பேரவை ஆணைக்குழுவில் மூன்று பாரிய சமூகங்களும் பிரதிநிதித்துவம் பெறுகின்றனவா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் முன்னதாகவே விலகினாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மூன்றாண்டுகள் கொண்ட காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) மத்திய அரசாங்கம், ஆணைக்குழுவின் விதப்புரையின் மீதும், ஆணைக்குழுவுடனான ஆலோசனையுடனும், பிராந்தியங்களின் தேவைகளைச் சமாளிக்கும் நோக்கத்துக்காக, போதுமானவையான அத்தகைய நிதிகளை வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்குதல் வேண்டும்.

(4) இந்த உறுப்புரையின் (5)ஆம் பந்திக்கு அமைவாக, பின்வருவன தொடர்பில் விதப்புரைகளைச் செய்வது ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்:-

(அ) பிராந்தியங்களின் பயன்பாட்டுக்கென மத்திய அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் பல்வேறு பிராந்தியங்களுக்கிடையே எந்நெறிகள் மீது பகிரப்பட வேண்டுமோ அந்நெறிகள்;

(ஆ) வினைத்திறமையான அதிகாரப்பரவலாக்கலுக்கு அவசியமான உறுதிப்படுத்தப்பட்ட நிதிகளின் அளவை நிச்சயப்படுத்தும் கருத்துடன் மத்திய அரசாங்கத்திற்கும் பிராந்தியங்களுக்குமிடையே வருமானத்தைப் பங்கிடுதலும் குறித்தொதுக்குதலும் அல்லது குறித்தொதுக்குதல் எந்நெறிகளின்மீது இடம்பெறவேண்டுமோ, அந்நெறிகள்;

(இ) பிராந்திய நிதி தொடர்பாக சனாதிபதியினால் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் வேறேதேனும் கருமம்.

(5) இந்த உறுப்புரையின் (4)ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளின்கீழ் விதப்புரைகளைச் செய்வதில், ஆணைக்குழுவானது நாட்டில் சமப்படுத்திய பிராந்திய அபிவிருத்தியை எய்தும் நோக்கோடு அத்தகைய நெறிகளை வகுத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க பின்வருவனபற்றிக் கவனத்தைக்கொடுத்தலும் வேண்டும்:

(அ) ஒவ்வொரு பிராந்தியத்தினதும் சனத்தொகை;

(ஆ) ஒவ்வொரு பிராந்தியத்தினதும் ஆளுக்குரிய வருமானம்;

(இ) படிப்படியாக சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கான அவசியம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) ஒவ்வொருபிராந்தியத்தினதும் ஆளுக்குரிய வருமானத்துக்கும் பிராந்தியங்களுக்கிடையே ஆகக்கூடிய ஆளுக்குரிய வருமானத்துக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்குள்ள அவசியம்;

(உ) அந்தந்தப் பிராந்தியங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்ட பணங்களை வினைத்திறமையாகப் பயன்படுத்துவதற்கான அவசியம்;

(ஊ) இயற்கை அனர்த்தங்கள் போன்ற எதிர்பாரா அவதி நிலைமைகளைச் சமாளிப்பதற்கு பிராந்திய நிருவாகத்தினால் உறப்படும் ஏதேனும் விதிவிலக்கான செலவினம்;

(எ) செலவினம் தொடர்பான தகவல் உட்பட, ஒவ்வொரு பிராந்திய நிருவாகத்தினாலும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் விவரத் திரட்டுகள்; அத்துடன்

(ஏ) பிராந்திய நிருவாகங்களினதும் அதன் அதிகாரசபைகளினதும் கணக்காய்வின் விளைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள்.

(6) ஆணைக்குழு அதன் சொந்த நடவடிக்கை முறையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் பாராளுமன்றச் சட்டத்தின்மூலம் அதற்குக் கொடுக்கும் அதன் கடமைகளைப் புரிவதில் அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(7) சனாதிபதி, இந்த உறுப்புரையின்கீழ் நிதி ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விதப்புரை ஒவ்வொன்றையும் பாராளுமன்றத்தில் முன்னர் வைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைபற்றிப் பாராளுமன்றத்துக்கு அறிவித்தலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) அத்தகைய நிதிகளின் போதுமானதன்மை அல்லது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரை அல்லது ஆணைக் குழுவினால் வகுக்கப்பட்ட நெறி தொடர்பிலான ஏதேனும் விடயத்தை நீதிமன்றம், நியாய சபை அல்லது வேறு நிறுவனம் எதுவும் விசாரித்தலோ தீர்ப்புக்கூறுதலோ, எம்முறையிலேனும் ஏற்றுக்கவனித்தலோ தீர்மானித்தலோ, முடிவுகூறுதலோ ஆகாது.

மத்திய அரசாங்கத்தினதும் பிராந்திய நிருவாகத்தினதும் வருமானமும் ஆதனமும் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப் படுதல்.

212. (1) மத்திய அரசாங்கத்தின் ஆதனமும் வருவாயும், பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் வேறுவகையாக ஏற்பாடுசெய்திருக்கும் அளவுக்குத் தவிர, பிராந்திய நிருவாகத்தினால் விதிக்கப்படும் சகல வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும்.

(2) பிராந்திய நிருவாகத்தின் ஆதனமும் வருவாயும் சுங்கத் தீர்வைகள் தவிரவும் அவை நீங்கலாகவும், மத்திய அரசாங்கத்தின் வரிவிதிப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

213. (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தின்போது அவர் பதவி வகித்தலும் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும், அது, அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலாகாது.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதவி—

(அ) அவர் இறப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்;

(ஆ) அவர் பதவியிலிருந்து விலகுவதாகச் சனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவிப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்;

(இ) அவர் அறுபது வயதை அடைவதன்மேல் வறிதாதல் வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) சுகவீனம் காரண மாக, அல்லது உடற்பலவீனம் அல்லது மனப்பலவீனம் காரணமாக அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் வறிதாதல் வேண்டும்; அல்லது

(உ) அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளுமன்றத்தின் பிரேரணையின்பேரில் அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதபோதெல்லாம், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் இடத்தில் செயலாற்றுவதற்கென சனாதிபதி ஆளொருவரை நியமிக்கலாம்.

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளும் பணிகளும்.

214. (1) மத்திய அரசாங்கத்தின் எல்லா அரசாங்கத் திணைக்களங்களினதும் எல்லாப் பிராந்திய நிர்வாகங்களினதும் அத்துடன் அமைச்சரவையின் அலுவலகம், தேசிய நீதிச்சேவைச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகம், தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம், நிதி ஆணைக்குழுவின் அலுவலகம், தேசியபொலிசு ஆணைக்குழுவின் அலுவலகம், பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழுக்களின் அலுவலகங்கள், பிராந்திய பொலிசு ஆணைக்குழுவின் அலுவலகங்கள், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாள அலுவலகம், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம், தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் கணக்குகளையும் உள்ளூரதிகார சபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அத்துடன் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்குரித்தாக்கப்பட்ட தொழில் பொறுப்புமுயற்சிகள் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் ஆகியவற்றின் கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வு செய்ய வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, தொழிற் பொறுப்புமுயற்சிக்கு அல்லது வேறு பொறுப்புமுயற்சிக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனும், கணக்காய்வாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடனும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், தொழிற் பொறுப்புமுயற்சியின் அல்லது வேறு பொறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியின் அல்லது வேறு பொறுப்புமுயற்சியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கெனத் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்கலாம். அமைச்சரால் அத்தகைய நியமனம் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம், தொழிற் பொறுப்புமுயற்சி அல்லது வேறு பொறுப்புமுயற்சி தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென அத்தகைய கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பயன்படுத்துவதற்குத் தாம் உத்தேசித்துள்ளாரென அத்தகைய கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு எழுத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிவிக்கலாம்; அதன்மேல், அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள் தலைமையதிபதியின் பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் செயலாற்றுதல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி, பாராளுமன்றத்தால் சட்டமூலம் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கடமைகளையும், பணிகளையும்புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி தமது கடமைகளையும் பணிகளையும் புரியும் நோக்கத்துக்காகவும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும் அவரது பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் செயற்பட வேண்டியவரான அல்லது வேண்டியவர்களான தகைமை பெற்ற கணக்காய்வாளரை அல்லது கணக்காய்வாளர்களைச் சேவையிலீடுபடுத்தலாம்.

(ஆ) கணக்காய்வுக்கு இயைபான ஏதேனும் தொழில்நுட்பப் பிரச்சினையை, உயர்தொழில்சார் பிரச்சினையை அல்லது அறிவியல்சார் பிரச்சினையை ஆராய்வதற்கென உதவிபெறுவது அவசியமெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுவாரெனின், அவர்—

(1) எத்திணைக்களத்தின், குழுவின் அல்லது அதிகார சபையின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுகின்றனவோ அத்திணைக்களத்தின், குழுவின் அல்லது அதிகாரசபையின் ஓர் ஊழியர் அல்லாதவரான ஒருவரின், அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) அத்தகைய திணைக்களத்தின், குழுவின் அல்லது அதிகாரசபையின் அலுவல்களை முகாமைசெய்வதில் எந்நிறுவனம் அக்கறை எதுவும் உடையதாகவிருக்கின்றதோ அந்நிறுவனமொன்றாக இராத ஏதேனும் தொழில்நுட்ப நிறுவனத்தின் அல்லது உயர்தொழில் நிறுவகத்தின் அல்லது அறிவியல் நிறுவனத்தின்,

சேவைகளை ஈடுபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஆள் அல்லது நிறுவனம் அவரது பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் செயற்படுதலும் வேண்டும்.

(5) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவரது கடமைகளையும் பணிகளையும் புரிகையிலும், நிறைவேற்றுகையிலும்-

(i) எல்லாப் புத்தகங்களையும், பதிவேடுகளையும் விவரத்திரட்டுகளையும், ஏனைய ஆவணங்களையும் பெறுவதற்கும்;

(ii) களஞ்சியப் பொருள்கள், ஏனைய ஆதனங்கள் ஆகியவற்றை அணுகிப் பார்ப்பதற்கும்; அத்துடன்

(iii) அத்தகைய கடமைகளையும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தேவையாகக்கூடிய அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் பெறுவதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது தொழிற் பொறுப்புமுயற்சியின் அல்லது வேறு பொறுப்பு முயற்சியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்யுமென நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற ஒவ்வொரு கணக்காய்வாளரும் அல்லது அத்தகைய கணக்காளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பில் அல்லது தொழிற் பொறுப்புமுயற்சி அல்லது வேறு பொறுப்புமுயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் மேற்கூறியவாறு தகவல்களையும் விளக்கங்களையும் பெறவும், மேற்கூறியவாறு அனுகிப்பார்க்கவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(6) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் பத்து மாதங்களுக்குள்ளாகவும் அத்துடன் அவர் அவசியமெனக் கருதுகின்றவாறும் கருதும்போதும் அரசியலமைப்பின்கீழான அவரது கடமைகளையும் பணிகளையும் புரிதல் பற்றியும் நிறைவேற்றுதல் பற்றியும் அக்கடமைகளும் பணிகளும் மத்திய அரசாங்கத்தின் திணைக்களங்கள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூர் அதிகார சபைகள், அத்துடன் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்புமுயற்சிகள் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றிற்குத் தொடர்புறும் அளவுக்குப் பாராளுமன்றத்திற்கும்; அத்துடன் அக்கடமைகளும் பணிகளும் பிராந்தியமொன்றின் பிராந்திய நிர்வாகத்திற்குத் தொடர்புறும் அளவுக்கு அப்பிராந்தியத்திற்கெனத் தாபிக்கப்பட்ட பிராந்திய சபைக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) இபபந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் பிராந்தியசபைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பிராந்தியமொன்றின் நிர்வாகம் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் இயைபான பிராந்திய சபை முன்னர் வைக்கப்படுதல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியினது ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒவ்வொருவரும் தமது அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, அதன் பிரதியொன்றைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(8) இந்த உறுப்புரையில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் XX11

## பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, சட்டம் அத்துடன் ஒழுங்கமைதி

பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து சட்டம் அத்துடன் ஒழுங்கமைதி முதலியன தொடர்பான விடயங்கள்.

215. (1) பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, அத்துடன் நிரந்தரமான, விசேட மற்றும் உதவி இராணுவப்படைகளைத் திரட்டுதல், தாபித்தல், பேணுதல் என்பன பிரத்தியேகமாக மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட விடயங்களாதல் வேண்டும்.

(2) சட்டமும் ஒழுங்கமைதியும் பிராந்தியங்களுக்குப் பரவலாக்கப்பட்ட ஒரு விடயமாதல் வேண்டும் என்பதுடன் பிராந்தியத்தில் பொது மக்களின் ஒழுங்கமைதியையும் பொலிசுத் தத்துவங்களைப் பிரயோகித்தலையும் அது உள்ளடக்குதல் வேண்டும்.

(3)(அ) எல்லா பிராந்திய பொலிசு சேவைகளுக்குமான சுடுபடைக்கலங்கள், படைக்கலங்கள், வெடிமருந்துகள், ஆயுதங்கள் அத்துடன் வேறு உபகரணங்கள் என்பவற்றின் இயல்பும், வகையும், தொகையும் பிராந்திய பொலிசு ஆணைக்குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர், தேசிய பொலிசு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் எல்லா பிராந்திய பொலிசு சேவைகளுக்கும் ஒரே சீரான நியமங்களும் கோட்பாடுகளும் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உப்பந்தியின்கீழ் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட சுடுபடைக் கலங்களையும், படைக்கலங்களையும், வெடி மருந்துகளையும் அத்துடன் வேறு ஆயுதங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் வழங்குதலும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாதல் வேண்டும்.

தேசிய பொலிசுச் சேவையும் தேசிய பொலிசு ஆணைக்குழுவும்.

216. (1)(அ) தேசிய பொலிசு ஆணையாளரின் தலைமையிலானதும் அத்துடன் தேசிய பிரதிப் பொலிசு ஆணையாளர்கள், சிரேஷ்ட பொலிசுக் கண்காணிப்பாளர்கள், பொலிசுக் கண்காணிப்பாளர்கள், உதவி பொலிசுக் கண்காணிப்பாளர்கள் அத்துடன் தேசிய மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வேறு பதவிநிலையினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதுமான தேசிய பொலிசுச் சேவை ஒன்றிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) தேசிய பொலிசு ஆணையாளரையும் அரசிய-லமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்பட்ட வேறு இரண்டு ஆட்களையும் கொண்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்.

(இ) அத்தியாயம் XX இலி ஏது எவ்வாறிருப்பினும், தேசிய பொலிசு ஆணைக்குழுவானது, தேசிய பொலிசு சேவையிலுள்ள அலுவலர்களின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, அத்துடன் பதவிநீக்கம் என்பவற்றிற்கும் இயைபான பொலிசு ஆணைக்குழுக்களுடனான கலந்தாலோசனையுடன் ஒரு பிராந்திய பொலிசு சேவையின் அலுவலர்களை ஒரு பிராந்தியத்திலிருந்து வேறொன்றுக்கு இடமாற்றம் செய்தலுக்கும் பொறுப்பாயி-ருத்தல் வேண்டும்.

(ஈ) உறுப்புரை 194 என்பதன் பந்திகள் (2), (4), (5), (6), (7), (9), (10) என்பவற்றினதும் உறுப்புரைகள் 197, 198, 199 என்பவற்றினதும் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் தேசிய பொலிசு ஆணைக் குழுவுக்கு ஏற்பு-டையனவாதல் வேண்டும்.

இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய (2)/பின்வரும் தவறுகள் தேசிய பொலிசு சேவையால் பிரத்தியேகமாகப் /புலனாய்வு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) குடியரசிற்கு எதிரான ஏதேனும்தவறு;

(ஆ) தரைப்படை, கடற்படை, அத்துடன் வான் படை தொடர்பிலான ஏதேனும் தவறு;

(இ) உள்ளூரதிகாரசபைத் தேர்தல்களைத் தவிர, தேர்தல்கள் தொடர்பிலான ஏதேனும் தவறு;

(ஈ) சனாதிபதிக்கு எதிராகப் புரியப்பட்ட ஏதேனும் தவறு;

(உ) முதலமைச்சருக்கு, பாராளுமன்ற சபாநாயகருக்கு, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவருக்கு, [illegible] அமைச்சர் ஒருவருக்கு அல்ல -து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக
புரியப்பட்ட ஏதேனும் தவறு;

(ஊ) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு
நீதிமன்றத்தின் நீதிபதியொருவருக்கெதிரான
அல்லது அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பி
-னரொருவருக்கு,123 ஆம் உறுப்புரைக்கான
அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையே
னும் ஆணைக்குழுக்களின் அல்லது பகிரங்கக்
குழுக்களின் உறுப்பினரொருவருக்கும் அத்தியா
யாயத்தின்
யம் X11ஆம் அத்தி/12ஆம் உறுப்புரைக்
கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட
எவையேனும் பதவிகளை வகிக்கும் ஆட்களுக்கும்
எதிரான, தேசிய பொலிசு ஆணைக்குழுவின்
உறுப்பினரொருவருக்கு, பாராளுமன்றச்
சனாதிபதியின் பணியாட்டொகுதி உறுப்பினருக்கு
செயலாளர் நாயகத்துக்கு,/ முதலமைச்ச
ரின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவ
-ருக்கு அல்லது பாராளுமன்றப்
பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவருக்கு
எதிராகப் புரியப்பட்ட ஏதேனும் தவறு;

(எ) தேசிய பாதுகாப்பை அல்லது அத்தியாவசிய
சேவைகளைப் பேறுதலை பங்கப்படுத்துகின்ற
ஏதேனும் தவறு;

(ஏ) நாணயக்குற்றிகள், நாணயங்கள், அத்துடன்
அரசாங்க முத்திரைகள் தொடர்பான ஏதேனும்
தவறு;

(ஐ) குடியரசிற்கு உரித்தான அல்லது எந்த அரச
கூட்டுத்தாபனத்தின் கம்பனியின் அல்லது தாபனத்
தின் மூலதனம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும்
பாகம் குடியரசால் அளிக்கப்பட்டுள்ளதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அரச கூட்டுத்தாபனமொன்றக்கு, கம்ப
-னிக்கு அல்லது தாபனத்திற்கு உரித்தான
ஆதனம் தொடர்பிலான ஏதேனும் தவறு;

(ஒ) ஒன்றக்கு மேற்பட்ட பிராந்தியங்களில் நியாயா
திக்கம் கொண்டுள்ள நீதிமன்றங்கள் தொடர்பி
லான ஏதேனும் தவறு;

(ஓ) ஏதேனும் சர்வதேசக் குற்றம்; அத்துடன்

(ஔ) ஐக்கிய நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்
பிலான ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும்
தவறு.

(3) அரசியலமைப்பின் தொடக்கத்தின் போதுள்ள இலங்கைப் பொலிசின் தனித்துவம் பெற்ற எல்லா முகவராண்மைகளும் தேசிய பொலிசு சேவையின் பாகமாக அமைதல் வேண்டும்.

பிராந்திய பொலிசு சேவையும் பிராந்திய பொலிசு ஆணைக்குழுவும்.

217. (1) (அ) ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் அப்பிராந்தி யத்தின் பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது / ஆளுநரால் நியமிக்கப் படவேண்டியவரான பிராந்திய பொலிசு ஆணையாளரின் தலைமையி லான பிராந்திய பொலிசு சேவை ஒன்றிருத்தல் வேண்டும்.

(ஆ) (1) ஒவ்வொரு பிராந்தியத்திற்கும், அப்பிராந்தியத்திற்கான அமைச்சர்கள்
/சபையுடனான கலந்தாலோசனையுடன் செயற்படும் அரசியலமைப்பு பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்படுவதன்மீது அப் பிராந்தியத்தின் ஆளுநரால் நியமிக்கப்படவேண்டியவர்களான பிராந்தியப் பொலிசு ஆணையாளரையும், பிராந்தியத்தின் பிரதானஅமைச்சரால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினரையும், மூன்று பிரதான சமுதாயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்களையும் கொண்ட பிராந்தியப் பொலிசு ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்.

(11) பிராந்தியத்தின் ஆளுநர், பிராந்திய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடனான கலந்தாலோசனையுடன் அவர்களுள் ஒருவரை தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(இ) (1) இவ்வுட்பந்தியின் (இ), (11) என்னும் உட்பந்திக்கு அமைய, பிராந்திய பொலிசு ஆணைக்குழு, பிராந்திய பொலிசு சேவையிலுள்ள அலுவலர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றிற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(11) பிராந்திய பொலிசு ஆணைக்குழு, இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், தோதானதென அது கருதினால், இவ்வுட்பந்தியின் (இ), (1) என்னும் உட் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் தொடர்பில் தேசிய பொலிசு ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கட்டளை விதியைக் கடைப்பிடிக்கலாம்.

(ஈ) உறுப்புரை 200 இன் பந்திகள் (2), (3), (4), (5) அத்துடன் உறுப்புரை 203 இன் பந்திகள் (3), (4) அத்துடன் (5) என்பவற்றின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங் களுடன் பிராந்திய பொலிசு ஆணைக்குழுவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிராந்திய பொலிசு சேவையாளது, பிராந்திய பொலிசு
அல்லது பிராந்தியத்திற்கு சேவைக்கு விடப்பட்ட
சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட/பிராந்திய பொலிசு
பிரதிப்
ஆணையாளர், பிராந்திய/பொலிசு ஆணையாளர்கள், பிராந்திய
சிரேஷ்ட பொலிசுக் கண்காணிப்பாளர்கள், பொலிசுக்
கண்காணிப்பாளர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள்,
பிரதம பரிசோதகர்கள், பொலிசுப் பரிசோதகர்கள்,
சாசன்கள், கொஸ்தாப்புகள் அத்துடன் வேறு பதவி நிலை
யினர்கள் ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பிராந்தியத்தில் சேவையாற்றும் எல்லாப் பொலிசு
கான
அலுவலர்களும் அப்பிராந்தியத்திற்/பிராந்தியப் பொலிசு
ஆணையாளரின் கீழ் பணிபுரிதல் வேண்டும்.

(4) பிராந்திய பொலிசு ஆணையாளர், பிராந்தியத்தில் பகிரங்க
ஒழுங்கமைதியைப் பேணுதல் தொடர்பில் பிரதம அமைச்ச
ருக்குப் பொறுப்பாயிருத்தலும் அவரது கட்டுப்பாட்டின்
கீழிருத்தலும் வேண்டும்.

(5) (அ) பிராந்திய பொலிசு சேவை (216 ஆம் உறுப்புரையின்
(2) ஆம் பந்தியின் குறித்துரைக்கப்பட்ட தவறுகளைத் தவிர)
பிராந்தியத்திலுள் புரியப்படும் எல்லாத் தவறுகளையும் தடுப்
பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும்
பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு
வேறு
செய்யப்படும் பணிகளை நிறை/கையில், பிராந்திய பொலிசு
ஆணைக்குழுவின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும்
கண்காணிப்பின் கீழும் பிராந்திய பொலிசு சேவை இருத்தல்
வேண்டும்.

தேசிய பிராந்திய பொலிசுசேவை களுக்கிடையே ஒத்துழைப்பு.

218.(1) பிராந்தியமொன்றின் பிரதம அமைச்சர் பிராந்தியத்திலுள்
பகிரங்க ஒழுங்கமைதியைப் பேணுவதற்கு தேசிய பொலிசு சேவையின்
உதவியை நாடுமிடத்து, தேசிய பொலிசு ஆணையாளர் அந்நோக்கத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஜுனியினரை செயலில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

(2) இவ்வத்தியாயத்தில் முரணானது எது, எவ்வாறிருப்பினும், இப்பந்தியின் (ஆ) என்னும் பந்திக்கு அமைய-

(அ) எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டுபிடித்தல், புலனாய்வு செய்தல் என்பவற்றிற்கான எல்லா வழி முறைகளையும் எடுத்தல் தேசிய பொலிசு சேவையின் அல்லது பிராந்திய பொலிசு சேவைகளின் ஒவ்வொரு அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

(ஆ) தவறொன்று பற்றி எந்தப் பொலிசு அலுவலருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதோ அந்தப் பொலிசு அலுவலர் உறுப்பினர் ஒருவராக இல்லாதிருப்பதான அத்தவறு பொலிசு சேவையால்/ பிரத்தியேகமாகப் புலனாய்வு செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய முறைப்பாட்டைப் பின்பற்றி எடுக்கப் பட்ட வழிமுறைகள், தாமதமின்றி, இயைபான பொலிசு நிலையத்திற்கு அல்லது அத்தகைய தவறை புலனாய்வு செய்வதற்கு அதிகாரம்கொண்ட தனித்துவம் பெற்ற முகவராண்மைக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(இ) ஏதேனும் தவறு தொடர்பில் புலனாய்வொன்றை நடாத்து வதற்கு சட்டமுறையான அதிகாரம் கொண்ட பொலிசு அலுவலருக்கு உதவி புரிவது தேசிய பொலிசு சேவையின் அல்லது பிராந்திய பொலிசு சேவையொன்றின் பொலிசு ஒவ்வொருவரினதும் அலுவலர்/ கடமையாதல் வேண்டும் என்பதுடன், இக் கடமையைத் தகுந்தவாறு நிறைவேற்றுவதில் எடுக்கப் படும் எவையேனும் நடவடிக்கைகள் சட்டமுறையாக எடுக்கப்பட்டவையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) வேண்டுகோளின்பேரில் ஏதேனும் பிராந்திய பொலிசு சேவைக்கு தனித்துவம் பெற்ற முகவராண்மைகளின் சேவையும் தொழில்நுட்ப உதவியும் கிடைக்கச் செய்வது தேசிய பொலிசு சேவையின் கடமையாதல் வேண்டும்.

## அத்தியாயம் XXIII

## பொதுமக்கள் பாதுகாப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு.

219. (1) அரசியலமைப்புத் தொடங்கும்போது வலுவிலிருக்கின்ற பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம், பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ளதான சட்டத்தின்கீழ் அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவமானது, அரசியலமைப்பினது ஏற்பாடுகள் தவிர்ந்த, ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை ஒதுக்கிவைக்கின்ற, திருத்துகின்ற அல்லது இடைநிறுத்தி வைக்கின்ற சட்டப்பயன்கொண்டனவான, இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரலில் உள்ள ஏதேனும் விடயத்தின்மீது ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குமான தத்துவத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குச் சனாதிபதிக்குத் தத்துவம் அளிக்கின்றதும், பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பிலானதுமான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் அத்தகைய சட்டத்தின்கீழான பிரகடனமொன்றைச் செய்ததன்மேல் தவிர, நடைமுறைக்கு வருதல் ஆகாது.

பிராந்திய மொன்றுக்குள் அவசரகால நிலை.

220. (1) பிரதம மந்திரியினால் ஆலோசனை அளிக்கப்பட்டதன்மேல், பிராந்தியமொன்றில் பந்தோபஸ்து நிலைமைக்கு அல்லது பொது ஒழுங்குக்கு ஆயுதந்தாங்கிய கலகத்தினால், பாரதூரமான உள்நாட்டுக் குழப்பங்களினால், பிராந்திய நிருவாகத்தின் ஏதேனும் செயலினால் அல்லது செய்யாமையினால் ஆபத்து ஏற்படும் என அல்லது/மையரசின் ஐக்கியத்துக்கும் இறைமைக்கும் தெளிவானதும் தற்போதுள்ளதுமான அபாயம் ஏற்படும் என சனாதிபதி அபிப்பிராயப் படுகின்றவிடத்து, அவர், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளை அப்பிராந்தியத்தில் வலுவுக்குக் கொண்டுவருகின்ற பிரகடனமொன்றைச் செய்யலாம்.

(2) இப்பந்தியின் (1)ஆம் பந்தியைப் பின்பற்றிப் பிரகடனமொன்றைச் செய்ததன்மேல், சனாதிபதி–

(அ) பொது ஒழுங்கை நிலைநாட்டும் நோக்கத்துக்காக சிவில் தத்துவத்துக்கு உதவியான ஆயுதந்தாங்கிய படைகளை அல்லது தேசிய பொலிசுச் சேவையில் ஏதேனும் அலகை கட்டளைமூலம் பணிக்கமர்த்தலாம்; அத்துடன்

(ஆ) இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரலில் உள்ள ஏதேனும் விடயம் அல்லது XX11 ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகள் தவிர, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் தொழிற்பாட்டை ஒதுக்கித் தள்ளுகின்ற, திருத்துகின்ற [illegible] அல்லது இடைநிறுத்துகின்ற சட்டப்பயன்கொண்ட ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியைப் பின்பற்றிச் செய்யப்படும் பிரகடனம் ஒவ்வொன்றும், பிராந்தியத்தில் பொது ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுவிட்டதென சனாதிபதி திருப்திப்பட்டதும், வெகு விரைவில் இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும்.

ஆளுநரின் வேண்டுகோளின் பேரில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்தல்.

221. (1) (அ) பிராந்தியமொன்றின் ஆளுநர் ஒருவர், பிராந்தியத்தின் முதல் அமைச்சரினால் ஆலோசனை வழங்கப்பட்டதன்மேல், பொது ஒழுங்கை அல்லது சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்குகைகளையும் சேவைகளையும் பேணுவது தொடர்பில் பிராந்தியத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில் ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமையொன்று எழுந்திருக்கிறதென அபிப்பிராயமிடத்து, ஆளுநர், பொது மக்கள் பாதுகாப்புத் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிராந்தியத்தில் அல்லது அதன் பகுதியில் கொண்டுவரும் பிரகடனத்தைச் செய்யுமாறு சனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியைப் பின்பற்றிப் பிரகடனமொன்றைச் சனாதிபதி செய்கின்றவிடத்து—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பிராந்தியத்தின் முதல் அமைச்சரின் ஆலோசனையின்மேல் செயலாற்றுகின்ற ஆளுநரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக இரண்டாம் அட்டவணையின் 11ஆம் நிரலில் உள்ள ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பில், அதிகாரத்தைப் பிரயோகிப்பது, மத்திய அரசாங்கத்துக்கு, அதன் பிரதிநிதிகளுக்கு அல்லது முகவர் நிலையங்களுக்கு;

(11) பிராந்தியத்தின் முதல் அமைச்சரின் ஆலோசனையின்மேல் செயலாற்றும் ஆளுநரினால் இரண்டாம் அட்டவணையின் 11ஆம் நிரலில் உள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அரசியலமைப்பின் ஏற்பாடுகள் தவிர, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை ஒக்கித் தள்ளுகின்ற, திருத்துகின்ற அல்லது இடைநிறுத்துகின்ற சட்டப்பயன் கொண்ட, பொதுமக்கள் பந்தோபஸ்து தொடர்பிலான அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவது சனாதிபதிக்குச் சட்டமுறையானதாதல்வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஆ)(11), என்னும் பந்தியின் கீழான ஒழுங்குவிதிகள், செயல்முறைக்கு உகந்தவாறாக, பிராந்திய முதல் அமைச்சரினதும் பிராந்தியச் சட்டத்துறைத் தலைமையதிபதியினதும் ஆலோசனையின்மேல் செயலாற்றும் ஆளுநருடனான கலந்தாலோசனையின்பேரின் ஆக்கப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்துக்கும் பிராந்தியச் சபைக்கும் பிரகடனம் பற்றித் தெரிவித்தல்.

222.(1) இருநூற்று இருபதாம், 221ஆம் உறுப்புரைகளைப் பின்பற்றிப் பிரகடனமொன்று செய்யப்பட்டதன்மேல் அதனைச் செய்ததற்கான சந்தர்ப்பம் பற்றி இவ்வுறுப்புரையின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்றத்துக்கு உடனடியாகத் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும், அத்துடன், அதற்கிணங்க:-

(அ) அத்தகைய பிரகடனம்பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின்னர் விடுக்கப்பட்டால், அத்தகைய பிரகடனமானது, பாராளுமன்றம் கூடுவதற்கென முன்னரான ஒரு தேதியை நியமித்தாலொழிய, (இத்தேதி, பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறையாத தேதியொன்றாக இருத்தல் வேண்டும்.) பிரகடனத் தேதியிலிருந்து பத்தாம் நாளன்று கூடும்படி பாராளுமன்றத்தை அழைப்பதாகத் தொழிற்படுதல் வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், அவ்வாறு கூடும்படி அழைக்கப்பட்ட பாராளுமன்றம், அத்தகைய பிரகடனம் அல்லது அதற்கடுத்த வேறு ஏதேனும் பிரகடனம் முடிவுறும்வரை அல்லது ஒழிக்கப்படும்வரை அல்லது பொதுத் தேர்தல் முடிவுறும்வரை, இவற்றில் எது முன்னர் நிகழ்கின்றதோ, அதுவரையில் அமர்வில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் கலைக்கப்பட்டதாதலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய பிரகடனம் செய்யப்படும் தேதியன்று, பாராளுமன்றம் பத்து நாட்களுக்குள் அற்றுவிடாத அத்தகைய ஏதேனும் ஒத்தி வைத்தலினால் அல்லது அமர்வுநிறுத்தகையினால் கூடாதிருப்பின், பத்து நாட்களுக்குள் பாராளுமன்றம் கூடவேண்டும் என்று கூறும் பிரகடனம்ஒன்று விடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டத்தின்கீழ் ஒரு பிரகடனத்தைச் செய்வதன்மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பிரகடனம், இவ்வுறுப்புரையின் அடுத்துவரும ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய பிரகடனத்தைச் செய்த தேதியிலிருந்து ஒருமாத காலத்துக்கு, ஆனால், அத்தகைய பிரகடனம் முன்னராக ஒழிக்கப்பட்டதற்கோ அல்லது அக்காலம் முடிவடையும்போது அல்லது முடிவடையும் முன்னர் மேலும் ஒருபிரகடனஞ் செய்வதற்கோ பங்கமின்றி, நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(3) (அ) இருநூற்று இருபதாம் மற்றும் 221 ஆம் உறுப்புரைகளைப் பின்பற்றிச் செய்யப்படும் பிரகடனமொன்று, இப்பந்தியின்
8 (ஆ) என்னும் பந்திக்கு அமைய, அத்தகைய பிரகடனம் பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப் பட்டாலொழிய, அத்தகைய பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினாலு நாட்காலப்பகுதியொன்றுக்குப் பின்னர் முடிவடைதல் வேண்டும்;

(ஆ) (1) அத்தகைய பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து கலைக்கப்பட்டதாக இருக்கின்றவிடத்து; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) இவ்வுறுப்புரையின் (1)(ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறாக, அத்தகைய தேதியன்று அத்தகைய ஏதேனும் ஒத்திவைப்பினால் அல்லது அமர்வு நிறுத்தத்தினால் கூடாதிருக்கின்றவிடத்து; அல்லது

(இ) இவ்வுறுப்புரையின் 1(அ) அல்லது (ஊ) என்னும் பந்திகளில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு கூடும்படி அழைக்கப்படும்போது கூடாவிட்டால்,

அத்தகைய பிரகடனம் பாராளுமன்றம் எத்தேதியன்று அடுத்தமுறைகூடி அமருமோ, அத்தேதிக்குப் பின்னர் பத்து நாட்கள் முடிவுற்றதும், அத்தகைய பாராளுமன்றக் கூட்டத்தில் தீர்மானமொன்றுமூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டாலொழிய, முடிவுறுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) உறுப்புரைகள் 220 அல்லது 221ஐப் பின் பற்றி ஒரு பிரகடனமானது, இவ்வுறுப்புரையின் (3)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து அல்லது அத்தகைய ஒரு பிரகடனம் காலாவதியாவதன்மேல் பதினான்கு நாட்காலப்பகுதிக்குள் சனாதிபதியினால் இல்லாதொழிக்கப்படுவதன்மேல், அடுத்துத் தொடர்ந்து வரும் முப்பது நாட்களினுள் 220ஆம், 221ஆம் உறுப்புரையைப் பின்பற்றிச் செய்யப்படும் ஒரு பிரகடனமானது பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றவரையில் நடைமுறைக்கு வருதல் ஆகாது.

(5) உறுப்புரை 220, 221ஐப் பின்பற்றிச் செய்யப்படும் ஏதேனும் பிரகடனத்தைப் பாராளுமன்றம் அங்கீகரிக்காவிடின், அத்தகைய பிரகடனமானது, அதன்கீழ் சட்டமுறையாகச் சொல்லப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்டதன்மேல் உடனடியாகச் செல்லுபடியுடையதாக அல்லது சட்டத்தில் வலுவுடையதாக இல்லாதிருத்தல் வேண்டும்.

(6) பாராளுமன்றம் அமைக்கப்படும்போது கூட்டமாட்டாது என்னும் நிகழ்வின் காரணமாக, பிரகடனம் செய்யப்படுவதைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவோ, அதன் அங்கீகாரத்தைப் பெறவோ முடியாதிருக்குமிடத்து, இவ்வுறுப்புரையின் (3)ஆம் அல்லது (4)ஆம் பந்தியில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய பிரகடனத்தின் செல்லுபடியையோ, நடைமுறையையோ பாதித்தல் ஆகாது என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பத்தில், பாராளுமன்றம் அதன்பின்னர் இயலுமானவிரைவில் மீளக் கூட்டுவதற்கு அழைக்கப்படுதல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எது எப்படியிருப்பினும், உறுப்புரைகள் 220, 221ஐப் பின்பற்றிச் செய்யப்படும் ஒரு பிரகடனம், அப்பிரகடனம் எப்பிராந்தியம் தொடர்பில் செய்யப்படுகிறதோ அப்பிராந்தியத்தின் பிராந்தியப் பேரவைக்கு உடனடியாக அறிவிக்கப்படவேண்டும் என்பதுடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) உறுப்புரை 220ஐப் பின்பற்றிச் செய்யப்பட்டதும் தொடர்ச்சியாகத் தொண்ணூறு நாட்காலப்பகுதிக்கு அப்பிராந்தியத்தின் நடைமுறையில் இருந்திருக்கின்றதுமான ஒரு பிரகடனத்தின் விடயத்தில் அக்காலப்பகுதி முடிவடைந்த பத்து நாட்களினுள் அதற்கான பிராந்திய சபையினால் அங்கீகரிக்கப்பட்டாலேயொழிய அல்லது பிராந்திய சபை, அத்தகைய காலப்பகுதி முடிவடையும் நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டு, அமர்வு நிறுத்தப்பட்டு அல்லது கலைக்கப்பட்டு இருப்பின், அதன்பின்னர் அப்பிராந்திய சபையின் முதலாவது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டாலேயொழிய அப்பிராந்தியத்தில் வலுவில்லாதொழிதல் வேண்டும்;

(ஆ) உறுப்புரை 221ஐப் பின்பற்றி சொல்லப்பட்ட ஒரு பிரகடனத்தின் விடயத்தில், அவ்வாறு அறிவிக்கப்பட்டு பதினான்கு நாட்காலப்பகுதியினுள் அல்லது அத்தகைய காலப்பகுதி முடிவடையும் நேரத்தில் பிராந்திய சபை ஒத்திவைக்கப்பட்டு அமர்வு நிறுத்தப்பட்டு அல்லது கலைக்கப்பட்டு இருப்பின், அதன்பின்னர் அப்பிராந்திய சபையின் முதலாவது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டாலேயொழிய, அப்பிராந்தியத்தில் வலுவில்லாதொழிதல் வேண்டும்.

சனாதிபதி தத்துவங்களை ஏற்றல்.

223.(1) ஒரு பிராந்திய நிருவாகம் இலங்கைக் குடியரசின் ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கு தெளிவான, வெளிப்படையான ஆபத்தாக அமையக்கூடிய ஆயுதக் கலகத்தை அல்லது அந்தப் புரட்சியை ஊக்குவிக்கின்ற அல்லது உறுப்புரை 1 அல்லது 2 ஐ அல்லது அரசியலமைப்பின் ஆம் அத்தியாயத்தின் அல்லது ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை வேண்டுமென்றே மீறுவதான செயலில் ஈடுபடுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதோ, சனாதிபதி, முதலமைச்சரின் ஆலோசனையின்மீது அபிப்பிராயப்படுகின்றவிடத்து, சனாதிபதி பிரகடனம்மூலம்-

(அ) அப்பிராந்திய நிருவாகத்தின் பணிகள் அனைத்தையும் அல்லது எதனையும், பிராந்தியத்தின் ஆளுநருக்கு, முதலமைச்சருக்கு அமைச்சர் சபைக்கு அல்லது ஏதேனும் குழுவுக்கு அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவர்களினாலோ அவற்றினாலோ பிரயோகிக்கப்படற்பாலனவான தத்துவங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் தாமே ஏற்றுக்கொள்ளலாம்; அத்துடன்

(ஆ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் தத்துவங்களைப் பயனுறுவகையில் பிரயோகிப்பதற்குப் பிராந்திய சபையைக் கலைப்பது அவசியமாகவிருக்கின்றவிடத்து, அப்பிராந்திய சபையைக் கலைக்கலாம்.

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியைப் பின்பற்றிச் செய்யப்படும் ஒவ்வோர் பிரகடனமும் உடனடியாகப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் இடப்படுதல் வேண்டும்.

(3) இந்த உறுப்புரையின் (1)ஆம் பந்தியைப் பின்பற்றிச் செய்யப்படும் பிரகடனம் எதுவும் அடுத்தப்பின்னரான ஒரு பிரகடனம்மூலம் ஒழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(4)(அ) சனாதிபதி இந்த உறுப்புரையின் (1)ஆம்பந்தியைப் பின்பற்றி ஒரு பிரகடனத்தைச் செய்து பதினான்கு நாட்களினுள், அத்தகைய பிரகடனம் செய்யப்படுவதற்கான அவசியத்தை ஏற்படுத்திய நிலைமை தொடர்ந்திருப்பதையும், வேறு இயைபான எவையேனும் விடயத்தையும் நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்காலப்பகுதியினுள் அத்தகைய விடயங்கள்பற்றி விசாரணைசெய்து,

அறிக்கையிடுவதற்கென இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் நியாயசபையொன்று அமைக்கப்பட வேண்டும் எனப் பணித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய நியாயசபையின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மேல், சனாதிபதி–

(i) முப்பது நாட்காலப்பகுதியினுள் அறிக்கையைப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் இடச் செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பீ) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியைப் பின்பற்றி பிரகடனம் ஒன்று செய்யப்படுவதற்கான அவசியத்தை ஏற்படுத்திய நிலைமை இல்லாதொழிந்திருக்கின்றதென நியாயசபை அறிக்கைவிட்டால், பிரகடனத்தை ஒழித்தல் வேண்டும்.

(5) இந்த உறுப்புரையின் (4)ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நியாயசபையானது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினரையும், இயைபான பிராந்தியத்தின் பிரதம அமைச்சரால் அல்லது அப்பிராந்தியத்திற்கான பிராந்தியசபை கலைக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அவ்வாறு கலைக்கப்பட்ட நேரத்தில் பிரதம அமைச்சராகப் பதவிவகித்த ஆளினால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினரையும், அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தவிசாளர் ஒருவரையும், கொண்டிருத்தல் வேண்டும். தவிசாளராகப் பெயர்குறித்து நியமிப்பதில் உடன்பாடு எதுவும் காணப்படாதவிடத்து, தவிசாளரை அரசியலமைப்புப் பேரவை பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

பிரகடனங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் பிரச்சினைக்குட்படுத்தப்படல் ஆகாது.

224. உறுப்புரை 220, 221, 223 ஆகியவற்றைப் பின்பற்றிச் செய்யப்படும் ஒரு பிரகடனமானது, எல்லா நோக்கங்களுக்குமாக, முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் நீதிமன்றத்தில், 223ஆம், உறுப்புரைக்கிணங்க அமைக்கப்பட்ட ஒரு நியாயசபை தவிர்ந்த ஏதேனும் நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது, அத்துடன் ஒரு நீதிமன்றம் உறுப்புரை 223க்கு இணங்க அமைக்கப்பட்ட நியாயசபையொன்று தவிர்ந்த நியாயசபை, அல்லது வேறு நிறுவனம் அத்தகைய பிரகடனத்தை அல்லது அதனைச் செய்வதற்கான ஏதுக்களைப் பற்றி விசாரணைசெய்தலோ, தீர்ப்பை எடுத்துமொழிதலோ ஏதேனும் முறையில் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXIV

## நிர்வாகத்திற்கான பாராளுமன்றச் ஆணையாளர்

நிர்வாகத்திற்கான பாராளுமன்றத் துணையாளர்.

225. (1) பாராளுமன்றமானது, சட்டத்தின் மூலம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மான்) பதவியைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். இவருக்கு அத்தகைய சட்டத்தினங்கவும் அதற்கமையவும், அரசசேவையிலுள்ள அலுவலர்களாலும் பகிரங்கக் கூட்டுத் தாபனத்தினதும் உள்ளூராதிகார சபைகளினதும் அவைபோன்ற வேறு நிறுவனங்களினதும் அலுவலர்களாலும் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல், அத்துடன் வேறு அநீதிகள் புரியப்படுதல் பற்றிய முறைப்பாடுகள் அல்லது சார்த்துரைகள் மீது புலனாய்வு செய்து அறிக்கையிடும் கடமை பொறுப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டும் என்பதுடன் நன்னடத்தை உடையவராக இருக்கும் காலப்பகுதியின் போது பதவிவகித்தலும் வேண்டும்.

(3) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(4) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் பதவி–

(அ) இறப்பின் மீது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் பதவி துறப்பதன்மீது

(இ) சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வயதை அடைவதன்மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) சுகயீனம் காரணமாக அல்லது உடற் பலவீனம் அல்லது மனப்பலவீனம் காரணமாக சனாதிபதியினால் அகற்றப் படுவதன் மீது, அல்லது

(உ) பாராளுமன்றப் பிரேரணையொன்றின் மேல் சனாதிபதியால் அகற்றப்படுவதன்மீது வறிதாதல் வேண்டும்.

(5) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரால் அவரது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றவும் புரியவும் இயலாதிருக்கும்போதெல்லாம் பாராளுமன்ற ஆணையாளரின் இடத்திற் செயலாற்றுவதற்கென, சனாதிபதி, ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(6) பாராளுமன்றம் வேறு வகையாக ஏற்பாடு செய்யும்வரை (1) ஆம் பந்தியின் நோக்கத்திற்கு 1981ஆம் ஆண்டின் 17 ஆம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டமானது, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் பதவியை (ஒம்புட்ஸ்மான்) தாபிப்பதற்கு ஏற்பாடு செய்த பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXV

### பொது

சர்வதேச பொருத்தனைகளும் உடன்படிக்கைகளும்.

226. பாராளுமன்றமானது, அதன் முழு எண்ணிக்கையினரில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோர் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம், இலங்கை அரசாங்கத்துக்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசுக்கும் இடையிலானதும், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின்கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட அல்லது [illegible] அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும் கம்பனிகளினாலும் ஏனைய கழகங்களாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமான ஏதேனும் பொருத்தனையை அல்லது உடன்படிக்கையை அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமாக உள்ளதென அங்கீகரிக்கின்றவிடத்து, அத்தகைய பொருத்தனை அல்லது உடன்படிக்கை இலங்கையில் சட்டவலுக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பொருந்தனையின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக எழுத்திலான சட்டமெதுவும் தேசிய பாதுகாப்பு நலன்களுக்காகவன்றி வேறுவிதத்தில் இயற்றப்படுதலோ ஆக்கப்படுதலோ ஆகாது என்பதுடன், ஆட்சித்துறை நடவடிக்கையோ நிருவாக நடவடிக்கையோ எடுக்கப்படுதலுமாகாது.

கையளிப்பு.

227. (1) ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை எவரேனும் ஆளுக்குக் கையளிப்பதற்கு ஆள் எவருக்கும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகையதத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கும் அத்தகைய ஆள், அவ்வாறு கையளிக்கப்பட்டிருப்பினும், அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப்பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன், எந்நேரத்திலும் அத்தகைய கையளிப்பினை ஒழிக்கலாம்.

(2) இவ்வுறுப்புரையில் "ஆள்" என்பது, ஆட்கள் குழு எதனையும் அல்லது ஏதேனும் அதிகாரசபையினையும் உள்ளடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிலுள்ள சட்டம்.

228. (1) பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலன்றி, அரசியலமைப்புத் தொடங்கும் நேரத்தில் வலுவிலிருந்த எல்லாச் சட்டங்களும், அதாவது எழுத்திலான சட்டங்களும், எழுத்திலலாச் சட்டங்களும், அரசியலமைப்பில் வேறு வகையாக வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தால் தவிர, ஏற்றமாற்றங்களுடன், தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வலுவில் தொடர்ந்திருக்கும் சட்டங்கள், அரசியலமைப்பில் "வழக்கிலுள்ள சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) மாகாண சபைகளின் நியதிச் சட்டங்களும் துணைநிலைச் சட்டவாக்கமும் உட்பட இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தொடர்ந்து வலுவிலிருக்கும் எழுத்திலான எல்லாச்சட்டங்களும் அரசியலமைப்பில் "வழக்கிலுள்ள எழுத்திலான சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(3) அரசியலமைப்பில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இப்போதுள்ள சட்டங்கள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளாகாது என்பதுடன் அவ்வாறு எவ்வகையிலும் கருதப்படலுமாகாது.

(4) இப்போதுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அல்லது அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாடு, பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யும்வரை அல்லது ஏற்பாடு செய்தாலொழிய, தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டுமென அரசியலமைப்பு ஏற்பாடுசெய்யுமிடத்து, அவ்வாறு ஏற்பாடுசெய்த பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டம் எதுவும், சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்படலாம்.

(5) இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யும் வரையில் அல்லது ஏற்பாடுசெய்தாலொழிய தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டுமென அரசியலமைப்பு ஏற்பாடு செய்யுமிடத்தும், அத்துடன் குறிப்பீடு செய்யப்பட்ட இப்போதுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்திலான சட்டமானது துணைநிலைச் சட்டவாக்கங்களைக் கொண்டுள்ளவிடத்தும், பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடு செய்யும் வரை அல்லது ஏற்பாடுசெய்தாலொழிய இப்போதுள்ள எழுத்திலான அத்தகைய சட்டம் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும் என்று கூறும் ஏற்பாடானது, எந்த ஆளுக்கு அல்லது குழுவுக்கு, அத்தகைய துணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்கும், ஆக்கப்பட்ட பின்னர் அவற்றைத் திருத்துவதற்கும், வேறுபடுத்துவதற்கும், ஒழிப்பதற்கும் அல்லது நீக்குவதற்குமான தத்துவம் வழங்கப்பட்டதோ, அந்த ஆள் அல்லது குழு, பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யும்வரை அல்லது ஏற்பாடுசெய்தாலொழிய, அவ்வாறு வழங்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குக் கொண்டுள்ள தத்துவத்தை எவ்வகையிலேனும் குறைப்பதாகக் கருதப்படலாகாது.

குடியரசின் தத்துவங்களும், சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும்.

229. பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடுசெய்தாலொழிய, அரசியலமைப்புத் தொடங்கும் **நேரத்தில்**, இலங்கைக் குடியரசு உடைமைகொண்டிருந்த, பிரயோகித்த அல்லது பிரயோகிக்கக்கூடியனவாயிருந்த எத்தன்மைதாயினுமான எல்லாத் தத்துவங்களையும், சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும், உரிமைகளையும் இலங்கைக் குடியரசு தொடர்ந்தும் உடைமை கொண்டிருத்தலும், பிரயோகித்தலும் வேண்டும்.

**குடியரசின் உரிமைகளும், கடமைகளும், கடற்பாடுகளும்.**

230. அரசியலமைப்புத் தொடங்கும் **நேரத்தில்**, இலங்கை அரசாங்கத்திற்குரியனவான அப்போதிருந்துவந்த எல்லா உரிமைகளும், எல்லாக் கடமைகளும் அல்லது **கடற்**பாடுகளும், அவை எவ்வகையால் எழுந்தனவாயினுஞ்சரி, அரசியலமைப்பின் கீழான இலங்கைக் குடியரசு அரசாங்கத்தின் உரிமைகளும், கடமைகளும், கடப்பாடுகளுமாகவிருத்தல் வேண்டும்.

சட்டங்களின் சென்ற காலச் செயற்பாடு, முன்னைய சட்டங்கள், தவறுகள் முடிவாகாதிருக்கும் வழக்குகள் முதலியன.

231. (1) அரசியலமைப்பு வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, அரசியலமைப்புத் தொடங்குவதன் முன்னர் வலுவிலிருந்த ஏதேனும் சட்டத்தின் சென்றகாலச்செயற்பாடு, அல்லது அரசியலமைப்புத் தொடங்குவதன் முன்னர் வலுவிலிருந்த ஏதேனும் சட்டத்தின் கீழ் முறைப்படி செய்யப்பட்ட அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய அனுமதிக்கப்பட்ட எதுவும், அல்லது புரியப்பட்ட தவறு எதுவும் அல்லது பெறப்பட்ட அல்லது உறப்பட்ட உரிமை, விடுதலை, கடப்பாடு அல்லது தண்டம் எதுவும், அரசியலமைப்பு வலுவுள்ளதாக வருவதனால், எவ்வகையிலும் பாதிக்கப்படுதலாகாது, அல்லது பாதிக்கப்படுவதாக்கப்படுதலாகாது.

(2) இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் உட்பட, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் நடைபெற்றுக் கொண்டிருந்த அல்லது முற்றுப்பெறாதிருந்த எல்லா வழக்குகள், குற்றவழக்குத் தொடுப்புகள், நடவடிக்கைகள், கருமங்கள் அல்லது விடயங்கள் எல்லாம், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமையவும், ஏற்றமாற்றங்களுடனும், தொடர்ந்திருந்து வருவனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அரசியலமைப்புத் தொடங்கியதன்பின்னர் கொண்டுநடாத்தப்பட்டு முற்றுவிக்கவும்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் அட்டவணை

| | நிரை 1 பிராந்தியம் | நிரை 11 பிரதேசம் | நிரை 111 (பிரதான அமைச்சர் நீங்கலாக) பிராந்திய அமைச்சர் சபை அமைச்சர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| பகுதி அ | தலைநகர ஆள்புலம் | கொழும்பு ஸ்ரீயவர்த்தனபுர மாநகர சபைகள் | .... |
| பகுதி ஆ | மேற்கு | தலைநகர ஆள்புலம் நீங்கலாக கொழும்பு நிருவாக மாவட்டம், கம்பஹா, களுத்துறை நிருவாக மாவட்டங்கள் | ஆறு |
| | மத்திய | கண்டி, நுவரெலிய, மாத்தளை நிருவாக மாவட்டங்கள் | ஆறு |
| | தெற்கு | காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டங்கள். | ஆறு |
| | வடமத்திய | அநுராதபுரம், பொலன்னறுவை நிருவாக மாவட்டங்கள் | நான்கு |
| | வடமேற்கு | புத்தளம், குருநாகலை நிருவாக மாவட்டங்கள் | ஆறு |
| | சப்பிரகமுவ | இரத்தினபுரி, கேகாலை நிருவாக மாவட்டங்கள் | நான்கு |
| | ஊவா | பதுளை, மொனராகலை நிருவாக மாவட்டங்கள், | நான்கு |
| | | உறுப்புரை 127(4)(ஆ)(11) பந்தியினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அம்பாறை வாக்கெடுப்பு சேர்க்கப்பட்டுள்ளவிடத்து | ஐந்து |
| பகுதி இ | வடகிழக்கு | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நிருவாக மாவட்டங்களும், திருகோணமலை, மட்டக்களப்பு நிருவாக மாவட்டங்களும் (உறுப்புரை 127 பந்தி (2)(ஆ)(1)இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு) | ஆறு |
| | தென்கிழக்கு | உறுப்புரை 127 பந்தி (3) இனால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில். | இரண்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கெடுப்புப் பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பகுதி ஈ | வடக்கு | உறுப்புரை 127(2)(ஆ)(11) பந்தியினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நிருவாக மாவட்டங்கள் | ஐந்து |
| | கிழக்கு | திருகோணமலை, மட்டக்களப்பு நிருவாக மாவட்டங்கள், கல்முனை, சம்மாந்துறை பொத்துவில் வாக்கெடுப்புப் பிரிவுகளும் அம்பாறை வாக்கெடுப்புப் பிரிவும் (அம்பாறை நிருவாக மாவட்டமாக அமைதல்) உறுப்புரை 127 பந்தி (2) (ஆ) இனால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு. | ஐந்து |
| பகுதி உ | அம்பாறை | உறுப்புரை 127 பந்தி (4)(ஆ)(1) இனால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அம்பாறை வாக்கெடுப்புப் பிரிவு | இரண்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அட்டவணை

### நிரல் - 1

### (ஒதுக்கிய நிரல்)

மத்திய அரசினால் பிரயோகிக்கப்பட வேண்டிய விடயங்களும் பணிகளும் இந்நிரலில் அடங்கியுள்ளன.

1. பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, தேசிய பொலிசுப் படை மற்றும் பாதுகாப்புப் படைகள்.
2. சுடுபடைக்கலங்கள், படைக்கலங்கள், வெடிபொருட்கள் மற்றும் ஏனைய ஆயுதங்கள்.
3. குடிவரவு, குடியகல்வு மற்றும் பிரசாவுரிமை.
4. எக்கருமங்கள் இலங்கை அரசாங்கத்தை வேறு அரசுகளுடன் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்புகளுடன் தொடர்புகொள்ளச் செய்கின்றனவோ அக்கருமங்கள் அனைத்தும் உள்ளடங்கலாக, வெளிநாட்டலுவல்கள்.
5. வேறு அரசுகளுடனும் சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் பொருத்தனைகளையும், உடன்பாடுகளையும், உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் மற்றும் அத்தகைய பொருத்தனைகளையும், உடன்பாடுகளையும், உடன்படிக்கைகளையும் நடைமுறைப்படுத்துதல்.
6. உள்ளூரதிகார சபைகளுக்கான தேர்தல்கள் தவிர்ந்த தேர்தல்கள்.
7. தேசியத் திட்டமிடல்.
8. தேசிய குடிசன மதிப்பீடும் புள்ளிவிபரங்களும்.
9. நாணயமும் வெளிநாட்டுச் செலாவணியும்; சர்வதேசப் பொருளாதார உறவுகள்; பணக்கொள்கையையும், வெளிநாட்டு மூலவளங்களையும் வகுத்தமைத்தல்.
10. இலங்கை அரசாங்கத்தின் பகிரங்கக் கடன்.
11. இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்.
12. வங்கித்தொழில், வங்கித்தொழில் நிறுவனங்கள் மற்றும்/வேறு தேசிய நிதிசார் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்.
13. காப்புறுதி மீதான தேசிய கொள்கையும் மற்றும் காப்புறுதிச் சேவைகளை ஏற்பாடு செய்யும் தேசிய நிறுவனங்களும்.
14. பிணையங்கள், பங்குப் பரிவர்த்தனைகள் மற்றும் எதிர்காலச் சந்தைகளை ஒழுங்குபடுத்துதல்.
15. இலங்கை அரசாங்கத்தின் அரச நிறுவனங்களின் மற்றும் பகிரங்கக் கூட்டுத் தாபனங்களின் கணக்காய்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அத்தியாயம் XXI இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, தனியாட்களினதும், கம்பெனிகளினதும், கூட்டுத்தாபனங்களினதும் வருமானம், மூலதனம், செல்வம் என்பன மீதான வரிகள்.

17. அத்தியாயம் XXI இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக இறக்குமதி, ஏற்றுமதித் தீர்வைகள் உட்பட சுங்கத் தீர்வைகளும் மற்றும் (சட்டத்தினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய உற்பத்தித் தீர்வைகள் நீங்கலாக) உற்பத்தித் தீர்வைகளும்.

18. அத்தியாயம் XXI ல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக மொத்த விற்பனை வரவு வரிகளும், முத்திரைத் தீர்வைகளும், பண்டங்கள் சேவைகள் மீதான வரியும்.

19. பிராந்திய நிரலில் குறிப்பிடப்படாத வேறெவையேனும் வரிகள், தீர்வைகள் அல்லது அறவீடுகள்.

20. தேசிய லொத்தர்கள்.

21. இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கையின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற்பாலனவான ஓய்வூதியங்கள்.

22. அணுசக்தி.

23. மின்சார வழங்கலுக்கான தேசிய மின் நிலையமும் மற்றும் தேசிய மின் நிலையத்தைப் பேணுதலும் முகாமை செய்தலும்.

24. எண்ணெய் வயல்களையும், கனிப்பொருள் மூலவளங்களையும், பெற்றோலியத்தையும் மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களையும் ஒழுங்குபடுத்துதலும் அபிவிருத்தி செய்தலும் உட்பட கனிப்பொருட்களும், மற்றும் சுரங்கங்களும். அவற்றின் வேத்துரிமைப் பணங்களைச் சேகரித்தலும்.

25. பிராந்தியங்களுக்கிடையிலான ஆறுகள்.

26. விமான நிலையங்கள், துறைமுகங்கள், சர்வதேசப் போக்குவரத்துடனான கப்பற்துறைகள்; அத்துடன் ஆட்புல நீர்ப்பரப்புகளுக்கு அப்பால் மீன்பிடிப்பில் ஈடுபடும் கலங்களினால் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் கடற்றொழிற்றுறை முகங்களில் இயைபான பிராந்திய நிருவாகத்துடனான கலந்தாலோசனையுடன், வசதிகளை ஏற்பாடுசெய்தல்.

27. பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்து.

28. புகையிரதச் சேவைகள்.

29. குடியியல் வான் போக்குவரத்து.

30. மாவட்டத் தலைநகரங்களைத் தொடுக்கும் நெடுஞ்சாலைகள் பிராந்திய எல்லைகளுக்கூடாகச் செல்லும் அளவுக்குத் தலைநகர ஆள்புலத்தை பிராந்திய தலைநகரங்களுடனும் பிராந்திய தலைநகரங்களை அவை ஒவ்வொன்றுடனும் மாவட்டத் தலைநகரங்களை அவை ஒவ்வொன்றுடனும் தொடுக்கின்ற பிராந்தியங்களுக்கிடையிலான நெடுஞ்சாலைகள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஆய வீதிகள் மற்றும் கடுகதிப் பாதைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கப்பற்றொழிலும் கடற் செலவும்; வரலாற்று முறையான நீர்ப்பரப்புகளும், ஆள்புல நீர்ப்பரப்புகளும் உட்படக் கடலோர வலயங்கள் (பொருளாதார வலயமும் கண்டமேடும் நீங்கலாக).

32. அஞ்சல், மற்றும் தொலைத் தொடர்புகள்.

33. தேசிய தரங்களுக்கமைவாக மத்திய அரசாங்க ஒலிபரப்பு/மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் உட்பட தேசிய வெகுசனத் தொடர்பு சாதனம்; செய்திப் போக்குவரத்து மற்றும் வெகுசனத் தொடர்பு தொடர்பிலான தேசிய தரங்களைத் தீர் மானிப்பதற்கான ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளைத் தாபித்தல்.

34. தேசிய பகிரங்க சேவை, தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு.

35. தேசிய சுகாதார நிருவாகம் (ஏலவேயுள்ள விசேட நோக்கு மருத்துவ மனை களும், தேசிய பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட போதனா வைத்திய சாலைகளும் உட்பட; சுகாதாரச் சேவைகளை இயைபுபடுத்தல்; சுகாதாரம் தொடர்பான கல்வியையும் ஆராய்ச்சியினையும் இயைபுபடுத்துதலும் பயிற்சி வழங்குதலும்; தேசிய சுகாதாரத் தரங்களைத் தீர்மானித்தல்; எல்லாச் சிறப்பான திட்டங்களையும் நிருவகித்தல்.)

36. ஔடதங்கள், நஞ்சுகள் மற்றும் போதைப் பொருட்கள் தொடர்பான கொள்கை, அத்துடன் வலுவுக்கிடும் நடவடிக்கைமுறை.

37. நீதி நிருவாகம், (குறித்துரைக்கப்பட்டவாறான பிராந்தியங்களின் நீதி நிருவாகத்தைத் தவிர) அத்துடன் நீதிமன்ற நடவடிக்கை முறை.

38. மத்திய அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட மறியற்சாலைகள்.

39. குழந்தைகளின் மகவேற்பு.

40. பிராந்தியங்களுக்கிடையேயான நீர்ப்பாசனத் திட்டங்கள்.

41. ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு அப்பால் மீன்பிடித்தல்; ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு வெளியே மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள கலங்களைப் பதிவுசெய்தல்; ஆள்புல நீர்ப்பரப்பகளுக்குள் பாரம்பரிய ரீதியில் இடத்துக்கிடம் சென்று மீன்பிடித்தல் தொடர்பான உரிமைகள்; 141ஆம் உறுப்புரைக்கிணங்க பிராந்தியங்களுக் கிடையிலான மீன்பிடித்தற் பிணக்குகள் மற்றும் பாரம்பரிய இடம்பெயர் மீன்பிடித்தல் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக ஆற்றுப்படுத்து தல்.

42. சர்வதேசக் கடப்பாடுகளுக்கமைய கடற்றுறையினதும் நீரியல் வாழ் மூல வளங்களினதும் பாதுகாப்பும் அத்தகைய கடப்பாடுகளை வலுவுறுத்துவதற்கான நடவடிக்கைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. கல்வித்துறையில் தேசியக் கொள்கையையும் மற்றும் தேசியக் கல்வி நிறுவகம் போன்ற தேசிய நிறுவனங்களையும் முகாமை செய்தல்; தேசியப் பாடசாலைகளை முகாமை செய்தலும் மேற்பார்வை செய்தலும்; தேசிய பொதுச் சான்றிதழ் பரீட்சைகளுக்கான ஆகக்குறைந்த தரங்களைத் தீர்மானித்தல்; தேசிய பொதுச் சான்றிதழ் பரீட்சைகளை நடாத்துதல்; பாடவிதானம் மற்றும் ஆசிரியர் தகைமைகள் மற்றும் கல்விசார் பயிற்சி என்பவற்றிற்கான ஆகக்குறைந்த தரங்களைத் தீர்மானித்தல்; மத்திய அரசாங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கல்வி வெளியீடுகள்.

44. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் தேசிய பல்கலைக்கழகங்களும்.

45. உயர்தொழில்கள், தான்புரி தொழில்கள் மற்றும் பயிற்சி தொடர்பான தேசியத் தரங்கள்.

46. கமத்தொழில், கடற்றொழில், நீரியல்வாழ் உயிரின மூல வளங்கள், விஞ்ஞானம், கைத்தொழில் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி என்பன தொடர்பான தேசிய நியமனங்கள்.

47. வெளிநாட்டு வியாபாரம், அது தொடர்பிலான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் உட்படப் பிராந்தியங்களுக்கிடையேயான வியாபாரமும் வர்த்தகமும்.

48. குடியரசிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதும் ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னுமொரு பிராந்தியத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டியதுமான பொருட்களுக்கான தேசிய தரங்களைத் தாபித்தல்.

49. ஆக்கவுரிமைகள், புத்தாக்கங்கள், வடிவமைப்புக்கள், பதிப்புரிமை, வியாபாரக் குறிகள் மற்றும் வணிகக் குறிகள்.

50. ஏகபோகவுரிமைகளும் இணைப்புகளும்.

51. பிராந்தியங்களுக்கிடையேயான உணவு விநியோகம்.

52. பௌத்தமதம் – திரிபீடகத்திற்கிணங்க புத்தசாசனம் தொடர்பிலான தேசியக் கொள்கையை உருவாக்குதலும் அமுலாக்குதலும்; பிரிவேனா கல்வியும்.

53. தேசிய சுவடிக்கூடமும் அரும்பொருட்காட்சிச் சாலையும்.

54. தேசிய நூலகங்களும் தேசிய நூலகச் சேவைகள் சபையும்.

55. தொல்பொருளியல்; அத்தகைய நோக்கங்களுக்காக அணுக்கம் உட்பட, கொள்கை உருவாக்கம், அகழ்வாராய்வு, பேணுதல்; தோதான பிராந்திய நிருவாகத்தின் கலந்தாலோசனையுடன் சட்டத்தினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென வெளிப்படுத்தப்பட்ட புராதன மற்றும் வரலாற்று முறையான நினைவுச் சின்னங்கள், தொல்பொருளியல் அமைவிடங்கள், பதிவேடுகள் என்பவற்றின் பேணுகையும் நிருவாகமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறுபட்ட கலாச்சார செயற்பாட்டை ஊக்குவித்தலும் முன்னேற்றுதலும்.

57. பகிரங்க அவைக்காற்றுதல்கள்தொடர்பான தேசியத் தரங்கள்.

58. உல்லாசப் பயணத்துறை மீதான தேசியக் கொள்கையும் மற்றும் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவித்தலும்.

59. சர்வதேசச் சடப்பாடுகளுக்கு இணங்க தாவர விலங்கின சங்கமத்தைப் பேணுதல் உட்பட வனவியல்/சூழல் மற்றும் பேணல் மீதான தேசியத் திட்டங்கள்.

60. கரையோரம் பேணல் தொடர்பிலான கொள்கை மற்றும் தேசியத் திட்டங்கள்.

61. விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.

62. தேசிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்துத் தொகுத்தலும் ஒருங்கிணைத்தலும்.

63. இளைஞர் மற்றும் மகளிர் விவகாரங்கள் மீதான தேசியக் கொள்கை.

64. தேசிய விளையாட்டு நிருவாகத்தையும் உள்ளகக் கட்டமைப்பையும் அபிவிருத்தி செய்தல்.

65. தேசிய பேரழிவுகளும் கொள்ளை நோய்களும் (இயற்கையான மற்றும் சூழல் சார்ந்த) ஏற்படும் சந்தர்ப்பங்களில் இடையீடுசெய்தல்.

66. தொழில் ஒழுங்குபடுத்துகையும் தரங்களும்.

67. கைத்தொழில் அபிவிருத்தி மீதான ஊக்குவிப்பும் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கான கொள்கையும்.

68. முதலீடு தொடர்பிலான கொள்கையை மேம்படுத்துவதற்கும் தீர்மானிப்பதற்குமான நிறுவனங்கள்.

69. பொதுப் பயன்பாட்டு உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள்.

70. ஒதுக்கிய நிரலில் எண்ணிக்கையிடப்பட்ட கருமங்களுள் எதனையும் நோக்கத்துக்கான அளவீடுகள்.

71. ஒதுக்கிய நிரலிலுள்ள கருமங்களுள் எதனையும் தொடர்பில் சட்டங்களுக்கெதிரான தவறுகள்.

72. ஒதுக்கிய நிரலிலுள்ள கருமங்களுள் எதனையும் தொடர்பிலான கட்டணங்கள். ஆயின், ஏதேனும் நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்ட கட்டணங்களை உள்ளடக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. ஒதுக்கிய நிரலிலுள்ள ஏதேனும் கருமத்தின் நோக்கங்களுக்குத் தேவைப் படுகின்ற தனியார் காணியைக் கொள்ளல்.

74. ஒதுக்கிய நிரலிலுள்ள ஏதேனும் கருமத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படு கின்ற தனியார் காணியை வேண்டுதல்.

75. பிராந்திய நிரலில் எண்ணிடப்படாத வேறேதேனும் கருமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரல் 11

(பிராந்திய நிரல்.)

பிராந்திய சபைகளுக்குரித்தாக்கப்படும் விடயங்களும் பணிகளும் இந்நிரலில் அடங்கியுள்ளன.

1. பிராந்திய மட்டத்தில் வேலைவாய்ப்பைத் திட்டமிடுதல் உட்படப் பிராந்தியத் திட்டமிடுதலும் அத்துடன் வேலைவாய்ப்புத் திட்டங்கள் உட்படத் திட்ட அமுலாக்கமும்.

2. பிராந்தியமொன்றின் பகிரங்கக் கடன்.

3. அத்தியாயம் XX1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச கடன்படல்.

4. XX1ஆம் அத்தியாயத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்குப் பிராந்தியத்திற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டை சர்வதேச மானியங்களை அத்துடன் அபிவிருத்திக்கான உதவியை முகாமை செய்தலும் மேம்படுத்துதலும்.

5. பொதுமக்கள் பயன்பாட்டு உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்திக்கான பிராந்தியத் திட்டங்கள்.

6. காப்புறுதிச் சேவைகளை வழங்கும் பிராந்திய நிறுவனங்கள் உட்படப் பிராந்திய நிதிசார் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள்.

7. சட்டத்தினால் குறித்துரைக்கப்பட வேண்டிய உற்பத்தித் தீர்வைகள்.

8. பந்தயம் கட்டுதல் மற்றும் சூதாட்ட வரிகள், குறித்துரைக்கப்படவேண்டிய பரிசுக்கான போட்டிகள் மற்றும் லொத்தர்கள் மீதான வரிகள்.

9. மோட்டார் வாகன உரிமக் கட்டணங்கள்.

10. அசையாத சொத்துக்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் கைமாற்றுதல் மீதான முத்திரைத் தீர்வைகள்.

11. பிராந்தியத்துள் நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் குற்றப்பணங்கள்.

12. நீதிமன்றங்களின் முன்கொணரப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைத் தீர்வைகள் உட்பட நீதிமன்றக் கட்டணங்கள்.

13. இறைவரி மதிப்பீடு மற்றும் சேகரிப்பு உட்படக் காணி இறைவரியும், அத்துடன் இறைவரி நோக்கங்களுக்காகக் காணிப் பதிவேடுகளைப் பேணுதலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சுரங்கக் கனிப்பொருள் உரிமைகள் மீதான வரிகள்.

15. பிராந்திய நிருவாகம் ஒன்றினால் அல்லது பிராந்தியம் ஒன்றின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியங்கள்.

16. பிராந்திய லொத்தர்கள்.

17. பிராந்திய பகிரங்க சேவை, பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு.

18. நிருவாகத்திற்கான பிராந்திய ஆணையாளர் (பிராந்திய ஒம்புட்சுமான்)

19. பிராந்திய சுகாதார சேவைகள் மற்றும் பிராந்திய சுகாதார நிருவாகம் உட்பட சுகாதாரமும் சுதேச வைத்தியமும்.

20. உயர்கல்வி; கல்வி பற்றிய பிராந்திய கொள்கையும் ஆராய்ச்சியும்; தேசிய பாடசாலைகளும், தேசிய பல்கலைக்கழகங்களும் நீங்கலாகக் கல்வி மற்றும் கல்விச் சேவைகள்; தேசிய பொது சான்றுப் பரீட்சைகளுக்கான ஆகக்குறைந்த தரங்களைத் தீர்மானித்தல், தேசிய பொதுச் சான்றுப் பரீட்சைகளை நடாத்துதலும் பாட விதானத்துக்கான ஆகக்குறைந்த தரங்களையும் மற்றும் ஆசிரியர் தகைமைகளையும் தீர்மானித்தல்; பிராந்திய நிருவாகத்தினால் வழங்கப்படும் கல்வி வெளியீடுகள்.

21. பிராந்தியத்தினுள் கமத்தொழில் ஆராச்சி, வறிவாக்கம், மேம்படுத்தல் மற்றும் கல்வி என்பன உள்ளடங்கலாகக் கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள், அத்துடன் பிராந்தியத்தினுள் கமத்தொழில் அடிப்படைக் கைத்தொழில்கள்.

22. விலங்கு வேளாண்மை.

23. அரச காணியும் அத்துடன் அத்தியாயம் XVI இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அதன் பராதீனப்படுத்துதலும் அல்லது கையுதிர்த்தலும்.

24. பிராந்தியத்தினுள் நீர்ப்பாசனம்.

25. ஒதுக்கு நிரலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, ஆள்புல நீர் நிலைகளில் பாரம்பரிய இடம்பெயர் மீன்பிடி தொடர்பான உரிமைகள் நீங்கலாக ஆள்புல நீர் நிலைகளினுள் மீன்பிடி, கடல்சார் மற்றும் நீரியல் மூல வளங்கள்.

26. சூழல் பாதுகாப்பு மற்றும் பேணல் மீதான தேசிய திட்டங்களுக்கு அமைவாகப் பிராந்தியமொன்றுக்குள்ளான காடு வளர்ப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. தேசிய திட்டங்களுக்கமைவாக கரை ஓரம் பேணலுக்கான பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்கள்.

28. பிராந்தியத்தினுள் கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி உட்படக் கைத்தொழில்களும் மற்றும் பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தியும்.

29. தேசிய மின் உற்பத்தி தவிர்ந்த சக்தி.

30. பிராந்தியத்தினுள் வர்த்தகமும் வணிகமும்.

31. கூட்டுறவுகளும் மற்றும் கூட்டுறவு வங்கிகளும்.

32. உணவு வழங்கலும் விநியோகமும்.

33. சந்தைகளும் அங்காடிகளும்.

34. கறியுப்பின் உற்பத்தியும் வழங்கலும்; உற்பத்திப் பிராந்தியத்தினுள் கறியுப்பின் விநியோகம்.

35. ஒதுக்கு நிரலில் குறித்துரைக்கப்பட்டவை நீங்கலாக வீதிகள்; பிராந்திய நிருவாகத்தின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆய வீதிகளும், கடுகதிப் பாதைகளும்; நீர்ப்பாதைகள்.

36. புகையிரதச் சேவைகள் தவிர்ந்த ஆனால் பாதைச் சேவைகள் உட்படப் போக்குவரத்து.

37. சிறு கப்பற்றுறைகளும் துறைமுகங்களும்.

38. வீடமைப்பு மற்றும் நிர்மாணம்.

39. நகரத்திட்டமிடல் மற்றும் அமுலாக்கம்; பொதுப் பயன்பாடு.

40. கிராமிய அபிவிருத்தி.

41. முழுப் பிராந்தியத்திற்குமாக ஒழுங்காகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளைக் கொண்டுள்ள உள்ளூராட்சி.

42. உள்ளூரதிகார சபைகளுக்கான தேர்தல்கள், அத்தகைய தேர்தல்கள் ஒவ்வொரு பிராந்தியத்திலும் நியதிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்படும் சுயாதீனமான உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் ஆணைக் குழுக்களினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்; தேர்தல் சட்டங்கள், உள்ளூர் அதிகார சபைகளுக்கு, அவற்றின் கீழ் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாதோர் பெண்களாகவிருத்தல் வேண்டும் என்பதையும், அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் இருபத்தைந்து வீதத்திற்குக் குறையா -தோர் முப்பத்தைந்து வயதுக்கு குறையாதோராக இருக்கவேண்டும் என்பதை யும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

43. பிராந்திய நூலகங்களும் நூதன சாலைகளும்.

44. சமய கலாச்சார பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல் உட்படப் பிராந்தியத் -திற்குள்ளாகச் சமய கலாச்சாரச் செயற்பாட்டை ஊக்குவித்தல்.

45. ஒதுக்கிய நிரலில் குறித்துரைக்கப்பட்டன தவிர்ந்த, புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்களையும், தொல் பொருளியல் அமைவிடங்களையும், பதிவேடுகளையும் பேணுதலும் நிருவகித்தலும்.

46. பகிரங்க அரங்காட்டுதல்கள்.

47. தேசிய தரங்களுக்கு இணக்கமாகத் தொலைக் காட்சி உட்பட ஒலி பரப்பும் வெகுசனத் தொடர்பும்.

48. பிராந்தியத்துக்குள் சுற்றுலாப் பயணத்தை ஊக்குவித்தல்.

50. நிவாரணமும், புனர்வாழ்வும் மற்றும் புனரமைப்பும் அத்துடன் நட்டஈடு வழங்குதலும்.

51. சமூகப் பாதுகாப்பும் சமூகக் காப்புறுதியும்.

52. சமூக சேவைகள்.

53. பிராந்தியத்திற்குள்ளாக கூட்டிணைக்கப்படாத கழகங்களையும், சங்கங்களையும் மற்றும் தரும நிறுவனங்களையும், தரும ஸ்தாபனங்களையும் ஒழுங்குபடுத்துதல்.

54. XX11 அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்கு சட்டமும் ஒழுங்கும், பிராந்தியப் பொலிசும் மற்றும் பிராந்தியப் பொலிசு ஆணைக்குழுவும்.

55. X111, X1111 மற்றும் X1 X என்னும் அத்தியாயங்களில் ஏற்பாடு செய்யப் பட்ட அளவுக்குப் பிராந்தியத்திற்குள்ளாக நீதியை நிருவகித்தல்; மத்தியஸ்தம், இணக்கம்; பிராந்தியத்திலுள்ள பிராந்திய நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோ -சனையுடன் நீதிமன்றக் கட்டடங்களை ஏற்பாடு செய்தல், நிறுவுதல்; நீதி மன்றக் கட்டடங்களைப் பராமரித்தல்.

56. பிராந்திய நிருவாகத்தினால் தாபிக்கப்பட்ட சிறைச்சாலைகள், சிறுவர் நன்நடத்தைப் பாடசாலைகள் மற்றும் சீர்திருத்த நிலையங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. இளைஞர்களினதும் பெண்களினதும் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அமுல் படுத்துதல்.

58. விளையாட்டுக்கள்.

59. பிராந்திய நிரலில் கூறப்பட்ட எவையேனும் கருமங்களின் நோக்கத்திற்கான அளவீடுகள்.

60. பிராந்திய நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பாகவும் உள்ள சட்டங்களுக்கும் நியதிச் சட்டங்களுக்கும் எதிரான தவறுகள்.

61. பிராந்திய நிரலிலுள்ள கருமங்களில் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

62. பிராந்திய நிரலிலுள்ள ஏதேனும் கருமத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் காணியைக் கொள்ளுதல்.

63. பிராந்திய நிரலிலுள்ள ஏதேனும் கருமத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் காணியை வேண்டுதல்.

64. பிராந்திய நிரலிலுள்ள கருமங்கள் தொடர்பிலான குற்றப்பணங்கள்.

65. சட்டத்தின் மூலம் பிராந்தியத்துக்கு உரித்தாகக்கூடிய வேறு ஏதேனும் வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org